## தமிழ்ப் பெரும் புலவர்

# இமு. சுப்பிரமணிய பிள்ளை



கவிஞர் பேராசிரியர்
டாக்டர் இ.சு. முத்துச்சாமி

தமிழ்ப்பெரும் புலவர்

# இ. மு. சுப்பிரமணிய பிள்ளை


கவிஞர், பேராசிரியர்

டாக்டர் இ. சு. முத்துச்சாமி

M. A., Ph.D., B. G. L., B. T.,

தமிழ்த்துறைத் தலைவர்

அருள்மிகு சுப்பிரமணியசாமி

அரசுக் கலைக் கல்லூரி, திருத்தணி.



கிடைக்குமிடம் :

பாரி நிலையம்

184, பிராட்வே, சென்னை-600108

முதற் பதிப்பு: மே, 1984

© உரிமை ஆசிரியருக்கு

விலை ரூ. 12-00

வெளியீடு எண் : 5

மக்கள் இலக்கியப் பாசறை
38, ஆதிசங்கர விநாயகர் தெரு,
சங்கரன் கோவில்-நெல்லை மாவட்டம்,
Pin : 627756.

அச்சிட்டோர் :
மூவேந்தர் அச்சகம்,
இராயப்பேட்டை, சென்னை-14.

தமிழ்ப்பெரும்புலவர்

# இ. மு. சுப்பிரமணியபிள்ளை



தோற்றம் : 6-6-1896] [மறைவு : 24-3-1975

திருமதி இ. சு. ஈசுரவடிவம்மையார்



பெரும்புலவர்

இ. மு. சுப்பிரமணியபிள்ளை

அவர்களின் மனைவியார்

(1901—1976)

# பொருளடக்கம்

பக்கம் எண்

1. இளமை வாழ்க்கை 3
2. தமிழாசிரியப் பணி 12
3. தன்மான இயக்கத்தில் 27
4. கலைச் சொல்லாக்கத் தொண்டு 46
5. தமிழ்ச் சங்கப்பணி 67
6. சைவ சமயத் தொண்டு 108
7. சித்த மருத்துவம் 116
8. சோதிடக் கலையும் பஞ்சாங்கமும் 122
9. நூலாசிரியர் 129
10. மறைவு 137

பின்னிணைப்பு

1. கவிஞர் நெஞ்சில் இ. மு. சு. 146
2. அறிஞர் நினைவில் இ. மு. சு. 152
3. கொடிவழிப் பட்டியல்கள் 169
4. இ. மு. சுப்பிரமணிய பிள்ளை நூல்கள் 172
5. இ. மு. சுப்பிரமணிய பிள்ளை கட்டுரைகள் 177
6. செய்தி உதவியோர் பட்டியல் 179
7. இ. மு. சு. வரலாற்றுக் குறிப்புகள் 182
8. தமிழ்ச்சங்க அலுவலர் பட்டியல் 183
9. சிறப்புப் பட்டம் பெற்றவர் பட்டியல் 184
10. இ. மு. சு. வரலாற்று நிகழ்ச்சிகள் 186
11. பிழைத்திருத்தம் 191

# பதிப்புரை

தமிழ்ப் பெரும்புலவர் இ. மு. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் 24-3-1975 அன்று மறைந்த ஞான்று, தினமலர், தினத்தந்தி, தினமணி, ஆகிய நாளேடுகள் செய்திக் குறிப்பு வெளியிட்டன. செந்தமிழ்ச் செல்வி, இளந்தமிழன், தமிழ்ப் பொழில், தமிழ்ப்பணி ஆகிய இலக்கிய ஏடுகள் வரலாற்றுக் கட்டுரைகள் வெளியிட்டன.

அரசியலறிஞர்கள், பேராசிரியர்கள், துணை வேந்தர்கள் அனுப்பிய இரங்கலுரைகளைத் தொகுத்து, 25-4-1976 சென்னை அண்ணாசாலை மாவட்ட மைய நூலகச் சொற் பொழிவுக் கூடத்தில் நடைபெற்ற முதலாண்டு நினைவு நாளில் தலைமைச் செயலர் திரு வே. கார்த்திகேயன் தலைமையில், முன்னாள் முதலமைச்சர் மீ. பக்தவத்சலம் அவர்களால் நினைவு மலர் வெளியிடப் பெற்றது. முன்னாள் தலைமை நீதிபதி திரு மா. அனந்த நாராயணன் இ. மு. சு. திருஉருவப் படத்தைத் திறந்து வைத்தார்.

தம் தந்தையார் வரலாற்றை இப்போது பேரா. இ. சு. முத்துச்சாமி வெளியிடுகிறார். முதலில் தந்தையார் வரலாற்றை 'மழவை சண்முக முதலியார் வரலாறு' என்னும் தலைப்பில் அன்னார் மகன் திரு த. ச. மூர்த்தி முதலியார் 1917இல் வெளி யிட்டுள்ளதாக உவமைக் கவிஞர் சுரதா அவர்கள் அரிய செய்தி யைத் தந்துள்ளார்.

இவ்வரலாற்று நூல் நடுநிலை நின்று புலவர் வாழ்க்கை யைச் சுவைபடச் சொல்கிறது. வருங்கால ஆய்வாளர்களுக் கும் இந்நூல் பெரிதும் பயன்படும்.

மக்கள் இலக்கியப் பாசறை
சங்கரன் கோவில்

31-3-1984

# முன்னுரை

கலைச் சொல்லாக்கம், இலக்கியம், சைவம், தன்மான இயக்கம், கணிதம், சித்த மருத்துவம் போன்ற பல துறைகளில் தம் முத்திரையைப் பதித்துச் சென்ற இ. மு. சுப்பிரமணிய பிள்ளை அவர்களை நாம் நினைவுப்படுத்தித்தான் எதிர்காலக் கணக்கில் சேர்க்க வேண்டுமென்பதில்லை.

அவர் மறைந்த பின்பு காந்தி காவியம் வெளியீட்டு விழாவில் திறனாய்வாளர் ஏ. வி. சுப்பிரமணிய ஐயர் இ. மு. சு. அவர்கள் இயற்றிய காந்தி சிந்தாமணியை நினைவு கூர்ந்து, பேசியுள்ளார். தேவநேயப் பாவாணர் அவர்கள் செந்தமிழ்ச் செல்வியில் எழுதிய கட்டுரையில் சொல்லுதவியாளர் பட்டியலில் இ. மு. சு. அவர்களைப் குறிப்பிட்டுள்ளார்.

திருச்செந்தூர்க் கோவில் நாள்வழி பாட்டினைப் பற்றி ஆய்ந்த டாக்டர் ந. கல்யாணசுந்தரம் அவர்கள் தம் ஆய்வேட்டில் (Ph. D. Thesis) இ. மு. சு. அவர்களைக் குறிப்பிட்டுள்ளார். கலைச் சொல்லாக்கம் பற்றி ஆராய்ந்த திரு. இ. மறைமலை அவர்களும் தம் ஆய்வேட்டில் இ. மு. சு. அவர்களைப் பற்றி மூன்று இடங்களில் குறிப்பிடுகின்றார்.

இ. மு. சு. அவர்களின் மறைவுக்குப் பின்னர் 7-1-1979 அன்று சென்னை அண்ணாசாலை மாவட்ட மைய நூலகக் கட்டிடத்தில் சித்த மருத்துவ மாநாடு நடைபெற்றது. 'மறைந்த எழுத்தாளர்களின் படத் திறப்பு' என்னும் பகுதியில் முன்னாள் துணை வேந்தர் நெ. து. சுந்தரவடிவேலு அவர்கள் இ. மு. சு. அவர்கள் படத்தினையும் திறந்து வைத்துள்ளார்.

இவ்வாறு அவ்வத் துறையினர் இ. மு. சு. அவர்களை நினைந்து போற்றி வருகின்றனரெனிலும், இ. மு. சு. அவர்களின் பல்துறைப் பணிகளைத் தொகுத்துரைப்பது எம் கடமையாகிறது. சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக ஆட்சியாளர் வ. சுப்பையாபிள்ளை அவர்கள் அனுப்பிய

இரங்கல் செய்தியிலேயே, இ. மு. சு. அவர்களின் வரலாற்றினை 120, 160 பக்கங்களில் எழுதித் தருமாறு பணித்தார். பி.எச்.டி., பட்ட ஆய்வில் ஈடுபட்டிருந்தபடியால் அப்பணியினை அவ்வமயம் ஏற்க இயலவில்லை.

செய்தி கேட்டு அச்சிட்ட அறிக்கை வெளியிட்டும், பழகிய பலரைப் பேட்டி கண்டும், நூலகங்களில் செய்திகள் திரட்டியும், இவ்வரலாற்றினைத் தொகுப்பதற்கு என் ஆய்வேட்டிற்கு எத்தகைய முயற்சியும் உழைப்பும் தேவைப்பட்டதோ, அதற்கு ஒரு சிறிதும் குறையாது தேவைப்பட்டது. செய்திகளை வகுத்தும் தொகுத்தும் மிகக் கடுமையாகச் சுருக்கியும் ஆயிரம் பக்கங்களில் எழுத வேண்டியது இந்நூலளவிற்குச் சுருக்கி வரைந்துள்ளேன்.

வெறும் பாராட்டுரைகளைத் தவிர்த்து, காய்தல் உவத்தலின்றி மெய்யுரைகளையே இங்கு தந்துள்ளேன். செய்தி உதவியவர்களை நன்றியுடன் பின்னிணைப்பாகத் தந்துள்ளேன்.

1974இல் இ. மு. சு. அவர்கள் உருவாக்கி வளர்த்து 1960இல் வெள்ளி விழாக் கண்ட சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் தற்சமயம் முன்னாள் சபாநாயகர் எஸ். செல்லப் பாண்டியன் அவர்கள் தலைமையில் புத்துயிர் பெற்றுத் தமிழ் மாநிலத் தமிழ்ச் சங்கம் என்ற பெயருடன் இயங்கி வருகிறது. இ. மு. சு. அவர்களும் வேறு இரு புலவர்களும் எழுதி வைத்துவிட்டுப் போன நாலடியார் தெளிவுரை 1982இல் வெளிவந்துள்ளது. எனவே இ. மு. சு. அவர்களின் தமிழ்ப்பணி தொடர்கிறது, நின்று நிலவும் பணி பல முடித்துச் சென்றமையின்.

நன்முறையில் அச்சிட்டு உதவிய மூவேந்தர் அச்சகத்தாருக்கும், ஓவியர் ஆனந்த் அவர்களுக்கும் நன்றி உரித்தாகுக.

திருத்தணி
30-3-1984

இ. சு. முத்துச்சாமி

# 1. இளமை வாழ்க்கை
## [1896—1914]

தமிழ்ப் பெரும் புலவர் இ. மு. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் தம் உழைப்பால் உயர்ந்தவர்; நிழலில் வளர்ந்த பயிர் அல்ல; வெயிலில் வாடி வேரூன்றிய மரம்.

'தக்க சமயத்தில் தகப்பனை இழந்தவர்' என்று சோதிடர் சில சாதகர்களைக் கூறுவர். அந்த வகையைச் சேர்ந்தவர் இத்தமிழ்ப் பெரும் புலவர். நான்காம் வயதிலே தந்தையை இழந்து, தாயின் உழைப்பில் வளர்ந்து, தம் உழைப்பால் உயர்ந்தவர்.

### பெற்றோர்:

இவர் தம் தந்தையார் புலவர் சு. முத்துசாமி பிள்ளை அவர்கள் எட்டயபுரம் அரண்மனையில் ஆவணக் காப்பாளராகப் (Record Keeper) பணியாற்றியவர். எட்டயபுரம் அரசரது நம்பிக்கைக்குப் பாத்திரமானவர். மகாகவி. சி. சிப்பிரமணிய பாரதியின் தந்தையார் சின்னச்சாமி ஐயருடன் கூட்டு வாணிகம் செய்தவர். முன்பு தமிழக அமைச்சராக விளங்கிய சர். T. N. சிவஞானம் பிள்ளை அவர்களுடன் பழகிய நண்பினர். அமைச்சரின் தமையனார் தாசில் அனவரதம் பிள்ளை அவர்களும், இளவரசருக்கு ஆசிரியராக விளங்கிய மு. சி. பூரணலிங்கம் பிள்ளை அவர்களுக்கும் நண்பர். ஆவணக் காப்பாளர் சு. முத்து

சாமிப் பிள்ளை அவர்களின் பூர்விகம் சங்கரநயினூர் கோவில்; தந்தையார் சுப்பிரமணிய ஒதுவார். தாயார் எட்டயபுரத்தைச் சார்ந்த விநாயகத்தம்மையார். பூக் கட்டுதலும், சங்கரலிங்கப் பெருமானுக்குத் தேவாரம் ஓதுதலும் இவர்தம் பூர்விகத் தொழில். தேவாரம் திருக் கோவிலில் ஓதுபவர் ஓதுவார் என்றும், பெருமானுக்குப் பூத்தொடுப்பவர்கள் 'பண்டாரம்' என்றும், நிலவுடைமை யாளர்கள் 'பிள்ளை' என்றும் வழங்கப்பட்டனர். சைவ வேளாளர் என்பது பொதுப் பெயர்.

1962இல் பிறந்த இப்பெரியார் "தாது வருடப் பஞ்சம்" என்ற கொடிய பஞ்சத்தில் தம் சொந்த ஊராகிய சங்கரநயினூர் கோவிலை விட்டுத் தாய் வீடாகிய எட்டய புரத்திற்கு ஓடிவிட்டார். அங்கு அரண்மனைப் பேட்டைக் கணக்கினை ஏற்றுப் பேட்டைக் 'கணக்குப் பிள்ளை' என்று புகழுடன் விளங்கினார். தலைப்பாகை, சிவப்புக் கடுக் கன் அணிந்து கருநிறத்துடன் கம்பீரமான தோற்ற முடையவர். இவரது மனைவியாரோ — திருவில்லி புத்தூரைச் சேர்ந்த கோதை நாச்சியார்—பூரணச் சந்திரனைப் போன்ற பிரகாசமான நிறப் பொலிவுடை யவர். பின்னர் மன்னரின் நம்பகமான பணியாகிய ஆவணக் காப்பாளராகி 'ரிக்கார்டுப் பிள்ளை' என்று பிரபலமாக விளங்கினார்.

## முத்துசாமிப் புலவர் பிரபந்தங்கள்

புலவர் சு. முத்துசாமி பிள்ளை அவர்கள் இயற்றிய சிறு பிரபந்த நூல்கள் இரண்டு 1. திருக்கழுமாமலைச் சிவக்கொழுந்து மாலை 2. சிவபெருமான் இரட்டை மணி மாலை. இவற்றின் கைஎழுத்துப் பிரதிகளைத் தேர்ந் தெடுத்து இ. மு. சு. அவர்கள் வெளியிட ஏற்பாடு செய் தார். 1953இல் திருநெல்வேலி ம. தி. தா. இந்துக் கல்லூரிக் கணிதப் பேராசிரியர் திரு க. ச. கணபதியா பிள்ளை

அவர்கள் இந்நூல்களை வெளியிட்டார். அதற்கு அணிந்துரை நல்கியவர் பெருநாவலர், பேராசிரியர், சிவஞான சிவாச்சாரியார் பு. சி. புன்னைவனநாத முதலியாரவர்கள். அவ்வணிந்துரையில் இறுதியில் காணப்படும் வெண்பாக்களில் இரண்டு பின் வருமாறு.

திருக்கழு கோங்கற் சிவன்சே வடிக்கே
உருக்குமிரு மாலைமணிஓர்ந்தே—விருப்பமுடன்
தந்தமுத்து சாமிகவி தன்னமந் தரும் கவிஞர்
விந்தைகுல வித்தையா மே.

உள்ளும் புறமும் உணர்ந்தோதற் கொண்ணானை
உள்ளும் படிதமிழர்க் கோதினான்—வள்ளல்
இளசை அரசனுயர் எட்டமனுக் கேற்ற
வளமா வணக்காவல் மன்.

## பட்டணப் பிரவேசம்

ஏழை உறவினர்களுக்கும் தம் செலவில் திருமணம் நடத்தி ஊருக்கு உபகாரியாக விளங்கிய புலவர் சு. முத்துசாமிப் பிள்ளை அவர்களுக்கு முப்பத்தெட்டாம் வயதில் முதுகில் கட்டி ஏற்பட்டது. அந்நாளில் 'ராஜ பிளவை' என்று அழைக்கப்பட்டது. மருந்துக்குக் குணப்படாமல் 1900ஆம் ஆண்டில் வைகாசி மாதம் 24ஆம் நாள் பௌர்ணமி நாளில் இறைவன் திருவடி சேர்ந்தார். மறைந்த ஆவணக் காப்பாளரின் இறுதி ஊர்வலத்திற்கு அரண்மனையிலிருந்து பல்லக்கு வந்திருந்தது. அதில் ஏற்றி வழியனுப்பும் பொழுது நான்கு வயது நிரம்பாத இ. மு. சு. அவர்கள் அருகிலிருந்தவர்களைப் பார்த்து "அப்பா எங்கே போகிறார்" என்று கேட்டாராம்; அருகில் இருந்தவர்கள் "பட்டணம் போகிறார்" என்று சொன்னார்களாம். அன்றிலிருந்து சாவு விவரம் புரியும் நாள் வரை "அப்பா பட்டணம் போயிருக்கிறார்" என்று சொல்லிக் கொண்டே இருப்பாராம். அந்தச் சோகக் கதையை பல

முறை என்னிடம் கூறி ஆற்றாமைப்படுவார் கோதைப் பாட்டியார். இவர் இறந்த எட்டாம் கிழமைக்கு வைத்து அழுவதற்காக அவரது தம்பி கிருஷ்ண பிள்ளை அவர்களிடமிருந்த சிவப்புக்கல் கடுக்கனைக் கேட்டதனுல் கோபமடைந்து அவர் அதனை எடுத்து வீசினார். அக்கல்லில் சிறிது பிளவு ஏற்பட்டது. தம் தந்தையார் கடுக்கனை இ. மு. சு. அவர்கள் அன்றிலிருந்து இறக்கும்வரை அணிந்திருந்தார்.

## பேணி வளர்த்த தாய்

திடீரென்று மறைந்த புலவர் சு. முத்துசாமிப் பிள்ளையவர்கள் எட்டையபுரம் நடுவிற்பட்டியில் இரண்டு வீடும் ரு. 400ம் மட்டுமே விட்டுச் சென்றிருந்தார். குடும்பப் பொறுப்பு கோதை நாச்சியார்பால் இறங்கியது. அந்தப் பணத்தில்தான் தாய் வீடாகிய திருவில்லிபுத்தூரில் காடு வாங்கித் தாய் வீட்டோடு சென்றுவிட்டார்.

இ. மு. சு. அவர்கள் இளசை எனப்படும் எட்டயபுரம் நடுவிற்பட்டியில் 1896ல் ஜூன் மாதம் 6ஆம் நாள் மூன்றாவது குழந்தையாகப் பிறந்தவர், முதலிரண்டும் பிறந்தவுடன் இறந்துவிட்டதால், இவர்தாம் மூத்தவர். இவருக்கு ஒரே தம்பி மட்டும் உண்டு—புலவர் இ. மு. அருணாசலம்பிள்ளை அவர்கள். தந்தையார் இறக்கும் பொழுது இ. மு. சு அவர்களுக்கு நான்கு வயது, இவர் தம்பி நாற்பது நாள் கருவில் இருந்தார்.

கோதைப் பாட்டியார் என் இளமையில், கூறக் கேட்டிருக்கிறேன் 'நாலு வயதுப்பிள்ளையும், நாற்பது நாள் கருவையும், வளர்த்து ஆளாக்கத்தான் பட்டபாட்டையெல்லாம் விரித்துரைப் பார். தம் குழந்தைகளையும் பாதுகாக்கச் சில வேளைகளில் உடல் உழைப்பில் ஈடுபடவும் நேர்ந்தது. உள்ள உணவைக்குழந்தைகளுக்கு ஊட்டிமீதியை உண்ண நேர்ந்தது.

இ. மு. சு அவர்களுக்குத் தாயிட்டபெயர் "சந்திர சேகரன்" பௌர்ணமி பூஜை செய்தபலனால் பிறந்ததால் அப்பெயர் இட்டழைத்தார் "சந்திரா" "சந்திரா" என்று அன்புடன் அழைப்பார். "சந்திரசேகரன்" என்ற பெய ரையே இ. மு. சு. அவர்கள் பிற்காலத்தில் தம் புனை பெயராக வைத்துத் தன்மான இயக்கத்தில் புகழ் பெற் றார்—"சந்திரசேகரப் பாவலர்" என்றால் தான் தன்மான இயக்கத் தாருக்குத் தெரியும்.

## பள்ளிக் கல்வி :

ஆறாம் வகுப்புவரை திருவில்லிபுத்தூர் இந்து உயர் நிலைப்பள்ளியில் பயின்றார். தம் தாய் மாமனார் சங்கர நாராயணப்பிள்ளை அவர்கள் வீட்டில் தங்கிப் படித்தார். தந்தைக்கு அடுத்தபடியாகத் தாய் மாமனார் போஸ்ட் மாஸ்டர் சங்கரநாராயணப்பிள்ளை அவர்களைப் போற்றி வந்தார். சிறுவனாக இருந்தபோது சிறு தெய்வ வழி பாட்டில் ஈடுபட்டிருந்தார். காளி, மாரி, முதலிய தெய்வங் களை வழிபட்டு" அம்மன் கொண்டாடியாக இருந்தார். இவர் திருவில்லிபுத்தூர் இராமாயணப்புலவர் தமிழா சிரியர் அப்புவையங்கார் கதைவிரிவுரையை இருமுறை கேட் டார். இராம கதையில் பற்று மிருந்து 'இராமாயண அகவல்' அகவல் பாலில் இயற்றினார். இவரது ஆசிரியர் அரங்கநாத பிள்ளையும் இவருக்கு வைணவப் பற்றை ஊட்டினார்.

'தந்தையொடு கல்விபோம்' என்பது சரியாகிவிட்டது. ஏழாம் வகுப்பை மூன்று ஊர்களில் படித்தார். முற்பகுதி எட்டையபுரம் அரசர் உயர்நிலைப்பள்ளி, இடையில் மூன்று மாதங்கள் அருப்புக்கோட்டை சைவபானுசத்திரிய வித்தியாசாலை, கடைசி இருமாதங்கள் C. M. S. உயர் நிலைப்பள்ளி, திருவில்லிபுத்தூர். எட்டாம் வகுப்பு C. M. S. பள்ளியே 9. 10, 11 மீண்டும் அரசர் உயர்நிலைப்

பள்ளி, எட்டையபுரம், இக்காலம் சோதனைக் காலமே. 1914 மார்ச்சில் S. S. L. C. தேர்ச்சியடைந்தார். எட்டைய புரம் உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர் சீனிவாச ஐயங்காரவர்கள் முருக பக்தியில் ஈடுபாடு உடையவர். அவர் தம் சொல்வழி முருகன் பால் ஈடுபாடுடையவராகி ஒவ்வொரு நாளும் நண்பகலுக்கு முன் முருகனைப்பற்றி ஐந்து பாடல்கள் பாடுவது என்ற விரதம் கொண்டார்.

## இளமைக் குறும்பு :

சிறுவனாக இருந்தபோது முரட்டுக் குணமும், பிடிவாத குணமும், நிறைந்தவராக இருந்தார். தோழர்களுடன் அடி பிடிசண்டைகளில் ஈடுபட்டார். அடுத்த வீட்டுக்காரியின் சோற்றுப்பானையை ஒருமுறை உடைத்து விட்டாராம். பாம்பையும் எட்டிப் பிடிக்கும் துணிச்சலும் வாய்ந்தவர். 'இளங்கன்று பயமறியாது' என்ற பருவத்தில் துள்ளித் திரிந்தார். வீட்டில் வளமையற்றிருந்தாலும், தாய் இவரைச் செல்லப் பிள்ளையாக வளர்த்தார்.

இந்த முரட்டுக் குணம் விவரம் தெரிந்த பின்னர் வாழ்க்கையோடு போராடக் கூடிய வலிமையைத் தந்தது: துன்பங்கள் மலைபோல் வந்தாலும் தளராத மன உறுதியை ஊட்டியது.

## ஆசுகவி :

உயர்நிலைப் பள்ளிப் பருவத்திலேயே இலக்கண வரம் புடன் கவிபாடும் திறனைப் பெற்றிருந்தார். ஒரு சமயம் ''கவிராஜ சிங்கம்'' என்ற பட்டத்தைக் கொடுத்தது, யார், என்னுடன் செய்யுள் இயற்றும் போட்டிக்கு வரத் தயாரா என திரு சண்முகம் பிள்ளையை அறைகூவி அழைத்தார். சிறுவனின் துணிவையும், அறிவையும் மெச்சிப் பாராட்டி, போட்டியிடத் துணிந்ததே, புலமைச் செருக்கினைக் காட்டு

கிறதென்றும், பிற்காலத்தில் பெரும் புலவனாய் வருவாய் என்றும் வாழ்த்துக்கூறிச் சமாதானப்படுத்திப் போட்டியினின்று நழுவிச் சென்றார்.

ஒரு சாலை மாணவர் :

இவருடன் பயின்றவர்களின் மகாகவி பாரதியாரின் சகோதரர் விசுவநாதன் அவர்களும் ஒருவர். ராமசந்திரன் என்று மற்றொருவர் மருத்துவ ராகிப் பிற்காலத்தில் இவருக்குப் பல வகையிலும் மருத்துவ உதவி அளித்தார். இறுதியில் பசுமலையில் குடியேறி விட்டார்.

மகாகவி பாரதியுடன் :

சின்னச்சாமி ஐயரவர்கள் குடும்ப நண்பராதலின் பாரதி, விசுவநாதன் முதலியோர் இ. மு. சு. அவர்கள் வீட்டுக்கு அடிக்கடி வருவது வழக்கம். ஒரு சமயம் இவர் வீட்டில் இல்லாத நேரத்தில் பாரதி வீட்டிற்கு வந்து தட்டட்டியில் (மொட்டைமாடி) முகட்டில் ஏறி உட்கார்ந்து பாட்டுக்களை உரக்கப் படித்துச் கொண்டிருந்தார். இடையில் இ. மு. சு அவர்கள் வீட்டுக்கு வந்து பாரதியைப் பார்க்க வருகையில், திடீரென்று முகட்டிலிருந்து குதித்து "சுப்பிரமணியா" என்று கூவித் தழுவி மகிழ்ந்தாராம். இருப்பினும் பாரதியார் பாடல்களை அவர் ஒத்துக் கொள்ளவில்லை. மரபை மீறியவை என்றும், பிழைகள் மலிந்தன என்றும் இ. மு. சு. இறுதிவரை கருதினார். பாரதி பாடல்கள் தொகுப்பில் அவர் பிழை எனக் கருதியவற்றைத் தெளிவாகக் குறித்து வைத்திருந்தார். தனிப்பட்ட முறையில் பாரதி, விசுவநாதன் ஆகியோரின் இளமை நண்பராவார்.

மாணவ ஆசிரியர் :

எட்டையபுரம் அரசர் உயர்நிலைப் பள்ளியில் இறுதி வகுப்பு பயின்று கொண்டு இருக்கும் பொழுது, இ. மு. சு.

அவர்களின் தமிழாசிரியர் சீனிவாச ஐயங்கார் அவர்கள் திடீர் திடீர் எனக் காணுமல் போய்வருவாராம். காசியிலிருந்து கடிதம் வருமாம், எப்போது வருவாரென்று, அவ்வாறு காசியாத்திரையில் தமிழாசிரியர் காணாமல் போன காலங்களிலெல்லாம், தலைமை ஆசிரியர் இ. மு. சு. வையும் பாரதியாரின் சகோதரர் விசுவநாதஐயரையும் தமிழ் கற்பிக்குமாறு பணிப்பார். சகமாணவர்களுக்கே தமிழ் கற்பித்த பெருமை இ. மு. சு அவர்களுக்கு உண்டு. தமிழ் கற்பித்தலில் இவருக்குத் தணியாத ஆர்வம் ஏற்பட்டதும் இந்நாளில் தான்.

வரலாற்று அளப்பு :

பள்ளியிறுதி வகுப்பில் இவர்தம் வரலாற்று ஆசிரியர் மாணவர்களின் விடைத்தாள்களைத் திருத்தும் போது எழுதியுள்ள பக்கங்களின் எண்ணிக்கையை வைத்து மதிப்பெண் வழங்கும் இயல்புடையவர். ஒரு சமயம் வரலாற்றுத் தேர்வில் எழுபது பக்கங்கள் எழுதித் தள்ளி விட்டார். ஆசிரியர் அவருக்கு முதல் மதிப்பெண் எழுபது என்று போட்டிருந்தாராம். விடைத் தாள்களை வகுப்பில் ஆசிரியர் கொடுத்தவுடன், இவர் எழுந்து நின்று தம் தகுதிக்கு மீறிய மதிப்பெண் போடப்பட்டிருந்ததால் விடைத்தாள்களைப் பெற்றுக் கொள்ள முடியாது என்று வாதிட்டார், அதுகண்டு ஆசிரியர் திடுக்கிட்டார். மாணவர்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

கொடுக்கப்பட்ட கேள்விகளுக்குச் சம்பந்தமில்லாமல் பல பக்கங்கள் எழுதியிருப்பதற்கு உயர்ந்த மதிப்பெண் வழங்கியது பொருத்தமற்றது என்று தம் நிலையை விளக்கினார். ஆசிரியர் முழுவதும் படித்துப் பார்க்காமல் மதிப்பீடு செய்திருக்கிறார். விடைத்தாளை வாங்கிப் பார்த்த ஆசிரியர் "கப்சா" சுப்பிரமணியன் என்று பெயரிட்டு மறு மதிப்பீடு செய்தார்.

## விளையும் பயிர் முளையில் தெரியும் :

பள்ளிச் சிறுவனாக இருக்கும் பருவத்திலேயே இலக்கிய முயற்சி, கவிபாடும் திறன், சங்கங்கள் அமைக்கும் ஆர்வம் ஆகிய இயல்புகள், இவரிடம் குடிகொண்டிருந்தன. 1912—14 ஆகிய ஆண்டுகளில் பள்ளிப் பருவத்திலேயே "கலைவாணிகழகம்" என்ற சங்கத்தைத் தோற்றுவித்து அதன் செயலாளராக—அமைச்சராகப் பணியாற்றினார்.

அந்நிலையில் செய்யுள் நூல்கள் இயற்றும் திறனும் படைத்திருந்தார். அக் காலத்தில், நடுவிற்பட்டியில் மாணிக்கம் செட்டியார், நல்லசிவன் பிள்ளை என்றும் இரு புலவர்கள் வாழ்ந்து வந்தனர். அவர்களோடு போட்டி போட்டுப் பாடுவது இவரது வழக்கம். திரு. நல்லசிவன் பிள்ளை இரண்டடிகளும், இ. மு. சு இரண்டடிகளும் பாடிமுடித்த "சாவித்திரி அகவல்" கையெழுத்துப் படியாகவே நின்றுவிட்டது. சிங்கைப் பதிற்றுப்பத்தந்தாதி எனத் தொடங்கிப் பாடிய முப்பது பாடல்களும், பெரிய புராணமாலை என்ற நூலின் சிறு பகுதிகளும், செந்தமிழ்ச் செல்வியில் வெளி வந்தன. "இராமாயண அகவல்" என்றும் நூலை இரண்டாயிரத்து நூற்று ஐந்து அடிகளில் இயற்றினார். இந்நூல் 1913 நவம்பர் மாதம் முதல் 1914 டிசம்பர் முடிய "விவேக போதினி" என்ற மாதப் பத்திரிகையில் முழுவதும் வெளிவந்திருக்கிறது. 1914, 15 ஆகிய ஆண்டுகளில் உண்பதற்கு முன் முருகப் பெருமானைப் பற்றி ஐந்து வெண்பாக்கள் பாடியே தீர வேண்டுமென்ற விரதத்தால் இயற்றிய பாக்கள் கையெழுத்துப் படியளவில் நின்று விட்டன. இவ்வாறு 'விளையும் பயிர் முளையிலே தெரியும்' என்ற முதுமொழிக் கிணங்க பல்லாற்றல் நிறைந்த (Versatile Genius) பிள்ளையவர்கள் பதினெட்டு வயதிற் குள்ளாகச் புலவர்கள் மெச்சும் பாக்கள் இயற்றித் தொடர்ச்சியாக இலக்கியப் பத்திரிகையில் வெளிவரும் சிறப்பினையும் பெற்றார்கள்.

# 2. தமிழாசிரியப்பணி

## பத்தமடை [1914-1921]

பள்ளியிறுதி வகுப்பு பதினெட்டாம் வயதில் முடித்தவுடன் உழைத்துக் குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு இ.மு.சு. அவர்களுக்கு ஏற்பட்டது. தமிழாசிரியப் பணியில் ஈடுபட வேண்டும் என்ற தணியாத ஆர்வம் இவரை ஆட்டிப் படைத்தது. அக்காலத்தில் தமிழாசிரியர்களுக்குரிய புலவர் பட்டம் போன்ற தகுதிகள் ஒன்றுமில்லை. தமிழ் நன்கு நடத்துவாரென்று நாடறிந்த புலவரோ தலைமை ஆசிரியரோ சான்றிதழ் கொடுத்தால் போதும். இவர் இறுதி வகுப்பில் சக மாணவர்களுக்குத் தமிழ் வகுப்புக்கள் நடத்தியதை நேரில் கண்ட 'எட்டையபுரம் அரசர் உயர் நிலைப் பள்ளித் தலைமையாசிரியர் அத்தகைய சான்றிதழை வழங்கினார்.

### தாய் மாமனார் அழைப்பு;

அஞ்சலகத் தலைவராக இருந்த இவர் தம் மாமனார் சங்கர நாராயணபிள்ளை அவர்கள் தம் மருமகனையும் அஞ்சலக வேலையில் எழுத்தராக அமர்த்த வேண்டுமென்று விரும்பி அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்தார். S. S. L. C. வகுப்பு தேர்ச்சி பெற்றதும் அஞ்சலகப் பணியில் வந்து சேருமாறு அழைத்தார், அஞ்சலகப் பணியில் எழுத்தராகச் சேர்ந்தால் பிற்காலத்தில் தம்மைப் போல் பெரிய "போஸ்ட் மாஸ்டர்" ஆகலாம் என்பது அவரது வாதம். தாய் மாமனார் சொல்லைத் தட்டாத இயல்புடைய இ.மு.சு அவர்கள் தமிழாசிரியப் பணியின் மீது கொண்டிருந்த தணியாத ஆர்வத்தால், ஆசிரியப் பணியையே தேர்ந்

தெடுத்தார். மருமகன் "டானா டாவன்னா போடப்" போய் விட்டானே என்று சங்கர நாராயணபிள்ளை அவர்களுக்கு மிகவும் மன வருத்தம் ஏற்பட்டது. ஆனால் பிற்காலத்தில் இ. மு. சு. அவர்கள் பெருஞ்செல் வாக்குடன் அரசறிய வீற்றிருந்த காலத்தில் அவரிடம் ஒரு பரிந்துரைக்காக வந்தவர் தம் கருத்தை மாற்றிச் கொண்டு அவரை வாழ்த்தி மகிழ்ந்தார்.

## ஆங்கிலம் அறிந்த தமிழாசிரியர்

அக்காலத்தில் இருந்த தமிழாசிரியர்களுக்குப் பெரும்பாலும் ஆங்கிலம் தெரியாது. தமிழில் மட்டுமே புலமை படைத்தவர்களாக இருப்பார்கள். தலைமை ஆசிரியர்கள் சுற்றறிக்கைகளை ஆங்கிலத்தில் எழுதி வகுப்பறைகளுக்கு அனுப்புவார்-தமிழாசிரியர்கள், பாடு திண்டாட்டம்தான். மாணவர்களை வாசித்துப் பொருள் சொல்லச் சொல்லுவார்கள். பத்தமடையிவ் அன்று பிரபலமாக இருந்த உயர் நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் திருவேங்கடத்தய்யங்கார் என்பவர், ஆங்கிலம் தெரிந்த தமிழாசிரியர் (English Knowing Tamil Pandit)வேண்டுமென்று எட்டயபுரம்அரசர் உயர் நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியருக்கு எழுதினார். மாணவனாகவே தமிழ் வகுப்புக்கள் நடத்தி வந்த இ மு.சு, அவர்களைத் தலைமை ஆசிரியர் தேர்ந்தெடுத்துப் பரிந்துரைக் கடிதம் கொடுத்துப் பத்தமடைக்கு அனுப்பி வைத்தார்.

## பத்தமடையில்

1914 நவம்பர் மாதம் பத்தமடைக்கு உறவினர் ஒருவரையும் வழித்துணைக்கு அழைத்துக் கொண்டு சென்று தமிழாசிரியப் பணியை ஏற்ருர். மிகுந்த ஆர்வத்தோடு தம் பணியைத் தொடங்கிஞர்.

## பஞ்சம் தீர்ந்தது

படித்து முடித்து ஏழு மாதங்களுக்குப் பின்பே வேலை கிடைத்தது. மாதச் சம்பளம் ரு. 20 தான். ஆனல் அது

அவரது குடும்பத்திலிருந்து பஞ்சத்தைப் போக்குவதற்குப் போதுமானதாக இருந்தது. தந்தையார் விட்டுச் சென்ற இரண்டு வீடுகளை விற்று அதுவரை இருந்த கடனை அடைத்து விட்டுக் கோவிற் பட்டியில் வீடு ஒன்று வாங்கினார்கள். தன் தாயையும் ஒரே தம்பியையும் பேணிக் காப்பதற்குப் போதிய வருவாய் கிட்டியது. இதன்பின் வாழ்நாள் முழுவதும் அவரிடம் வறுமைவர அஞ்சியது: வளமை வந்து கொஞ்சியது. இடையில் சோதனைகள் இருந்த போதிலும் தளர வில்லை.

## கம்பீரமான தோற்றம் :

தொடக்க காலத்தில் பள்ளிக் கூடத்திற்குச் செல்லும் பொழுது பாங்காக உடையணிந்து செல்வார். பஞ்சகச்சம் கட்டித் தலைப்பாகையுடன் நீளமான ஓவர்கோட் அணிந்து பெருமிதமாக நடந்து கொள்வார். பெரும்பாலும் ஜரிகைக் கரை வேட்டிகளையே அணிவார். பார்ப்பவர்கள் தமிழாசிரியரைத் தலைமையாசிரியர் என்று நினைத்துக் கொள்வார்கள் சில ஆண்டுகள் இவ்வாறு பகட்டான உடைகளை அணிந்து வெறுத்து அதன் பின்னர்தான் எளிய வாழ்க்கையையும் சட்டையில்லாது, நாலுமுழ வேட்டியும், துண்டும் மட்டும் போட்டுக் கொண்டு தோட்டி முதல் தொண்டமான்வரை பேட்டி காணும் மனநிலைஎய்தினார். தோற்றப் பொலிவுடன் ஆர்வப் பணியாற்றிய "ஆங்கிலம்" தெரிந்த தமிழ்ப் பண்டிட்டைப் பாராட்டி 'சமஸ்கிருதப் பண்டிதருக்குச் சமமாக" அவருடைய சம்பளத்தை ரூ 5 உயர்த்திக் கொடுத்தார்கள்.

## மாணவச் செல்வர்:

பதினெட்டு வயதிலேயே இவர் பணியில் சேர்ந்து பள்ளி இறுதி வகுப்பிற்குப் பாடம் நடத்தும் வாய்ப்பைப் பெற்றதனால், பெரும்பாலான மாணவர்கள் இவரைவிட வயதில் மூத்தவர்கள்—உயர்நிலைப்பள்ளி நெல்லை மாவட்

டத்தில் விரல் விட்டு எண்ணத்தக்க இடத்தில் இருந்த தனுல்-நெல்லை மாவட்டத்தில் பல இடங்களிலிருந்தும் மாணவர்கள் வந்து படித்தனர். 50 மைல் தூரத்தில் இருந்த நெற்கட்டும் செவலிலிருந்தும் கூட மூத்தவர் சம்பிருதி சோமசுந்தரம் பிள்ளை அங்கு வந்து படித்தார். திரு எஸ். வெங்கடேசுவரன் I.C.S. அவர்களும் திரு M.V. சுப்பிரமணியம் I.C.S. அவர்களும் பத்தமடையில் இ.மு.சு. அவர்களிடம் S.S.L.C.யில் இரண்டு ஆண்டுகள் படித்தார்கள். ஏனெனில் வயது குறைவாக இருந்ததால், வயது விதிவிலக்கு அளிக்கும் மரபு முன்பு இல்லாததால் இரு ஆண்டுகள் அவ்விரு சிறந்த மாணவர்களும் இறுதி வகுப்பில் படிக்க நேரிட்டது.

## S. வெங்கடேசுவரன் :

பிற்காலத்தில் இ.மு.சு. அவர்களின் செல்வாக்கிற்கு அவர்களது மாணவர்கள் தமிழகம் முழுவதும் பல பதவிகளில் இருந்தது காரணம், இவரது செல்வாக்கிற்கு மூல காரணம் இவரது தலை மாணவராகிய S. வெங்கடேசுவரன் I.C.S. அவர்களே. எந்த அதிகாரியாக இருந்தாலும், தெரிந்தவரோ, தெரியாதவரே, தொலைபேசியில் கூப்பிட்டு; ''வெங்கடேசுவரன் பேசுகிறேன்'' என்று சொன்ன உடனேயே மறுமுனையில் அலறி அடித்துக் கொண்டு கேட்பார்கள். ''என் ஆசிரியர் வருகிருர் வேண்டியதைச் செய்யவும்'' என்று ஆணையிடுவார். தங்கு தடையின்றி காரியங்கள் நடைபெறும். பிற்காலத்தில் இ.மு.சு. அவர்கள் சென்றாலே போதும்; அரசுத் துறைச் செயலர்கள் எழுந்து நின்று வரவேற்று வேண்டியவற்றை உடன் செய்து முடிப்பார்கள்.

M.V. சுப்பிரமணியம் I.C.S. தனியான குணம் படைத்தவர். எவரிடமும் எந்தப் பரிந்துரையும் சொல்ல மாட்டார். இருப்பினும் இ.மு.சு. அவர்களிடம் பெரிதும் ஈடுபாடு உடையவர். அவரால் எந்தக் காரியமும் ஆகாது

என்றாலும் இ.மு.சு. அவர்கள் சென்னை செல்லும் போதெல்லாம் 'குட்டி' என்று செல்லமாக அழைக்கப் பெற்ற M.V. சுப்பிரமணியம் அவர்களைப் பார்ப்பார். தாம்பரத்தில் ஓய்வு பெற்று நோயுற்று இருக்கும் பொழுது கூட அவரைக் கண்டு பல சித்த மருந்துகளையும், அவரது மனைவியாரிடம் பலபக்குவங்களையும் எடுத்துக் கூறுவார்.

திருமணம் :

இ.மு.சு. அவர்களுக்கு 1916 நவம்பர் 29-ஆம் நாள் (கார்த்திகை 15) புதன்கிழமை எட்டயபுரத்தில் திருமணம் நடைபெற்றது. இவரது மனைவியார் திருமதி ஈசுவடிவம்மை யார். புல்வாய்ப்பட்டி கிராம முன்சீப் ஆண்டியப்பபிள்ளை அவர்கள் மகளும், நெற்கட்டும் செவல் கூடலூர் பழைய கிராம முனிசீப் ச. சுந்தரம் பிள்ளையவர்கள் வளர்ப்பு மகளும் ஆவார். குடும்பத்தைச் சீரும் சிக்கனமும் சிறப்பு மாக நடத்திச் செல்வதில் இணையற்றவர். 'ஈயாகக் கூட்டி எறும்பாகச் சேர்த்து' என்று அடிக்கடி கூறுவார்.

வீட்டுப் பொறுப்பைத் தம் மனைவியிடத்தில் விட்டு இ.மு.சு. அவர்கள் பொதுவாழ்வில் இறங்குவதில் மகிழ்ச்சி அடைந்தார். ஆனால், ஆரம்பகாலத்தில் தாயாருடனும், தம்பியுடனும் கூட்டுக் குடும்பமாக வாழ்க்கை நடத்திய போது கோதைப் பாட்டியார் தம் மருமகள் ஒரு சல்லிக்குக் கேட்காமல் வெங்காயம் வாங்கியதற்குக் கோபித்துக் கொண்டாராம். ஏதோ தெரியாமல் வாங்கி விட்டேன் என்று ஈசுரவடிவம்மாள் கூற, "உனக்கா ஒன்றும் தெரி யாது?

"மணலைக் கயிறாகத் திரிப்பாய்
வானத்தை வில்லாக வளைப்பாய்
எமனைப் பலகாரம் செய்வாய்
சதுரகிரி மலையெடுத்துத்
தட்டாங்கல் விளையாடுவாய்

என்று சுலவடையில் பதிலடி கொடுத்தாராம்.

இ·மு.சு. அவர்களின் இளவல் இ·மு· அருணாசலம் பிள்ளையவர்களையும் S.S.L.C. பள்ளியிறுதி வகுப்பு முடித்ததும் தமிழாசிரியர் பணியிலேயே ஈடுபடுத்தினார். நாங்குநேரியில் அவர் வரித்த பெண் பேச்சியம்மை என்ற மங்கையர்க்கரசியம்மையாரை மணமுடித்து வைத்தார்.

சின்னமகன் மணமுடித்துக் குடும்பம் ஆனபிறகு கோதை நாச்சியார் கோவிற்பட்டியில் உள்ள வீட்டில் வசித்து வந்தார். தமது இரண்டு மகன்களது வீட்டிலும் அவ்வப்போது வந்துதங்கியிருப்பார். 'கோவிற்பட்டி ஆச்சி' என்றழைப்போம். அதற்குப் பிறகு குடும்பப் பொறுப்பும் அனைத்தும் ஈசுரவடிவம்மையாருக்கு ஏற்பட்டது.

திருமணமாகிப் பத்தாண்டுகளாகியும் குழந்தைப் பேறு இல்லை. பல கோவில்களுக்கும் சென்று வழிபாடு செய்தனர்.

## பத்தமடை அருணாசலம் பிள்ளை

எட்டையபுரம் அரசர் கல்லூரித் தமிழாசிரியர் சீனிவாச ஐயங்காரவர்கள் செல்வாக்கில் ஆட்பட்டு முருக பக்தராக விளங்கிய இ· மு. சு. அவர்கள் பத்தமடை அருணாசலம்பிள்ளை அவர்கள் நட்புறவால் சிவபக்தராக மாறினார். ஒரு நாள் சிவன் கோவிலுக்கு அழைத்துச் சென்று, மூலஸ்தானத்தின் முன் நின்றவுடன் பரவசமாகித் தன் வயமிழந்து கண்ணீர் மல்கிச் சிவன் சேவடி சேவிக்கத் தொடங்கினாராம், அன்றிலிருந்து இறுதி வரை சிவபக்தராகவே விளங்கினார்.

முருகனடிமையாக இருக்கும்போது கோவில்களுக்குச் சென்றால் முருகப் பெருமானை மட்டும் வழிபட்டுத் திருப்பிவிடுவாராம். வைணவராக இராம பக்தராக இருந்தபோதும் அப்படித்தான். சிறுவயதில் அம்மன்

கொண்டாடியாக வெறியாட்டத்தில் ஈடுபடுவார், அள வாகப் பணியாற்றும் இயல்பு இவருக்குக் கிடையாது.

## பட்டினிக் கிடப்பார் அளவோடு அருந்தார்

டாக்டர் ஜான்சன் (Dr. Johnson) என்னும் ஆங்கில இலக்கியவாதியின் வாழ்க்கை வரலாற்றை எழுதிய பாஸ் வெல் என்பார் ஜான்சன் இயல்பைச் சித்தரிக்கும் பொழுது

> "He can practise abstinence,
> but not moderation"

என்று கூறியுள்ளார்.

> "பட்டினி கிடப்பாரே யொழிய அளவோடு
> உண்ணார்."

என்று கூறுகிறார். உணவில் மட்டுமன்று. எந்தக் காரியத் திலும் இப்படித்தான். ஒரு காரியத்தில் ஈடுபடாமலிருப் பார் ஈடுபட்டால் வெறியோடு ஈடுபடுவார்.

இ. மு. சு. அவர்களுக்கு இது முற்றிலும் பொருந்தும். முருகனை மட்டும் வழிபட்டு வந்தவர். சிவனை மட்டும் வழிபடலானார். இருவரையும் சேர்த்து வழிபடுதல் அவர் தம் இயல்புக்கு முரண்பட்டதாகும்.

வழிபாட்டில் மட்டுமின்றி, உணவிலும், பொதுவாழ் விலும் இத்தகைய போக்கு இவருக்கு உண்டு. நெய் ஊற்றாமல் இருந்து விடுவார். ஆனால் நெய் ஊற்றினால் பாத்திரத்தை அப்படியே தூக்கிக் கவிழ்ப்பார். உடல் நலம் இல்லாத நேரத்தில் பட்டினிகிடப்பார். ஆனால் நலமாக இருக்கும்போது அளவாக உண்ணார். அவர் போல் நெய் ஊற்றிச் சாப்பிடுவது அரிது

## சித்த மருத்துவம்;

பத்தமடை அருணாசலம் பிள்ளையவர்கள் சித்த மருத்துவர். அவர் மூலமாகவே இ. மு. சு. அவர்களுக்கும்

சித்த மருத்துவத்தில் ஈடுபாடு ஏற்பட்டது. சித்தமருந்து களைப் பற்றிய ஆய்வுகளைப் பத்தமடையில்தான் தொடங்கினார். பத்தமடை அருணாசலம் பிள்ளையவர்கள் இறுதி வரை இவருக்கு ஆருயிர் நண்பராக இருந்தார். 1943 சூலை மாதம் 'எனதுயிர்த் தோழர்' என்ற தலைப்பில் இ. மு. சு அவர்களது வரலாற்றை எழுதி வெளியிட்டார். இந்நூல் எழுதுவதற்கும் அவர்பணி அடிப்படையாய் அமைந்தது.

## சைவப் பஞ்சாங்கம்:

1917 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 24, 25, 26 ஆம் நாட்களில் கோவிற்பட்டியில் பத்திவிளை கழக ஆண்டு விழா நடைபெற்றது. அவ்விழாவிற்கு இ. மு. சு அவர்களும் சென்றிருந்தார்கள். ஆங்கிலப் பேராசிரியர் பூரணலிங்கம்பிள்ளை அவர்கள் தலைமை ஏற்றிருந்தார்.

சைவ ஆகமங்களின்படி திருக்கோவில் விழாக்களாக் கொண்டாடுபவர் சைவப் பெருமக்கள். ஆனால் நாடு முழுவதும் சுமார்த்தப் பிராமணர்களது செல்வாக்கு பெருகியிருந்தது. கோயில்களிலும் சுமார்த்தர்கள் சொற்படியே விழாக்களை நடத்தி வந்தனர். முக்கியமாகக் கந்தர் சஷ்டி, விநாயகர் சதுர்த்தி கொண்டாடுவதில் சுமார்த்தர்களுக்கும், சைவர்களுக்கும் கருத்து வேறுபாடு நிலவியது. சுமார்த்தர்கள் சந்திரனை அடிப்படையாகக் கொண்டு கணிப்பவர்கள் "சந்திரமானிகள்" சைவர்கள் சூரியனை அடிப்படையாகக் கொண்டு கணிப்பவர்கள் "சௌரமானிகள்"

அன்று நடைபெற்ற பேரவையில் •தூத்துக்குடி சித்தாந்த ஆசிரியர் ந. சிவகுருநாதபிள்ளையவர்கள், பேட்டைப் புராணிகர் 'த. ஆறுமுக நயினார் பிள்ளையவர்கள் போன்ற பேரறிஞர்கள். சுமார்த்தப் புரோகிதர்கள் சுமார்த்தப் பஞ்சாங்கத்தின் துணைகொண்டு

சைவசமய விரதங்களையும், திருவிழாக்களையும் மறைத்து விடுவது கண்டு வருந்தி உரையாற்றினார். பேச்சாளர்கள் சைவப் பஞ்சாங்கம் ஒன்று இல்லாமை குறித்துக் கவலை தெரிவித்தனர்.

கூட்டத்தின் நடுவிலிருந்த இ. மு. சு அவர்கள் திடீரென்று எழுந்து நின்று 'அடுத்து வரும் சித்தார்த்தி ஆண்டிலிருந்து சைவப் பஞ்சாங்கம் வெளிவரும் என்று தெய்வ ஆவேசமுற்றவர் போலக் கூவினார். கூடியிருந்தவர் திகைத்தனர்.

## பத்தமடை ஆசிரியர் முத்துசாமி பிள்ளையவர்கள்

சைவப் பஞ்சாங்கத்தைச் சிவாகம முறைப்படி கணித்துச் சொன்ன சொல் தவறாமல் சித்தார்த்தி ஆண்டில் 1918 இல் வெளிவரச் செய்ததில் உடன் பணியாற்றியவர், பத்தமடை ஆசிரியர் முத்துசாமிப் பிள்ளையவர்கள், கணிதமுறை நன்கறிந்தவர்கள். இ. மு, சு அவர்களுடன் இணையாசிரியராக இரு ஆண்டுகள் சைவப் பஞ்சாங்கம் வெளிவந்தது.

ஆனால் விரைவில் இ. மு. சு. அவர்களுக்கும் ஆசிரியர் முத்துசாமி பிள்ளையவர்களுக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. சைவப் பஞ்சாங்கத்தின் இரு ஆசிரியர்களில் இ. மு. சு. அவர்களுடைய பெயர் முதலில் போடப்பட்டது தான் காரணம். முத்துசாமிப்பிள்ளையவர்கள் தம் பெயர்தான் முதலில் போடவேண்டுமென்று விரும்பினார். முடியாமல் போகவே கருத்து வேறுபாடு காரணமாக இ. மு, சு. அவர்கள் வீட்டில் கல்லெறியச் செய்தாராம் இ. மு. சு. அவர்களின் நண்பர்கள் பதில் மரியாதை செய்யப் பகை வளர்ந்தது. சில ஆண்டுகளுக்குப்பின் வாழ்க்கையில் பல இன்னல்கள் அடைந்து, மனந்திருந்திக் கோவிற்பட்டியில் வேலைபார்த்துக் கொண்டிருந்த இ.மு.சு வீட்டிற்கு உதவி நாடிச் சென்றார் முத்துசாமிப்பிள்ளை.

அவரை இ. மு. சு வின் மனைவியார் ஈசுரவடிவம்மையார் வரவேற்கத் தயாராக இல்லை. ஆனால் பகை மறைந்து மன்னித்து வேண்டிய உதவிகளை இ. மு. சு. அவர்கள் செய்தார்.

"பகைநட்பாய்க் கொண்டொழுகும் பண்புடையாளன்
தகைமைக் கீழ்த் தங்கிற்றுலகு"

## கழக வழிப் பஞ்சாங்கம்.

இரத்தாட்சி ஆண்டு முதல் சைவப் பஞ்சாங்கத்தைச் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் வெளியிட்டு வருகிறார்கள். இதற்கு மூல காரணமாக விளங்கியவர் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் தலைவராக விளங்கிய திரு மா. வே. நெல்லையப்பபிள்ளை அவர்களும் செயலாளர் திரு. திருவரங்கம் பிள்ளையவர்களுமே. திருவரங்கம்பிள்ளை அவர்களின் அயரா முயற்சியையும் தமிழறிஞர்களை ஊக்குவிக்கும், பண்பையும் இ. மு. சு அவர்கள் அடிக்கடி நினைவு கூர்வார்.

## பத்தமடை சைவசித்தாந்த சபை

பத்தமடை அருணாசலம் பிள்ளை அவர்கள் தொடர்பால் சிவநெறியில் ஈடுபட்ட இ. மு. சு. முழுமூச்சாகச் செயல்படத் தொடங்கினார். பத்தமடையில் பழநி யாண்டவர் பசனை மண்டபத்தில் சைவசித்தாந்த சபையை நிறுவி அதன் தலைவராக வீற்றிருந்தார்.

பழநியாண்டவர் பசனைமடத்தில் கோவிந்த நாம சங்கீர்த்தனம் 'கூறப்படுவது கண்டு கொதித்தெழுந்தார். வைணவர்களுடன் போர் தொடுத்தார். அங்குள்ள சுமார்த்தர் போலி பக்தர்களை ஏவிக் கலகம் விளைவிக்க முயன்றார்கள்.

## சுமார்த்தர்களுடன் போர்

திருநெல்வேலி நீதி மன்றங்களில் சுமார்த்தர்களுடன் போர்தொடுத்தார். பழநியாண்டவர் பசனை மடத்தில் "கோவிந்த நாம சங்கீர்த்தனம்" கூறுவோர் அங்கு அடியெடுத்து வைத்தல் கூடாது என்று வழக்குத் தொடுத்தார். நீதிமன்றமும் சிவன்கோவில்களிலும் அதனைச் சார்ந்த மடங்களும் கோவிந்த நாம சங்கீர்த்தனம் கூடாதென்று தீர்ப்பளித்தது.

சைவம், வைணவம்! கிறித்துவம், இஸ்லாம்—போல 'சுமார்த்தமும்' ஒருமதம் என்று கருதினார். அம்மதத்தைச் சார்ந்தவர்களே சுமார்த்தப் பிராமணர்கள். அவர்களைக் குருக்களாகக் கொண்டு சைவர்கள் திருமணம் முதலிய சடங்குகளை நடத்துவது தகாது என்று பல கூட்டங்கள் கூடிப் பிரச்சாரம் செய்து வந்தார். சைவ பஞ்சாங்கத்தின் வாயிலாகவும் அமர்த்தர்களைச் சாடி வந்தார்.

## சிவன் கோவிலில் சிலம்படி

பத்தமடையிலும் சுற்று வட்டாரங்களிலும் இஸ்லாமியர்கள் பலம் வாய்ந்த குழுக்களாக வாழ்ந்து வந்தனர். இடைக்காலத்தில் நவாபுகளின் ஆட்சி நடந்து வந்ததால், இஸ்லாமியர்களைக் கண்டு பொதுவாக மக்கள் அஞ்சி வாழ்ந்தனர். 1919இல் வில்லவவனநாதர் கோவில் உட் பிரகாரத்தில் இந்துக்கள் அஞ்சி ஒதுங்கினர். ஒரு சிலர் உமிழ்ந்து கொண்டு கோவிலை அவமதிப்பது போல் நடந்து கொண்டனர். அதுகண்டு கொதித்தெழுந்த இ.மு.சு. அவர்கள் நண்பர் அருணாசலம் பிள்ளை அவர்களுடன் நெற்றி மட்டக் கம்பெடுத்து முகமதியர் பத்துத் பேருடன் போர் தொடுத்து அவர்களை அடித்து விரட்டித் திருக் கோவிலின் தூய்மையை நிலை நாட்டினர். சிவாபராதம் கண்டிருப்பதைவிடப் போரிட்டு உயிரை விடுவதே மேல் என்று கருதினார்.

## வாழ்க்கைச் சோதனை :

'எவரிடமும் கையேந்திக் கடன் வாங்குவதில்லை'' என்ற கொள்கையில் இறுதிவரை உறுதியுடனிருந்தார். இளமைப் பருவத்திலே தந்தையின் மறைவினால் கடன் வாங்க நேரிட்டது. அக்கடன் வளர்ந்து தந்தையார் விட்டுச் சென்ற இரு வீடுகளையும் விற்கவேண்டிய நிலை ஏற்பட்டது. இப்படிப்பட்டறிவில் உணர்ந்தவருக்குச் சோதனை ஒன்று உண்டாயிற்று.

இவர்தம் மனைவியார் ஈசுரவடிவம்மையாருக்குப் பெரியம்மை நோய் கண்டது. நோயின் கொடுமை கூடிக் கொண்டே போனது. மருத்துவர்கள் கைவிட்டு விட்டனர். வேண்டிய உறவினர்களுக்குச் சொல்லியனுப்பினர். ஈசுர வடிவம்மையாரின் தாய் பிரமு அம்மாள் வளர்ப்புத்தாய் வெள்ளையம்மாள் தந்தை ஆண்டியப்பப் பிள்ளை, வளர்ப்புத் தந்தை சுந்தரம் பிள்ளை முதலிய அனைவரும் பத்தமடையில் வந்து கூடிவிட்டனர்.

ஏற்கனவே பெரியம்மை நோயுற்ற மனைவியைக் கவனிப்பதில் கையிலிருந்த பணமெல்லாம் செலவழிந்து விட்டது. இந்நிலையில் இறுதிநிலை ஏற்படுமோ என அஞ்சி உறவினர் கூட்டம் கூடிவிட்டது. 'வீட்டிலுள்ள உணவுப் பொருள்களும் தீர்ந்துவிட்டன. அடுத்து அரிசி வாங்கு வதற்கு என்ன செய்வது என்று திகைத்து அயர்ந்து எவரிடமும் கையேந்திக கடன் வாங்காத விரதத்தைக் கைவிட வேண்டுமோ என்று மனமுடைந்து வருந்தினார்.

மனைவிக்குத் தொத்து நோய் இருப்பதனுல் அக்கால முறைப்படி 'குவாரன்டைன்' விடுமுறை கொடுத்துப் பள்ளிக்கு 15 நாட்கள் வரவேண்டாம் என்று தலைமை யாசிரியர் கூறிவிட்டார். இந்நிலையில் பள்ளியில் சக ஆசிரியர்களைச் சந்தித்துக் கேட்கும் வாய்ப்புமில்லை.

சிவனருளை நினைந்துருகிக் கண்ணீர் மல்கிக் கொண்டு இருக்கும் பொழுது, திடீரென்று பள்ளிச் சேவகன் வீட்டிற்கு வந்து தலைமை ஆசிரியர் கூப்பிடுவதாக அழைத்தான். எதுவும் புரியாமல் பள்ளிக்குச் சென்றவருக்கு அதிசயம் காத்திருந்தது. சம்பளவுயர்வு பாக்கிக்குச் சர்க்கார் மானியம் வந்து விட்டதாக ரூ 150ஐ அக்காலத்தில் பெருந்தொகை தற்போது 3500க்குச் சமம் வெள்ளிப் பணமாக, நோட்டாக அன்று எண்ணிக் கொடுத்தாராம் தலைமை ஆசிரியர். சிவனருளே தம்மை வந்து ஆட்கொண்டு மானத்தைக் காப்பாற்றியதாக பன்முறை இந்நிகழ்ச்சியைத் திரும்பத் திரும்ப கூறி இறுதிவரை மறுகினார் இ.மு.சு. அது மட்டுமன்று, தெய்வாதீனமாக அவரது மனைவியாரும் வாழை இலையில் படுக்க வைக்கப்பட்டிருந்த நிலைமாறி உயிர் தப்பினார்.

## வாழ்க்கை முறை :

சிறு வயதிலிருந்த பிடிவாத குணம், வளர்ந்த பருவத்தில் கொள்கைப் பிடிப்பாக மாறியது. முரட்டுக் குணம் கொள்கைக்காகப் போராடும் வீரவுள்ளமாக உருவெடுத்தது. கண்டவர் மருளும் உடற்கட்டும் வலிமையில் மற்றாரை நடுநடுங்கச் செய்தது.

''1914 முதல் காப்பி, தேநீர் முதலிய எந்த விதக்குடியும் இவரிடம் கிடையா. 1922 முதல் பிடிவாதமாக இவர்கள் வெற்றிலை போடுவதில்லை. 1930 முதல் சோடா வகைக் குடியினையும் விட்டுவிட்டார்கள். பொடி, புகையிலைப் பொருள்களை எந்த நாளிலும் விரும்பியதில்லை' என்று பத்தமடை அருணசலம் பிள்ளை அவர்கள் 'எனதுயிர்த் தோழர்' என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

பஸ், ரயில்கள் புறப்படும் ஒரு சில நிமிடங்களுக்கு முன்புதான் வீட்டிலிருந்து புறப்படுவார். அதுவரை வீட்டில் நிதானமாகத் தம் வேலைகளைச் செய்து கொண்

டிருப்பார். பிரயாணத்திற்குப் புறப்படுபவர் போலவே தெரியாது. மிகவேகமாக நடந்து சென்று பஸ், ரயிலைப் பிடித்து விடுவார். பத்தமடையிலிருந்து ரயில் மூலம் திருநெல்வேலிக்கு அடிக்கடி சென்று வருவார். ரயில் புறப்பட்ட பிறகு கூட ஓடிப் பிடித்து விடுவார். அப்படி ஒருமுறை ரயிலைத் துரத்திக் கொண்டு ஓடி கார்டு வானைத்தான் பிடிக்க முடிந்ததாம். கார்டு திகைத்து அவருக்கு இடம் கொடுத்தாராம்.

## பொது வாழ்வில் தோன்றாத் துணை

நான்கு வயதிலேயே இவரது தந்தையார் விட்டுச் சென்று விட்டாலும் பொதுவாழ்வில் புகுவதற்கு இவரது தந்தையார் எட்டையபுரம் அரண்மனை ஆவணக் காப்பாளர் கவி.சு. முத்துசாமிப் பிள்ளை அவர்களின் பெயர் தோன்றாத் துணையாக நின்றுதவியது. சர். டி. என். சிவஞானம்பிள்ளை அவர்களின் அறிமுகம் பெற உதவியது. தம் தந்தையார் முகத்தையே சரிவர அறியாத இ.மு.சு. அவர்கள் சர் டி.என். சிவஞானம் பிள்ளை அவர்கள் வீட்டிலிருந்த எட்டையபுரம் அரண்மனைக் குழுப் படத்திலிருந்து (Group photo) தந்தையார் திரு உருவத்தைக் கண்டு மகிழ்ந்து அதனைப் பெரிதாக எழுதி வைத்துப் போற்றிப் புகழ்ந்து வந்தார்.

பத்தமடை சைவசித்தாந்த சபை ஆண்டு விழாக்களுக்கு சர் டி.என். சிவஞானம்பிள்ளை அவர்கள் இராவ் சாகிபு வி.பூ. காந்திமத நாத பிள்ளை அவர்கள் முதலிய பெரியோர்கள் தலைமையில் 1617-20இல் ஏற்பாடு செய்திருந்தார்.

இருபத்தைந்து வயது நிரம்பும் முன்னரே திருநெல்வேலி மாவட்டத்தில் சைவப் பெரு மக்களிடையேயும், தமிழாசிரியர் நடுவிலும் நன்கு அறிமுகமாகி, சைவப் பஞ்சாங்கம் வெளியிட்டு விழாக்கள் நடத்தித் தம்

தந்தையார் பெயர் என்னும் தோன்றாத் துணையுடன் பெருந்தலைவர்களின் நன்மதிப்பையும் பெற்றுத் திகழ்ந்தார்.

## விரிவுரைகள் :

இ.மு.சு. அவர்கள் முதன்முதலாக விரிவுரை நிகழ்த்தியது 1911 டிசம்பரில் கோவிற்பட்டியில் நடைபெற்ற பத்திவிளை கழக ஆண்டு விழாப் பேரவையிலேதான், பின் அடிக்கடி கோவிற்பட்டி பத்தமடை, தூத்துக்குடி, செவல், ஆத்தூர், நெல்லை சங்கரன் கோவில் ஆகிய ஊர்களுக்கும் சென்று விரிவுரைகளை நிகழ்த்தினார்.

தென்காசி, குற்றாலம், ஆத்தூர், சிதம்பரம், களக்காடு, குலசேகரன்பட்டினம், வள்ளியூர், காயற்பட்டினம், முதலிய இடங்களுக்கும் சென்று சொற்பொழிவாற்றினர். சாலிவாகன ஆண்டு 1116 முதல் 1117 முடிய சங்கரன் கோவிலில் திருவாசக விரிவுரைத் தொடர் சொற்பொழிவுகளை நிகழ்த்தினார்.

விரிவுரைகளின் வாயிலாக இ.மு.சு. அவர்களது பெயர் நெல்லை மாவட்டத்தில் பரவியது என்றாலும், சொற்பொழிவாற்றுவதில் இவருக்குச் சிறப்பான திறமை உண்டு என்று சொல்வதற்கில்லை. வார்த்தை சிறிது தடைப்பட்டே வரும். ஆனல் இனிய குரலில் தேவாரம், திருவாசகம் பாடும் திறமை இருந்தது.

இ.மு.சு. அவர்களைப் புகழேணியில் உயர்த்திச் சென்றது, எழுத்தாற்றலும் அமைப்புத் திறனுமே. (organising ability) பத்தமடை வாழ்க்கையில் 1914 நவம்பர் முதல் 1921 முடிய ஏழாண்டுகளிலும் இத்திறன்களின் சாயல் காணப் பெற்றாலும் முழுவளர்ச்சி அடையவில்லை.

# 3. தன்மான இயக்கத்தில்

## கோவில்பட்டி (1921—28)

திருநெல்வேலி மாவட்ட நாட்டாண்மைக் கழகத் தலைவராக (District Board Prisident) இருந்த சர் தி.பெ. சிவஞானம் பிள்ளை அவர்கள் பத்தமடையில் தனியார் பள்ளியில் பணியாற்றிக் கொண்டிருந்த இ.மு.சு. அவர்களை நாட்டாண்மைக் கழகப் பணிக்கு வருமாறு அழைத்தார். பத்தமடையில் சமஸ்கிருதப் பண்டிதருக்குச் சமமாக இவருக்கு சம்பள உயர்வுகள் கொடுத்து வைத்திருந்தாலும், பொதுத்துறைப் பள்ளிக்குப் போய்விடுவது எதிர்காலத்திற்கு நல்லது என்று முடிவெடுத்தார்.

### கோவில் பட்டி:

நெல்லை நாட்டாண்மைக் கழகம் முதன் முதலில் இ.மு.சு. அவர்களைக் கோவிற்பட்டி உயர்நிலைப் பள்ளியில் தலைமைத் தமிழாசிரியராக நியமித்தது, 1921 ஆகஸ்ட் மாதம் பத்தமடை உயர்நிலைப் பள்ளியை விடுத்துக் கோவில்பட்டி சென்று பணியேற்றார்—குடியேறினார்.

### சங்கங்கள் அமைப்பு :

கோவிற்பட்டியில் பத்திவிளைகழகம், திராவிடர் கழகம் இவற்றின் செயலாளராகிச் சிறப்புற நடத்தினார். மேலைச் செவலில் சைவ சித்தாந்த சபையைத் தோற்றுவித்துச் சாமி விருதைச் சிவஞான யோகிகள் மாணிக்க நாயக்கர் தலைமையில் இரண்டு ஆண்டு விழாக்கள் நடத்தினார். 27-7-1924இல் கலைக் கழகம் (Cultural-club) என்ற அமைப்பை உருவாக்கி அதன் செயலாளராகப் பணியாற்றினார். சிவாலயப் பணிவிடைச் சங்கம் உரு

வாக்கித் தலைவராகி 2-9-1925இல் மந்திரி சர் டி.என். சிவஞானம் பிள்ளையவர்கள் தலைமையில் ஆண்டுவிழா நடத்தினார். மேலும் சில நண்பர்களுடன் கல்விக் கழகம் (Literary Association) அமைத்தார். இவ்வாறு பல அமைப்புக்களை உருவாக்கிப் பொதுவாழ்வில் முன்னேற்றப் பாதையை வகுப்பதில் அயராது இ.மு.சு. அவர்கள் உழைத்து வந்ததைக் காணலாம். திருமணமாகிப் பல ஆண்டுகள் ஆகியும் மகப்பேறு இல்லாமல் இருந்ததும் இவருக்குச் சாதகமாயிற்று. சிறு வயதில் தவிக்க விட்டுச் சென்ற தந்தை கவி முத்துசாமிப் பிள்ளையவர்களுடைய பெயரும் தோன்றாத் துணையாக நின்று நிலவியதைக் காணலாம். சர் டி.என். சிவஞானம் பிள்ளை அவர்களும் அன்னாருக்கு உறுதுணையாகத் தார்மீக ஆதரவு அளித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

நாடக நூல் :

கோவிற்பட்டியில் (1926-28) கல்விக் கழகத்தார் ஆடிய நாடகங்களில் பங்கேற்றார். முன்பு எட்டையபுரத்தில் பள்ளிக்கூடத்தில் பயின்று கொண்டிருந்த பொழுது, நாடகப் பேராசிரியர் கோவிந்தசாமிப் பிள்ளை முதலியவர்களைக் கொண்டு மிக்க பொருட் செலவில் அரண்மனையில் அமைக்கப் பெற்றிருந்த நாடகங்களை 'நாடோறும் பார்த்து வந்த பயிற்சியின் பயனாகவுப் 'நாடகநூல்' எழுத வேண்டுமென்ற ஆவல் பிறந்தது. 'கிருட்டினமூர்த்தி, என்னும் நாடகநூலை அகவற்பாவில் இயற்றியுள்ளார். 4-4-1914இல் தொடக்கப்பெற்று மூவாயிரம் அடிகளில் முடித்திருந்தது. ஆனால் கடைசிவரை கையெழுத்துப் பிரதியாகவே நின்றுவிட்டது.

தன்மான இயக்கத்தில் :

சைவப் பஞ்சாங்கத்தின் மூலமாகத் தமிழகம் தமிழுலகம் முழுவதும் சைவப் பெருங்குடி மக்களிடையே அறிமுக

மாகிய இ.மு.சு. அவர்கள் தன்மான இயக்கத்தில் ஆரம்ப காலத் தூண்களில் ஒருவராகப் பணியாற்றி இருக்கின்றார் என்றால் பலர் இதனை நம்ப மறுக்கின்றனர். அவரது தோற்றமும் சைவத் திருமேனியும்பகுத்தறிவு பாசறைக்குப் பெரிதும் முரண்பட்ட ஒன்றாகத் தென்படுகின்றது..

சந்திரமாளிகளாகிய சுமார்த்தர்கள் சிவாகமங்களின் செல்வாக்கை ஒழித்துச் சைவசமயத்தை அடிமைப்படுத்தி வருகிறார்கள் என்ற வெறுப்பு இவரிடம் வேரூன்றியிருந்தது.

திருமணம் முதலிய சடங்குகளில் ஓதுவார்களை வைத்தே செய்ய வேண்டுமென்றும் சுமார்த்தப் பிராமணர்களைக் கொண்டு செய்வித்தல் தகாது என்றும் கருதினார். சைவப் பஞ்சாங்கத்தின் மூலம் ஏற்கனவே, சுமார்த்தர்கள் மீது போர் தொடுத்திருந்தார். சுயமரியாதை இயக்கத்தில் நுழைந்து அப்பாசறையையும் தமக்குச் சாதகமாக்கி மறைமுகப் போர் தொடுத்தார்.

சிவவழிபாட்டில் கொண்ட ஆழ்ந்த பற்றின் காரணமாக,வைணவர் சமயத்தையும் வெறுக்கத் தொடங்கினார். சுயமரியாதை இயக்கப் பாசறையிலிருந்து வைணவத்தின் மீது கடும் போர் தொடங்கினார்.

## சிவாச்சாரியார்

இதிலென்ன அதிசயமென்றால் சுயமரியாதை இயக்கத்தில் நுழைவதற்கு மூன்று ஆண்டுகளுக்கு முன்புதான் இ. மு. சு. அவர்கள் 'ஆசாரியா அபிஷேகம்' பெற்று சிவாச்சாரியாகச் சிவபூசை ஏற்றார். சிதம்பரத்திற்கு அருகேயுள்ள திருமகேந்திரப் பள்ளி தமது நண்பர் ஆடூர் வித்வான் பெரியசாமிப் பிள்ளையவர்களோடும், உயர்திரு சிவசம்பந்த அடிகளோடும் சென்றார். தம் மனைவியார் ஈசுவரவடிவம்மையாரையும் அழைத்துச் சென்றார். பூசனைப் பெரியவராக இருந்த திரு முத்துசாமிச் குருக்

களிடம் மகேந்திரப் பள்ளியில் சிவ தீக்கைகள் பெற்று 'ஆசாரிய அபிஷேகமும்' செய்விக்கப் பெற்றார். 1924 கார்த்திகை மாதம் கடைசிச் சோம வாரத்தன்று எடுத்த சிவ பூசையை வாழ்நாள் இறுதிவரை கடைப் பிடித்தார்.

## பெரியார் ஈ வே. ரா. சந்திப்பு

'இராமன் வரலாறு' என்னும் கட்டுரை எழுதி, அது பகுத்தறிவுக்குப் பொருத்தமற்றது என்பதைச் சுட்டிக் காட்டி, இலங்கை இந்தியர் சங்கத்தாரால் நடத்தப் பெற்று வந்த 'இந்தியன்' என்ற மாத வெளியீட்டில் வெளியிட்டார். இக் கட்டுரையைப் படித்த பெரியார் ஈ. வே. ராமசாமி அவர்கள் அக்கட்டுரை ஆசிரியரைச் சந்திக்க விரும்பினார்.

1921 இல் கோவிற்பட்டி பத்திவிளை ஆண்டு விழாத் தலைவராக வந்த பெரியார் அக் கூட்டத்தில் இ. மு. சு அவர்களுக்கு அறிமுகம் செய்து வைக்கப் பெற்றார். தம் வாரத்தாளாம் 'குடியரசில்' இராமாயணத்தை ஆய்ந்து தொடர்கட்டுரை எழுதும்படி பெரியார் வேண்டுகோள் விடுத்தார்.

## சந்திர சேகரப் பாவலர்

இது பற்றி ஈ. வே. ரா அவர்கள் இ. மு. சு அவர் களுக்குத் தம் கைப்பட எழுதிய கடிதம் ஒன்றும் உண்டு. 25—12—1927 முதல் வாரந்தோறும் 'இதிகாசங்கள்' என்ற தலைப்பில் தொடர்கட்டுரை வெளிவரத் தொடங் கியது. பாலகாண்டம் பதினைந்து கட்டுரைகளோடு 22—7—28 இல் முற்றுப் பெற்றது. அயோத்தியா காண்டம் 26-8-28 இல் தொடங்கிப் பதினாறு கட்டுரை களுடன் 21-4-29 திலும், ஆரணிய காண்டம் 5-5-1929 இல் தொடங்கி பத்துக் கட்டுரைகளுடன் 27-10-29 லும் சுந்தரகாண்டம் 3-11-59 இல் தொடங்கிப் பதினைந்து

கட்டுரைகளுடன் 2-3-1930 லும் யுத்த காண்டம் 9-3-1930 இல் தொடங்கிப் பத்தொன்பது கட்டுரைகளுடன் 20-7-1930 லும் உத்தரகாண்டம் 3-8-7930இல் தொடங்கிப் பன்னிரண்டு கட்டுரைகளுடன் 9-11-1930 லும் முற்றுப் பெற்றன.

இக்கட்டுரைகள் சுயமரியாதை இயக்கத்தைக் காட்டுத் தீ போல நாடெங்கிலும் பரவச் செய்தன. இவையனைத்தையும் 'சந்திரசேகரப் பாவலர்' என்ற புனை பெயரில் எழுதி வெளியிட்டார்.

## எதிர்ப்பு மயம்

இராமாயண ஆராய்ச்சிக் கட்டுரைகள் வால்மீகியையும் கம்பனையும் ஒப்பிட்டுத் தமிழ்ப் பண்பாட்டிற்கு முரண்பாடானவற்றை எடுத்துக் காட்டும் வகையில் அமைந்தன.

ஆனாலும் முரட்டுத்தனமாக இராமாயணத்தைத் தாக்கும் வகையில் இருந்தன. தமிழ்ப் பண்பாட்டிற்கு ஏற்பக் கம்பன் செய்த மாற்றங்களைப் 'புளுகு' என்று கண்டித்தன. 'வால்மீகி வாய்மையும் கம்பன் புளுகும்' என்ற வாதத்தின் அடிப்படையில் அமைந்தன. வால்மீகி கூற்று வாய்மையெனக் கொண்டு அது ஆபாசம் நிறைந்தது என்கின்றார் ஆசிரியர்.

தமிழகம் முழுவதும் வைணவர்களும், மற்றும் இராம பக்தியுள்ள இந்துக்களும்;மனம் புண்பட்டுச் 'சந்திரசேகரப் பாவலரை' மிரட்டிக் கடிதங்கள் எழுதினர். அடிப்பதாகவும், கொல்வதாகவும் மிரட்டல் கடிதங்கள் வந்த வண்ணமிருந்தன. இ. மு. சு. அவர்கள் இதையெல்லாம் பொருட்படுத்தவில்லை.

சைவப் புராணங்களைத் தாக்கி எழுதாததால் சைவர்கள் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. இருந்தாலும்

'சு. ம' வில் சேர்ந்து எழுதியதனால் 'அதிருப்தி' தெரி வித்தனர்.

எங்கணும் எதிர்ப்பு வலுத்தது என்றாலும் இ. மு. சு. அவர்களுடைய பெயர் தமிழ்நாடு எங்கணும் பரவியது குறிப்பாகச் 'சந்திரசேகரப் பாவலராக' அவதாரம் எடுத்துச் சொல்லம்பு தொடுத்தமையால்.

## மகப்பேறு

திருமணம் முடிந்து பத்தாண்டுகள் ஆகியும் மகப் பேறின்றி வாட்டம் கொண்டனர் இ. மு. சுவும் அவர் தம் மனைவியார் ஈசுரமடிவம்மையாரும். பத்தமடை வில்வ வனநாதர் கோயிலில் சிவாலயப் பணிவிடைகள் பல வற்றைச் செய்தனர். கோயில் நந்தவனத்திற்குத் தண்ணீர் இறைத்தல், பூ எடுத்தல் முதலிய இ. மு. சு. அவர்கள் விரும்பிச் செய்தார். திருக்கோயிலைப் பெருக்குதல், மெழுகுதல், கோலமிடுதல் போன்ற பணிகளை ஈசுவர வடிவம்மையார் செய்து வந்தார்.

இத் தம்பதியாரின் சிவாலயப் பணிகள் கோவில்பட்டி யிலும் தொடர்ந்தன. கோவில்பட்டித் திருக்கோவிலில் காந்தி மதி—சுந்தரேசர் சந்நிதியில் கடுந்தவமியற்றினர். சிவனருளால் அட்சய வருடம் ஐப்பசி மாதம் 5 ஆம் நாள் தலைக் குழந்தை பெண் குழந்தை பிறந்தது. சீரும் சிறப்புமாக 'மங்கையர்க்கரசி' என்று பெயரிட்டுச் சீராட்டி வந்தனர். ஆனால் அந்தோ! மறு வருடமே அக்குழந்தை பிரபவ வருடம் புரட்டாசி மாதம் 3 ஆம் நாள் மறைந்தது மாறாத சோகத்தில் ஆழ்ந்தனர்.

## கப்பலோட்டிய தமிழனுடன் :

கோவிற்பட்டியில் பணியாற்றும் பொழுதுதான் கப்பலோட்டிய தமிழன் வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்

களுடன் தொடர்பு ஏற்பட்டது. அண்ணன் முறையில் அன்புடன் அளவளாவுவார். வ. உ. சியின் மனைவியாரை மதினி முறையிட்டு (அண்ணி) அழைப்பார்.

ஒரு முறை வ. உ. சி. கால்மூட்டு வாதத்தினுல் அவதியுற்று நடக்க முடியாத நிலையில் படுத்த படுக்கையாக இருந்தார். அவரைப் பார்க்கச் சென்ற இ. மு. சு அவர்கள் சித்த மருத்துவ முறையில் கடுகை அரைத்துக் கொதிக்க வைத்துப் போட்டால் உடனடிப் பலனிருக்கும் என்று சொன்னார். அப்படியே செய்ய வ. உ. சி. குணம் பெற்று "தம்பியுடையான் படைக் கஞ்சான்" என்று பாராட்டினார்.

## விருதைச் சிவஞான யோகிகள் :

ஆயுள்வேத பாற்கரர் என்று சிறப்பிக்கப் பெற்ற சாமி விருதைச் சிவஞானயோகிகளிடம் சித்த மருத்துவத்தை ஏழாண்டுகள் பயின்றார். பின் சித்த மருத்துவராகப் பதிவு செய்வதற்கு இந்தப் பயிற்சி உதவியது. இளை யோருடன் தொடர்பு கொண்டால் ஆயுள் நீடிக்கும் என்று சித்த மருத்துவர் கொள்கை ஒன்று இருந்துவந்தது. இவ்வாறு கற்பனை பாதியும் அறிவியல் மீதியும் கலந்து காய கல்பத்தைத் தேடி அலைந்த சித்த மருத்துவத்தில் இ.மு.சு. அவர்கள் பெரிதும் ஈடுபட்டார்.

## கோவில்பட்டி மாணவர் :

இ. மு. சு. அவர்களிடம் கோவிற்பட்டி உயர் நிலைப் பள்ளியில் பயின்றவர்களில் உச்சமன்ற நீதிபதி திரு அழகிரி சாமியும் பள்ளிக் கல்வி இயக்குநர் வேங்கடசுப்பிரமணியமும் அடங்குவர். அன்னாருடன் இ. மு. சு. அவர்களுக்கு நெருங்கிய தொடர்பு இருந்ததாகத் தெரியவில்லை. அப்பாவு என்ற மாணவர் இறுதிக் காலத்தில் தொடர்பு கொண்டு உறு துணையாக இருந்தார்.

## நாங்குனேரி (1928-1936)

கோவில்பட்டி ஏழாண்டு வாழ்க்கைக்குப்பின் தலைக் குழந்தை இறந்த துயரத்தை மறக்க மாறுதல் கோரினார். பின் நாட்டாண்மைக் கழகம் நாங்குனேரி உயர்நிலைப் பள்ளிக்கு இ.மு.சு அவர்களை மாற்றியது. நாங்குனேரிக்குக் குடிபெயர்ந்து சென்றார். சைவப் பஞ்சாங்கப் பணிசைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் வாயிலாகவும் சுய மரியாதை இயக்கத்தின் வாயிலாகவும் இவர்தம் தொண்டு தொடர்ந்து—புகழ்ச்சிக்கும் இகழ்ச்சிக்கும் ஒரே சமயத்தில் இலக்காகியது.

## சங்கங்கள்

1928 சூலை மாதம் நாங்குனேரிக்கு வந்தவுடனேயே 'சிவகாமி திருவருட் சங்கம்' என்ற அமைப்பை ஏற்படுத்தி அதன் தலைவரானார். அச் சங்கத்தின் ஆண்டு விழாவை இராவ்பகதூர் இலஞ்சி சி. ஈசுவரன் பிள்ளையவர்கள் தலைமையில் நடத்தினார். பிராமணரல்லாதார் சங்கம் நாங்குனேரியில் தீவிரமாக நடைபெற்றது. அச்சங்கத்தில் பங்கெடுத்துக் கொண்டார்.

## பிராமணரல்லாதார் இயக்கம்

அன்று சுயமரியாதை இயக்கம் நாஸ்திகர்களின் கூட்டமாக இல்லை—பிராமணரல்லாதாரின் இயக்கமாக இருந்தது, பிராமணர்கள் பிராமணரல்லாதாரைச் 'சூத்திரர்கள்' என்று கூறி ஒதுக்கி வைத்தனர். பிராமணர்கள் சூத்திரரை, உயர்ந்த ஜாதி இந்துக்கள் தாழ்த்தப்பட்ட மக்களைத் தீண்டுதலும் பாவம் என்று கருதினர். எனவே பெரும்பான்மையான மக்கள் தீண்டாமையினால் பாதிக்கப் பட்டனர். அருகருகே உட்கார்ந்து சாப்பிடுவது 'சமபந்தி போஜனம்' தகாத செயலாகக் கருதப்பட்டது.

## சுயமரியாதை இயக்கத்தில்

இச் சூழ்நிலையில் தான் இ. மு. சு அவர்கள் சுய மரியாதை இயக்கத்தில் ஈடுபட்டு பிராமணீயத்தின் ஆதிக் கத்தின் மீது போர் தொடுத்தார். தனிப்பட்ட முறையில் பல ஆயுள் நண்பர்கள் (Life long friends) இவருக்கு பிராமண சமூகத் தாரிடை உண்டு.

'குடியரசில்' தொடர்ந்து எழுதி வந்தார். மகாபாரத ஆராய்ச்சி என்ற தலைப்பில் ஆதிபருவம் 1-58 அத்தியாயங் கள் 30-11-1930 இல் தொடங்கிப் பத்துக் கட்டுரைகளில் 5-4-1931 வரை வெளிவந்தது.

இவர்தம் மாணவர் திரவியம் என்பவர் பெயரில் "பணம் பிடுங்கிப் பார்ப்பனர்" என்ற தலைப்பில் 13-7-1929 இல் தொடங்கி டிசம்பர் முடியப் பத்துக் கட்டுரைகள் வெளியிட்டார்.

## குடியரசு வெளியீடுகள்:

காகிதப் பஞ்சம் தலைவிரித்தாடிய அந்தக்காலத்தில் பெரியார் ஈ. வே. ரா அவர்கள் பெரும் இடையூறுகளுக் கிடையே இ.மு.சு அவர்கள் 'சந்திரசேகரப் பாவலர்' என்ற புனைபெயரில் எழுதிய தொடர்கட்டுரைகளை நூல் வடி வில் வெளியிட்டார். 'இராமாயணத்தின் ஆபாசம்' என்ற தலைப்பில் பாலகாண்டம் 12-12-29 இல் புத்தக வடிவில் வெளிவந்தது. பின் 'இராமாயண ஆராய்ச்சி' என்ற தலைப்பில் பால்காண்டம் 1930லும், அயோத்தியா காண்டம் 1931லும், ஆரணிய காண்டம் 1935லும் கிட்கிந்தா காண்டம் 1936லும் வெளிவந்தன. தாள்விலை ஒன்றுக்குப் பத்தாக இருந்து தாளே கிடைப்பது அருமை யாக இருந்து 1940இல் எஞ்சியுள்ள சுந்தரகாண்டம், யுத்தகாண்டம், உத்தரகாண்டம் ஆகிய மூன்றும் வெளிவந்தன.

## மகப்பேறு மீண்டும்

பல ஆண்டுகளாக மகப்பேறின்றி வாடிப் பின்னர் பெண் மகவு பெற்றெடுத்து ஓராண்டிற்குள் பறி கொடுத்த சோகத்தாலேயே இவர் கோவில் பட்டியை விட்டு மாறுதல் பெற்று நாங்குனேரி சென்றார், மீண்டும் சிவாலயப் பணிவிடைகள் ஆற்றுவதில் அயராது ஈடுபட்டார். 1930 புரட்டாசி 9 ஆம் நாள் பெண் குழந்தை பிறந்தது. தம் இஷ்ட தெய்வத்தின் பெயராகிய 'சிவகாமவல்லி' என்று அழைத்தார். மலட்டுப் பட்டத்திலிருந்து விடுதலை வாங்கிக் கொடுத்த மங்கையர்க்கரசி மறைந்து விட்டாள். சிவகாம வல்லியை இரட்டிப்பு அன்புடன் 'அம்மச்சு' என்று சீராட்டி வந்தார்.

## பெரியாருடன் இ. மு. சு

1927இல் கோவிற்பட்டியில் உயர்நிலைப் பள்ளியில் தலைமைத் தமிழாசிரியராக வேலை பார்க்கும் பொழுது தந்தை, பெரியாரைச் சந்தித்ததையும், அவர் தம் இல்லத்திற்கு வந்திருந்தமையையும் நினைவு கூர்ந்து தம் குறிப்புக்களில் இ. மு. சு அவர்கள் பெரியாரின் குணநலன்களைச் சிறப்பித்து இ.மு. சு எழுதியுள்ள வெண்பா வருமாறு.

"அஞ்சாத நெஞ்சுடையான் அன்புகனி சொல்லுடையான்
வஞ்சனை யாவும் வகுத்தறிவான்—மிஞ்சவிடா
வீரன் விளங்கும் இராமசா மிப் பெரியார்
தீரன் திகழ்வான் சிறந்து"

பெரியாரின் அரும்பெரும் இயல்புகளை அருமையாகச் சுருங்கிய சொல்லில் தொடுப்பது இவ்வெண்பா.

30-12-47 இல் பெரியார் இ.மு.சு அவர்களுக்கு எழுதிய கடிதம் வருமாறு:

ஈ.வெ.ரா                                                    சென்னை 30-12-47.

அன்புள்ள தோழர் சுப்ரமணியம் அவர்கட்கு ஈ.வெ.ரா. வணக்கம்
இன்று கடிதம் கிடைத்தது.

"விடுதலை" ஜனவரி 1 தேதியிலிருந்து வெளிவர ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது.
விடுதலைக்கு சனிக்கிழமை அல்லது ஞாயிற்றுக் கிழமை பிரசுரிக்கும்படியாக வாரா வாரம் தோறும் ஒரு கட்டுரை எழுதுவதானால் நன்றியுள்ளவனாவேன் என்று சொல்லுகிறேன். அதற்கு விடுதலை ஆபீசிலிருந்து ஆண்டுக்கு 10 ரூ வீதம் அனுப்பி வருவார்கள். இராமயண ஆராய்ச்சி இரண்டாம் பதிப்பு பிரசுரித்து வெளியிட போகிறோம். அதற்காக தங்கட்கு ஏதாவது மொத்தமாக அனுப்பச் செய்கிறேன். என்னுடைய பிரசாரம் எல்லாம் மிகமிக குறைந்த விலையாய் இருக்கும். விற்பனையில் தேங்கி இருக்கிறது. பெரும்பாகம் இலவசமாகவும் போய்விடும். ஆனதால் வியாபார முறைக்கு கட்டுப்பட்டு நடப்பது மிகவும் கஷ்டமான காரியம். [illegible] ஆசாமிகளும் இல்லை. அதை 3 வருடமாய் நான் ரொக்க தொகையின் மீது கொடுத்து




இக்கடிதம் பெரியாருக்கும் இ. மு. சு. அவர்களுக்கும் உள்ள தொடர்பை நன்கு புலப்படுத்துவதோடு, பெரியார் தம் வெளியிடுகளின் நிலைமை பற்றிய சிறந்த கருத்துரை யாகவும் விளங்குகிறது.

## பாரதிதாசன் பாராட்டுப்பா

*இ. மு. சு அவர்கள் சைவ சித்தாந்தியாக இருந்து கொண்டு தன்மான இயக்கத்தில் ஈடுபட்டவர் என்பதனைப் பாரதிதாசன் நன்கு புரிந்து கொண்டு,*

'நேர்மை நீதி அஞ்சாமை
நிறைந்த பன்னூல் தேர் புலமை
சீர்மை கணிய நூலறிவு
சித்தாந்தத்தில் பேரறிவுக்
கூர்மை, ஆர்யக் கூட்டத்தைக்
குப்பை கூளப் புராணத்தைத்
தீர்ப்புரைக்கும் திறனாய்வால்
தெளியச் செய்தான் இ. மு. சு'

*என்று பாடுகின்றார்.*

## பார்ப்பனர் கொட்டம் அடங்கியது:

*சந்திரசேகரப் பாவலர் என்னும் புனை பெயரில் மிகக் கடுமையாகப் பார்ப்பன ஆதிக்கத்தின் மீது படையெடுத் தார். அதனால் பார்ப்பனர் கொட்டம் அடங்கியது என்கின் றார் பாரதிதாசன்.*

'செந்தமிழுக்குத் தீ தென்றால்
சிறுகுறும்புப் பார்ப்பனர்கள்
முந்துவார்கள் அவர்கள்தம்
மூக்கறும்படி செய்யும்
தந்தை பெரியாருக் கொருதுணைவன்
தமிழன் குடியரசேடுதனில்
சந்திரசேகரப் பாவலனாய்ச்
சாய்த்தான் பார்ப்பார் கொட்டத்தை'

## இராமாயணம் மகாபாரத எதிர்ப்பு

இராமாயணம், பாரதம் ஆகிய இதிகாசங்கள் பெரிய தத்துவப் புதையல்கள் அல்ல—தமிழர்களைத் தாழ்த்தும் முயற்சிகள் என்று உண்மை வெளிச்சம் போட்டுக் காட்டியவர் இ. மு. சு என்பதனை மேலும் இரு விருத்தாப்பாக்களில் பாவேந்தர் சுட்டிக் காட்டுகின்றார்;

'இராமாயணத்தின் இழிவெல்லாம்
எத்துப் புலவர் கூற்றெல்லாம்
பராவி வணங்கும் வால்மீகி
பல்லைப் பிடித்துக் காட்டியவன்
வராத தீமை வந்ததெலாம்
வழிபட் டேற்ற கம்பனவன்
திராவிடத்தில் செய்யும்தீமை
தெரியச் செய்தான் இ. மு. சு.

பாரதத்தில் பார்ப்பனரின்
பழக்க வழக்க ஒழுக்கமின்றி
வீரம் நீதி ஒண்ணுமிலை
வெட்கம் கெட்ட குடும்பத்தின்
சோரம் போன கதையென்று
தோலுரித்துக் காட்டியதார்?
சாரம் மிகுந்த எங்களுயர்
சந்திர சேகரப் பாவலனே'

## ஆண் மகப் பேறு

இருப்பினும் ஆண் குழந்தை இல்லையென்று குற்றஞ் சாட்டி அயலார் பேசிவந்தனர். அக் குறையும் 1935 டிசம்பர் 23ஆம் தேதி நீங்கிற்று. நாங்குனேரி அருகிலுள்ள டோனாவூர் மிஷன் மருத்துவமனையில் ஈசுவர வடிவம்மை

யார் பல இன்னல்களுக்கிடையே ஆண் குழந்தை பெற்றெடுத்தார்.

இ. மு. சு அவர்கள் அந்நேரத்தில் ஊரிலில்லை. பொது வேலையாக எங்கோ திரிந்து கொண்டிருந்தாராம். 'குளோராபாம்' என்று மயக்க மருந்தை அதிகமாக உறிஞ்சி விட்டதால், குழந்தை எடுக்கப்பட்ட பின்னரும், உயிர் வராமல் மரணத்தின் பிடியிடமிருந்து மீண்ட மனைவியையும், 'பிள்ளைக்கலி தீர்க்க' வந்த மைந்தனையும் காண நான்கைந்து நாட்கள் கழித்ததுதான் வந்தார். குழந்தைக்குத் தம் தந்தையார் பெயராகிய 'முத்துசாமி' என்று வைத்தார். குழந்தை பிறந்த பதினாறாம் நாள் பெயர் சூட்டுவது நெல்லைச் சைவ வேளாளர் மரபு. செல்லமாக 'அப்புக்குட்டி' என்றழைத்துச் சீராட்டி மகிழ்ந்தார்.

## வ. உ. சியின் வாழ்த்து

அவ்வமயம் தேசபக்தர், கப்பலோட்டிய தமிழன் வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்கள் திருக்குறளைப் பதிப்பிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தார். அவ்வப்போது புரூப் பாரங்களை இ. மு. சு. அவர்களுக்கு அனுப்பித் திருத்தங்களும் கருத்துக்களும் கேட்பார். புரூப் திருத்தி அனுப்புவதுடன், ஆய்வுக் கருத்துக்களும் எழுதியனுப்புவார். அவ்வாறு அனுப்பும்போது தமக்கு மகன் பிறந்த செய்தியும், தம் தந்தை பெயரிட்ட செய்தியும் எழுதியிருந்தார். வ. உ. சி அவர்கள் தூத்துக்குடியிலிருந்து எழுதி அனுப்பியுள்ள வாழ்த்துக் கடிதம் பின்வருமாறு;

தூத்துக்குடி
5-4-1936

அன்பார்ந்த தம்பியவர்களே,

தங்கள் சங்கரன் கோவிலிலிருந்து எழுதியனுப்பிய கடிதத்தால், தங்களுக்கு அருமை மகன் பிறந்திருப்பதும், அவனுக்கு நம் தந்தையவர்கள் பெயரிட்டிருப்

பதும் தெரிந்து பெரிதும் மகிழ்ந்தோம் நானும் தங்கள் மதினியும்.

நாங்குனேரியிலிருந்து திருத்தப்பட்ட புரூபுடன் குறள் சம்பந்தமாகச் சில குறிப்புகளும் வினாக்களும் எழுதியிருந்ததைப் பார்த்து அன்று முதல் இன்று வரையில் பேரானந்தம் அடைகின்றேன். 'தம்பியுடையான் படைக்கஞ்சான்' என்னும் பழமொழியைப் பன் முறை கேட்டுள்ள நான் 'அறிவுடைய தம்பியுடையான் யார்க்கும் அஞ்சான்' என்று உணர்கின்றேன். இனித் திருக்குறளைப் பற்றி எப் புலவரும் எவ்வகையான குற்றமும் சொல்ல முடியாது என்று உணர்கின்றேன். வெறும் எழுத்துப் பிழை அடையாளப் பிழைகளை மாத்திரம் திருத்துவதில் எனக்குத் திருப்தியில்லை. தாங்கள் எடுத்துக் காட்டிய பிழைகளைத் திருத்துவது தான் எனக்குத் திருப்தி. தங்கள் குறிப்புப்படியே முந்திய பாரத்தில் எல்லாத் திருத்தங்களும் செய்துள்ளேன். தங்கள் பெயரைத் தமிழுலகம் போற்றும்படியாகத் தங்கள் நன்றியை எடுத்து எழுதுவேன்.

தங்களன்புள்ள

**வ. உ. சிதம்பிரம் பிள்ளை**

வ. உ. சி அவர்களுக்கும், இ. மு. சு அவர்களுக்கும் மிகுந்த நெருக்கமான உறவு அண்ணன்-தம்பி முறை முதல் பத்தியின் மூலமாகப் புலனாயிற்று. இரண்டாம் பத்தியில் 'அறிவார்ந்த இலக்கிய இளவலா'கக் கருதினார் வ. உ. சி என்பதும் தெற்றெனப் புலப்படுத்துகிறது.

## சங்கப் பணிகள்

எவ்வூர் சென்றாலும் ஆங்காங்கு இலக்கிய, பண்பாட்டு அமைப்புக்களை ஏற்படுத்திப் பற்பல சமூகத் தொண்டுகள் புரிவது வழக்கம். நாங்குனேரியில் 'சிவகாமி திருவருட்

சங்கம்' நடந்தியதுடன், பிராமணரல்லாதார் சங்கத்திலும் பெரும் பங்கேற்றார்.

## தென்னிந்தியப் பண்டிதர் சங்கம்

14-5-1932 இல் மதுரையில் சென்னை மாகாணப் பண்டிதர் மாநாடு கூட்டம் பெற்றது. அதில் பெரும் பங்கேற்ற இ. மு. சு அவர்கள் அதன் அமைச்சராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார். பண்டிதர் மாநாடுகள் 1936 இல் சேலத்திலும், 1937இல் தஞ்சாவூரிலும், 1938இல் மங்களூரிலும், 1939இல் சென்னையிலும், 1940இல அம்பாசமுத்திரத்தில் நடைபெற்றன. மாகாணக் கல்வி மாநாட்டில் பொருளாளராக இருந்தார்.

## பொது வாழ்வின் மோதல்

பல அமைப்புக்களில் பங்கு பெற்ற இ. மு. சு. அவர்களுக்கு திருநெல்வேலி ஜில்லா ஆசிரியர் சங்கத்தில் ஒரு சோதனை ஏற்பட்டது. 1937-38 முதல் நான்காண்டுகள் இவ்வாசிரியர் சங்கத்தின் பொருளாளராகப் பணி புரிந்தார்.

நெல்லை மாவட்ட ஆசிரியர்கள் அனைவரும் இத் தொண்டரைப் புரிந்து பாராட்டினர். சிலர் உயிர்த் தோழர்களாகவும் விளங்கினர். அம்பாசமுத்திரத்தில் நடைபெற்ற மாகாணக் கல்வி மாநாட்டில் பண மோசடி புரிந்து ஒரு பிராமண ஆசிரியரைக் கண்டித்தார். தணிக்கையாளர் அறிக்கையில் கண்டுள்ள தவறுகளைத் திருத்த வேண்டுமென்று முயன்றார். ஆனால் பார்ப்பன ஆசிரியர்கள் அனைவரும் ஒன்று கூடி ஸ்ரீ வைகுண்டத்தில் நடைபெற்ற ஆண்டுக் கூட்டத்தில் இ. மு. சு. அவர்கள் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்தனர் பிராமணரல்லாதாராகிய செயலாளரும், துணைத் தலைவரும் எதிர்த்தும் கூட முன்கூட்டித் திட்டமிட்டபடி நிறைவேற்றி

விட்டனர். இவருக்குப் பதிலாகச் சங்கத்துக்கு உரிய கட்டணம் செலுத்தாமல் உரிமை இழந்திருந்த இளைச் சங்கப் பிராமணர் ஒருவரை செயலாளராகவும் தேர்ந் தெடுத்தனர். அந்நாளில் ஆசிரியர் சங்கங்களில் தொடக்க நிலையிலிருந்து பல்கலைக் கழகம் வரை பார்ப்பனரே பெரும் பான்மையினராக இருந்தனர் என்பது இங்கு குறிப்பிடத் தக்கது.

## வழக்கில் வென்றார்

இதனை எதிர்த்துத் திருநெல்வேலி சிவில் நீதிமன்றத் தில் வழக்குத் தொடர்ந்தார். கூட்ட நடைமுறைகளே செல்லாதெனத் தக்க ஆதாரங்களுடன் வழக்காடினார். நீதிபதி அன்னார் வாதத்தை ஏற்றுக்கொண்டு, இ. மு. சு அவர்கள் மீது இயற்றிய நம்பிக்கையில்லாத் தீர்மானம் முற்றிலும் முறையற்றதென்று தீர்ப்புக் கூறினார்.

இந்தக் கூட்டத்தில் மட்டுமே பிராமணர்கள் எதிர்த்து இயக்கம் நடத்தினர். இ. மு. சு அவர்கள் 'குடியரசு' ஏட்டில் பிராமணீயத்தைக் கண்டித்துத் தொடர் கட்டுரை களை வெளியிட்டதன் விளைவாக இக் காழ்ப்புணர்ச்சி ஏற்பட்டிருத்தல் கூடும்.

பிராமணீயத்தினைக் கடுமையாக எதிர்த்தாலும், பிராமண சமூகத்தினருடன் தனிப்பட்ட காழ்ப்புணர்ச்சி ஏதும் கொண்டிலர். மாறாக, சு. வெங்கடேசுவரன், மா. அனந்தநாராயணன், M. V. சுப்பிரமணியம் போன்ற வர்கள் இவருக்கு உறுதுணையாக விளங்கினர். எனினும் இவர் இராமாயணத்தையும், மகாபாரதத்தையும், தாக்கி எழுதியதை மறக்காதவர்களும் உண்டு. சுதேசமித்திரன் துணை ஆசிரியர்கள் சிலர் இவ்வகையைத் சார்ந்தவராவர். கலைமகள் ஆசிரியர் கி. வா. ஜகந்நாதன் அவர்களும் சிறிது இம் மனப்பான்மை கொண்டவர். 'தினமலர்' ஆசிரி யர் சுப்பிரமணிய ஐயர் முற்றிலும் இ. மு. சு அவர்களைப்

புரிந்து போற்றியவருள் ஒருவர். இறுதிவரை தினமலர் அன்பளிப்புப்படியும், (Complimentary Copy) குடியரசு அன்பளிப்புப்படியும் இவருக்கு வந்துகொண்டே யிருந்தது. இரு வேறுபட்ட பாசறைகளிலும் இவருக்குள்ள செல்வாக்கினை இது காட்டுகின்றது.

## சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தின் தோற்றம்:

பல சங்கங்களை நிறுவி ஓயாமல் உழைத்து வந்தாலும், சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கமே இ. மு. சு. அவர்களுக்கு நிலையான பேரும் புகழும் பெற்றுத் தந்தது. அவர் பெயரைக் குறிப்பிட்டவுடன் 'அண்ணார்—குடியரசு' ஏட்டில் எழுதித் தன்மான இயக்கத்தில் பங்கு கொண்டமையை நாடு நன்கறியும், அதுபோலச் சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தின் வாயிலாக அவர் ஆற்றிய சொல்லாக்கப் பணி அவர் தொண்டு நாடு முழுவதும் போற்றும் நிலையை ஏற்படுத்தியது.

தமிழ்ப் பணிகளுக்கெல்லாம், நிலைக்களமாகத் திருநெல்வேலியில் விளங்கிய சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தை இ. மு. சுப்பிரமணிய பிள்ளை அவர்களும், பெரும் புலவர் பு. சி. புன்னைவனநாத முதலியார் அவர்களும் இணைந்து உருவாக்கினர். 11-6-1934 அன்று சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் நிறுவப் பெற்றது. அதன் அமைச்சராக இ. மு. சு. அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இச்சங்கம் உருவாவதற்குத் தாகூர் சட்ட விரிவுரையாளர், தமிழறிஞர் கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்களும், காசுக் கடை மு. சுப்பிரமணியன் செட்டியார் அவர்களும் பேருதவி புரிந்தனர். மு. சுப்பிரமணியன் செட்டியார் அவர்கள் அந்நாளிலேயே தம் நகைக் கடைக்கு 'ரெடிமேடு ஜீவல்லரி' என்பதனைத் தமிழ்ப்படுத்தி 'ஆயத்த அணிகல அங்காடி' என்று பெயர்ப் பலகையில் பொறித்த தமிழார்வலர்.

# 4. கலைச் சொல்லாக்கத் தொண்டு

## கடைய நல்லூர் (1936-39)

தனிமான இயக்கத்தில் தொடர்ந்து சந்திரசேகரப் பாவலர் என்ற புனை பெயரில் எழுதி நாடு முழுவதும் பாதிப்பை ஏற்படுத்தியபின் இ. மு. சு. அவர்கள் கலைச் சொல்லாக்கப் பணியில் தம் கவனத்தைச் செலுத்தினார். இப்பணி அவர் கடைய நல்லூர் போர்டு உயர்நிலைப் பள்ளியில் பணியாற்றிய ஞான்று நடைபெற்றது.

அந்நாளில் உயர்நிலைப் பள்ளிகளில் ஆங்கிலமே பயிற்று மொழியாக இருந்தது. தமிழ் வகுப்பு ஒன்றில் தான் தமிழ் பேசப்படும். ஏனைய வகுப்புக்களிலெல்லாம் ஆங்கிலமே ஒலிக்கும். ஆங்கிலம் தெரிந்த தமிழாசிரியர் காண்பது அரிது. அத்தகையவர் (English Knowing Tamil Pandit) என்றுதான் இ. மு. சு. அவர்களுக்கு அதிக மரியாதை காட்டப்பட்டது.

ஆங்கிலத்திலும் தமிழிலும் நல்ல புலமையுடையவர். பிழையற இருமொழிகளையும் எழுதுவதில் வல்லவர். இந்த இருமொழிப் புலமையைக் கலைச் சொல்லாக்கப் பணியில் ஈடுபடுத்தினார். உயர்நிலைப் பள்ளிகளில் தமிழைப் பயிற்று மொழியாக மாற்றுவதற்குக் கருவி நூலாகிய கலைச் சொல்லகராதியை உருவாக்கும் பணியில் ஈடுபட்டார்.

### செய்முறை (Modus Operandi)

ஒரு மரப்பேழையில் ஆங்கில எழுத்துக்களைத் தட்டுக் களில் ஒட்டியிருப்பார். அவ்வப்போது தேர்ந்தெடுக்கும் சொற்களை அவ்விடங்களில் கோத்து வைப்பார்.

அநேகமாக ஆங்கில அகராதிகள் அனைத்தும் வாங்கி வைத்திருப்பார். ஆங்கில நுட்பச் சொல்லகராதிகளை வாங்கிப் பக்கங்களை வெட்டி ஒட்டிவிடுவார். பின்னர் ஆங்கிலத் தமிழகராதிகளையும் அருகில் வைத்து நேரான தமிழ்ச் சொற்களைக் காண்பதில் ஈடுபடுவார். வையாபுரிப் பிள்ளை தலைமையில் தொகுக்கப் பெற்ற பேரகராதியையும் (Tamil Lexicon) அடிக்கடி பார்ப்பார்.

## சொற்களின் தன்மை

வடமொழிச் சொற்களை இயன்றவரை தவிர்ப்பதில் தீவிரமாக இருப்பார். இதில் தேவநேயப் பாவணர் அவர்களைப் போன்ற நோக்கம் படைத்தவர். ஆனால் பாவாணரிடமிருந்து இவர் வேறுபடுவது எளிய தூய தமிழ்ச் சொற்களைப் படைப்பதில்தான். அருஞ் சொற்களைத் தேர்ந்தெடுக்க மாட்டார். பார்த்த மாத்திரத்தில் மக்களுக்குக் கூடியவரை புரியக் கூடிய சொற்களையே தேர்ந்தெடுப்பார்.

## அடிப்படைப் பணி

சம்பந்தப்பட்ட கலைச் சொற்களைத் தேர்ந்தெடுப்பது (Compilation of technical terms) அவற்றிற்கு நேரான தமிழ்ச் சொற்களைக் காண்பது இத்தகைய அடிப்படை வேலை (Spade work) அவருக்கு மிகவும் பிடித்தமானது. காலை 5 மணி முதல் இரவு 11 மணிவரை இடையீடின்றி உழைப்பார். வேதியியல்—இயற்பியல்—அந்நாளில் இரசாயனம், பௌதீகம் என்று சொல்லப்பட்ட போன்ற எல்லாத் துறைக் கலைச் சொல்லகராதிகளையும் அவர் முதலில் தயாரித்து வைத்துக் கொள்வார். அதன் பிறகு ஆராய்ந்து திருத்துவதற்கு நிபுணர் குழுக்களையும், அகராதியை ஒட்டு மொத்தமாக ஏற்பதற்கு ஒரு மாநாட்டையும் கூட்டுவார்.

## கலைச் சொல்லாக்க மாநாடு

உயர்நிலைப் பள்ளிகளில் தமிழ் பயிற்று மொழியாக ஆவதற்கு ஏதுவாக, உரிய கலைச் சொல்லகராதியைப்—பல பாடங்களுக்குத் தனித் தனியாகத்—தொகுத்த பின்னர், அவற்றை ஆராய்வதற்கு ஒரு மாநாட்டினைச் சென்னையில் 20-9-1936 இலிருந்து 1-10-1936 வரை நடத்தினார்.

## உடல்நலக் கேடு

மாநாட்டுத் தேதி 20-9-36 என்று குறித்து அழைப்பிதழ்கள் அனுப்பிய பிறகு, இ. மு. சு. அவர்களுக்குக் கொடிய காய்ச்சல் கண்டது. கடைய நல்லூரிலிருந்து சென்னைக்குப் புறப்பட வேண்டிய நான்கு நாட்களுக்கு முன் படுத்த படுக்கையாக இருந்தார். அவருக்கு மருத்துவம் புரிந்து வந்த மருத்துவர் மூன்று நாட்களுக்கு மேல் தாங்காது என்று கெடு வைத்து விட்டார்.

இன்றியமையாத பணி தம்முன் நிற்கும்போது பயணத்தை திட்டமிட்ட வண்ணம் தொடங்க முடியாமல் போனதே என்று பெரிதும் மனம் வருந்தினார்—எப்படியாவது கலந்து கொள்ள வேண்டுமென்று தீவிரமாக விரும்பினார். மனத் திட்பத்தின் ஆற்றலினால் (Will Power) குறித்த நாட்களுக்கு முன்பாக விரைவாகக் குறைந்து கொண்டே வந்தது சுரம். ஒரு நாளுக்கு முன் தன்னிலைக்குத் (Normal) திரும்பிவிட்டார்.

மருத்துவர் தம் ஆலோசனையையும் மீறிச் சென்னைக்குப் பயணமானார். திட்டமிட்டபடி கலைச் சொல்லாக்க மாநாட்டை நடத்தினார். பின்னர் அவருக்கு மூன்று நாள் கெடு வைத்த மருத்துவர் ஒரு சில ஆண்டுகள் வாழ்ந்து மறைந்தார். ஆனால் இ. மு. சு. அவர்கள் பற்பல ஆண்டுகள் வாழ்ந்து தமிழ்ப்பணி பல புரிந்தார்.

## முன்னேற்பாடுகள்

மாநாட்டிற்கு வேண்டிய முன் ஏற்பாடுகளைத் திட்டமிட்டுச் செயல்படுவார், சென்னையிலுள்ள அறிஞர் களுடன் தொடர்பு கொள்வதுடன், தமிழகத்தின் பல பாகங்களில் வாழும் கல்வியாளர்களுடனும் தொடர்பு கொண்டு மாநாட்டை வெற்றிகரமாக நடத்துவார். இவ்வாறு பலதிறப்பட்ட அறிஞர்களுடன் எப்போதும் அஞ்சல் வழியும் நேரிலும் கருத்துப் பரிமாற்றம் செய்து கொண்டே இருப்பார்.

## கலைச் சொல்லாக்க மாநாடு

20-9-36 அன்று சென்னையில் மாநாடு கூடியது. சர் சி. பி. ராமசாமி ஐயரவர்கள் தொடக்க உரை நிகழ்த்தினார். அவர் தம் தொடக்க உரையில், தாய்மொழியில் சிந்தித்து எழுதுவது கற்பிப்பது இந்திய தேசிய எழுச்சியின் ஒரு பகுதியாகிவிட்டது என்றும், தமிழில் அறிவியல் சொற்களைத் தொகுப்பதும் அத்தகைய எழுச்சியின் விளைவு என்றும் குறிப்பிட்டார். ஆனால் கமால் அட்டாடர்க் துருக்கிய மொழியில் செய்வதுபோல் அந்நிய மொழிச் சொற்களைக் களைவது பொருந்தாது. தேசிய வாதியாகவும், திராவிடனாகவும் இருப்பினும் ஜெர்மனியில் உள்ளது போன்ற குறுகிய தேசிய வாதத்தை அவர் ஏற்கவில்லை. சரியாக செரிக்கப்படாத (Ill-digested) சொற்களைப் பிறமொழிகளிலிருந்து ஏற்பது அறிவுடைமையாகாது. தேவைப்பட்டால் சமஸ்கிருதத்திலிருந்து கடன் வாங்குவது பொருந்தும். தமிழ் மொழியும், வடமொழியும் ஒன்றாக வளர்ந்த மொழிகள் என்று கருதினார் சர். சி. பி.

## தலைமையுரை விபுலானந்த அடிகள்

விபுலானந்த அடிகள் தம் தலைமையுரையில் நடைமுறைக்குகந்த மொழிபெயர்ப்பு முறைகளைச் சுட்டிக்

காட்டினார். இந்தியாவின் பண்பாட்டு ஒற்றுமை குறிப்பிடத்தக்கது. மக்கள் எளிதில் புரியக் கூடிய சொற்களைக் கையாள்தல் வேண்டும். சமயத்திலும், தத்துவத்திலும் பற்பல சமஸ்கிருதச் சொற்கள் வழக்கத்திற்கு வந்துவிட்டன. அவற்றை நீக்குவது தமிழுக்கு இழப்பாகும். மொழி பெயர்ப்பதற்கு அமெரிக்க இறையியலாளர் மேற்கொண்ட விதிமுறைகளைக் கொள்வது பயன்தரும் என்றும் அடிகள் குறிப்பிட்டார்.

## பல்வேறு உட்குழுக்கள்

இயற்பியல், வேதியியல், கணிதம், இயற்கை அறிவியல், உடலியல், நிலவியல், வரலாறு, அரசியல், பொருளியல் போன்ற பல பிரிவுகளுக்கும் பல்வேறு உட்குழுக்கள் அமைக்கப் பெற்றன.

## இராஜாஜியும் பங்குபெற்றார்

கலைச் சொல்லாக்க வல்லுநர் இயற்பியல் குழுவில் இராசகோபாலாச்சாரியாரும் பங்கு கொண்டமை குறிப்பிடத்தக்கது. தாய் மொழியில் பாடங்களைக் கற்பிக்க வேண்டுமென்னும் கொள்கை காந்தி அடிகள் கூறிவந்ததும், தேசியவாதிகளின் கோட்பாடாகவும் இருந்தது. சென்னைப் பல்கலைக்கழக ரீடர் திரு எஸ். வையாபுரிப் பிள்ளை, பச்சையப்பன் கல்லூரிப் பொருளியல் பேராசிரியர் அ. முத்தையா, நெல்லை M. S. பூரணலிங்கம் பிள்ளை நெல்லை இந்துக் கல்லூரிப் பேராசிரியர் அ. சீனிவாசராகவன், தேவநேயப் பாவாணர், கிறித்தவ இலக்கிய சபைச் செயலர் திரு அருள் தங்கையா, சொல்லின் செல்வர் R. P. சேதுப்பிள்ளை, குடந்தை B. N. நாராயணசாமி ஐயர் கோவை T. சிதம்பரனார் ஆகியோரும் மற்றும் பலரும் வல்லுநர் குழுக்களில் பணியாற்றினர்.

## தமிழகம் தழுவிய முயற்சி

மேற்கூறிய வல்லுநர்களின் பெயர்களைப் பார்த்த மாத்திரத்திலேயே இம்முயற்சி தமிழகம் 'தழுவியதென்று நிச்சயிக்கலாம். அனைவரையும் தமிழ்ப்பணியில் கூட்டுவிக்கும், செயலாளராக இ. மு. சு. அவர்கள் விளங்கினார்.

## மாநாடு வகுத்த விதிமுறைகள்

பல்வேறு குழுக்களின் கூட்டுக் கூட்டம் 21-9-36 அன்று நடைபெற்றது, கலைச் சொற்களை வகுப்பதற்கான நெறி முறைகள் ஆராயப்பட்டன. சூடான சுவையான விவாதங்களுக்குப் பின்னர் பின்வரும் நெறிமுறைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

1. யாழ்ப்பாணத்தில் அமெரிக்க இறையியலாளர் 'வேதியியல்' என்னும் நூலில் குறிப்பிட்ட விதிகளைப் பின்பற்ற வேண்டும்.

2. வடசொற்களின் ஏற்புடைமையைச் சோதிப்பதற்குத் தமிழ் நிகண்டுகளில் அவை ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ளனவா என்பதையே உரைகல்லாகக் கொள்ள வேண்டும்.

3. புதிய கலைச் சொல்லாக்கங்கள் ஓரசைச் சொற்களாக இருத்தல் நலம். மூன்றசைகள் வரை இருக்கலாம்.

4. ஏற்கனவே வழக்கிலுள்ள பண்பு தொழில் விகுதிகளைப் பயன்படுத்த வேண்டும்.

5. அ. செய்யுளில் பயன்படும் அளவுக்குச் சொற்கள் இனிமையாக இருத்தல் வேண்டும்.

ஆ. எதிர்ச்சொற்களுக்கு எதுகை மோனை அமைய வகுக்கலாம்.

6. தமிழ் விகுதிகளுடன் அறிவியற் சொற்கள் அமைத்தல் வேண்டும்.

7. கலைச் சொற்கள் ஒரே பொருள் குறித்து மேல் வகுப்புக்களிலும் பயன்படும் வண்ணம் அமைத்தல் வேண்டும்.

8, இலக்கண மாறுபாடுகளை ஏற்கும் வண்ணம் சொற்களை அமைத்தல் வேண்டும்.

9. சொற்களை ஆக்க முடியாத இடத்து ஆங்கிலச் சொற்களை எடுத்தாளலாம்.

10. பழந்தமிழ்ச் சொற்களைப் புதுப் பொருளில் ஆள முயல்தல் வேண்டும்.

11. பிறமொழிகளை விட வடமொழியிலிருந்து கடன் வாங்குவது நல்லது.

12. சொற்களை ஆக்குவதில் இந்திய ஒருமைப் பாட்டை மனங்கொள்ள வேண்டும்.

## வடமொழி தென்மொழி மாறுபாடு

இம்மாநாட்டை இ. மு. சு. அவர்கள் கூட்டிய முதற் காரணமே அந்நாளைய அரசாங்கம் வெளியிட்டிருந்த பட்டியல்களில் வடசொற்கலப்பு மிகுதி என்பதேயாகும். தூய தமிழ்ச் சொற்களைக் கோத்தல் வேண்டுமென்பதே அன்னாரின் நோக்கம். இருப்பினும் பல அறிஞர்கள் கூடிய அவையில் மிதவாதமான நெறிமுறைகளை ஏற்க நேர்ந்தது. பிறமொழிகளை விட வடமொழியிடமிருந்து கடன் வாங்கு வது மேல் என்று மாநாடு ஏற்றுக்கொண்ட 11 ஆம் நெறி முறை கூறுகிறது. கொள்கை அளவில் இந்த நெறிமுறைகளை ஏற்றுக் கொண்டாரே யன்றி, நடை முறைகளில் தூய எளிய தமிழ்ச்சொற்களுக்காக அணுஅணு வாய்ப் போராடுவார். சாம, தான, பேத முறைகளைப் பின்பற்றி வடசொற்களை நீக்கித் தமிழ்ச் சொற்களைப் புகுத்துவார்.

## அமெரிக்க இறையியலாளர் கையாண்ட நெறிமுறைகள்

வழக்கிலுள்ள எளிய சிறிய சொற்களைக் கண்டறிய வேண்டும். இல்லையெனில் பொருத்தமென்று கருதினால் வழக்கில் இல்லாத அருஞ்சொற்களைப் பயன்படுத்தலாம்.

தமிழில் சொல் இல்லை எனில், ஆங்கிலச் சொல்லைக் கையாளலாம், தமிழ்ப் படுத்த முடியாத ஆங்கிலச் சொல் லாயின் சமஸ்கிருதச் சொற்களைப் பயன்படுத்த வேண்டும். முழுப்பொருளைப் பிரதிபலிக்கமுடியவில்லை என்றால், ஒரு கூறுபாட்டை உணர்த்தும் சொல்லை ஏற்கலாம்.

## மாநாட்டின் தாக்கம்

பெரிய அளவில் நடத்திய கலைச் சொல்லாக்க மாநாட்டின் தாக்கம் தமிழகத்தில் மட்டுமின்றி நாட்டின் பிறபகுதிகளிலும் பரவியது. சான்றாக 'The Illustrated Weekly of India' என்னும் ஆங்கில வார ஏடு இம் மாநாட்டைக் குறித்து நாட்டு நடப்பு (current topics) என்னும் தலைப்பில் நான்கு பத்திகள் எழுதியது. துருக்கிய நாட்டில் நடைபெறும் அந்நியச் சொற்களை அறவே நீக்கும் முயற்சியில் ஈடுபடாமல், திராவிடச் சொற்கள் இல்லையென்றால், சமஸ்கிருதச் சொற்களை ஏற்கலாம் என்னும் மாநாட்டுத் தீர்மானத்தை ஆங்கில ஏடு பாராட்டியது.

## குழுக்களின் பணி

பல்வேறு குழுக்களின் பணி மாநாட்டின் பின்னரும் நீடித்தது. 20-9-36 முதல் 1-10-36முடிய குழுக்களின் கூட்டங் கள் பெரும்பாலான உறுப்பினர்களின் சௌகரியப்படி நடை பெற்றன. சில வேளைகளில் காலை 6-30 மணிக்குத் தொடங்கி இரவு 10 மணிவரை, பணி தொடர்ந்தது. தமிழ்ப்

பற்றின் காரணமாக உறுப்பினர்கள் அன்புடனும் ஆர்வத்துடனும் செயல் பட்டனர். கைம்மாறு கருதாத வல்லுநர்களின் உழைப்பு தொடர்ந்தது, சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் தயாரித்த பட்டியல்களை ஆராய்ந்து முடிவுகள் மேற் கொள்ளப்பட்டன. 1-10-36 க்குப் பின்னரும் குழுத் தலைவர்கள் பிற வல்லுநர்களுடன் அஞ்சல்வழித் தொடர்பு கொண்டு சொற்களை வரையறுத்தனர்.

## கலைச் சொற்கள் வெளியீடு

உயர்நிலைப் பள்ளிகளில் தமிழ் பயிற்றுமொழியாக மாற்றுவதற்குரிய பல்துறைச் சொற்களையும் "கலைச் சொற்கள்" என்னும் மகுடமிட்டு 1938 இல் சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தின் வாயிலாக வெளியிட்டார். இவ்வெளியீட்டிற்குச் சென்னைப் பல்கலைக்கழகம் புதிதாக அமைக்கப் பெற்ற திருவனந்த புரம் பல்கலைக் கழகம் நிதி உதவியளித்தது. முதலமைச்சர் இராச கோபலாச்சாரி அவர்களும் இந்நூல் வெளிவருதற்கு உதவி செய்தார்.

## இராஜாஜியுடன் இ. மு. சு.

கலைச் சொல்லாக்கத்தில் இ. மு. சு. அவர்களுடன் சக்ரவர்த்தி இராசகோபாலாச்சாரியார் இணைந்து பணியாற்றினார். இ. மு. சு. அவர்களின் ஆழ்ந்த தமிழ்ப்பற்று இராஜாஜியைக் கவர்ந்தது. அவர் சென்னை மாகாணத்தின் பிரதம மந்திரியாக இருந்த பொழுது (Prime minister of the Madras Presidency) இ மு. சு. அவர்களுக்கு எழுதிய கடிதம் அதை நன்கு விளக்கும்.

மேலும் தட்டெழுத்தான இக்கடிதத்தில் இராஜாஜி தம் கைப்பட ஒரு குறிப்பு எழுதியுள்ளார்.

Fort St. George,
July 14, 1938.

Dear Sir,

Please send a copy of your words by post. Please see me on the morning of the 20th at my house.

Yours sincerely,

C. Rajagopalachari

Pandit E. M. Subramania Pillai,
KAdayanalur,
Tinnevelly Dt.

"ஆங்கிலத்தைப் பொறுத்துக் கொள்ள வேண்டும்" இக்குறிப்பு இராஜாஜியின் பண்பையும், இ. மு. சு. அவர்களின் தமிழ் நெஞ்சம் புண்படக்கூடாது என்ற நுண்ணுணர்வையும் ஐயமறக் காட்டுகிறது.

## மாகாண அரசு ஆங்கீகாரம்

சென்னை அரசாங்கத்தின் கல்வி நலவாழ்வுத்துறை கலைச் சொற்களின் படிகளை அரசாங்கச் செலவில் வழங்கவும் உயர் நிலைப் பள்ளிகளில் அவற்றைத் தாராளமாகப் பயன்படுத்தவும், ஆணை வழங்கியது. (சென்னை அரசாங்கம் கல்வி, நலவாழ்வுத்துறை கடிதக் குறிப்பு எண் 45290 பி 3 நாள் 9-11-1938) கலைச் சொற்களின் படிகளைக் கல்வி இயக்குநர் வாங்கி உயர்நிலைப் பள்ளிகளுக்கு வழங்கினார். ஆனால் அதிலடங்கியுள்ள சொற்களைத் தான் பயன்படுத்த வேண்டுமென்ற கட்டாயமில்லை என்று உத்தரவு அனுப்பினார். (இயக்குநர் நடவடிக்கைகள் ந. க. NO; 2406 C. 38 22-11-1938)

இலங்கை அரசாங்கத்தின் கல்வித் துறையும் இக்கலைச் சொற்களைப் பயன்படுத்தலாமெனச் சுற்றறிக்கை அனுப்பியது.

## ராஜபாளையம் காங்கிரஸ் ஆதரவு

1-1-1939 அன்று ராஜபாளையத்தில் தமிழ்நாடு காங்கிரசின் அரசியல் மாநாடு நடைபெற்றது. அம்மாநாட்டில் உயர் நிலைப் பள்ளிகளில் தாய்மொழி வழிக் கல்வி பயிற்றுவது உற்சாகமாக வரவேற்கப்பட்டது. சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தின் மூலம் வெளியிடப்பட்ட கலைச் சொற்களுக்கும் ஆதரவு தெரிவித்தது. அரசியல் மாநாட்டுத் தீர்மானத்தின் பகுதியாவது:

"திருநெல்வேலித் தமிழ்ச் சங்கத்தாரால் வெளியிடப் பெற்ற கலைச்சொற்கள் என்ற நூலில் பிரசுரிக்கப் பட்டி

ருக்கும் விஞ்ஞான சாஸ்திரப் பதங்களை தமிழ்நாட்டி லுள்ள எல்லாப் பள்ளிக் கூடங்களிலும் கூடிய வரை உபயோகித்து, அவைகளை முடிவாக நிர்த்தாரணம் செய்து அந்நூலின் புதிய பதிப்பு வெளிவருவதற்கு வேண்டிய உதவி செய்யுமாறு எல்லா உபாத்தியாயர்களை யும் தலைமை உபாத்தியாயர்களையும் இம் மகாநாடு வேண்டிக் கொள்கிறது'' (சுதேசமித்திரன் 3-1-1939 பக்கம் 9)

இத்தீர்மானத்தில் மிருதியான வடசொற்கலப்பு இருப் பதைக் காணலாம்; அது அக்காலத் தமிழ்ச் சூழலின் பிரதி பலிப்பாகும். ஆயினும் அப்படிப்பட்டவர்களின் ஆணை கொண்டே நல்ல தமிழ்ச் சொற் பட்டியல்களுக்கு ஆதரவு தேடி வெற்றிபெறுவது இ. மு. சு. அவர்களின் சிறப்பியல்பு களின் ஒன்றாகும்.

## நெடிய போராட்டம்

இவ்வாறு 1936 இல் கலைச் சொல்லாக்க மாநாடு நடத்தி 1938 இல் ''கலைச் சொற்கள்'' வெளியிட்டு இ. மு. சு அவர்கள் வெற்றி பெற்று அரசு ஆதரவு பெற்றா ரென்றாலும், நூற்றுக்கு தொண்ணூற்றைந்து விழுக்காடு நல்ல தமிழ்ச் சொற்களுக்கு அங்கீகாரம் பெற்றாரெனினும், வடமொழியாளர்களின் செல்வாக்குடன் நீண்ட, நெடிய போராட்டம் நடத்த வேண்டியதிருந்தது. 1936 முதல் 1947 முடிய இப்போராட்டம் தொடர்ந்து நடைபெற்றது.

## ஆலோசகர் ஆட்சியில் மாற்றம்

காங்கிரஸ் அரசை அடுத்து வந்த ஆலோசகர் ஆட்சி யில் (Advisers Regime) சமஸ்கிருதத்தை அடிப்படையாகக் கொண்டு கலைச் சொற்களை உருவாக்க வேண்டுமென்னும் கருத்து அகில இந்திய அளவில் ஒப்புக் கொள்ளப்பட்டது. எனவே சமஸ்கிருதக் கலப்பு மிகுந்த சொற்களே பயன்

படுத்த வேண்டுமென்ற கருத்தே வென்றது. இதனை எதிர்த்து இ.மு. சு. அவர்கள் போர்க் கொடி உயர்த்தினார்.

## V. S. சாஸ்திரி குழு

அறிவியற் கலைச் சொற்களை உருவாக்குவது பற்றி ஆலோசனை கூற திரு V. S. சீனிவாச சாஸ்திரியார் தலைமையில் ஒரு குழுவினை அரசு அமைத்தது.

17-1-1940 அன்று கல்விச் செயலருக்கு இதனை எதிர்த்து இ.மு.சு அவர்கள் மடல் வரைந்தார். சென்னை மாகாணத் தமிழ் சங்கத்தைக் கலக்காமல் எவ்வாறு குழு அமைக்கலாம் என்று வினவினார். கூறவேண்டிய கருத்துக் களைக் குழுவின் முன் வைக்குமாறு அரசுத் துறைச் செயலர் மறுமொழி கூறினார்.

25-11-40 அன்று சென்னை மாகாண ஆளுநருக்கு கூட்டறிக்கை அனுப்பினார். அதற்குள் சீனிவாச சாஸ்திரி குழு தம் ஆலோசனை அறிக்கைகளை அரசுக்கு அனுப்பி யிருந்தது. சமஸ்கிருத்திலிருந்து கடன் வாங்கி தென் னிந்திய மொழிகளுக்குப் பொதுவான கலைச் சொற்களை உருவாக்க வேண்டுமென்பது அக்குழுவின் முதன்மையான பரிந்துரையாகும்.

குழு உறுப்பினர்களையும் மிகவும் கடுமையாகக் கண்டித்து எழுதினார். குழுவிற்கு அனுப்பப்பட்ட அதிகார எல்லை வாசகங்களும் (Terms of references) குறுகிய, தெளிவற்ற அறிவியலுக்குப் புறம்பான முறையில் அமைந் துள்ளன என்று கடுமையாகச் சாடினார்.

### கண்டன மாநாடு

25-12-1940 அன்று அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பேராசிரியர் பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார் தலைமையில் நடைபெற்ற தமிழறிஞர் மாநாட்டில்

கண்டனக்குரல் எழுப்பப்பட்டது. கலைச் சொற்குழுவைக் கலைத்துவிட்டு, சென்னை, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திடம் கலைச் சொல்லாக்கப் பொறுப்பை ஒப் படைக்குமாறும், சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தையும் குழு அமைக்குமாறும் தீர்மானங்கள் இயற்றப்பட்டன. மைய அரசிற்கும் இதுபற்றி முறையீடுகளை அனுப்பினார் அவற்றை அங்கீகரித்துக் கடிதங்கள் அனுப்பியதோடு மைய அரசு நிறுத்திக் கொண்டது.

அண்ணாமலை அரசர் சர் அண்ணாமலைச் செட்டி யாரையும் கொச்சி திவான் R. K. சண்முகம் செட்டியார் அவர்களையும், இப்போராட்டத்தில் இ. மு. சு அவர்கள் துணைக்கு அழைத்தார். கோடையில் சொற்களை உரு வாக்குவதற்கு 14, 15 அறிஞர்களுக்குத் தங்கும் இடம், உணவு வசதி ஆகியவற்றை மட்டுமே தம்மால் செய்ய இயலும் என்று செட்டி நாட்டு அரசர் மு. அண்ணாமலைச் செட்டியார் 20-3-41 அன்று பதிலெழுதினார். திரு R.K. சண்முகம் செட்டியாரோ இது சிக்கலானதாக இருக் கிறது, நேரடியாக ஒன்றும் செய்ய இயலாது, மறைமுகமாக வேண்டியவர்களிடம் கூறி ஆவன செய்வேன் என்று மறு மொழி அனுப்பினார்.

## குழுத்தலைவருக்கு முறையீடு

அரசு அமைத்த கலைச் சொற்குழுவிற்கு மாநிலக் கல்லூரி ஆங்கிலப் பேராசிரியர் திரு கி. சுவாமிநாதன் நியமிக்கப்பட்டிருந்தார். அவருக்கே இ. மு. சு. அவர்கள் நேரடியாகக் கண்டனக் கடிதம் (27-2-41) அனுப்பினார். சமஸ்கிருதத்தை அடிப்படையாகக் கொண்டு தமிழில் கலைச் சொற்களைப் படைக்கும் குழுவிற்குத் தலைவராக இருப்பது அவமானத்திற்குரியது என்று சுட்டிக்காட்டினார். அதுபோல சேலம் கல்லூரி முதல்வர் இராமசாமிக் கவுண்டருக்கும், திரு S. வையாபுரிப் பிள்ளைக்கும் எழுதினார்.

## மைய அரசுக்கு மேல் முறையீடு

மீண்டும் மைய அரசிற்கு மேல் முறையீடு செய்தார். 5-9-1941 நாளிட்ட அச்சிட்ட மடல்களில் சமஸ்கிருதத்தை அடிப்படையாகத் தமிழ்ச் கலைச் சொற்கள் அமைக்க முயல்வது.

1. தமிழின் அழகைக் கெடுத்து மொழியை உருக் குலைக்கும்.

2. திராவிட மொழிகளின் தாய் தமிழாதலின், தமிழ் வேர்ச் சொற்களை அடிப்படையாகக் கொண்டு தென்னிந்திய மொழிக் கலைச் சொற்களை உருவாக்குதலே அறிவுடைமை.

3. ஆங்கிலச் சொற்களை அப்படியே தமிழ் எழுத்துக்களில் எழுதுதல் மொழியமைப்பை உருக்குலைக்கும்.

4. தமிழ் மொழி வளர்ச்சி தமிழ் வேர்ச் சொற்களை அடிப்படையாக வைத்துப் புதுச் சொற்களைப் படைத்தலில்தான் இருக்கிறது. கடன் வாங்குவது தமிழுக்கு வளர்ச்சியாகாது.

இத்தனை எதிர்ப்புக்களுக்கும் இடையே வடமொழிக் கலப்புச் சொற்கள் அரசின் சார்பில் வெளிவந்தன. சேலம் ராமசாமிக் கவுண்டர் மட்டும் கருத்து வேற்றுமைக் குறிப்பு வரைந்தார். (minutes of disset)

## தமிழ்ச் சொற்களே அல்ல

அரசாங்கம் வெளியிட்ட கலைச் சொற்கள் பட்டியலில் மிகச் சில தமிழ்ச் சொற்களே இருந்தன. ஏனைய சொற்கள்:

அயோனம், குணகோடி, அவாந்தரகணனம், சம அனுவாதம், போன்ற சொற்கள், தமிழருக்குப் புரியாத

சொற்கள் அமைந்திருந்தன. அவற்றை அடிப்படையாகக் கொண்டு பாடநூல்களும் எழுதப்பட்டன. அப்ஜ ஹரித இகா அமிலம் போன்று வாய்க்குள் நுழையாத சொற்களை மாணவர்கள் படிக்கும்படி நேரிட்டது.

இ. மு. சு அவர்கள் சளைக்காமல் கண்டனக் குரல் எழுப்பிக் கொண்டே இருந்தார். இதன் விளைவாக டாக்டர் T. S. திருமூர்த்தி புதிய தலைவராக நியமிக்கப் பட்டார். தம் போராட்டத்தில் துணைக்கு திரு சி. என் முத்துரங்க முதலியாரை அழைப்பதற்காக இ. மு. சு அவர்கள் சென்னையிலிருநது பூவிருந்தவல்லிவரை பேருந் தில் சென்று, அங்கிருந்து திரு சி.என். முத்துரங்க முதலியார் ஊராகிய நசரத்பேட்டைக்கு நடந்து சென்றார். திரு சி. என் முத்துரங்க முதலியார் அவர்கள் அந்நாள் காங்கிரசில் மிகப்பெரும் செல்வாக்கு படைத்தவர்; சூத்திரதாரி (king maker) என்று கூடச் சொல்லுவார்கள்.

இ. மு. சு அவர்கள் தமிழுக்காக நடந்து வந்ததைக் கண்ட முதலியார் அவர்கள் உள்ளம் உருகினார். ஒரு மடல் எழுதியிருந்தால் வண்டியை அனுப்பியிருப்பேனே என்றார்; தாம் என்ன செய்யவேண்டு மென்றார். சென்னைமாகாணத் தமிழ்ச் சங்கம் உருவாக்கிய கலைச் சொற்களுக்கு ஆதரவு தெரிவித்தும், அந்நாள் அரசு வெளி யிட்ட வடசொற்பட்டியலைக் கண்டிக்கும் மாநாட்டு வர வேற்புக் குழுத் தலைவராக இருத்தல் வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

## கோகலே மண்டபத்தில் கண்டனக் குரல்

7-10-1946 அன்று சென்னையில் கோகலே மண்டபத் தில் தென்னிந்தியத் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் கண்டனப் பொதுக் கூட்டம் திரு சி. என். முத்துரங்க முதலியார் தலைமையில் நடைபெற்றது. சிலம்புச்செல்வர் ம. பொ.

சிவஞானம், பண்டிதை கிருஷ்ணவேணி அம்மையார், புலவர் இ. மு. சுப்பிரமணியபிள்ளை, பொ. திருகூட சுந்தரம் பிள்ளை, மயிலை சிவ. முத்துக்குமாரசாமி, அருள்மிகு அருள்தங்கையா, வித்துவான் மு. வரதராசனார் ஆகியோர் கலந்து கொண்டு வடமொழிக் கலப்பைக் கண்டித்தும், சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் வெளியிட்ட கலைச் சொற்களை ஆதரித்தும் பேசினர்.

## முத்துரங்க முதலியார் பேருரை

முத்துரங்க முதலியார் தம் தலைமை உரையில் சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் பல ஆண்டுகளாக உழைத்துக் 'கலைச் சொற்களை' உருவாக்கியது என்றும், அதனை முந்திய காங்கிரஸ் அரசும், ராஜபாளையம் காங்கிரசும் அங்கீகரித்துள்ளன என்றும், புதிய கலைச் சொற்பட்டியைக் கைவிட்டு, பழைய 'கலைச் சொற்களை' ஏற்கவேண்டும் என்று சொல்வதே இக் கூட்டத்தின் நோக்கம் என்று எடுத்துரைத்தார். ஏற்கனவே தமிழில் கலந்துவிட்ட சமஸ்கிருத, அராபியச் சொற்களை முற்றிலும் நீக்கிவிட முடியாது என்று அவர் குறிப்பிடுகையில் கோகலே மண்டபத்தில் கூச்சலும், குழப்பமும் ஏற்பட்டது. (சுதேசமித்திரன் 12-10-46) பின்னர் ம. பொ. சிவஞான கிராமணி பேசுவார் என்று தலைவர் அறிவிக்கவும் குழப்பம் அடங்கியது.

## ம. பொ. சி. உரை

தாய்மொழி வழியாக அனைத்துப் பாடங்களும் பள்ளிகளில் நடைபெற வேண்டும் என்றும், அத்தகைய உயிருள்ள மொழியாகத் தமிழ்மொழி விளங்க வேண்டுமென்றும், ஒருவருக்கு இரு தாய் மொழிகள் இருக்க முடியாதென்றும், சமஸ்கிருதத்தைக் கட்டாயமாகச் சேர்த்துத்தான் தமிழ்ச் சொற்கள் உருவாக்க வேண்டுமென்றால், தமிழன் மூளை

கெட்டுவிடுமென்றும் தமிழில் சொற்கள் இல்லை என்று கூறுபவர்கள் பேதைகள் என்றும் வன்மையாகச் சாடினார். மொழிவாரி மாகாணப் பிரிவினை ஏற்படும் வரை அரசாங்கக் கமிட்டி தயாரித்த பட்டியலை நிறுத்தி வைக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

## பெரியார் கண்டனம்

இ. மு. சு அவர்கள் தந்தை பெரியாரயும் சந்தித்து அரசின் நோக்கம், தமிழ்மொழியை உருக்குலைக்கச் செய்வதே என்றார். பொதுவாக மொழிப் பிரச்சனையில் தீவிர தூயவாதத்தை ஏற்றுக் கொள்ளாத பெரியாரே அரசாங்க முயற்சி ஆபத்தானது என்பதை உணர்ந்து 'விடுதலை' ஏட்டில்,

'கலைச் சொற்கள் பெயரால் 'தமிழ்க் கொலையா?'' என்ற தலையங்கம் எழுதினார். [11-10-1946; விடுதலை) அவர் தம் தலையங்கத்தில் குறிப்பிடுவது:

''பழைய கலைச் சொற்கள் பட்டியல் ஒன்றிருக்கும் போது மற்றொரு பட்டியல் ஏற்பாடு செய்வதன் உட் கருத்து என்னவென்பது விளங்கவில்லை. ஒருக்கால் பழைய பட்டியலைக் காட்டிலும் அதிக வடசொற்களை இந்தப் பட்டியலில் நுழைப்பதற்காகவா? அப்படியானால் தமிழ் மந்திரியான அவினாசிலிங்கம் அதற்கு இணங்கியது எப்படி?''

''எனவே கூடுமானவரையில் நல்ல, எளிய சுத்தமான தமிழிலேயே கலைச்சொற்களையும் பிற சொற்களையும் கொண்ட நூலே இனி இயற்றப்படுதல் வேண்டும். வழக் கத்தில் இருந்து வந்தது என்ற காரணத்திற்காக கரடு முரடான வடமொழிச் சொற்களைத் தமிழில் திணித்து விட வேண்டாமென்று எச்சரிக்கின்றோம். இப்போதே, அதாவது தொடக்கத்திலேயே கலைச் சொற்களைத்

தூய தமிழ்ச் சொற்களாக அமைத்துக் கொண்டால், பிறகு போகப் போக, அவைகளே பழக்கத்தில் வந்துவிடும்." விடுதலை தலையங்கத்தின் நுட்பதிட்பம் இன்றும் பாராட்டத்தக்கது.

## குழு மாற்றியமைக்கப் பெற்றது

இவ்வளவு கண்டனக் குரல்களுக்குப் பின்னர் சென்னை மாகாண அரசு தமிழ்க்கலைச் சொற்குழுவை மாற்றியமைத்துப் பின் வருவோரையும் கூடுதல் அங்கத்தினர்களாக நியமித்தது.

1. திரு இ. மு. சுப்பிரமணிய பிள்ளை.
5. பேரா. அ. முத்தையா பச்சையப்பன் கல்லூரி, சென்னை.
3. பேரா. S. G. மணவாளராமாநுஜம், மாநிலக் கல்லூரி, சென்னை.
4. சுவாமி புரந்தரானந்தா
   இராமகிருஷ்ண மடம், சென்னை.

அப்போது திரு அவினாசிலிங்கம் செட்டியார் கல்வி அமைச்சராக இருந்தார். திரு முத்துரங்க முதலியார் தலையீடு அரசாங்கத்தை உலுக்கியது. கல்வித் துறைச் செயலராக இ. மு. சு. அவர்களின் மாணவர் திரு M. V. சுப்பிரமணியம் இருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. [அரசு ஆணை கல்வி நலவாழ்வுத் துறை எண் 2019 கல்வி நாள் 21-10-1946] புதிய உட்குழுக்கள் நியமிக்கப் பெற்றன.

## வையாபுரியாருடன் மோதல்

கணிதம், இயற்பியல், வேதியியல் ஆகிய மூன்று பாடங்களுக்கும் சேர்த்து அமைக்கப்பட்ட உட்குழுவில் இ. மு. சு அவர்கள் பேரா. எஸ். வையாபுரிப் பிள்ளையுடன்

பணியாற்ற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. சேலம் கல்லூரி முதல்வர் இராமசாமிக் கவுண்டரும் அக்குழுவில் இருந்தார்.

ஒரு நாள் கலைச் சொற்களைப் பற்றிய விவாதத்தில் குழு ஈடுபட்டது. திரு வையாபுரிப்பிள்ளை அவர்கள் 'நிலையா' என்றும் வடமொழிச் சொல்லிலிருந்துதான் 'நிலையம்' என்றும் தமிழ்ச்சொல் நிலையா→நிலையம் பிறந்தது என்று வாதிட்டார். இ. மு. சு அவர்கள் குறுக்கிட்டு நில் என்ற வினை வேர்ச் சொல்லின் வழி நிலை என்ற சொல் பிறந்தது. நிலையாக நிற்கிறாயே என் கிறோம். அது அம் விகுதி பெற்று நிலையம் ஆகிறது நில்→நிலை→நிலையம்.

உள்ளங்கை நெல்லிக்கனி போல் விளங்கும் இச் சொல்லை வடமொழித் தழுவல் என்று கூறுவது பொருத்த மற்றது என்று' எடுத்துக் காட்டினார்.

ஆனால் வையாபுரிப்பிள்ளை அவர்கள் இதனை ஒப்புக் கொள்ளவில்லை. மீண்டும் மீண்டும் தம் கருத்தையே வலியுறுத்திக் கொண்டிருந்தார்.

அருகிலிருந்த சேலம் இராமசாமிக்கவுண்டர் அவர் களுக்குக் கோபம் வந்துவிட்டது. வையாபுரியாரைப் பார்த்து ஏனையா, நீ தமிழன் மகன் தமிழன் தானா? என்று கேட்டுவிட்டார். உடனே வையாபுரிப்பிள்ளை எழுந்து சென்று விட்டார். பின்னர் குழுக் கூட்டங்களுக்கு வரவே இல்லை.

## கல்வி அமைச்சரிடம் முறையீடு

பேரா. வையாபுரிப்பிள்ளை கல்வி அமைச்சரை அணுகி சுயமரியாதைக்காரர்கள் தம்மைக் குழுக் கூட்டத்தில் திட்டி விட்டதாகப் புகார் செய்தார். சேலம் இராமசாமிக்

கவுண்டரும், இ. மு. சு. அவர்களும் அவினாசிலிங்கனாரைச் சந்தித்தபொழுது, அவர் வியப்படைந்தார். ஏனெனில் இராமசாமிக் கவுண்டர் அவர்கள் திருமண் காப்பு (நாமம்) அணியும் பழக்கம் உள்ளவர்; இ. மு. சு. அவர்களோ திருநீறணிந்து சிவக் கோலத்தில் காட்சியளிப்பவர். இருவரும் அமைச்சரிடம் நடந்த விவரத்தை விளக்கினர்.

## இறுதி வடிவம்

இவ்வாறாக மோதல்களுடன் நடைபெற்ற கலைச் சொற்கள் குழு 1947 ஜனவரியில் தம் பணியினை முடித்து அரசிற்கு அறிக்கை சமர்ப்பித்தது. 'அப்ஜஹ்ரிதி ஜிகாமிலம்' போன்ற கரடுமுரடான வடசொற்களுக்குப் பதிலாக ஆங்கிலச் சொல்லே மேலென்று முடிவெடுக்கப்பட்டது. இ. மு. சு. அவர்கள் நல்ல தமிழ்ச் சொற்களைப் புகுத்துவதில் ஓரளவு வெற்றி கண்டார். பத்தாண்டுகளாக இடையறாத போராட்டங்களில் ஈடுபட்டுத் தமிழ் மொழிச் சிதைவைத் தடுத்தார். 'கலைச் சொல்லாக்கம் கவினுறத் தொகுத்தும்' என்று பாவாணர் பாராட்டுகிறார். பாவாணர் அவர்களுடன் நெருங்கிப் பழக நேரிட்டதும் முதற் கலைச் சொல்லாக்க மாநாட்டில்தான்.

# 5. தமிழ்ச் சங்கப்பணி

1939 ஆம் ஆண்டு சங்கரன் கோவில் போர்டு உயர் நிலைப்பள்ளிக்கு மாற்றலானபிறகு சங்கரன்கோவிலிலேயே நிலையாகத் தங்கித் தமிழாசிரியப் பணியுடன், தமிழ்ச் சங்கப்பணியையும் இணைந்து ஆற்றிட உறுதிபூண்டார், இ. மு. சு அவர்கள். சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தின் வரலாறு ஏறத்தாழ இ. மு. சு அவர்களின் வரலாறாகவே மிளிர்கின்றது. சங்கரன் கோவிலில் நிலையாகக் குடியேற எண்ணியமைக்கு ஒரு காரணம் இ. மு. சு அவர்களின் முன்னோர்கள் சங்கரன் கோவில் கிளாவடி விநாயகர் கோவில் தெருவில் பூர்விகமாக வாழ்ந்து வந்தவர்கள். சங்கரலிங்கப் பெருமானுக்குப் பூக்கட்டுவதும், தேவாரத் திருத்தொண்டு புரிவதும் அன்னாரின் பரம்பரைத் தொழில்களாகும். அவருடைய பாட்டனார் காலத்தில்தான் தாதுவருடப் பஞ்சத்தில் எட்டயபுரத்தில் குடியேறினார்கள். எனவே மீண்டும் தம் பூர்விக ஊரில் ஆதிசங்கர விநாயகர் கோவில் தெருவில் 1940 இல் முதலில் ரூ 1000 க்கு ஒத்தியாகவும், பின்னர் ஈராயிரத்திற்குக் கிரயமாகவும் ஒரு மாடி வீட்டினை வாங்கினார். அந்த இல்லத்தின் தான் அவர் தம் வாழ்நாளில் முக்கிய பகுதி கழிந்தது.

## கூடலூரில் நிலம் வாங்குதல்

சங்கரன் கோவிலில் குடியேறுவதற்கு மேலும் ஒரு சாதகமான சூழ்நிலை, இ. மு. சு அவர்களின் மாமனார் பழைய கிராம முன்சீப் (திரு ச. சுந்தரம்பிள்ளை அவர்களின் சுசுவரவடிவம்மையாரின் வளர்ப்புத் தந்தை) சங்கரன் கோவிலுக்கு வடக்கே 7 மைல் தொலைவிலுள்ள நெற்

கட்டும் செவல் அருகிலுள்ள கூடலூரில் வாழ்ந்து வந்தது தான். கூடலூர் அல்லது கூடநல்லூர் வடக்கே மூஞ்சி மலையையும், மேற்கே பெரிய குளத்தையும், ஏனைய திசைகளில் நெல் வயல் சூழ்ந்தும் காணப்படும் ஓர் அழகிய சிற்றூர்.

1940 முதல் 1950 வரை உள்ள ஆண்டுகளில் ஒன்பது ஏக்கர் நஞ்சை நிலம், ஐந்து ஏக்கர் புஞ்சை நிலம், ஒரு சிறிய காரை வீடு ஆகியவற்றை முறையே ரூ 6000, ரூ 500 500க்கு படிப்படியாக வாங்கினார், அவ்வப்போது அவற்றி லிருந்து வருவாயாக, நெல், எள், சோளம் பருப்புவகைகள் வந்து கொண்டே இருக்கும்.

## கூடலூர் சுந்தரம் பிள்ளை

இவற்றுக்கெல்லாம் மூலகாரணமாக விளங்கியவர் பழைய கிராம முன்சீப் சுந்தரம் பிள்ளையவர்களே ஆகும். இ. மு. சு அவர்கள் நிலங்களை வாங்கிப் போட்டதோடு சரி, எப்போதாவது ஆண்டுக்கு ஒரு முறை கிராமத்திற்குச் செல்வாரே ஒழிய, நஞ்சை புஞ்சைகளை நிர்வகித்து வந்தவர் சுந்தரம்பிள்ளையவர்களே. சுந்தரம்பிள்ளை யவர்கள் கிராமப் பிரமுகர்களின் குணசித்திரத்திற்கு எடுத்துக்காட்டாக அமைபவர். அவ்வூரில் ஏற்படும் சிக்கல் களைத் திண்ணையில் உள்ள சாய்மானத்தில் சாய்ந்து கொண்டு தீர்ப்புக் கூறுவார். அவருடைய பேச்சிற்கு மறு பேச்சு அக் கிராமத்தில் இல்லை. எப்போதும் நான்கைந்து பால் மாடுகள் கட்டப்பட்டு இருக்கும். அவற்றில் ஒன்று சங்கரன் கோவிலில் தன் மகள் வீட்டில் நிற்கும். பால் வற்றிவிட்டதென்றால் சங்கரன் கோவிலிருந்துகூடலூருக்கு அனுப்பப் பெற்றுவேறு ஒருபால் மாடு சங்கரன்கோவிலுக்கு வந்து சேரும். எனவே வற்றாத பால் வளத்தை கூடலூர், சங்கரன்கோவில் வீட்டிற்கு அளித்து வந்தது.

திரு சுந்தரம்பிள்ளையவர்கள் கர்நாடக சங்கீதத்தில் ஈடுபாடு உடையவர். ஆண்டுதோறும் சங்கரன்கோவில்

ஆடித்தபசு விழாவில் நடைபெறும் கச்சேரிகளுக்குத் தவறாமல் வருகை புரிவார். அதுபோலவே அவரது உணவு முறையும் கலைத் தன்மை வாய்ந்ததாக இருக்கும். காலையில் நான்கைந்து இட்லிகள் சாப்பிடுவதற்கு மிளகாய்ப் பொடி, எண்ணெய், திருவப்பெற்ற தேங்காய்ப்பூ, சில்லுக்கருப்பட்டியின் சீவல் தயிர், நெய் ஆகியவை வைக்கப்பட்டிருக்கவேண்டும். திரு சுந்தரம்பிள்ளையவர்களுடைய மனைவியார் வெள்ளையம்மை ஆச்சி காலையில் எழுந்து தயிர் கடைவது சங்ககாலக் காட்சியை நினைவூட்டும். கயிற்றில் கட்டப்பட்டுள்ள தயிர் மத்து கடையும் ஒலி புலி உறுமுவதைப் போல இருக்கும். எனவே பாலும், தயிரும் எப்பொழுது பார்த்தாலும் வளம் மிகுந்து இருக்கும்.

## தனிவாழ்வின் பொற்காலம்

இத்தகைய ஒரு கிராமம் வளம் சுரந்தூட்டிய பின்னணியில் இ. மு. சு. அவர்கள் சங்கரன் கோவிலில் வாழ்ந்த காலம் அவருடைய தனி வாழ்வின் பொற்காலம் எனலாம். காலையில் அவர் எப்பொழுது எழுந்திருப்பார் என்றும், இரவில் எப்பொழுது தூங்கச் செல்வார் என்றும், அவரது தாயாருக்கே தெரியாது என்று சொல்வதுண்டு. அத்தகைய கடுமையான உழைப்பாளி எப்போதும் பார்த்தாலும் ஏதாவது எழுதிக்கொண்டோ, படித்துக்கொண்டோ இருப்பார், காலையில் 6 மணிக்கு இறங்கி வரும் போது 'டேய்' என்று குரல் கொடுப்பார். அவருடைய உதவியை நாடித்தொண்டு புரிகின்ற ஒரு சிலர் காலையில் 6 மணிக்கு வருகை புரிந்து அவருக்குத் தண்ணீர் இறைத்துக் குளிப்பாட்டுவது முதல் இரவு 9 மணி வரை பணிவிடை செய்து கொண்டிருப்பார்கள். அவர் பணி ஆற்றிய உயர்நிலைப் பள்ளியில் முதல் மணி அடிக்கும் பொழுதுதான் சாப்பிடத் தொடங்குவார். இரண்டாவது மணி அடிக்கும் பொழுது பள்ளிக்குச் சென்று விடுவார். அவருடைய உதவியை நாடி

வருபவர்கள் அய்யா இருக்கிறார்களா? என்று அடிக்கடி கேட்பதற்குப் பதில் சொல்லிவாய் வலித்துவிடும் என்பார், அவர் தம் மனைவியார் ஈசுரவடிவம்மையார்.

## உணவு முறை

மிகச் சூடான உணவுகளை உண்பது இ. மு. சு அவர்களின் வழக்கம். சுடுகின்ற தோசை கல்லில் இருந்து நேராக அவருடைய தட்டிற்கு வரவேண்டுமாம், இடையிலே ஒரு கணம் கூடத்தாமதிக்கலாகாது. மதியம், இரவு ஆகிய இரு வேளைகளிலும் சுடு சோறும், காலையில் பலகாரமும் உண்பார். உண்ணும் பொழுது இடையில் தண்ணீர் அருந்த மாட்டார். உண்டு முடித்த பின் தான் நீர் அருந்துவார். காய்கறிகள் கூட அதிகமாகத் தேவையில்லை. அவருக்கு நெய்யும், பருப்பும் தான் இன்றியமையாதன. இரவில் பால் சோறு இல்லாமல் தீராது. நெய் விடுவதற்குக் கரண்டியைப் பயன்படுத்தமாட்டார். அப்படிக் கிண்ணத்தையே சாய்த்துக் கொள்வார். குருத்தக் காளி வத்தல், பாகற்காய் முதலியன அவருக்குப் பிடித்தமானவை.

## உடை

பள்ளி செல்லும் நேரங்களில் முழங்கால் வரை நீண்ட மிகப் பெரிய முழுக்கைச் சட்டை அணிந்து செல்வார். மேல் துண்டு பிரத்தியேகமாகத் தயாரிக்கப்பட்டு மிக நீண்டதாக அமைந்திருக்கும். பத்துச் சட்டைகளும், செர்வாணி போன்ற நீளக் கோட்டுகளும் வைத்திருந்தார். அதற்குப் பிறகு அவர் சட்டை தைத்ததுமில்லை. இருந்தவற்றையே இருபது ஆண்டுகள் போட்டுக் கொண்டிருந்தார், வேட்டியும், துண்டும் தான் ஆண்டுக்கொரு முறை வாங்குவார். அவருக்கென்று தனியாக நெய்து, அரை டஜன் அல்லது ஒரு டஜன் தான் வாங்குவார். பள்ளி செல்லாத நேரங்களில் எல்லாம் நான்கு முழ வேட்டியும், மிக நீளமான

மேல் துண்டும் அணிந்திருப்பார். ஆளுநர், அமைச்சர்கள், உயர்நீதி மன்ற நீதிபதிகள், உயர் நிலை அலுவலர்கள் யாரைப்பார்க்கச் சென்றாலும் சட்டை இன்றியே செல் வார். ஒரு முறை தமிழகப் புலவர் குழுவில் முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதன் அவர்கள் இ. மு. சு அவர்களை அறிமுகப்படுத்தும் பொழுது 'அவர் எப் பொழுதும் அசட்டையாக' இருப்பார் என்றும் தமிழ்ப்பணி ஒன்றையே மனம் கருதி மற்ற எதனையும், எவரையும் சட்டை செய்யமாட்டார்' என்றும் குறிப்பிட்டார்.

## தமிழாசிரியப்பணி

தமிழ்ச் செய்யுள்களை இனிமையாகப் பாடி நடத்துவார், அவற்றை விளக்கும் பொழுது எளிய சொற் களையும், வாழ்க்கை நிகழ்ச்சிகளையும் எடுத்துக்காட் டாகக் கூறி மாணவர் மனதில் நன்கு பதியும்படி செய்வார் இடையிலே யாராவது மாணவன் பேசிக்கொண்டு இருந் தால் கேட்டுக்கொண்டிருந்த மாணவனை எழுந்திருக்கச் சொல்லி, பேசிக் கொண்டிருந்த மாணவனின் முதுகில் குத்துமாறு கூறுவார். அவன் ஏதாவது தயக்கம் காட்டினால் கேட்டுக் கொண்டிருந்தவனுக்குத்தான் தண்டனைகிடைக் கும். மாணவர்களை நயமாக இடித்துரைத்துத் திருத்து வதிலும் இ. மு. சு வல்லவர்.

தற்போது திருச்செந்தூர் ஆதித்தனார் கலைக்கல்லூரி யில் தமிழ்த் துறைத் தலைவராக இருக்கும் டாக்டர் ந. கல்யாணசுந்தரம் அவர்கள் இ. மு. சு அவர்களின் மாணவனாக இருந்த பொழுது நடந்த நிகழ்ச்சிகளை நினைவு கூர்ந்து எழுதியுள்ளார். சங்கரன்கோவில் போர்டு உயர்நிலைப் பள்ளியில் 1945 இல் பத்தாம் வகுப்பில் தமிழ் இலக்கண வகுப்பு நடத்திக் கொண்டிருந்தார். இலக்கண வகுப்பு என்றாலே மாணவர்கள் சிறிது அலட்சியமாக இருப்பது வழக்கம். பின் பெஞ்சில் இருந்த மாணவர்கள்

ஒரு சிலர் வேறு பாடங்களைப் படித்துக் கொண்டிருந் தார்கள். இ. மு. சு அவர்கள் யாப்பிலக்கணம் நடத்திக் கொண்டிருந்தார். வேறு பாடம் படித்துக் கொண்டிருந்த மாணவர்களுக்குப் புத்தி புகட்டுவதற்காக, அந்நேரத் திலேயே உடனடியாக ஒரு வெண்பாப் புனைந்து கரும் பலகையில் எழுதினார். அவ்வெண்பா வருமாறு,

நேரிசை வெண்பா

" சீராசை நன்னகரில் சீரிலா மாணவர்கள்
பேராசை தனனாற் பிறபாடம்—நேரமிலா
நேரத்தில் கற்பது நேர்மையோ? வெற்றியிவர்ச்
சார வருதுமோதான்? சாற்று."

தமிழ் வகுப்பில் பிற பாடம் படித்துக் கொண்டிருக்கும் மாணவர்களுக்கு வெற்றி கிட்டுமோ? 'சாற்று' என்று வெண்பாவை முடித்திருப்பது சாட்டையடி கொடுத்தது போல் இருந்ததுவாம். வெண்பாவில் முடிக்கின்ற முறை தான் முதன்மையானது. நந்திக் கலம்பக வெண்பாவில் 'நீ யென்றேன் நான்' என்று முடித்திருப்பதுபோல,

இவ் வெண்பாவினையே அலகிடுமாறு மாணவரைக் குறிப்பாகப் பிற பாடம் படித்திருந்தவரை வினவினார். அலகிடத் தெரியாதவர்கள் தமக்குத்தாமே அலகில் இட்டுக் கொள்ள வேண்டுமென்று, தானே கன்னத்தில் அடித்துக் கொள்ள வேண்டுமென்று கூறினாராம். அதன் பின்னர் மாணவர் பாடத்தில் கருத்தூன்றினர். இங்ஙனம் நயமாக வும் பயமாகவும் மாணவர்களை வழிக்குக் கொண்டு வருவதில் வல்லவர். இசையுடன் பாடிச் செய்யுள் வகுப் பினை நடத்துவார். ஆனல் இ. மு. சு அவர்களுக்குப் பேச் சாற்றலைவிட எழுத்தாற்றலே கைகொடுத்தது எனலாம். விளக்கும் ஆற்றலும் கதை சொல்லும் திறனும் இருந்தன.

## மானசீக மாணவர்

தற்பொழுது மதுரைக் காமராசர் பல்கலைக் கழகத்தில் ஒய்வுக்குப்பின் பேராசிரியராக விளங்கும் ந. சேதுரகுநாதன் அவர்கள் இ. மு. சு அவர்களை மானசிக ஆசிரியராக ஏற்றுக் கொண்டவர். விடுதலைக்கு முற்பட்ட தமிழகத்தில் கல்வி வசதிகள் குறைவாகவே இருந்தன. தாலுகாத் தலைநகரில்தான் உயர்நிலைப்பள்ளி இருக்கும். சிற்றூர்களில் இருக்கும் செல்வர்தாம் தம் மக்களை உயர்நிலைப் பள்ளிக்கு அனுப்ப முடியும். நடந்து செல்லக்கூடிய அளவு தொலைவில் இருப்பின் நடந்து சென்று மாணவர் படிப்பர் சைக்கிள் கூடப் பணக்காரர்களின் வாகனமாக இருந்த காலம் அது. பேரா சேதுரகுநாதன் அவர்கள் உயர்நிலைப் பள்ளியில் படிக்கும் வாய்ப்பினைப் பெற்றிலர். இ. மு சு அவர்கள் பாடம் நடத்தும்போது வராந்தாவிலிருந்து அவர் பாடம் நடத்துவதைக் கேட்பேன் என்று உளமுருகத் தன் பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

இ. மு. சு அவர்களின் இல்லத்தில் சென்று 'தமிழ்விடு தூது' பாடம் நடத்தக் கேட்பார், இனிமையான குரலில் பாடி விளக்கும் பாங்கினை இன்றும் நினைவு கூர்ந்து மகிழ்வார்.

## நெல்லைக்கு வாராந்தம்

சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தின் தலைமை இடம் திருநெல்வேலி ஆதலின் வாரந்தோறும் சங்கரன் கோவிலிலிருந்து நெல்லை செல்வார். சங்கத்தின் செயற்குழு பொதுக் குழுக் கூட்டங்கள் பெரும்பாலும் அப்போது நெல்லை சந்திப்பிலிருந்த ம. தி. தா. இந்துக் கல்லூரிக் கட்டிடத்தில் நடத்துவார். சங்கத்தின் அறிக்கைகளை அடிப்பதில் கணேசன் அச்சக உரிமையாளர் சுடலைமுத்துப் பிள்ளை உறுதுணையாக இருப்பார். நெல்லை சந்திப்பு கணேசன் அச்சகத்தில்தான் தங்குவார். ம. தி. தா.

இந்துக் கல்லூரி எழுத்தர் இராம. கனகசபாபதி பிள்ளை அவர்களும் உடனிருந்து உதவுவார். நெல்லையிலுள்ள முக்கிய பிரமுகர்களுடனெல்லாம் தொடர்பு கொண்டு உழைத்தார். காசுக்கடை மு. சுப்பிரமணியன் செட்டியார், மா. வே. நெல்லையப்ப பிள்ளை, பி. ஆவுடையப்ப பிள்ளை, சு. இராமசாமிக் கோனார், ஜே, சக்கரபாணி நம்பியார் ஆகியோர் முதன்மையானவர் ஆவர்.

## பட்டணத்துக்கு மாதாந்தரம்

முக்கிய வெளியீட்டு விழாக்கள், கலைச் சொல்லாக்கப் பணிகள் ஆகியவற்றைச் சென்னையில்தான் நடத்துவார். எனவே மாதந்தோறும் தவறாமல் சென்னைக்குச் சென்று ஆளுநர், அமைச்சர்கள், உயர்நீதிமன்ற நீதிபதிகள், உயர் அலுவலர்கள் 'ஆகியோருடன் தொடர்பு கொள்வார். சென்னையில்தான் சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் இயங்கி வருவதெனச் சென்னையில் உள்ளவர்கள் நம்பினர். முதலாண்டு இ. மு. சு நினைவு விழாவிற்கு முன்னாள் முதலமைச்சர் மீ. பக்தவத்சலம் அவர்களை அழைக்கச் சென்றபொழுது, தமிழ்ச் சங்கத்தின் தலைமை இடம் நெல்லை என்பதைச் சொன்னவுடன் வியப்படைந்தார். சென்னையிலல்லவா நடைபெறுவதாக நினைத்தேன் என்றார்.

சென்னைக்கு வரும்போதெல்லாம் முதலில் பச்சையப்பன் கல்லூரிப் பொருளியல் பேராசிரியர் அ. முத்தையா அவர்கள் வீட்டில் தங்குவார். அவர் மறைவுக்குப் பின் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தில் தங்கி வந்தார். அதன்பின் திரு வ. சுப்பையாப் பிள்ளை அவர்களுடன் கருத்து முரண்பட்டு ஏற்பட்ட பின்னர் விடுதிகளிலும் பின்னர் என் இல்லத்தில் தங்கி வந்தார்.

சங்கக் கூட்டங்கள், பச்சையப்பன் கல்லூரி, கோகலே மண்டபம், அண்ணாமலை மன்றம், சைதை . ஆசிரியர்

கல்லூரி, இராசாசி மண்டபம், பாலர் அரங்கம் ஆகியவற்றில்நடைபெறும். பெரும்பாலும் வாடகை விதிவிலக்குப் பெற்று நடத்துவார்.

செஞ்சிலுவைச் சங்கச் செயலர் அமிர்த கணேச முதலியார், கழகம் வ. சுப்பையாப் பிள்ளை போன்று பல அன்பர்கள் உறுதுணையாக இருந்து உதவுவர். மேல் மட்டத்தில் தந்தை பெரியார், சக்கரவர்த்தி இராசகோபாலாச்சாரி முதல், அறிஞர் அண்ணாவரையுள்ள தமிழக முதலமைச்சர்கள், எஸ். வெங்கடேசுவரன், எம். வி. சுப்பிரமணியம் போன்ற ஐ. சி. எஸ். அலுவலர்கள், மா. அனந்தநாராயணன் போன்ற உயர்மன்ற நீதிபதிகள், செட்டிநாட்டு அரசர் அண்ணாமலைச் செட்டியார், ஆர். கே. சண்முகம் செட்டியார் போன்ற தமிழ்நாட்டுப் பிரமுகர்கள் பலருடன் தொடர்பு கொண்டு கூட்டங்கள் நடத்துவார்.

## உண்மை அலுவலகம் சங்கரன்கோவிலில்

நெல்லையில் செயற்குழு, பொதுக்குழுக் கூட்டங்களும், சென்னையில் வெளியீட்டு விழாக்களும், மாநாடுகளுமாக வெற்றி நடை போட்டு வந்த சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தின் அலுவலகம் உண்மையில் சங்கரன்கோவிலில் இ. மு. சு அவர்களின் இல்லத்தில்தான் இயங்கி வந்தது. சென்னை மாகாணத் தமிழ்ச்சங்கம், திருநெல்வேலி என்று அஞ்சல்கள் வரினும் நெல்லை அலுவலகம் அதனைச் சங்கரன் கோவிலுக்குத் திருப்பி அனுப்பும். இவ்வாறு 1934-60 வரை இவர் தம் இல்லமே அலுவலகமாக இயங்கி வந்தது.

## மாநாட்டு மன்னர்

இ. மு. சு அவர்களின் அமைப்புத்திறன் (Organising Capacity) இணையற்றது. சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தை 1934 இல் தொடங்கியதிலிருந்து வெள்ளி விழாக்-

காணும் வரை (1934-60) ஆண்டுதோறும் சென்னையிலும் நெல்லையிலும் சென்னை மாகாணத் தமிழர் மாநாடுகளையும், புலவர் மாநாடுகளையும் நடத்தி வந்தார். இடையிடையே திருக்குற்றாலத்தில் சாரல் மாநாடுகளை வெற்றிகரமாக நடத்தி வந்தார். இவற்றின் நடுவே வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த கலைச் சொல்லாக்க மாநாடுகளையும், ஆட்சிமொழி மாநாடுகளையும் அமைவுற நடத்தினார். எனவே அந்நாளில் அவர் 'மாநாட்டு மன்னர்' என்று அழைக்கப் பெற்றார். மதுரையிலும், தஞ்சையிலும் கூட ஒவ்வொரு மாநாடு நடத்தியுள்ளார்.

மதுரையில் சர் பி. டி. ராஜன், செட்டிநாட்டில் அரசர் மு. அண்ணாமலைச் செட்டியார், திருச்சியில் டி. எம். நாராயணசாமிப் பிள்ளை, கோவையில் இராமச்சந்திரன் செட்டியார், சேலம் இராமசாமிக் கவுண்டர், சென்னையில் மணவாள இராமானுஜம், சி. என். முத்துரங்க முதலியார், ராஜபாளையம் குமாரசாமிராஜா, சக்கரவர்த்தி ராஜகோபாலாசாரியார் போன்றவர்களுடன் அடிக்கடி தொடர்பு கொண்டு மாநாடுகளின் வரவேற்புத் தலைவர்களாகப் போட்டு மாநாடுகளை வெற்றிகரமாக நடத்தி முடிப்பார். ஆட்சிமொழி, சொல்லாக்க மாநாடுகளில் அனைத்துக் கட்சித் தலைவர்களையும் ஈடுபடுத்துவார்.

### தமிழ்க் கல்லூரி, நெல்லை

அக்காலத்தில் ஆங்கிலப் பள்ளிகளில் பயிலும் வாய்ப்பினைப் பெற்ற தமிழ்ப் புலவர்கள் மிகக் குறைவு. இக்குறையினை அகற்றி, தமிழ்ப் புலவர்கள் மேற்பட்ட கல்வித் தகுதிகளைப் பெறுவதற்கு வகைசெய்தார். இப் பணியில் பேராசிரியர் சி. இலக்குவனாரின் துணையுடன் இயங்கினார். நெல்லை ம. தி. தா. இந்துக் கல்லூரியில் மாலை நேர வகுப்புக்களை நடத்துவதுதான் இத்தமிழ்க் கல்லூரியின் நோக்கம்.

கல்வி முறையில் முதல் மூன்று பாரங்களில் (6, 7 8 ஆம் வகுப்புக்கள்) கற்பிக்கப் பெற்ற பாடங்களே—மொழியல்லாத பாடங்களில்—அடுத்த மூன்று பாரங்களில் சற்று விரிவாகக் கற்பிக்கப் பெற்றுவந்தன. மூன்றாம் பாரம் மட்டும் படித்தவர்களை இத்தமிழ்க் கல்லூரியில் சேர்த்து, ஓராண்டிலேயே மெட்ரிக் வகுப்பு ஆங்கிலத்திலும், இடைநிலை வகுப்புத் தமிழிலும், பயிற்சி கொடுத்து, 'இடைநிலை வகுப்பில் (Inter Gruopd) சிறப்புத் தமிழ்ப் பிரிவில் சேர்த்தனர். அவ்வாறு சேர்ந்தவர்கள் பீ ஏ. மேற்பட்டப் படிப்பிலும் வெற்றி பெற்றுள்ளனர். ம. தி. தா. உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் இதில் பங்கு கொண்டனர். நான்காண்டுகள் வெற்றிகரமக நடந்தது. இத் தமிழ்க் கல்லூரி (1945—48) அதற்குப் பொருளுதவி பழநி, மதுரை, திருச்செந்தூர், திருநெல்வேலி, திருக்குற்றாலம், திருக்கோயில்கள்—அதற்கு உரிய ஆணையை இந்து அறநிலையத் துறைத் தலைவர் பிறப்பித்தார்.

### சும்மாவே இருக்கமாட்டார்

தமிழுக்காகப் பல முனைகளில் இ. மு. சு அவர்கள் இடையறாது ஈடுபட்டு இயங்குவது கண்டு பேரா. சி. இலக்குவனார் அவர்கள் தம் வாழ்க்கைக் குறிப்பில் இ. மு. சு அவர்களைப்பற்றிப் பின் வருமாறு குறித்துள்ளார்;

'இ. மு. சு. அவர்கள் சும்மாவே இருக்க மாட்டார்; தமிழுக்காக ஏதாவது செய்துகொண்டே இருப்பார்'

இ. மு. சு அவர்களை உடனிருந்து நன்கு புரிந்துகொண்டே அவர் வினையாற்றும் பாங்கினை உள்ளவாறு படம் பிடித்துக் காட்டியுள்ளார் பேரா. இலக்குவனார்.

### கொள்கைச் சுற்றம் (Ideological friends)

இ. மு. சு. அவர்கள் பற்பல பிரமுகர்களையும் அரசியல் தலைவர்களையும் உயர்மன்ற நீதிபதிகளையும்

ஆட்சி அலுவலர்களையும் உற்ற நண்பர்களாகப் பெற்றிருந்தார். இருப்பினும் அவருக்குத் தமக்கென ஒரு கொள்கைச் சுற்றம் உண்டு. தமிழ் நாடு, மொழி, இனம் பற்றிய கோட்பாடுகளில் அவருடன் முற்றிலும் கருத்தொற்றுமையுடையவர் பேரா, சி. இலக்குவனார், மொழி ஞாயிறு ஞா. தேவநேயப்பாவாணர், டாக்டர் அ. சிதம்பரநாதன் செட்டியார், புலவர் அ. மு. குழந்தை ஆகியோரே. எச் சமயத்திலும் இத்தமிழறிஞர்களை விட்டுக் கொடுத்துப் பேசமாட்டார். கொள்கைச் சுற்றத்தாரை நெஞ்சில் நிலைநிறுத்திப் போற்றி வந்தார்.

## தமிழாசிரியர் செல்லச்சாமிப் பாண்டியன்

தமிழாசிரியர் செல்லச்சாமிப் பாண்டியன் இ. மு. சு. அவர்களின் நிழல் போல அவர் எங்கு சென்றாலும் தொடர்ந்து சென்று தொண்டாற்றுவார். இராமன் நிழல் போல் பின் தொடர்ந்து பணியாற்றிய இலக்குவனைப் போன்றவர்.

இ. மு. சு அவர்களின் வீட்டிற்கு அடிக்கடி வரும் பொழுது இரவு நேரத்தில் 'பழைய சோறு' விரும்பிக் கேட்டு உண்பார். அதனால் இவரைப் பழையதுப் பாண்டியன் என்று செல்லமாக அழைப்பர். வாழ்நாள் நண்பனாய் (life long friend) உற்ற தோழனாய் இறுதி வரை உறுதியாக இருந்தவர்.

## சங்கரன் கோவில் இல்லம்

இ. மு. சு. அவர்களின் சங்கரன்கோவில் இல்லம் வருவோரும் போவோருமாகக் கலகலப்பாகக் காட்சியளிக்கும். உதவி நாடி வரும் கூட்டம் ஒன்று எப்போதும் அங்கு சுற்றி நிற்கும். சட்டமன்ற உறுப்பினர்களில் செல்வாக்கு வாய்ந்த உறுப்பினர் வீடு போல் காணப்படும். உவமைக் கவிஞர் சுரதா, மாவட்ட நீதிபதி பலராமய்யா,

S. வெங்கடேசுவரன் I. C. S. அவர்கள் தமிழறிஞர்கள், அரசியல்வாதிகள், காவல்துறை அதிகாரிகள் அவ்வப்போது வந்து செல்வர். ஒருமுறை சக்கரவர்த்தி இராச கோபாலாச்சாரியார்கூட இ. மு. சு அவர்கள் இல்லத்திற்கு வந்து சென்றுள்ளார்.

சிக்கனம்

மிக எளிய வாழ்க்கை வாழ்ந்தவர் இ. மு. சு அவர்கள். பெரும்பாலும் நாலு முழ வேட்டியுடனும், துண்டுடனும் காட்சி அளிப்பார். உணவு முறைகளும் மிகவும் எளியன. பெரும்பாலான இடங்களுக்கு நடந்தே செல்வார் ஆட்டோ, டாக்சிகளில் செல்ல நேரிட்டால் சரியாகச் சில்லறை கொடுப்பார். அவரது சம்புடத்தில் எப்போதும் ரூபாய் நோட்டுகள் மடித்தும், வகை வகையான சில்லறை நாணயங்களும் இருக்கும். வீட்டுச் செலவுக்குப் பணம் கொடுக்கும் போதெல்லாம் கணக்குப் பார்த்து தேவை யென்றுபட்டால் கேட்டதில் பாதி கொடுப்பார்.

அவர் தம் மனைவியார் ஈசுரவடிவம்மை யாரும் சீரும். செட்டுமாகக் குடித்தனம் நடத்தியவர். வீட்டுக்கு வேண்டிய புளி, மிளகாய் வத்தல், பருப்பு வகைகள் (விளைந்து வராதன) ஆகியவற்றை மொத்தமாக ஆண்டுக்கு முழுமையும் போதிய முறையில் வாங்கி வைத்திருப்பார்.

வீட்டு நிர்வாகத்தைத் திறம்பட நிர்வகித்தார்.

ஆனால் விருந்தோம்புதலுக்குக் குறைச்சல் இருக்காது. எப்போதும் தோசை மாவு இருந்து கொண்டிருக்கும். திருநெல்வேலிச் சைவர்களின் பண்பு நாள்தோறும் தோசை மாவு தயாரித்து இட்டிலி அல்லது தோசை என்று மாறி மாறி உண்பது—எள் கலந்த மிளகாய்ப் பொடியும் பிரசித்தி பெற்றது.

மேலும் இத்தம்பதியருக்குக் கல்யாணமாகிப் பத்தாண்டுகள் வரை மகப்பேறு இல்லை. செட்டான வாழ்

வினாலும் வீடு, நிலம் வாங்க முடிந்தது. 1950 இல் ஓய்வு பெற்றபின் வைப்பு' நிதி முதலியவற்றுடன் சேமிப்பையும் வைத்து அருகிலிருந்த மாடி வீட்டையும் ரூ 10,000 என்று வாங்கினார். அதன் பின்னர் (1950) எவ்வித தாவர (நிலைச்) சொத்துக்களும் வாங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் வீடு வாங்குங்கள் என்று பக்கத்து வீட்டுக்காரர் வற்புறுத்திய போது, இரண்டு பிள்ளைகளுக்கு இரண்டு வீடு வாங்கிவிட்டேன், இனி வேண்டாம் என்று மறுத்தார். இ. மு. சு அவர்களின் குழந்தைகள் நால்வர்—மூத்த மகள் சிவகாமவல்லி, இளைய மகள் கோதை, மூத்த மகன் முத்துசாமி—இளைய மகன் சுந்தரமூர்த்தி.

## வடக்குத்தெரு மாணிக்கஞ் செட்டியார்

இ. மு. சு அவர்களின் குடும்ப விவகாரங்களிலெல்லாம் ஆலோசனை கூறும் மந்திரி போல விளங்கியவர் வடக்கு ரத வீதியில் வாழ்ந்த மாணிக்கஞ் செட்டியார் அவர்கள். அவரைக் கலந்தாலோசிக்காமல் வீட்டில் திருமணம் போன்ற எதனையும் முடிவு செய்ய மாட்டார். திருமணம் நடத்துவதில் சிக்கல்கள் ஏற்பட்டாலும் மாணிக்கஞ்செட்டியாரின் அறிவுரைப்படியே தீர்த்துவைக்கப் பெறும்.

சுருங்கக் கூறின் தம் மனைவியாரின் அறிவுரையிலும் திரு மாணிக்கஞ் செட்டியாரின் அறிவுரையையே விரும்பிக் கேட்பார்.

## சங்கரநாராயண ஓதுவார்

சங்கரன்கோவில் தேவஸ்தானத்தில் தேவாரங்களை ஓதுகின்ற பணியினை அண்ணன் முறையான சங்கர நாராயண ஓதுவார் அவர்களுக்கு, இந்து அறநிலைய ஆட்சிக்குழுத்தலைவர்சின்னையாப்பிள்ளைமூலம் பெற்றுத் தந்தார். சாயங்காலம் கோயிலுக்குச் செல்லும் போது தம் அண்ணாச்சியின் துணையுடன் செல்வார். ஆன்மீக

புராண விவகாரங்களை அவருடன் விவாதிப்பார். தேவார திருவாசகங்களைப் பற்றியும் கலந்து பேசுவார். ஆன்மீக விவகாரங்களில் இ. மு. சு அவர்களுக்குத் திரு சங்கர நாராயண ஓதுவார் அவர்கள் அமைச்சராக விளங்கினார். இறுதிவரை இணைபிரியாத நண்பராகவும் திகழ்ந்தார்.

## சென்னை தியாகராயர் உயர்நிலைப் பள்ளியைச் சீர்திருத்துதல்

சென்னை தியாகராயர் உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர், உடற்பயிற்சி ஆசிரியர் ஆகியோர் நிர்வாகத்துடன் ஒத்துழைக்காமல் இடையூறு செய்து வந்தனர். இதனை ஒழுங்குபடுத்துவதற்குத் திரு இ. மு. சு அவர்களை 1949—50ஆம் கல்வியாண்டில் கண்காணிப்பாளராக அமர்த்தினர். விடுப்பு எடுத்துச் சென்னை சென்று பணியாற்றினார். அப்பள்ளியிலிருந்த சிக்கல்களைத் தீர்த்து களை எடுக்க வேண்டியவற்றைக் களைந்து சீர்படுத்தினார்.

சென்னையிலிருக்கும் போது நாள்தோறும் சங்கரன் கோவிலில் உள்ள தன் குடும்பத்தாருக்கு கார்டு ஒன்றை எழுதிக்கொண்டே இருப்பார்.

## கடிதக்கலை

இ. மு. சு அவர்களுக்குத் தினந்தோறும் ஏராளமான கடிதங்கள் வந்து கொண்டே இருக்கும். வெளியூரிருந்து வீடு திரும்பும் போது நுழையும் நிலையிலேயே தபால் எங்கே என்று கேட்டுக் கொண்டே நுழைவார். அவர் ஒரு நடமாடும் அஞ்சலகம். எல்லாவிதமான கார்டு, கவர், தபால்தலைகள் எப்போதும் இருப்பில் வைத்திருப்பார். ஒவ்வொரு ரகதபால் தலைக்கும் ஒரு கவர், எல்லாக் கவரையும் ஒரு பஞ்சாங்கத்திற்குள் வைத்திருப்பார்.

அயராமல் கடிதங்களை மறுமொழியாக எழுதிக்கொண்டே இருப்பார். அவர் உதவி நாடி வருறகிவர்களுக்கு அஞ்சலகம் செல்லும் வேலையை அடிக்கடி கொடுப்பார். இடைவிடாத கடிதங்களின் மூலம் தமிழகம் முழுவதும் உள்ளவர்களுடன் தொடர்பு கொள்வார். பொதுவாழ்வில் இ. மு. சு அவர்களின் வெற்றிக்கு உறுதுணையாக இருந்தது அவர் கையாண்ட கடிதக்கலையே. ஒரு சில வரிகளே எழுதுவார் சொல்ல வேண்டியவற்றைத் தெளிவாகவும் உள்ளத்தில் படும்படியும் எழுதுவார். இத்திறனைப் பற்றிப் பேரா. ந. சேதுரகுநாதனவர்கள் தம் பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

## தமிழ்த்தாய்

'தமிழ்த்தாய்' என்றும் முத்திங்கள் வெளியீட்டினைச் சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தின் வாயிலாக வெளியிட்டு வந்தார். (1940—43) இலக்கியத்தரம் வாய்ந்த கட்டுரைகளும் மொழி பற்றிய ஆய்வுக் கட்டுரைகளும் வெளிவந்தன. இவ்வாறு மூன்று ஆண்டுகள் இந்த முத்திங்கள் இதழை நடத்தி வந்தார்.

## நெல்லையில் ஆட்சிமொழி மாநாடு

உயர்நிலைப் பள்ளிக்குரிய கலைச் சொற்களை உருவாக்கி வெற்றிகண்ட பின்னர் விடுதலைக்குப் பின் தமிழகத்தில் ஆட்சிமொழி தமிழாக இருக்கவேண்டுமென்னும் கருத்து மேலோங்கி வந்துள்ளது. இச் சூழ்நிலையில் ஆட்சிமொழி மாநாடு ஒன்றினை 18-10-1953 இல் திருநெல்வேலியில் சர். பி. டி. ராஜன் தலைமையில் நடத்தினார். ஆட்சிமொழி தமிழாக வேண்டுமென்றும், ஆட்சிச் சொல்லகராதியைச் சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் உருவாக்க வேண்டுமென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## சென்னையில் அனைத்துக் கட்சி மாநாடு

*நெல்லையில் ஆட்சிமொழி மாநாடு நடத்தியதைத் தொடர்ந்து சென்னையில் ஒரு அனைத்துக் கட்சி ஆட்சி மொழி மாநாடு 20-12-1953 இல் அண்ணாமலை மன்றத்தில் நடத்தப் பெற்றது. முன்னாள் நீதிபதி கசபதி நாயகர் தலைமை ஏற்றார். காங்கிரஸ், தமிழரசுக் கட்சி, திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம், பொதுவுடைமைக் கட்சி மற்றும் இயக்கத் தலைவர்கள் பெரும் புலவர்கள், தனிப்பட்ட பெரியவர்கள் கலந்து கொண்டனர். இம் மாநாட்டின் வெற்றி தமிழ் ஆட்சிமொழி யாவதற்குரிய சமூகச் சூழ்நிலையைத் தோற்றுவித்தது எனில் மிகை யாகாது. இம் மாநாட்டினை நடத்துவதற்குச் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக ஆட்சியாளர் திரு வ. சுப்பையாப் பிள்ளை அவர்களும் இ. மு. சு அவர்களுடன் உறுதுணையாக இயங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.*

## நெல்லையில் ஆட்சிச் சொல்லாக்கக் குழு

*ஆட்சிச் சொல்லகராதியை உருவாக்கும் முதற்படியாக நெல்லையில் ஆட்சிச் சொல்லாக்கக் குழு முன்னாள் நீதிபதி திரு தா. கோமதிநாயகம் பிள்ளை அவர்கள் தலைமையில் அமைக்கப் பெற்றது. டாக்டர் D. E. அண்ணாமலைப் பிள்ளை, J. சக்கரபாணி நம்பியார், சு. இராமசாமிக் கோனார், K. வெங்கடசுப்பிரமணிய ஐயர் D. E. O. பேராம் ஆபிரகாம் அருளப்பன் உள்ளிட்ட 16 உறுப்பினர்களைக் கொண்டது நெல்லை ஆட்சி சொல்லாக்கக் குழு.*

## நெல்லையில் ஆட்சிச் சொல்லாக்கம்

*உட்குழு ஒன்று அமைக்கப்பட்டு, இ. மு. சு அவர்களும் பேரா. அருளப்பன் அவர்களும் சேர்ந்துதான் ஆட்சிச் சொல்லகராதியை உருவாக்கினர் எனலாம். பேரா. அருளப்பன் அவர்களின் உழைப்பும், பணியும் பெரிது.*

போற்றத்தக்கது. இ. மு. சு அவர்களுடன் இணைந்து செயலாற்றும் தகவும் அன்னாரிடம் இயல்பாக அமைந் திருந்தது. உட்குழு தயாரித்த ஆட்சிச் சொல்லகராதியைச் சொல்லாக்கக் குழு விவாதித்து ஏற்றுக் கொண்டது. அண்ணாமலைப் பல்கலைக் கழகம், இப் பணியினை ஆத ரிக்கும் முகத்தான் 5-11-1955 இல் ரூ. 250 நன்கொடை வழங்கியது. 5-12-1955 இல் நெல்லை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு R. V. ராமன் தலைமையில் வெளியிடப் பட்டது.

## சென்னையில் ஆட்சிச் சொல்லாக்கம்

இவ்வாறு வெளியிடப் பெற்ற ஆட்சிச் சொல் அக ராதியை மேலும் ஆராய்ந்து உறுதி செய்வதற்காகச் சென்னையில் திரு சு. வெங்கடேசுவரன் I. C. S. தலைமை யில் ஆட்சிச் சொல்லாக்கக் குழு அமைக்கப் பெற்றது. திரு மா. அனந்தநாராயணன் I. C. S. T. K. சங்கர வடிவேலுப் பிள்ளை I. A. S. நெ. து. சுந்தரவடிவேலு, M. R. பெருமாள் முதலியார், சொல்லின் செல்வர் R. P. சேதுப் பிள்ளை, பேரா. அ. முத்தையா, டாக்டர் S. G. மணவாள இராமானுஜம், R. V. கிருஷ்ணய்யர் உள்ளிட்ட 18 பேர் கொண்டது இக்குழு. இ. மு. சு அவர்கள் எல்லாக் குழுக்களுக்கும் உட்குழுக்களுக்கும் செயலராக இருந்தார்.

நெல்லைக் குழு உருவாக்கிய அகராதியின் படிகள், மாவட்ட ஆட்சித் தலைவர், மற்றும் மைய அரசு நிலையங் களுக்கும் கருத்தளித்தற்காக அனுப்பப் பெற்றன. தனிப் பட்டவர் அனுப்பும் சிறந்த சொற்களுக்கும் பரிசளிக்கப் பெறும் என்றும் அறிவிக்கப் பெற்றது.

## உட்குழுக்கள்

திரு மா. அனந்தநாராயணன் தலைமையில் R. V. கிருஷ்ணய்யர், K. கோதண்டபாணிப் பிள்ளை, இ. மு. சு ஆகியோர் அடங்கிய உட்குழு அமைக்கப் பெற்றது. இக்குழு

ஆட்சிச் சொல்லகராதி வெளியீடு, 21-12-1956 சென்னை இராசாசி மண்டபம்



1. இ. மு. சுப்பிரமணியபிள்ளை 2. S. வெங்கடேசுவரன், I.C.S. 3. முதலமைச்சர் கு. காமராசர்
4. T. M. நாராயணசாமிப்பிள்ளை 5. கல்வி அமைச்சர் சி. சுப்பிரமணியம் 6. அமைச்சர் எம். பக்தவத்சலம்

ஆட்சிச் சொல்லகராதிக் குழு, சென்னை



முதல் வரிசை: கோதண்டபாணிப்பிள்ளை, நெ. து சுந்தரவடிவேலு, இரா. பி. சேதுப்பிள்ளை, S. வெங்கடேசுவரன், மா. அனந்தநாராயணன், R.V. கிருஷ்ணய்யர், இ.மு. சுப்பிரமணியபிள்ளை

மேல் வரிசை: அ. முத்தையா, T. K. சங்கரவடிவேலுப்பிள்ளை, சொ. அமிர்தகணேச முதலியார், மு. குற்றாலிங்கம்பிள்ளை, N. விநாயகம்

தான் ஆட்சிச் சொற்களையும், அதற்கு நாடு முழுவதிலு மிருந்து வந்திருந்த திருத்தங்களையும் ஆராய்ந்து முடிவு செய்தது. அதற்குப்பின் பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை தலைமையில் T. K. சங்கர வடிவேலுப்பிள்ளை, சொ. அமுதகணேச முதலியார், K. கோதண்டபாணிப் பிள்ளை, இ. மு. சு அவர்கள் அடங்கிய உட்குழு அமைக்கப் பெற்று சொல்திறன் ஆய்ந்து இறுதி வடிவம் கொடுத்தது. 16-7-1957 ல் தொடங்கி 14-10-56 இப்பணிகள் முடிவடைந்தன. ஆட்சிச் சொற்கழகம் 21-10-1956 இல் கூடி உட்குழுவின் முடிவுகளை ஏற்றது.

## ஆட்சிச் சொல்லகராதி ஒப்படைப்பு விழா

21-12-1956 அன்று இராசாசி மண்டபத்தில் பெருந் தலைவர் காமராசரிடம் சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் திரு S. வெங்கடேசுவரன் ஆட்சிச் சொல்லகராதியை ஒப்படைத்தார். திரு T. M. நாராயண சாமிப் பிள்ளை தலைமை ஏற்றார். கல்வி அமைச்சர் C. சுப்பிரமணியமும் உள்துறை அமைச்சர் மீ. பக்தவச்சல மும் பங்கேற்றனர்.

இராசாசி மண்டபத்தில் கூடி இருந்தவர்களே பல துறைகளிலும் தலைமை வாய்ந்தவர்கள். செட்டிநாட்டு அரசர் முத்தையாச் செட்டியார், M. V. சுப்பிரமணியம் I. C. S. T. N. S. ராகவன் I. C. S. நீதிபதி கைலாசம் சௌந்தரா கைலாசம் அம்மையார் முதலியோர் வந்திருந் தனர். விழாவிற்கு வருகை புரிந்தோர் பட்டியலே இப்படி அமைந்துள்ளது. இப்பொழுதெல்லாம் விழாவிற்குப் பங்கேற்க அழைக்கப்பட்டவர்களைத் தவிர வேறு பெரும் புள்ளிகள் யாரும் வருவதில்லை.

## பொதுவாழ்வின் பொற்காலம்

1953-60 வரை உள்ள காலத்தினை இ. மு. சு அவர் களின் பொதுவாழ்வின் பொற்காலம் எனலாம். ஆட்சி

மொழி மாநாடு தொடங்கி 1959 இல் ஆசிரியர் கல்லூரிச் சொற்கள் வெளியிட்டது வரை புகழேணியின் உச்ச கட்டத்திலிருந்தார். ஆட்சிச் சொல்லகராதி வெளியீட்டு விழா அவர் வாழ்வின் சிறப்புக்களின் உயர் எல்லை எனலாம்.

பின்னர் திரு மீ. பக்தவத்சலம் அவர்கள் முதலமைச்ச ராகவும், திரு மா. அனந்தநாராயணன் உயர்நீதி மன்றத் தில் தலைமை நீதிபதியாகவும் திரு S. வெங்கடேசுவரன் அவர்கள் சில மாதங்கள் தலைமைச் செயலராகவும் இருந்த காலத்தில், இ. மு. சு அவர்களின் செல்வாக்கு கொடிகட்டிப் பறந்தது எனலாம். நெல்லை மாவட்ட ஆட்சித் தலை வர்கள் மாவட்ட நீதிபதிகள் மாறுதலாகிச் செல்லும்போது இ. மு. சு அவர்களிடம் ஆசிபெற்று விடைபெற்றுச் சென் றார்கள். சென்னை கோட்டையில் தலைமைச் செயலகத் தில் அரசுத்துறைச் செயலர்கள் வரவேற்று அவர் சொல் லுக்கு மதிப்புக் கொடுத்து நடந்தறார்கள்.

## பயன் பெற்றோர்

இ.மு.சு அவர்களின் செல்வாக்கினால் பயன் பெற்றோர் பற்பலர். இ.மு.சு அவர்கள் செயல்படும் முறை தனியானது அமைச்சர்களையும், உயர் அதிகாரிகளையும், தனிப்பட்ட சிபார்சுகளுக்காகத் தொல்லை கொடுக்கமாட்டார். தமிழ்ப் பணி பற்றி மட்டுமே தம்மிடம் பேசுவாரென்று முதலமைச்சர் பக்தவத்சலம் அவர்கள் ஒரு கூட்டத்தில் குறிப்பிட்டார். யார் அந்தப் பணியை முடிக்கும் அதிகாரம் உடையவரோ அவரிடம்—துணை இயக்குநர், துணைச் செயலர் முதல் மாவட்டக் கல்வி அதிகாரி, தாசில்தார் ஈறாக—சென்று விளக்கிக் கூறுவார். பெரும்பாலும் வெற்றி யன்றி வேறு பெற்றதில்லை.

## அறுந்த தாலியை ஒட்டவைப்பார்

இ. மு. சு அவர்களின் திறமையைப் பற்றி அவரது மனைவியார் ஈசுர வடிவம்மையார், 'அறுந்த

தாலியை ஒட்ட வைப்பார்' என்று கூறுவார். வேலையை விட்டு விட்டவர்களுக்கு கூட மறுபடி அவ் வேலையை வாங்கிக் கொடுப்பார் என்பது பொருள். வருவாய்த்துறையில் ஒரு எழுத்தர் வெள்ளையன் என்பவர் ஏதோ ஒரு நினைவில் வேலையை ராஜினாமா செய்து விட்டார். அவரது ராஜினாமாவும் ஒப்புக் கொள்ளப்பட்டு விட்டது. அதற்கு ஓராண்டு கழித்து மீண்டும் அந்த வேலையை வாங்கித் தரவேண்டும் என்றார். M. P. S. C., Revenue Board இங்கெல்லாம் அலைந்து மீண்டும் அவ் வேலையை வாங்கிக் கொடுத்தார்.

## தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றம் (Tamil Development and Research council)

அமைச்சர் சி. சுப்பிரமணியம் தம் தலைமையில் செயின்ட்ஜார்ஜ் கோட்டையில் தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றம் ஒன்றினை 10-4-1959 அன்று அமைத்தார். அதில் இ. மு. சு. அவர்களையும் உறுப்பினராக நியமித்தார். மேலும் சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கப் புரவலராக இருக்கலாமா என்று இந்திய அரசுத் துணைத் தலைவர் (Vice President) கேட்டபொழுது, துணைத்தலைவர் புரவலராக இருக்கத் தக்க நிறுவனம், (Itis a fit organisation for the vice pesidant to be Its Patron) என்று தம் கைப்படக் குறிப்பு வரைந்தார். இச் செய்தியைத் தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றச் செயலர் திரு கன்னையன் குறிப்பிட்டுள்ளார்.

## தென் மொழிகளின் புத்தக டிரஸ்ட்

தென்னிந்திய மொழிகளின் வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும் பொருட்டு மைய அரசு தென்மொழிகளின் புத்தக டிரஸ்ட் என்ற நிறுவனத்தை ஏற்படுத்தியது. அந்நிறுவனத்தின் தமிழ்ப்பிரிவின் தலைவராகச் சொல்லின் செல்வர் பேராசிரியர் சேதுப்பிள்ளை இருந்தார். இந்நிறு

வனத்திலும் இ. மு. சு. அவர்கள் உறுப்பினராக நியமிக்கப் பட்டார்.

வேதநாயகம் பிள்ளை எழுதிய 'பிரதாப முதலியார் சரித்திரம்' என்னும் புதினத்தைச் சுருக்கி, மொழிநடையை மாற்றாது இ. மு. சு. அவர்கள் தென் மொழிகளின் புத்தக டிரஸ்ட் வாயிலாக வெளியிட்டார்.

## பேரா. ரா. பி. சேதுப்பிள்ளையுடன்

ஆட்சிச் சொல்லாக்கக் குழுவிலும், தென் மொழிகளின் புத்தக டிரஸ்டிலும் பேரா. சேதுப்பிள்ளை அவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டார் இ. மு. சு. அவர்கள். சேதுப்பிள்ளை அவர்களை வாழ்த்தி இ. மு. சு. அவர்கள் பாடிய வெண்பா வருமாறு;

சேதுவெனும் பேருடையாய் செம்மையே மிக்குடையாய்
யாதும் தமிழ்க்கென்றும் எண்ணுடையாய்—ஓது தமிழ்ப்
பொங்கல்நாள் பொங்கிப் பொலிந்தோங்க வாழ்த்தினோம்
எங்கள் தலைவ இனிது.

இவ்வாறு மனந்திறந்து யாரையும் எளிதில் வாழ்த்து வது இ. மு. சு. அவர்களின் இயல்பன்று. அவர் உள்ளத்தில் உண்மையாக ஓரிடம் பிடித்தமையால்தான் மனதார வாழ்த்தியுள்ளார்.

## தமிழகப் புலவர் குழுவில்

திருச்சியில் முத்தமிழ்க்காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் தமிழகப் புலவர் குழுவை அமைத்து, மரபுவழிப் புலவர் என்னும் முறையில் இ. மு. சு. அவர்களை உறுப்பி னராக்கினார். தொடக்க நாளிலிருந்து, மறையும் நாளுக்கு ஓராண்டுக்கு முன்பு வரை (1974) தமிழகப் புலவர் குழுவின் அனைத்துக் கூட்டங்களுக்கும் தவறாது வருகை புரிந்தவர் இ. மு. சு. அவர்கள், உதகமண்டலத்தில் நடைபெற்ற புலவர் குழுக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார்.

## பாவேந்தர் பாரதிதாசனுடன்;

தமிழகப் புலவர் குழுவில் பாவேந்தர் பாரதிதாசனா ருடன் மீண்டும் தொடர்புகொள்ளும் வாய்ப்பு இ.மு.சு அவர் களுக்குக் கிட்டியது. சுயமரியாதை இயக்கத்தில் இ.மு.சு அவர்கள் ஆற்றிய பங்குப்பணியை பாரதிதாசன் ஏற்கனவே நான்கு விருத்தப்பாக்களால் பலபடப் பாராட்டியுள்ளார். தமிழகப் புலவர் குழுவில் ஒரு சமயம் வெற்றிடம் ஒன்று ஏற்பட்டது. இ.மு.சு. அவர்கள் அவ்விடத்திற்கு பேரா. அருளப்பன் அவர்களை முன்மொழிந்தார். வேறொரு வரைக் கொண்டுவர எண்ணிய தமிழகப் புலவர் குழு உறுப்பினர்களில் சிலர் இ.மு.சு. அவர்கள் முன்மொழிந் ததை மறுத்துரைத்தனர். அப்பொழுது அங்கிருந்த பாரதிதாசன் சீற்றம் கொண்டு உறுப்பினர்களை நோக்கி 'என்ன நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்? தமிழய்யா பேச்சுக்கு மறு பேச்சு கூடாது' என்று வன்மையாகக் கண் டித்தார். உடன் சலசலப்பு அடங்கி இ.மு.சு. அவர்களது கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டது.

## ஆசிரியர் கல்லூரிச் சொல்லாக்கம்

ஆட்சிச் சொல்லகராதியை உருவாக்கித் தமிழக அரசிடம் ஒப்படைத்த பின்னர் தாய்மொழியின் வழியாக ஆசிரியர் கல்லூரிகளில் பாடங்களைக் கற்பிப்பதற்கு ஆசிரியர் கல்லூரிக்கலைச் சொற்கள் தேவைப்பட்டன. சைதை ஆசிரியர் கல்லூரி முதல்வர் மு.ரா. பெருமாள் முதலியார் அவர்களும் தாய்மொழியில் ஆசிரியர் கல்லூரிப் பாடங்களை நடத்தவேண்டும் என்பதிலும், அதற்குரிய கலைச் சொற்பட்டியலைப் படைக்கவேண்டும் என்பதிலும் பேரார்வம் கொண்டிருந்தார். இவ்விருவரின் முயற்சியால் பொதுக் கல்வி இயக்குநர் திரு நெ.து. சுந்தரவடிவேலு அவர்கள் தலைமையில் ஆசிரியர் கல்லூரிச் சொல்லாக்கக் குழு அமைக்கப்பட்டது. அக்குழுவிற்கு மு.ரா. பெருமாள் முதலியார் அவர்கள் துணைத் தலைவராகவும், இ.மு.சு

செயலராகவும் ஏனைய ஆசிரியர் கல்லூரிப் பேராசிரியர்கள் உறுப்பினர்களாகவும் இருந்தனர். 21-6-1957 முதல் 31-3-1957 வரை நாள்தோறும் சைதாப்பேட்டை ஆசிரியர் கல்லூரியில் கூடி ஆசிரியர் கல்லூரிக் கலைச் சொற்களை உருவாக்கியது. அந்நூல் 21-5-1958ல் திருநெல்வேலியில் புனிதசவேரியர் கல்லூரி முதல்வர் சூசையடிகளார் தலைமையில் ம. தி. தா. இந்துக் கல்லூரி முதல்வர் திரு க. ச. கணபதிப் பிள்ளை அவர்களால் வெளியிடப்பட்டது. அந்நூலின் படிகள் எல்லா ஆசிரியர் கல்லூரிகளுக்கும் அனுப்பப்பட்டுத் திருத்தங்கள் வரவேற்கப்பட்டன.

மீண்டும் ஆசிரியர் கல்லூரிச் சொல்லாக்கக் குழு 26-3-58 முதல் 24-12-58 வரை கூடி, திருத்தங்களை ஆராய்ந்து இறுதி வடிவம் கொடுத்தது.

பவமரங்கண்டதச்சன்

ஆசிரியர் கல்லூரிக் கலைச் சொல்லாக்கக் குழு மாநிலப் பொதுக்கல்வி இயக்குநர் திரு நெ. து. சுந்தரவடிவேலு அவர்கள் தலைமையில் கூடி சொல்லாய்ந்தபோது ஒரு சுவையான நிகழ்ச்சி நடந்தது. "Jack of all trades but master of none" என்ற ஆங்கில மரபுத் தொடருக்கு நிகரான தமிழ் கண்டுபிடிப்பதற்கு அங்கு குழுமியிருந்த பேராசிரியர்கள் பல்லாற்றானும் முயன்றனர். பல யோசனைகளையும் ஆராய்ந்து கொண்டிருக்கும் பொழுது இ. மு. சு அவர்கள் 'பல மரங்கண்ட தச்சன் ஒரு மரமும் வெட்டமாட்டான்' என்னும் தமிழ்ப் பழமொழிதான் இந்த ஆங்கிலத் தொடருக்கு நிகரானது, என்று கூறினார். குழுத் தலைவர் நெ. து. சுந்தரவடிவேலு இதனைப் பெரிதும் வரவேற்று மகிழ்ச்சி தெரிவித்தார். ஏனைய உறுப்பினர்களும் மனதாரப் பாராட்டினர்.

கருத்து மோதல்கள்;

உயர்நிலைப் பள்ளிகளுக்குரிய கலைச் சொல்லாக்கக் குழுவில் இ. மு. சு. அவர்கள் பேராசிரியர் வையாபுரிப்

பிள்ளையுடன் கருத்து மாறுபட்டு மோதியதை முன்னர் கண்டோம். ஆட்சிச் சொல்லாக்கக் குழுவில் தனித் தமிழ்ச் சொற்களையே பெரிதும் பயன்படுத்த வேண்டும் என்று திரு K. கோதண்டபாணி அவர்களுடன் வாதிட்டு மோதிவாந்தார். ஆசிரியர் கல்லூரிச் சொல்லாக்கக் குழுவில் பேராசிரியர் பார்த்தசாரதி ஐயங்காருடன் தனித் தமிழ்ச் சொற்களுக்காகச் சண்டையிட்டு வந்தார். சில சொற்களில் தன் கருத்துக்களையே வலியுறுத்துவார், அதற்காக மற்றவர் இடத்தில் பிணங்கவும் தயங்க மாட்டார்.

## ஆசிரியர் கல்லூரிக் கலைச் சொற்கள் வெளியீடு

4-2-1959இல் தமிழக ஆளுநர் விஷ்ணுராம் மேதி தலைமையில், கல்வி அமைச்சர் திரு சி. சுப்பிரமணியம், இறுதி வடிவம் கொடுக்கப்பட்ட ஆசிரியர் கல்லூரிக் கலைச் சொற்களை வெளியிட்டார். உள்துறை அமைச்சர் எம். பக்தவச்சலம் அவர்கள் வாழ்த்துரை வழங்கிச் சிறப்பித்தார். பேராசிரியர் அருளப்பன் அவர்களுக்குத் தமிழ்ப் பெரும் புலவர் என்னும் செப்புப் பட்டயம் வழங்கப் பட்டது. ஆளுநர் அவர்கள் ஆட்சிச் சொற்களுக்கு மிகச் சிறந்த திருத்தங்களை வழங்கிய திரு ஆர். வி. கிருஷ்ணய்யர் அவர்களுக்கும், பேராசிரியர் ஞா. தேவநேயப் பாவாணர் அவர்களுக்கும், டெல்லி அரசாங்க செய்தித் துறையைச் சார்ந்த திரு K. S. ஜம்புநாதன் அவர்களுக்கும் பரிசுகள் வழங்கினார்.

ஆசிரியர் கல்லூரிச் சொற்களுக்குச் சீரிய திருத்தங்கள் செய்திய திருப்பராய்த்துறை விவேகானந்தர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிக்கும், தூத்துக்குடி வ. உ. சி. ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிக்கும், ஆட்சிச் சொற்களை உருவாக்குவதில் பேராசிரியர் அருளப்பன் அவர்களுக்கும் சட்டசபை முன்னாள் செயலாளர் திரு R. V. கிருஷ்ணயருக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன. அதுபோல ஆசிரியர் கல்லூரிச்

சொற்களைப் படைப்பதில் திரு பெருமாள் முதலியார் அவர்களும், திரு. கி. இரா. அப்புளாச்சாரியார் அவர்களும் ஆற்றிய பங்குப் பணி மறத்தற்குரியதன்று.

## வெள்ளிவிழா நிகழ்ச்சிகள்

1934 இல் இ. மு. சு. அவர்களால் தோற்றுவிக்கப்பட்ட சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் 1959 உடன் 25 ஆண்டுகளைக் கடந்து வெள்ளிவிழாவை நோக்கி வெற்றி நடை போட்டது. சங்கத்தின் வெள்ளிவிழாவைக் கொண்டாடுவதற்குத் தகுந்த ஏற்பாடுகளை இ. மு. சு அவர்கள் மேற்கொண்டார்.

## சென்னையில் வெள்ளிவிழா:

24, 25-8-1960இல் இரண்டு நாட்களிலும் முதலமைச்சர் திருகாமராசர் தொடங்கி வைக்க, அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் திரு. டி. எம் நாராயணசாமிப் பிள்ளை அவர்கள் தலைமையில் வெள்ளி விழா நடைபெற்றது. அவ்வமயம் திருமுருகாற்றுப்படை எளிய விளக்கவுரை சொல்லடைவு, பொருளடைவு, (Lexicon and concordance) என்றும் நூல் அறநிலைய ஆணையர் உத்தண்டராமபிள்ளை அவர்களால் வெளியிடப்பட்டது. மறுநாள் 'வளரும் தமிழ்' என்னும் தலைப்பில் நீதிபதி மா. அனந்த நாராயணன், டாக்டர் அ. சிதம்பரநாதன் செட்டியார், திரு மு. ரா பெருமாள் முதலியார், ஆகிய மூவர் ஆய்வுரைகள் நிகழ்த்தினர். இராஜாஜி மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பார்வையாளராகக் கல்வி நிதி அமைச்சர் சி. சுப்பிரமணியம், நீதிபதி வே. சுப்பிரமணிய நாடார், பேராசிரியர் அ.மு. பரமசிவானந்தம் போன்றஅரும் பெரும் அறிஞர்கள் வந்திருந்தனர். இது இவ்வெள்ளிவிழான் வெற்றிச் சிறப்பைத்தெற்றெனப் புலப்படுத்துகிறது.

## சங்கரன் கோவிலில்

செப்டம்பர் 1960 இல் சங்கரன்கோவிலில் நாட்டாண்மைக் கழக உயர்நிலைப்பள்ளிகள் (ஆடவர், மகளிர்) இணைந்து சென்னை மாகாணத் தமிழ்ச் சங்க வெள்ளி விழாவிற்கு ஏற்பாடு செய்திருந்தன. திரு சு. வெங்கடேசுவரன் I. C. S. அரசாங்கத் தலைமைச் செயலர் தலைமை வகித்தார். சங்கத்தின் பணிகளை இ. மு. சு அவர்கள் விரித்துரைத்தார். முள்ளிக்குளம் இராசாமிக் கோனார் புளியங்குடி சங்கரபாண்டியன் பிள்ளை M. P. சங்கப் புலவர் மாணிக்க வாசகம் பிள்ளை, சங்கரன் கோவில் அ. மாணிக்க வாசகம் செட்டியார் முதலியோர் வருகை புரிந்தனர். விழா நடைபெற்றது கோமதி சங்கர், திரையரங்கில்—அதன் உரிமையாளர் திரு S. குற்றாலிங்கம் துணையுடன் நடைபெற்றது.

## திருநெல்வேலியில்

15-1-65 அன்று திருநெல்வேலியில் கல்வி அமைச்சர் சி. சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் முதற்பகுதியை தூத்துக்குடி கல்லூரி முதல்வர் பேராசிரியர் அ. சீனிவாசராகவன் அவர்கள் வெளியிட்டார். மாவட்ட நீதிபதி செ. அரங்கராசன் வாழ்த்துரை வழங்கினார். 26-11-60 இல் வருதுநகர் செந்தில் குமாரநாடார் கல்லூரியிலும், 23-5-61 இல் சைதை ஆசிரியர் கல்லூரியிலும் சங்க வெள்ளி விழாக்கள் நடைபெற்றன.

## சங்கத்தின் நிதி நிலை

வெள்ளி விழாக் காணும் வரை சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம்பெரும்பாலும் பொதுமக்கள் ஆதரவில்தான் நடைபெற்றது. ஆண்டுக் கட்டணம் ரூபாய் 10 என்றும் ஆயுள் உறுப்பினர் கட்டணம் ரூபாய் 100 என்றும் அவ்வப் போது நிதி வசூலித்துச் சங்கச் செலவுகள் நடைபெற்றன.

உயர்நிலைப் பள்ளிகளுக்குரிய கலைச் சொற்கள் வெளியிடுவதற்குச் சென்னை, அண்ணாமலை, திருவிதாங் கூர் பல்கலைக்கழகங்கள் நிதி உதவி புரிந்தன. ஆட்சிச் சொற்கள் வெளியிடுவதற்கு அண்ணாமலைப் பல்கலைக் கழகமும், தமிழக அரசும் உதவி புரிந்தன. ஆசிரியர் கல்லூரிச் சொற்கள் வெளியீட்டுச் செலவைத் தமிழக அரசு ஏற்றது.

## திரு எம். ஜி. ஆருடன் சந்திப்பு

இவ்வாறு நிதி வசூல் செய்யும்பொழுது 1959 இல் இ. மு. சு அவர்கள் எம். ஜி. ஆரை அவரது லாயிட்ஸ்ரோடு இல்லத்தில் சந்தித்தார். அவர் போன சமயம் ஒரு திருமண வீட்டிற்குச் சென்று எம். ஜி. ஆர். திரும்பினார். இ. மு. சு. அவர்கள் காத்திருப்பதைக் கண்டு 'கொஞ்சம் முன்னர் வந்திருந்தால் உங்களையும் திருமண வீட்டிற்கு அழைத்துச் சென்றிருப்பேன். நான் சென்றதும் நீங்கள் நடத்துவது போன்ற ஒரு தமிழ்த் திருமணம் தான் 'என்றார். அப்பொழுது சென்னை மாநகராட்சித் தேர்தல்களில் திராவிட முன்னேற்றக் கழகம் முதன் முறையாகப் பெற்ற வெற்றிச் செய்திகள் அவ்வப்போது தொலைபேசி வழியாக எம். ஜி. ஆருக்கு வந்து கொண்டிருந்தன. மகிழ்ச்சியான மனநிலையில் இருந்தார். அந்நேரம் கவிஞர் புத்தனேரி சுப்பிரமணியன் அவர்கள் உள்ளே நுழைந்தார். ரூ 100 நன்கொடை தந்து சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தின் ஆயுள் உறுப்பினராக வேண்டும் என்று திரு எம். ஜி. ஆருக்கு இ. மு. சு அவர்கள் வேண்டுகோள் விடுத்தார். புத்தனேரி சுப்பிரமணியம் அவர்களும் சங்கத்தைப் புகழ்ந்து பேசி ஆயுள் உறுப்பினராக வேண்டும் என்று திரு எம். ஜி. ஆரை வேண்டிக் கொண்டார். அதற்கு எம். ஜி. ஆர் அவர்கள் நீங்கள் உறுப்பினராக இருக்கிறீர்களா? என்று புத்தனேரி சுப்பிரமணியத்தைக் கேட்டார். அவர் இல்லை என்று மறுமொழி கூறவே என்னை ஆயுள் உறுப்பினராகவும்,

புத்தனேரியை உறுப்பினராகவும் சேர்த்துக் கொள்ளுங்கள் என்று சொல்லி அவர் அணிந்திருந்த ஜிப்பா பையில் கைவிட்டு ரூபாய் 110 யை எடுத்துச் கொடுத்தார். ஆனால் வெள்ளிவிழாக் கண்ட பின்பு நிதி வசூல் செய்வதை நிறுத்திவிட்டார். மைய அரசும், மாநில அரசும் ஆண்டு தோறும் மானியங்கள் வழங்க முன்வந்தன.

## நெல்லையில் சங்க அலுவலகம் (1960 முதல் 1968 வரை)

சங்கரன் கோவில் இல்லத்தில் இயங்கி வந்த சங்க அலுவலகம் 1959க்குப் பின் நெல்லைக்கு மாற்றப்பட்டது. முதலில் கொகிரகுளம் சுடலைமுத்துப் பிள்ளை அவர்கள் இல்லத்திலும் பின்னர் சொக்கலிங்கம் முடுக்குத் தெருவிலும், பின்னர் கீழரத வீதியிலும் இறுதியாக தெற்குப்புதுத் தெருவிலும் சங்க அலுவலகம் இயங்கி வந்தது. அலுவலகத்திற்கு தவத்திரு. குன்றக்குடி அடிகளார், சிலம்புச்செல்வர் ம. பொ. சிவஞானம் போன்ற பல அறிஞர்கள் வருகை புரிந்தனர். மாவட்ட ஆட்சித் தலைவரும், மாவட்டக் கல்வி அதிகாரி அவ்ர்களும் பதவி வழி உறுப்பினர்களாகச் சங்கக் கூட்டங்களில் கலந்து கொண்டனர். தமிழகத்தின் முதல் தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநராக திரு வே. கார்த்திகேயன் I. A. S. அவர்கள் சங்க அலுவலகத்திற்கு வருகை தந்த பொழுது அவருக்கு இனிய வரவேற்பும், விருந்தும் அளிக்கப் பெற்றன.

## 'தமிழ்ச்சங்கத் தெரு'

சொக்கலிங்கம் முடுக்குத் தெரு திருநெல்வேலியில் வேசியர் வாழும் தெருவாக இருந்தது. சென்னை மாகாணத் தமிழ்ச் சங்க அலுவலகம் அங்கு இயங்கத் தொடங்கிய பின்னர் அத் தெருவைத் தமிழ்ச் சங்கத் தெரு என மக்கள் அழைத்தனர். தெருவும் திருந்தியது. திருநெல்வேலி நகராட்சி மன்றமும் இம் மாறுதலை

விரும்பி ஏற்று, சொக்கலிங்கம் முடுக்குத் தெரு என்ற பெயருக்குப் பதிலாக தமிழ்ச் சங்கத் தெரு என்ற பெயரை ஏற்றுத் தீர்மானம் இயற்றியது. இன்றும் அவ்வாறே 'தமிழ்ச் சங்கத் தெரு' என மாற்றப் பெற்று வழங்கி வருகிறது.

## இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் வரலாறு

சங்க அலுவலகம் நெல்லைக்கு மாறிய பிறகு முழுக்க முழுக்க நூல் வெளியிடும் பணியில் இறங்கியது. 'இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்' என்னும் தலைப்பில் பன்னிரண்டு பகுதிகளாக இந்நாள் இலக்கிய வரலாற்றை தொகுத்துரைப்பதற்காகத் திட்டம் தீட்டப்பட்டது. இங்கே நூற்றாண்டு என்று குறிப்பிடுவது வள்ளுவர் இருபதாம் நூற்றாண்டாகும். கி. பி. 1869 லிருந்து 1968 வரை உள்ள ஆண்டுக் காலமாகும். முதல் எட்டுப் பகுதிகள் இ. மு. சு அவர்களால் இயற்றி உயர்மன்ற நீதிபதிகளின் முன்னுரையுடன் வெளியிடப்பெற்றன. 9ஆம் பகுதி அச்சாகி வெளியிடப்படவில்லை. பத்தாம் பகுதி கையெழுத்துப் பிரதியாக உள்ளது.

## மாவட்டக் கோயில் வரலாறுகள்

திரு எம். பக்தவச்சலம் அவர்கள் முதலமைச்சர் ஆன பிறகு தமிழகத்தில் பக்தி இயக்கம் மறுமலர்ச்சி அடைந்தது. இச் சூழ்நிலையில் மாவட்டக் கோயில் வரலாறு தயாரிக்கும் திட்டத்தை இ. மு. சு அவர்கள் அரசின் முன் வைத்தார். இத்திட்டத்தின் கீழ் நெல்லை மாவட்டக் கோயில் வரலாற்றினையும், சென்னை மாவட்டக் கோயில் வரலாற்றினையும், இ. மு. சு அவர்கள் இயற்றி வெளியிட்டார்.

## சங்க இலக்கியம், திருவாசகம், நாலடியார், திருக்குறள் உரையாக்கம்;

விரிவான திட்டங்கள் மாநில அரசுக்கும், மைய அரசுக்கும் அனுப்பப்பட்டன. பல புலவர்களின் கூட்டு முயற்சியாக உரையாக்கங்கள் நடைபெற்று வந்தன. புலவர் வே மாணிக்கவாசகம் பிள்ளை, பேராசிரியர் அருளப்பன், புலவர் பு. சி புன்னைவனநாத முதலியார் ஆகியோர் திருவாசக உரைகாண்பதிலும், நாலடியார் உரையிலும் ஈடுபட்டனர். திருவாசக உரை இரண்டு பகுதிகள் வெளிவந்துள்ளன. சங்க இலக்கிய உரையாக் கத்தில் விருதுநகர்க் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் ந. சேதுரகுநாதன், ஸ்ரீவைகுண்டம் கலைக் கல்லூரி பேராசிரியர்கள், சு. நடராசன், தே. ஆண்டியப்பன் உயர் நிலைப்பள்ளித் தமிழாசிரியர் திரு வ. பரமசிவம்பிள்ளை, திரு க. சுப்பிரமணியம் போன்றோர்பகுதி நேரப் பணியாக ஈடுபட்டு வந்தனர்.

## தமிழக அரசின் பெருங்கொடை:

மத்திய, மாநில அரசுகள் சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்திற்குக் கொடை வழங்கும்பொழுது பொதுமக்க ளிடம் இருந்து ஒரு பகுதி நன்கொடையாக வசூலிக்கப்பட வேண்டும் என்று நிபந்தனை விதித்தன. மாதந்தோறும் சம்பளம் கொடுப்பதற்கு நன்கொடையாக வசூலிப்பதற்கு முடியாத காரியம் ஆதலால் புலவர்களே தமது ஊதியத்தி லிருந்து ஒரு பகுதியை நன்கொடையாக வழங்கினார்கள். இவ்வாறு புலவர்கள் ரூபாய் 24,000 ஐ திருப்பிக் கொடுக்க வேண்டுமென்று திரு மீ. பக்தவத்சலம் அவர்களுக்கு திரு S. வெங்கடேசுவரன் தலைமையில் ஒரு தூதுக் குழுவை அனுப்பியது. முதலமைச்சர் சங்கத்தின் கோரிக் கையை ஏற்று ரூபாய் 24,000 மானியம்வழங்கினார்.

## பணம் சேர்ந்தது தொல்லை பிறந்தது

தமிழ்நாட்டில் எல்லாப் பொது நிறுவனத்தின் வரலாற்றையும் பார்த்தால் மக்களை நம்பி நன்கொடை வசூலித்து, வரவும் செலவும் சரிக்கட்ட முடியாமல் திணறுகின்ற வரையில் சங்கங்கள் நன்கு இயங்குகின்றன. சங்கத்தில் பணம் சேர்த்துவிட்டது என்றால் தலைவர், செயலர் முதலிய பதவிகளுக்குக் கடும் போட்டி ஏற்பட்டுச் சங்கங்கள் செயலிழக்கின்றன. இதே நிலைதான் சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்திற்கும் ஏற்பட்டது. பணத்தைப் புலவர்களுக்குத் திருப்பிக் கொடுப்பதா? அல்லது சங்க அலுவலகத்திற்கு வீடு வாங்குவதா என்று பிரச்சனை எழுந்தது. செயற் குழுவில் இ. மு. சு அவர்கள் உட்பட பலரும் வீடு வாங்குவதே சிறந்ததே என்றும் முடிவு செய்தனர்.

## வீடு வாங்கும் முயற்சி, விளைந்தது வினை

இ. மு. சு அவர்கள் திருநெல்வேலியில் இல்லாத நேரத்தில் சங்கத் துணைத் தலைவர் திரு. மு. சோமசுந்தரம் பிள்ளை அவர்களும் பொருளாளர் மேடை தளவாய் ராமலிங்க முதலியார் அவர்களும் சேர்ந்து ஒரு வீட்டைப் பேசி முடித்து கிரயப் பத்திரம் வாங்குவதற்கு ரூபாய் 2800 பெறுமான பத்திரங்களையும் வாங்கிவிட்டனர். இ. மு. சு அவர்கள் இதில் மறுப்பு ஒன்றும் சொல்வதற்கு இல்லையென்று அவர்கள் நம்பி நல்லெண்ணத்துடன் இம் முயற்சியில் ஈடுபட்டனர். ஆனால் திருநெல்வேலிக்குத் திரும்பிவந்த இ. மு. சு அவர்கள் தம்மைப் புறக்கணித்து விட்டதாக நினைத்து 'அந்த வீட்டை அரசாங்கப் பொறியாளர் வந்து நன்னிலைச் சான்றிதழ் அளித்தால்தான் வாங்கவேண்டும்' என்று சொல்லிவிட்டார். பார்வையிட்ட பொறியாளரோ வீடு மிகவும் பழையது, வாங்கத்தக்கதன்று என்று சான்றளித்து விட்டார். இது கண்டு லயன் அதிபர் சோமசுந்தரம் பிள்ளை சிற்றமடைந்தார்.

## சீற்றமும் செற்றமும்:

இ. மு. சு. அவர்களுக்கும், சோமசுந்தரம் பிள்ளை அவர்களுக்கும் தனிப்பட்ட முரண்பாடு வளர்ந்தது. இ. மு. சு. அவர்களின்மீது என்ன குறைபாடு கண்டு பிடிக்கலாம் என்று ஆராய்ந்து, சங்கக் கணக்கு வழக்குகளைச் சரியாக வைத்திருக்கவில்லை என்றும், எழுத்தாளர்களாக இளம் பெண்களை வேலைக்கு வைத்திருக்கிறார் என்றும் குற்றச் சாட்டுகள் மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், அரசாங்கத்திற்கும், புலனாய்வுத் துறைக்கும் அனுப்பப்பட்டன. புலனாய்வுத் துறையினர் வந்து விசாரித்து குற்றச்சாட்டுகள் ஆதாரமில்லை என்று அரசாங்கத்திற்கு அறிக்கை அனுப்பினர். அரசாங்கம் சங்கத் தலைவர் S. வெங்கடேசன் அவர்கள் கருத்தைக் கேட்டது. திரு S. வெங்கடேசுவரன் அவர்கள் மாநிலக் கணக்கரின் மூலமாக சங்கக் கணக்குகளைத் தணிக்கை செய்யலாம் என்று ஆலோசனை கூறினார்.

## தணிக்கை அறிக்கை

திரு எஸ். வெங்கடேசுவரன் அவர்களின் ஆலோசனையை ஏற்றுத் தமிழக அரசு நால்வர் அடங்கிய தணிக்கைக் குழுவை அனுப்பியது. 29-12-1967 முதல் 1-1-1968 முடிய அக் குழுவின் தணிக்கை நடைபெற்றது. தணிக்கை அறிக்கையையும் (ஆங்கிலத்தில்) அதற்குரிய தம் விரிவான பதிலுரைகளையும் அச்சிட்டுத் துண்டுப்பிரசுரமாக இ.மு.சு. அவர்கள் வெளியிட்டார்.

## இரட்டைச் சம்பளம்

தணிக்கைக் குழு சுட்டுக் காட்டியவற்றுள் பெரும்பாலானவை பற்றுச் சீட்டுகள் உரிய முறைப்படி வைக்கப்படவில்லை என்பதும் புலவர்களுக்கு இரட்டைச் சம்பளம் கொடுக்கப் பெற்றுள்ளது என்பதும் பொதுமக்கள் ...

கொடைக்குப் பதிலாக புலவர் நன்கொடை பெறப் பட்டுள்ளது என்பதும்தான். ரூ.44,000 வரைக்கான தொகை களை ஆட்சேபித்து (held under objection) அவற்றைத் திரும்பப்பெறவேண்டுமென்றும் சுட்டப்பெற்றிருந்தது.

## இ. மு. சு அவர்கள் பதிலுரை

திருவாசக விரிவுரையாக்கம், சங்க இலக்கியத் தெளி வுரையாக்கம் என்றும் இரு திட்டங்களிலும் ஒரே புலவர் கள் ஈடுபட்டிருந்தனர். அப்புலவர்களுக்கு இரு வேறு பணிகளுக்காக மாதந்தோறும் தொகைகள் [சம்பளம் அன்று சன்மானம்) வழங்கப் பெற்றன. அதிலும் பெரும் பகுதியைப் பொதுமக்கள் நன்கொடைக்குப் பதிலாகப் புலவர்கள் சங்கத்திற்கு வழங்கியுள்ளனர். எனவே புலவர்களுக்குத்தான் அரசும், சங்கமும் தரவேண்டிய தொகைகள் உள்ளன என்பது இ. மு. சு அவர்களின் வாதம். மேலும் முதலமைச்சர் மீ. பக்தவச்சலம் அவர்கள் வழங்கிய ரூ 24, 000 புலவர்களுக்குத் திருப்பித் தருவதற் காக வழங்கப்பட்டது—கட்டிடம் கட்டாததால் அவர் களுக்கு மீண்டும் சங்கம் திரும்பக் கொடுக்கத் தவறிவிட் டது என்றும் குற்றம் சாட்டினார்.

பின்னர் இ. மு.சுஅவர்களின் மறைவுக்குப் பின் செயற் குழுவும் மாவட்ட ஆட்சித் தலைவரும் கணக்குகள் கிட்டா ததாலும் முன்னாள் செயலர் மறைந்ததாலும் தணிக்கை அறிக்கை மீது நடவடிக்கை வேண்டாம் என்று பரிந்து ரைக்க அதனை அரசு ஏற்றது.

## நீதிபதி அனந்தநாராயணன் அவர்கள் கருத்துரை

அறிக்கை பற்றி நீதிபதி மா. அனந்தநாராயணன் அவர்களின் கருத்து: சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத் திற்கும் தமிழக அரசிற்கும் சில பணிகளை இன்னவாறு முடித்துத் தருவது என்று ஒப்பந்தம் ஏற்படுகிறது.

பக்கங்கள் குறிக்கப்பெறுகின்றன. எனவே இ. மு. சு அவர்கள் ஒரு ஒப்பந்தக்காரர்—பல திட்டங்களை ஒரே சமயத்தில் ஆற்றிக் கொண்டிருப்பார். ஒரே பணியாளர் கூட மாறி மாறி இரு பணிகளிலும் ஈடுபடுத்தப்படுவர். காலையில் ஒரு இடத்திலும், மாலையில் ஒரு இடத்திலுவர் கூடப் பணியாற்றலாம். அது போலச் சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தின் இரு வேறு திட்டங்களில் ஒரே புலவர்கள் ஈடுபடுத்தப்பட்டனர். அதனை இரட்டைச்சம்பளம் (Double Paymant) என்று கூறுவது பொருந்தாது. மேலும் இ. மு. சு அவர்கள் வேண்டிய அச்சகத்தில் அச்சுப்பணிகளைக் கொடுத்தார் என்று சிலர் •புகார் கூறியதும் பொருந்தாது. ஒப்புக் கொண்ட பணிகள் செம்மையாக முடித்திருக்கிறார்களா என்றுதான் பார்க்கவேண்டும். அரசுக் குழுக்களால் பல்லாண்டுகளாக முடிக்கப்படாத சொல்லாக்கப்பணிகளைச் ;சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் சுருங்கிய காலத்தில் சிறப்பாக முடித்துத் தந்திருக்கிறது.

'குறுகிய கண்ணோட்டமுள்ள அதிகாரிகளால்தான் இ. மு. சு அவர்கள் தமிழ்ப்பணி இறுதிக்காலத்தில் தடைப்பட்டது, என்று மா. அனந்த நாராயணன் அவர்கள் தம் இரங்கலுரையில் குறிப்பிட்டுள்ளார்.

## சங்கப்பணிகள் முடக்கப்பட்டன;

15-8-1967 இல் துணைத்தலைவர் திரு மு. சோமசுந்தரம் தலைமையில், மாவட்ட ஆட்சித் தலைவர் மோ.ம. இராஜேந்திரன் முன்னிலையில் சங்கங் செயற்குழு கூடி அன்று முதல் சங்கப் புலவருக்கும்,பணியாளர்களுக்கும் ஊதியம் கிடையாது என்று தீர்மானம் நிறைவேற்றியது. சங்கப் பொருளாளர் இராமலிங்கம் முதலியார் செயலர் கேட்கும் தொகைகளுக்குக் காசோலைகளில் கையெழுத்திட மறுத்தார்.

## 'தேர் தெருவிலே நிற்கிறது'

சங்க அலுவலகத்திற்கு வாடகை கொடுக்க முடிய வில்லை. பணியாளர்களுக்குச் சம்பளம் கொடுக்கப்பட வில்லை. சங்க இலக்கியத் தெளிவுரைப் பணி தடைப் பட்டது. இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் 9 ஆம் பகுதி அச்சாகி வெளிவராமலிருக்கிறது. திருவாசக உரை மூன்றாம் பகுதி முடங்கிக் கிடக்கிறது. சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தில் பல வகைத் தமிழ்ப் பணி களும் நின்று போயின. 'தெருவிலே தேர் நிற்கிறது' என்று 5-1-68 அன்று தமிழக அரசிற்கு இ. மு. சு அவர்கள் முறையிட்டார்.

## மு. ரா. பெருமாள் முதலியார் விழாவில்

1962 இல் சைதை ஆசிரியர் கல்லூரி முதல்வர் மு. ரா. பெருமாள் முதலியாருக்குத் தமிழ்ப்பெரும் புலவர் என்னும் பட்டத்தைச் சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் அளிப்பதாக இருந்தது. ஆனால் அரசு அனுமதி கிடைக்காத காரணத்தால் நின்று போயிற்று. 1967 இல் ஆட்சி மாறியதும் மீண்டும் அப்பட்டமளிப்பு விழாவினை நடத்துவதற்குப் பெருமாள் முதலியார் அறிஞர் அண்ணா வின் அனுமதி பெற்றார். முதலமைச்சர் அண்ணாவின் தலைமையில் 'தமிழ்ப்பெரும் புலவர்' என்னும் செப்புப் பட்டயம் சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தால் அளிக்கப் பெற்றது. இதுவே சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் நடத்திய இறுதி விழா எனலாம்.

## அறிஞர் அண்ணாவின் புகழாரம்

அவ்விழாவில் உரையாற்றிய அறிஞர் அண்ணா இ. மு. சு அவர்கள் 'சந்திரசேகரப் பாவலராகத் தன்மான இயக்கத்திற்கு ஆற்றிய தொடக்க காலத் தொண்டினை நினைவு கூர்ந்தார். தமிழ் ஆட்சி மொழியாக அனைத்துக்

கட்சி மாநாடு நடத்தியதையும், தளராமல் தமிழ்ப்பணி ஆற்றிவருவதையும், கட்சி வேறுபாடுகளுக்கு அப்பாற் பட்டு முது பெரும் தமிழ்த் தொண்டராக உருவெடுத் திருப்பதையும் பாராட்டினார்.

முதலமைச்சராகப் பொறுப்பேற்ற சமயம் அறிஞர் அண்ணா அவர்களைப் பார்க்கச் சென்றிருந்த ஒரு சிறு நண்பர் கூட்டத்தில், பழம் பெரும் தமிழ்த் தொண்டர் இ. மு. சுப்பிரமணிய பிள்ளை என்று குறிப்பிட்டுப் பேசி னார் என்று பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார் செய்தி தந்துள்ளார். அப்போது அக் கூட்டத்தில் 'முன்னாள் முதலமைச்சர் பக்தவத்சலத்துடன் நெருங்கிய தொடர்புடையவர்—அவரை நாம் ஆதரிக்கலாமா' என்று ஒருவர் வினவ 'நம் அரசும் தொடர்ந்து ஆதரிக்கத் தக்க தொண்டர்' என்று பதிலளித்தார்.

அவ்விழாவில் பேசிய நடமாடும் பல்கலைக்கழகம் நாவலர் நெடுஞ்செழியன் இ.மு.சு அவர்களைச் சங்கப் புலவர்களுடன் ஒப்பிட்டுப் பேசி வாழ்த்தினார்.

## கலைஞர் பாராட்டுரை

அவ் விழாவில் உரையாற்றிய கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் புகழுரையில் கவிநயமும் கற்பனை நயமும் மிளிர்ந்தன. 'நாங்கள் மூவரும் (அறிஞர், நாவலர், கலைஞர்) தமிழ் நாட்டிற்கு சென்ற ஆண்டிலிருந்து அமைச்சர்கள், அதுவும் குறிப்பிட்ட துறைகளுக்கு. ஆனால் பெரும் புலவர் இ. மு. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் தமிழுக்கே அமைச்சர் போன்றவர். முப்பது ஆண்டுகளுக்கு மேலாக' என்று பாராட்டினார்.

பச்சையப்பன் கல்லூரியில் நடைபெற்ற தமிழகப் புலவர் குழு மாநாட்டில், முதலமைச்சர் கலைஞர் அவர் கள் 'இ. மு. சு. அவர்கள் தன்மான இயக்கத்தின் தூண்

போன்றவர் 'ஐயா அவர்கள் சிறிது எழுந்து நிற்க வேண்டும்' என்று வேண்ட, இ. மு. சு அவர்கள் எழுந்து நின்றதும் அவரை அவையினருக்கு அறிமுகப்படுத்தி, 'ஐயா, அவர்களின் எழுத்துக்களைப் படித்து நாங்கள் எழுச்சி பெற்றோம்' என்றுரைத்தார். டில்லியில் நடைபெற்ற தமிழகப் புலவர் குழுக் கூட்டத்திலும் கலைஞரும் நாவலரும் இ. மு. சு அவர்களைப் பாராட்டிப் பேசினார்.

## ஆட்சி மாறியது, சங்கம் கைமாறியது

1967 இல் ஆட்சி மாறியதில் சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கமும் கை மாறியது. இ. மு. சு அவர்களிடமிருந்து திராவிட முன்னேற்றக் கழகத்தைத் சார்ந்த சில வழக்கறிஞர்கள் கைப்பற்றிக் கொண்டனர் என்று பொதுவாகக் கருத்து நிலவுகிறது. அதில் ஓரளவுதான் உண்மையிருக்கிறது.

இ. மு. சு அவர்களுடன் தனிமுரண் கொண்டு சங்கப் பணிகளை 15-8-1967 லிருந்து முடக்கிய பெருமை லயன் அதிபர் திரு மு. சோமசுந்தரம் பிள்ளையையே சாரும். ஆட்சி மாறியதை அவர் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டார். திரு எஸ். ரத்தினவேலுப் பாண்டியன், திரு டி. அய்யாசாமி, திரு அழகிய நம்பி, திரு இலக்குமணன் ஆகியோரைத் தூண்டி விட்டு விட்டுத் தாம் பின்னணியில் மறைந்து கொண்டார். முதற்கண் அவர்கள் இ. மு. சு அவர்களை நீக்குவதற்கு எடுத்த முயற்சி பலிக்கவில்லை. பேரா. க. அன்பழகன் தலைவராகவும், இ. மு. சு மீண்டும் செயலராகவும், திரு அய்யாச்சாமி இணைச் செயலராகவும், திரு எம். ரத்தினவேலு பாண்டியன் துணைத்தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஆனால் இணைச்செயலர், செயலரைச் செயலிழக்கச் செய்து சங்க உடைமைகளைத் தம் வீட்டில் கொண்டு போய் வைத்துக் கொண்டார். இ. மு. சு அவர்கள்

நெல்லையிலிருந்து சங்கரன்கோவில் திரும்பவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

## சீர்படுத்த இ. மு. சு முயற்சி

முதல்வர் மு. ரா. பெருமாள் முதலியாரும், இ. மு. சு அவர்களும் அண்ணா அவர்களைச் சந்தித்துச் சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தைச் செயல்படும் நிலைக்கு மீண்டும் கொண்டுவர இருந்தனர். ஆனால் சங்கக் கணக்குகளைப் பற்றி அங்கிருந்த தமிழ்ப் பேராசிரியர் பெருமாள் முதலியாரிடம் தவறான மதிப்பீட்டினைக் கூறியதால், அம்முயற்சி கைவிடப்பட்டது.

கோவில்பட்டி நீதிமன்றத்தில் 'புலவர்களுக்குப் பணத்தைத் திரும்பிக் கொடுக்க வேண்டும், சங்கக் கட்டிடம் வாங்கவில்லையாதலால்' என்று சிவில் வழக்குத் இ. மு. சு அவர்கள் தொடுத்தார். முதலில் இருந்த நடுவர் சாதகமாகக் குறிப்புக்கள் எழுதினார். அவர் மாற்றலான பின் வந்த நடுவர் வழக்கைத் தள்ளுபடி செய்துவிட்டார்.

## பேரா. அன்பழகன் நடுநிலை

டில்லி பாராளுமன்ற உறுப்பினராக இருந்த பொழுது சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தின் தலைமைப் பொறுப்பைப் பேரா. அன்பழகன் அவர்கள் விரும்பி மகிழ்வுடன் ஏற்றுக் கொண்டார். ஆனால் திருநெல்வேலி சென்றவுடன்தான் தெரிந்தது, அச்சங்கச் செயற்குழு செயல்படாக் குழுவாக இருக்கிறது என்ற செய்தி. இ. மு. சு அவர்களுக்கும் செயற்குழு உறுப்பினர்களுக்கும் இடையேயிருந்த முரண்பாட்டைத் தீர்த்து வைக்க முயன்றார் முடியவில்லை. வண்ணார்பேட்டை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியில் நடைபெற்ற கூட்டத்தில், இ. மு. சு அவர்களது தன்மான இயக்கப் பணிகளையும், தமிழ்ப் பணிகளையும் பலபடப் பாராட்டிப் பேசி

இ. மு. சு அவர்களுக்கும் ஏனைய செயற்குழு உறுப்பினர் களுக்கும் இடையேயிருந்த 'தலைமுறை இடைவெளியை நீக்க முயன்றார். எள்ளல் குறிப்புடன் அமர்ந்திருந்த இளைஞர்கள் (இ. மு. சு அவர்களை நோக்க) பேராசிரியர் பேச்சுக்குப் பின் சிறிது தெளிவடைந்தனர். இருப்பினும் செயல்படாச் செயற்குழுவை மீண்டும் செயல்பட வைக்க முடியவில்லையாதலால், மனம் வருந்தித் தலைவர் பதவி யைப் பேரா. அன்பழகன் அவர்கள் ராஜினாமா செய்து விட்டார்.

## நீக்கும் பணியில் வெற்றி

21-4-1973 அன்று சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத் தின் பொதுக் குழு கூடி, மாவட்ட ஆட்சித் தலைவர் சண்முகசிகாமணி முன்னிலையில், திரு எம். ரத்தினவேல் பாண்டியன் அவர்களைத் தலைவராகவும், திரு மு. சோம சுந்தரம் துணைத் தலைவராகவும், திரு டி. அய்யாசாமி அவர்களைச் செயலராகவும் தேர்ந்தெடுத்தனர். உயர் நிலைப் பள்ளிக் கலைச் சொற்களை உருவாக்கி, உயர் நிலைப் பள்ளிகளில் தமிழ் பயிற்று மொழியாகக் காரண மாக இருந்தவரை, ஆட்சி மொழி மாநாடு நடத்தி ஆட்சிச் சொல்லகராதி உருவாக்கித் தமிழ் ஆட்சி மொழியாகப் பணியாற்றியவரை, சமயம், இலக்கியம் போன்ற துறை களில் நூல்களை எழுதிக் குவித்தவரை, பாவேந்தரால் பாடப் பெற்ற சிறப்பு வாய்ந்த தமிழ்த் தொண்டரை நீக்கும் பணியில் வெற்றி கண்டனர். இருப்பினும் இ. மு. சு அவர்களிடம் பொறுப்பேற்கும் பொழுது மரியாதையுடன் நடந்து கொண்டதாகவும், அவர்தம் பணிகளைப் பாராட்டித் தீர்மானங்கள் செயற்குழுவின ரால் இயற்றப்பட்டன என்றும் அறியப்படுகிறது. மாற் றாரும் பாராட்டும் மாண்புடையவர் இ. மு. சு அவர்கள் என்பது புலனாகிறது. 15-8-69 முதல் 21-4-1973 வரைப் பெயரளவில் அமைச்சராக—செயலருக்கு அவர்தம் செஞ் சொல்—இ. மு. சு அவர்கள் இருந்து வந்தார்.

## செயல்படா நிலை

சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் பன்னிரண்டு ஆண்டுகள் செயல்படாமல் நின்றது. இ. மு. சு அவர்களை நீக்கியவர்களும் பெயரளவிலேயே தலைவராகவும், துணைத் தலைவராகவும், செயலராகவும் அமைந்தனர். ஆனால் 1967-1978 முடிய 12 ஆண்டுகள் சங்கத்தின் சொத்துக்கள் பாதுகாப்பாக வைக்கப்பட்டன. எம். ரத்தின வேல் பாண்டியன் சென்னை உயர்நீதி மன்றத்திற்குச் சென்றபின், திரு மு. சோமசுந்தரம் பிள்ளை பெயரளவில் தலைவரானார்.

## மீண்டும் மறுமலர்ச்சி

ஆனால் இ. மு. சு அவர்கள் தாமே உருவாக்கி வளர்த்து வெள்ளி விழாக் கண்ட சங்கம் அழிந்துவிட வில்லை. அவர் வைப்பு நிதியில் விட்டுச் சென்ற ரூ. 37380 ஒரு லட்சமாக வட்டியுடன் வளர்ந்திருக்கிறது. இ. மு. சு அவர்களின் நெருங்கிய நண்பர் முன்னாள் சபாநாயகர் திரு எஸ். செல்லப் பாண்டியன் அவர்கள் தலைவரான பிறகு, கால மாற்றத்திற்கு ஏற்ப,

'தமிழ் மாநிலத் தமிழ்ச் சங்கம்'

என்ற பெயருடன் மறுமலர்ச்சி பெற்றுள்ளது. இ. மு. சு அவர்களும் வேறு இரு புலவர்களும் எழுதி வைத்துவிட்டுப் போன 'நாலடியார் தெளிவுரை' என்னும் நூல் நவம்பர் 1982இல் வெளியிடப் பெற்றுள்ளது. இ. மு. சு அவர்கள் வகுத்தமுறைப்படி மையமாநில அரசுகளின் நிதியுதவியுடன் நூல் வெளியிடும் திட்டம் செயல்படத் தொடங்கிவிட்டது.

# 6. சைவ சமயத் தொண்டு

அம்மன் கொண்டாடியாகத் தொடங்கிய இ. மு. சு. அவர்கள், பரம வைணவராகி இராமாயண அகவல் பாடி, அதன்பின் முருக பக்தராகித் தினம் முருகன் மீது வெண் பாப் பாடியதும் கண்டோம். பத்தமடை அருணாசலம் பிள்ளையவர்கள் தூண்டுதலால் சிவனடியாராகி, சிவா பாரதம் செய்தவருடன் சிலம்படி தொடுத்து விரட்டினார். பத்தமடையில் 'சைவசித்தாந்த சபை' ஒன்றும் நடத்தினார்.

## கோவில்பட்டியில் தொண்டு

மகப்பேறு பத்து ஆண்டுகளாக வாய்க்கப் பெறாமையின், சிவன் கோவில் திருத்தொண்டு செய்து வந்தார், கோவில்பட்டியில், பிரகாரங்களைத் தூய்மை செய்தல், நந்தவனத்திற்கு நீர் இறைத்தல், மெழுகுதல் ஆகிய பணிகளில் இவரது மனைவியார் ஈசுரவடிவம்மையாரும் துணை புரிந்தார். மகப்பேறும் வாய்க்கப் பெற்றார்.

## காந்திமதி-சுந்தரேசன்

கோவில்பட்டியில் வீற்றிருக்கும் பெருமான் காந்திமதியுடனமர்ந்த சுந்தரேசரைத் தம் வழிபடு தெய்வமாகக் கொண்டார். பூசை முடிவில் 'காந்திமதி சுந்தரேசா'— 'காந்திமதி—சுந்தரேசா' எனப் பன்முறை உளமுருகப் பன்னிப் பன்னிக் கூறுவார்.

## கோவில் வரலாறுகள்

இந்து அறநிலையத் துறைத் தலைவர்களாக இருந்த திரு T. M. இராமச்சந்திரன் செட்டியார் திரு சின்னையாப் பிள்ளை, திரு T. M. நாராயணசாமிப் பிள்ளை ஆகியோருடன் தொடர்பு கொண்டு தனிக்கோவில் வரலாறு நூறு வரை எழுதியிருப்பதாக பேரா. ஆலாலசுந்தரம் செட்டியார் தம் இரங்கல் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். பேரா ந. சேதுரகுநாதன் அவர்களும் அவ்வாறே கூறுகிறார். கிடைத்த செய்திகளைத் தொகுத்து வரலாறு கண்ட கோவில்களின் பட்டியல் பின் இணைப்பாகத் தரப்பட்டுள்ளன.

## வரலாறு எழுதும் முறை

நெல்லை மாவட்ட வரலாற்று ஏடு (Tirunelveli District gazeteer) தரும் செய்திகளை முதலில் தொகுத்துக் கொண்டு பின்னர் கோவில் இருக்குமிடத்திற்குச் செல்வார். சில வேளைகளில் நடந்து செல்ல வேண்டிய அவசியமும் ஏற்படும். தலபுராணம் இருப்பின் அதிலுள்ள விவரங்களையும் சேகரிப்பார். அவ்வூரிலுள்ள முதியவர்களிடமும் பட்டர்களிடமும் வரலாற்றுச் செய்திகளை நாடித் தொகுப்பார். ஊர்ப்பெயர்க்காரணங்களையும் ஆய்ந்து கூறுவார். இ. மு. சு அவர்களின் களப்பணி (Field work) போற்றத் தக்கது.

## சைவ வைணவ சமய விரிவுரையாளர் பயிற்சிக் கல்லூரி, திருநெல்வேலி

1-7-1948 முதல் மூன்று மாதங்கள் சைவ வைணவ சமய விரிவுரையாளர் பயிற்சிக் கல்லூரியைத் திருநெல்வேலியில் நடத்தினார். இம்முயற்சியில் கே. ஆறுமுக நாவலரும் அவர்களுடன் இணைந்து பணியாற்றினார்'

தச்க பாடத் திட்டம் வகுக்கப் பெற்றது. திருக்குறளை அடிப்படையாகக் கொண்டு, ஆழ்வார்கள், நாயன்மார் களின் வாழ்க்கை வரலாறுகளும், ஒழுக்க முறைகளும் ஆராயப் பெற்றன. சைவ, வைணவ சமய சாத்திரக் கருத்துக்களும், பிற சமயங்களைப் பற்றிய பொது அறிவும் புகட்டப் பெற்றன. உலக வரலாறு, பூகோளம், மருத் துவம் சோதிடம் பற்றியும் பாடங்கள் அமைக்கப் பெற்றன.

இக்கல்லூரியின் இறுதி விழாவில் 29-6-48, 30-6-48 அன்று பேரா. ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள் கலந்து கொண்டு தேர்வு நடுவராகவும் சிறப்புச் சொற்பொழிவாள ராகவும் இருந்தனர். இக்கல்லூரியில் பயிற்சி பெற்றவர் களில் சங்கரன் கோவில் கதிர்வேல் பிள்ளை அவர்களும், திருஞான சம்பந்த ஓதுவார் அவர்களும் அடங்குவர். அவ்வாறு பயிற்சி பெற்றவர்கள் ஓதுவார்களாகவோ, சமயப் பிரச்சாரராகவோ நியமிக்கப் பெற்றனர்.

## கோமதியம்மை மாதவம்

சங்கரன் கோவிலில் ஆடித் தபசு விழா பிரசித்தி பெற்றது. இலட்சக் கணக்கில் மக்கள் கூடும் விழா. சிவனும் நாராயணனும் ஒன்று என்பதைக் காட்டுவதற்காகக் கோமதியம்பாள் மாதவம் செய்த தலம் இது. சிவபெரு மான் கோமதி தவத்தை மெச்சி, சங்கர நாராயணராக எழுந்தருளினார் என்பது ஐதிகம். ஆடி மாதம் பௌர்ணமி சங்கர நாராயணராகக் காட்சியருளினாரென்று "கோமதி மாதவம்" என்னும் துண்டுப் பிரசுரத்தை 30-7-1958 அன்று இ. மு. சு அவர்கள் வெளியிட்டார்.

## திருக்கோவில் நூலகமும் தமிழ்ச் சங்கமும் தேவாரப் பாடசாலையும்

1941 க்கு முன்னதாகவே சங்கரன் கோவில் தேவஸ் தானத்துடன் தொடர்பு கொண்டு சென்னை மாகாணத்

தமிழ்ச் சங்கத்தின் கிளையொன்றினை அங்கு இ. மு. சு அவர்கள் நிறுவினார். அயலூர்களிலிருந்து சிறந்த பேச்சாளர்களைத் தருவித்தார்.

சங்கர நாராயணசாமி திருக்கோவிலில் 1941 இல் தேவாரப்பாடசாலை இ. மு. சு அவர்கள் தலைமையில் தொடங்கப் பெற்று இயங்கி வருகிறது. திருக்கோவில் நூலகத்தையும் அவர்தான் திறந்து வைத்தார். திரு முறைச் செம்மல் திருஞானசம்பந்த ஓதுவார் தேவார ஆசிரியராகவும் நூலகப் பொறுப்பாளராகவும் இருந்து வந்தார்.

தம் இல்லம் அமைந்திருந்த தெருவில் ஆதிசங்கர விநாயகர் கோவிலில் புராணப் பிரசங்கங்களும் இ. மு. சு. அவர்கள் நடத்தினார். புளியரை சதாசிவ சுப்பிரமணிய பிள்ளை அவர்களும். சங்கரநாராயண ஓதுவார் அவர் களும் இ. மு. சு அவர்களுக்கு உறுதுணையாக இருந்தனர். சங்கரன் கோவிலில் இ. மு. சு அவர்களின் சமயப்பணி களைப் பற்றித் திருஞானசம்பந்த ஓதுவார் அவர்கள்

"இப்போது சங்கரன்கோவில் தலத்தில் பல சமயப் பணிகள் நடைபெறுகின்றன. அதற்கெல்லாம் மூலகாரண மாக இருந்தவர் இ. மு. சு அவர்களே."

என்று சிறப்பித்துக் கூறியுள்ளார்.

## சைவ சமயம் உலகப் பொதுச் சமயம்

1948 இல் சைவ சமயம் உலகப் பொதுச் சமயம் என்னும் நூலை இயற்றி இ. மு. சு அவர்கள் வெளி யிட்டார். சைவ சமயத்தின் தோற்றத்தையும், புறசமயக் கோட்பாடுகளுடன் ஒப்பாய்வையும் பற்றிய இ. மு. சு அவர்களின் கருத்துக்களையும் இதில் காணலாம். சாதி வேறுபாடு மட்டுமின்றி ஆண் பெண் வேறுபாடும் இல்லை என்பது சித்தாந்தக் கொள்கை. புறவேடங்களையும்

புலால் மறுத்தலையும் வீட்டு நெறியையும் இந்நூலில் ஆராய்கிறார்.

## பரந்து விரிந்த நோக்கம்

இ. மு. சு அவர்கள் ஆழமான சைவசித்தாந்தி என்றாலும், மிகப் பரந்து விரிந்த நோக்கமும், உள்ளமும் கொண்டவர் என்பதை இந்நூல் புலப்படுத்துகிறது. சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் பேரா. ரா. பி. சேதுப்பிள்ளையவர்கள் தம் முன்னுரையில் 'சிவநெறி என்பது பொது நெறி. அந்நெறியிலே பிறப்பு வேற்றுமை இல்லை. ஆண், பெண் என்ற வேற்றுமை இல்லை. இவர் தேவர், அவர் தேவர் என்ற மயக்கமில்லை. 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்பது அதன் கொள்கை. இவற்றை எல்லாம் காலத்திற்கேற்ற முறையில், எல்லோர்க்கும் விளங்கும்படியான இனிய நடையில் எழுதி உதவிய பிள்ளையவர்களுக்குத், தமிழகத்தார் நன்றி உரித்தாகுக,என்று குறிப்பிட்டுள்ளார்.

அவ்வமயம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ் பேராசிரியர் டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியார் அவர்கள் தம் அணிந்துரையில் "சைவ சமயத்தின் உண்மை நிலையினை எல்லோரும் தெரிந்து கொண்டு வழுவற்ற சமய வழிபாட்டு முறையில் ஒழுகும் முறையினை இந்நூலே தெளிவாக அறிவுறுத்துகிறது" என்று போற்றியுள்ளார்.

## தமிழ்த்திருமணம்

'சுமார்த்த எதிர்ப்பு' இ. மு. சு அவர்களின் இடையறாக் கோட்பாடுகளில் ஒன்றாகும். சுமார்த்த வேதியர்களைக் கொண்டு திருமணங்கள் நடத்துவதை இ. மு. சு அவர்கள் கடுமையாக எதிர்த்தார். தேவார முழக்கத்துடன் 'தமிழ்த்திருமணம்' எவ்வாறு நடத்துவதென்று 1949 இல் ஒரு சிறு நூல் வெளியிட்டார். அதில் தமிழ்த் திருமண முறைகள் தெளிவாக விளக்கப் பெற்றுள்ளன.

திருமணம் நடத்துவதை ஒரு தொழிலாக வைத்துக் கொள்ளவில்லை. என்றாலும், விரும்பிக் கேட்டவர்களுக்கு நூற்றுக்கணக்கான திருமணங்களை இ. மு. சு அவர்கள் தமிழ்த் திருமணமாக நடத்தியுள்ளார். அவரால் திருமணச் செய்விக்கப் பெற்றவர்கள் வளமுடன் வாழ்வர் என்னும் கைராசியும் உண்டு என்பர்.

## மாவட்டக் கோயில் வரலாறுகள்

தனிக் கோவில் வரலாறுகள் நூற்றுக்குமேல் எழுதிக் குவித்தவர் இ. மு. சு அவர்களே. தமிழகத்திலுள்ள அனைத்துக் கோவில் வரலாறுகளையும் ஒன்று திரட்டி மாவட்ட வாரியாக வெளியிடும் திட்டத்தைத் தீட்டி இந்து அறநிலையத்துறை முன்வைத்தார். ஆணையர் அ. உத்தண்டராம பிள்ளை அவர்கள் அத் திட்டத்தை வழி மொழிந்து அரசாணை பெற்றார். (1960-61) நெல்லை மாவட்டக் கோவில் வரலாற்றினை முதற்கண் இயற்றி 1962 நவம்பர் சபாநாயகர் எஸ். செல்லப்பாண்டியன் தலைமையில் வெளியிட்டார். சென்னை மாவட்டக் கோயில் வரலாறு 26-7-1964 இல் ஆளுநர் ஜெயச்சாமராஜர் தலைமையில் முதலமைச்சர் மீ. பக்தவச்சலம் அவர்களால் வெளியிடப்பட்டது.

## தூய எளிய நடை

இவ்விரு நூல்களுக்கும் முன்னுரை வழங்கிய பெரியவர் மீ. பக்தவச்சலம் அவர்கள் இ. மு. சு அவர்களின் தமிழ் நடையைத் 'தூய எளிய நடை' என்று பாராட்டினார். மிகச் சிறந்த தொகுப்பு நூல்கள்; இந்து அறநிலையத் துறை வெளியீடாக வந்துள்ளன.

## தஞ்சை மாவட்ட வரலாறு

தஞ்சை மாவட்டக் கோயில் வரலாறு வரைவதற்காகத் தஞ்சை மாவட்டத்தில் சுற்றுப் பயணம் மேற்கொண்டார்.

அவ்வமயம் தஞ்சை மாவட்ட வருவாய்த்துறைத் தலைவ ராக விளங்கிய பி. செந்தில்நாயகம் அவர்களுடன் தங்கிச் செய்திகளைத் தொகுத்தார்.

தாமே எல்லா மாவட்ட வரலாறுகளையும் வரைய வேண்டும் என்றும் பிடிவாதமாக இ. மு. சு அவர்கள் கூறினார். அறநிலைய ஆணையரின் நேர்முக உதவியாளர் ஆதிமூலம் பல புலவர்களுக்கும் பிரித்துக் கொடுக்கவேண்டு மென்றார். திரு உத்தண்டராம பிள்ளை அவர்களும் ஓய்வு பெற்று திரு சாரங்கபாணி முதலியார் ஆணையராகப் பொறுப்பேற்றார். இச்சிக்கலில் தலைமை நீதிபதி மா. அனந்தநாராயணன் அவர்கள் தலையிட்டுச் சிறிது காலம் சமரசம் செய்து வைத்தார். இருப்பினும் இந்து அறநிலைய அதிகாரிகள் இத் திட்டத்தை மேற்கொண்டு நடக்க ஒட்டாமல் தடுத்து விட்டனர்.

## இறுதிக் காலத்து வெண்பாக்கள்

இ. மு. சு அவர்கள் தம் வாழ்நாளின் இறுதிக் காலத்தில் சங்கரலிங்கப் பெருமானையும், கோமதி அம்பாளையும் நோக்கித் தம் துயர் துடைக்குமாறும், தம்மை அழைத்துக் கொள்ளுமாறும் பாடிய வெண்பாக்கள் உள்ளத்தை உருக்கும் தன்மை வாய்ந்தன.

"சீராளன் பெம்மான் சிவபெருமான் உன்னடியான்
சீரழிந்து துன்புற்றுச் சிந்தை நொந்தால்—யாருன்னை
நம்பி அடிதொழுவார் நாயகனே காத்தருள்வாய்
நம்பியே நின்றேன் நயந்து."

"நாய்போன்ற சீருமுனை நம்பினேற் கில்லையையா
பேய் போல யானழிந்து பேதுற்றேன்—நாயகனே
என்னை அடியேனை ஏழையெனைக் காத்தருள்வாய்
பின்னையார் என்துணைநீ பேசு."

(13-11-1974)

## உரையாக்கம்

சென்னை மாகாணத் தமிழ்ச் சங்க வெள்ளிவிழா வினை ஒட்டித் திருமுருகாற்றுப் படை, தெளிவுரை, சொல் லடைவு, பொருளடைவு இயற்றி இ. மு. சு அவர்கள் வெளி யிட்டார். எளிய தமிழில் தெளிந்தவுரையும், அரிதின் முயன்று ஆக்கிய சொல்லடைவும் இவ் வெளியீட்டின் சிறப் பியல்புகளாகும். இ. மு. சு அவர்கள் நண்பர் சாமி, வேலாயுதம் பிள்ளை அவர்கள் பல ஆண்டுகளுக்கு முன்னர் வெளியிட்ட திருக்குறள் சொல்லடைவு இம்முயற்சிக்குத் தூண்டுகோலாக அமைந்திருக்கலாம்.

சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் வெளியிட்ட திருவாசக உரைப் பகுதிகளிலும், புலவர் வே. மாணிக்க வாசகம் பிள்ளை, திரு பு. சி. புன்னைவனநாத முதலியார் ஆகியோருடன் சேர்ந்து இ. மு. சு அவர்கள் இயற்றிய சைவத் தமிழ்ப்பணி நிலையான ஒன்றாகும்.

# 7. சித்த மருத்துவம்

பத்தமடையில் அருணாசலம் பிள்ளை அவர்கள் சைவத்திற்கு இ. மு. சு. அவர்களை இழுத்து வந்ததுடன் அமையாது, சித்த மருத்துவம் பற்றிய சில துறைகளை அறிமுகப்படுத்தினார்கள். மேலும் அக்காலத்தில் அதிக மருத்துவ வசதிகள் இன்மையால், பெரும்பான்மை மக்கள் 'கைப்பக்குவம்' ஒன்றினையே நம்பியிருந்தனர்.

## கைப்பக்குவம்

வீட்டில் இல்லத்தரசியர் பொதுவாகக் குழந்தைகளுக்கு வரும் நோய்களையும், அதற்குக் கொடுக்க வேண்டிய மருந்துகளையும் அறிந்திருப்பர். இ. மு. சு. அவர்களின் மனைவியார் ஈசுரவடிவம்மையாரின் 'கைப் பக்குவம்' அவ்வட்டாரத்தில் பிரசித்தி பெற்றது. சிறு குழந்தைகள் வயிற்றுப் போக்கினாலும், ஜன்னி என்னும் முற்றிய சுரத்தினாலும் இறப்பதுண்டு. கண்டங்கத்திரி, தூதுவிளை வயிற்றுப் போக்குக்குச் சரியான மருந்து என்பார்.

சனிக்கிழமை எண்ணைக் குளியலுக்குப் பின் மாலையில் சுக்கு வெந்நீரும், ஞாயிறு காலையில் இஞ்சிக் காப்பியும் நோயற்ற வாழ்வைத் தரும் என்பார்.

## சித்த மருத்துவப் பயிற்சி

காயகல்பம் கண்டு மரணத்தை வெல்லும் வழியையும், ரதவாதத்தால் பாதரசத்தைத் தங்கக் கட்டியாக மாற்று வதையும் குறிக்கோளாகக் கொண்டது, சித்த மருத்துவம்.

இளம் பெண்களுடன் சேர்வது இளமை தரும் என்பாரு முண்டு. முறையாகச் சித்த மருத்துவப் பயிற்சியினை இ. மு. சு. அவர்கள் பெற்றது கோவில்பட்டியில். விருதைச் சிவஞான யோகிகள் 1921—28 ஏழு ஆண்டுகள் சித்த மருத்துவம் பற்றிய பல்வேறு செய்திகளையும் கற்றுத் தந்தார். என்றாலும் சித்த மருத்துவராக (R. I. M. P) பதிவு பெற்றது 21-9-1940 இல்தான்.

## மருத்துவப் பட்டங்கள்

1940 இல் இந்திய முறை மருத்துவராகப் (Registered Indian Medical Practitioner) பதிவு செய்யப் பெற்றபின், மதுரைச் சித்த வைத்திய சங்கம் 27-12-52 இல் 'வைத்திய வித்வான்' என்னும் பட்டத்தை அளித்தது. 20-10-58 இல் மதுரையில் சித்த மருத்துவக் கல்லூரி 'சித்த மருத்துவ பண்டிட்' என்னும் பட்டத்தை அளித்தது.

எனினும் தமிழாசிரியப் பணி, தமிழ்ச் சங்கப் பணி ஆகியவற்றுள் பெரும்பகுதி நேரத்தைச் செலவிட்டதால், மருத்துவராக இ. மு. சு. அவர்கள் இயங்கவில்லை. அவரை ஒரு மருத்துவ நடைமுறையாளர் (Medical Practitioner) என்று சொல்வதை விட ஒரு சித்த மருத்துவக் கோட்பாளர் (Siddha Theoritician) என்றே கூறலாம்.

## சுவாமி சுந்தரமகாலிங்கம்

சித்தயோகி சுவாமி சுந்தர மகாலிங்கம் அவர்களுடன் இ. மு. சு. அவர்கள் நெருங்கிப் பழகினார். சுவாமி சுந்தர மகாலிங்கம் பற்பல அதிசய மருந்துகளைத் தயாரிப்பார். அவற்றுள் இரண்டு பெரிதும் பயன்பட்டன. ஒன்று வைசூரி நோய்க்கு மாத்திரை. ஆங்கில மருந்து இல்லையென்று கைவிடப்பட்டதால், வைசூரிக்கு அவர் கொடுத்த மாத்திரைகள் அற்புதமாக நோயைக் குறைத்தன. மற்றொன்று

தேள் கடிக்குக் குளிகை. எங்கு தேள் கடித்தாலும் வலது கையில் தேள்கடிக் குளிகையை வைத்து இறுகப் பொத்தினால், மின் அதிர்ச்சி போல வெட்டி இழுக்கும். உடன் தேள் கடிவிடம் இறங்கும். அக் குளிகையைத் தண்ணீர் ஊற்றி எடுத்து மீண்டும் பயன்படுத்தலாம். இவ்வற்புத மருந்துகளின் செய்முறையைச் சித்தயோகி சுவாமி சுந்தர மகாலிங்கம் யாருக்கும் சொல்லாமலே போய்விட்டார்.

## தமிழ் நாடு சித்த வைத்திய சங்கம்

மாவட்ட நீதிபதி வி. பலராமய்யா அவர்களைத் தலைவராகவும், இ. மு. சு. அவர்களைத் துணைத்தலைவராகவும், மதுரை சித்தயோகி சுவாமி சுந்தரமகாலிங்கம் அவர்களைச் செயலராகவும் அமைத்துத் தமிழ்நாடு சித்த வைத்திய சங்கம் தோற்றுவிக்கப்பட்டது. பற்பல மாநாடுகளை வெற்றிகரமாக நடத்தியது (1950—1965)

## பைம்பொழில் (பண்புளி) சித்த வைத்திய ஆராய்ச்சி மன்றம்

தமிழ்நாடு சித்த வைத்திய சங்கத்தின் சாதனைகளில் ஒன்று திருக்குற்றாலத்திற்கு அருகே பண்புளி என்னும் (பைம்பொழில்) மலையடி வாரச் சிற்றூரில் சித்த வைத்திய ஆராய்ச்சி நிலையம் அமைத்ததாகும். பல அரிய மூலிகைகள் அம் மலையில் காணப்பட்டதால் அங்கு ஆய்வுமையம் தொடங்கப்பெற்றது. திரு உத்தண்டராம பிள்ளை அவர்கள் அறநிலையத்துறை ஆணையராக இருந்தபொழுது பண்புளித் திருக்கோவில் பொருளுதவியுடன் இம் மன்றம் தொடங்கப்பெற்றது.

ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி பலராமய்யா அவர்கள் தலைவராகவும், பத்தமடை அருணாசலம் பிள்ளையவர்கள் உதவியாளராகவும் இருந்து பல நல்ல பணிகளைச் செய்தனர். ஆனாலும் திரு வி. பலராமய்யா அவர்களுக்

கும் கோவில் நிர்வாக அதிகாரிகளுக்கும் கருத்து முரண் பாடு ஏற்பட்டு அந்த ஆய்வு மன்றம் நின்றுவிட்டது.

## இலவச சித்த மருத்துவநிலையங்கள்

தமிழ்நாடு சித்த வைத்திய சங்கம் மேலும் ஒரு திட்டத்தினைத் தமிழக அரசிற்குப் பரிந்துரைத்தது. பெரிய திருக்கோவில்கள் இருக்கின்ற இடங்களில் இலவச சித்த மருத்துவமனைகளைத் திறத்தல் வேண்டும் என்பது அத்திட்டம். அரசு இத்திட்டத்தை ஏற்று, சங்கரன்கோவில் திருச்செந்தூர் போன்ற இடங்களில் தேவஸ்தானச் செலவில் இலவச சித்த மருத்துவ நிலையங்கள் திறக்கப்பட்டன. ஏழை எளிய மக்கள் இத்திட்டத்தினால் நன்மை அடைந்தனர். இந்நிலையங்கள் இன்றும் இயங்கிவருகின்றன.

## சித்த மருத்துவத்திற்குத் தனி இயக்குநர்

தமிழ்நாடு சித்த வைத்திய சங்கம் சித்த மருத்துவத்திற்குத் தனியான இயக்குநரை நியமிக்க வேண்டுமெனத் தீர்மானங்களை இயற்றியது. 1967 இல் ஆட்சி மாறியபின் இத் தீர்மானம் ஏற்றுக் கொள்ளப் பெற்று இந்திய முறை மருத்துவ இயக்குநர் (Director of Indian Medicine) நியமிக்கப் பெற்றார். அறிஞர் அண்ணாவின் ஒரு சாலை மாணாக்கர் திரு வி. பலராமய்யா அவர்கள் மருத்துவ இயக்குநராக நியமிக்கப்படுவார் என்று அனைவரும் எதிர் பார்த்தனர். ஆயினும் அவருக்கு சித்த மருத்துவப் பட்டம் எதுவும் இல்லையாதலால், பாளையங்கோட்டை இந்திய முறை மருத்துவக் கல்லூரி முதல்வர் வேணுகோபால் முதல் இயக்குநராக நியமிக்கப்பட்டார்.

## பஞ்சகல்பம்

1960க்குப் பின் நல்லெண்ணைக் குளியலை நீக்கிப் பஞ்சகல்பம் தேய்த்துக் குளிக்கும் வழக்கத்தை இ. மு. சு

அவர்கள் மேற்கொண்டார். திரு வி. பலராமய்யா அவர்களின் ஆலோசனைப்படி இதனை மேற்கொண்டார். நெல்லி வற்றல், வெள்ளை மிளகு, கடுக்காய், கஸ்தூரி மஞ்சள், வேப்பன் வித்து ஆகியவற்றைப் பொடித்துப் பாலில் காய்ச்சித் தலையில் தேய்த்துக் குளிக்க வேண்டும். பின்னர் நல்லெண்ணையை அறவே நீக்கி விட்டார். அயச் செந்தூரத்தையும் தவறாமல் உண்டு வலிமையுடன் விளங்கினார்.

## கால்கடுவன் (Exzema)

இ. மு. சு அவர்கள் கால்கடுவன் என்னும் எக்சிமா நோயால் அவதியுற்றார். அலோபதி மருத்துவர்களாலும், தோல் மருத்துவ நிபுணர்களாலும் குணப்படுத்த முடியவில்லை. இறுதியில் மாட்டு வாகடத்தில் சொல்லப்பட்ட ஆடு தின்னாப் பாளையை அரைத்து உப்பில்லாமல் பத்தியத்துடன் மூன்று நாள் சாப்பிட்டார். முற்றிலும் குணமாகிவிட்டது. மீண்டும் வரவில்லை.

ஆங்கில முறைகளால் குணப்படுத்த முடியாத பல நோய்களுக்குச் சித்த மருத்துவம் கைகண்ட மருந்துகளை உடையது என்பது கண்கூடு.

## உள்ளங்கைச் சிலந்தி

முதுகில் வந்த ராஜ பிளவையால் இ. மு. சு அவர்களின் தந்தையார் சு. முத்துசாமிப் பிள்ளை அவர்கள் மாண்டார். ஒரு சமயம் இ. மு. சு அவர்களுக்கு உள்ளங்கையில் பெரிய கட்டி ஏற்பட்டது. அனைவரும் உயிருக்கே ஆபத்து ஏற்படுமோ என அஞ்சினர். அக்கட்டியை அறுத்து, செல்லப்பெருமாள் பிள்ளை என்னும் கைப் பக்குவ வைத்தியர் சல்பனைமடு பொடியை வைத்துக் கட்டினார். அது மட்டுமின்றிச் சந்தன அத்தர் போட்டு வந்தார். அதனால் விரைவில் கட்டிப்புண் ஆறிவிட்டது. சந்தன அத்தருக்கு அத்தனை ஆற்றல் இருக்கின்றது.

## தீராத வயிற்றுவலி

உண்ட பின்னர் வழக்கமாக இ. மு. சு அவர்களுக்கு வயிற்றுவலி வந்து துன்புறுத்தியது. எத்தனையோ மருந்துகளும் குணப்படுத்த முடியவில்லை. திருநாவுக்கரசருடைய 'கூற்றாயினவாறு விலக்கலீர்' என்னும் பாடலை அடிக்கடிப் பாடி வந்தார். இறுதியில் சோடாஉப்பினை உணவுக்குப் பின் நீரில் கரைத்து உட்கொண்டு வர முற்றிலும் குணமாகி விட்டது என்பார், இ. மு. சு அவர்கள். இது எந்த அளவு அறிவியல் முறைப்படி ஏற்றுக் கொள்ளத் தக்கது என்பது ஆய்விற்குரியது.

## கண்களின் பாதுகாப்பு

இ. மு. சு அவர்களுக்குக் கிட்டப்பார்வை என்று கண்டு மருத்துவர்கள் கண்ணாடி அணிய வேண்டுமென்று அறிவுறுத்தினார். கண்ணாடி வாங்கியதோடு சரி, அதனை அணிவதே இல்லை. புத்தகங்களைச் சிறிது அருகில் வைத்துப் படிப்பார்.

காலை, மாலை கண்களில் தண்ணீரைத் தெளித்து வந்தால் கண்ணொளி மங்காது என்று இ. மு. சு அவர்கள் நம்பினார். ஆனால் இறுதி வரை அவரது கண்பார்வை சரியாகவே இருந்தது.

# 8. சோதிடக் கலையும் பஞ்சாங்கமும்

தமிழர் சோதிடக் கலையைச் சுமார்த்தப் புரோகிதர்கள் தம் பஞ்சாங்கத்தின் துணை கொண்டு மறைத்து வருகின்றனர் என்று சைவசித்தாந்திகளிடையே அக்காலத்தில் ஒரு கருத்து நிலவியது. தமிழ்ப் புரோகிதர்களுக்கும் சுமார்த்தப் புரோகிதர்களுக்கும் இடையே கடும் பகை மூண்டது. அத்தகைய கருத்துக்கள் சைவசித்தாந்த மகாசபைக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டன. அச் சூழ்நிலையில் இ. மு. சு அவர்கள் "சித்தார்த்தி 1918 ஆம் வருட முதல் சைவ ஆகமங்களின் படி கணிக்கப் பெற்ற சைவ வாக்கியப் பஞ்சாங்கம் வெளிவரும்" என்று கூட்டத்தில் அறிவித்தார். அதன்படியே பத்தமடை ஆசிரியர் முத்துசாமிப் பிள்ளையுடன் சேர்ந்து சித்தார்த்தி வருடப் பஞ்சாங்கத்தை வெளிக் கொணர்ந்தார்.

## சௌரமானமும் சந்திரமானமும்

தமிழர் சோதிடக்கலை சௌரமானத்தை அடிப்படையாகக் கொண்டது என்பர். ஆரியர் தமிழகம் வந்து தம் சந்திரமான முறையைத் தமிழர்கள் மீது திணித்தனர் என்பர். இம் முரண்பாடு மிகுந்தது. இ. மு. சு அவர்கள் சைவர்கள் சார்பில் சுமார்த்தர் மீது போர் தொடுத்தார்.

## நட்சத்திரமும் திதியும்

அது போலவே விழாக்களை நிர்ணயிப்பதிலும் வேறுபாடு நிலவியது. சந்திரமானிகள் திதியை அடிப்படையாகத்

கொண்டு விழா நாட்களை முடிவு செய்தனர். சௌர மானிகள் சட்சத்திரத்தை அடிப்படையாகக் கொண்டு விழாக்களை நிர்ணயித்தனர். இ. மு. சு அவர்களின் சைவப் பஞ்சாங்கம் சௌரமான அடிப்படையில் நட்சத்திரத்தை அளவு கோளாகக் கொண்டது.

## கருத்துப் போர்

இ. மு. சு அவர்களுடன் சேர்ந்து முதல் பஞ்சாங்கத்தை சித்தார்த்தி ஆண்டு 1918 இல் கணித்து வெளியிட்ட முத்துசாமிப் பிள்ளை அவர்கள் தம் பெயரை முதலில் போடாததால், தனிமுரண் கொண்டு மாற்றுப் பாசறைக் குச் சென்று விட்டார். இட்டமொழி சிவசூரிய நாராயண பிள்ளை என்பவருடன் சேர்ந்து கொண்டு போட்டிப் பஞ்சாங்கத்தைச் சந்திரமான அடிப்படையில் வெளியிட லானார்.

## துண்டுப் பிரசுரப்போர் (Pamphlet warfare)

அக்காலத்தில் மிகச் சுவையான கட்டுரைப் போர்கள் நடைபெற்று வந்தன. மறுப்பு, மறுப்பிற்கு மறுப்பு என்று அடுக்கடுக்காகச் சொற்போர் நிகழ்ந்து கொண்டிருக்கும். இ. மு. சு அவர்களுக்கும் சந்திரமானிகளாகிய சுமார்த்தர் களுக்கும் இடையே கடும் போர் மூண்டது. காரசாரமான விவாதங்கள் துண்டுப் பிரசுரங்கள் மூலம் பரிமாறிக் கொள்ளப்பட்டன.

## நவராத்திரி, சரசுவதி பூசை, விநாயகர் சதுர்த்தி

விநாயக சதுர்த்தி ஆவணியிலும், நவராத்திரி புரட் டாசியிலும் கொண்டாடப்பட வேண்டிய விழாக்கள்; நவராத்திரியில் மகாநவமியே முக்கியம் என்பது இ. மு. சு அவர்களின் கோட்பாடு. பிரசோற்பத்தி வருடத்தில் சரசுவதி பூசை ஐப்பசி 3 இல் அன்று, புரட்டாசி 4 ஆம் நாளே என்று விவாதித்தார்.

## பாசுபதாஸ்திரம்

இட்ட மொழிப் பஞ்சாங்க கணிதர்கள், சிவசூரிய நாராயணபிள்ளை, பி. முத்துசாமிப்பிள்ளை, இருவரும் இ. மு. சு அவர்களைக் கடுமையாகத் தாக்கி (1931) ஒரு வெளியீட்டைக் கொண்டு வந்தனர். அதன் பெயரே 'சைவப் பஞ்சாங்க கணிதரின் ஆரவாரத்தை அழிக்கும் பாசுபதம்' என்று கடுமையைக் காட்டுகிறது.

சந்திர சேகரப் பாவலராகி அவதாரம் எடுத்து பார்ப்பனரின் கொட்டத்தை அடக்கிய இ. மு. சு அவர்களை விரும்பாத கா. சு. சங்கர நாராயண ஐயர் என்னும் குமாரர்த்தரும் இவர்களுடன் சேர்ந்து இ. மு. சு அவர்களின் வாயடைக்கும் பணியில் ஈடுபட்டார்.

## பாசுபதவீழ்ச்சியும் உண்மை விளக்கமும்;

பாசுபதத்தை வீழ்த்தி ஒரு மறுபபு வெளியிட்டார் இ. மு. சு. திருநெல்வேலி சைவசித்தாந்த சபைத் தலைவர் திரு மா. வே. நெல்லையப்பபிள்ளை அவர்கள் இ. மு. சு அவர்களுக்கு ஆதரவாக எழுதிப் போர் முரசு கொட்டினார். நெல்லையப்பர் கோவில் வசந்த மண்டபத்தில் 6, 7—10—1928 அன்று ஈராயிவர் கூடிய சைவச் சித்தாந்திகளின் கூட்டத்தில் சிவாகம பிரமாணங்களைச் சுட்டிக் காட்டி இ. மு. சு அவர்கள் தமிழர்கள் சௌரமானிகள் என்பதை ஐயமற நிறுவியதாக அவர் குறிப்பிட்டார். (ஆகஸ்ட் 1931) இட்டமொழிப் பஞ்சாங்கத்தாருடைய பொறாமையும், அறியாமையும் என்னும் வெளியீடு இ. மு. சு அவர்களாலும் 'சௌரமானமும் சந்திரமானமும் என்னும் வெளியீடு சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாலும் வெளியிடப் பெற்றன. இட்டமொழியார்கள் வசைக் கவிபாடினர். இ. மு. சு அவற்றை எதிர்த்து வழக்காடினார்.

## திருவள்ளுவர் குருபூசைத் திருநாள்

வைகாசி அனுடத்தில் திருவள்ளுவர் முத்தியடைந்தார் என்பது இ. மு. சு அவர்களின் கருத்து. இதனை மறுத்து சிதம்பர ராமலிங்கம்பிள்ளை என்னும் புலவர் மாசி உத்தரமே எனச் சாதிக்கின்றார். 'திருவள்ளுவர் குரு பூசை நாள் உண்மை விளக்க ஆராய்ச்சி' என்றும் தலைப்பில், வைதிக சைவ சம்மேளன வெளியீடு என்னும் பெயரில் தம் பெயரை மறைத்து இ. மு. சு அவர்களை மறுத்துத் தாக்கி எழுதினார், சிதம்பர ராமலிங்கம்பிள்ளை அவர்கள்.

## இடியேறு

சம்மேளனப் புலவர் திரு வி. சிதம்பர ராமலிங்கம் பிள்ளை பொறாமை கொண்டு மறைந்து நின்று வெளியிட்ட ஆராய்ச்சிக்கு 'இடியேறு' இ. மு. சு மறுப்பு என்று எதிரம்பு தொடுத்தார். மாசி உத்திரத்தில் பிறந்து அனுடத்தில் வீடுபேறடைந்து சென்றார் என ஒரு பழம் பாடலை ஆதாரமாகக் காட்டிச் சிதம்பர ராமலிங்கம் பிள்ளையவர்களைச் சாடினார். இது போலக் கந்த சஷ்டி விரதத்தை ஐப்பசியில்தான் கொண்டாடவேண்டும், கார்த்திகையில் கொண்டாடக் கூடாது என்றும், தீபாவளிப் பண்டிகையை ஐப்பசி சுவாதியில் தான் கொண்டாடவேண்டும், சதுர்த்தசியில் கொண்டாடக் கூடாது என்றும் இ. மு. சு அவர்கள் ஓயாது துண்டுப் பிரசுரப் போர் நடத்தினார்.

## தமிழர் சோதிட விளக்கம்

இராமேஸ்வரம் தேவஸ்தான சோதிடர் திரு தா. முத்துக்கருப்பிள்ளை அவர்கள் தமிழர் சோதிடர் விளக்கம் என்னும் நூலை சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழக வெளியீடாக 1932 இல் வெளியிட்டுள்ளார். மேற்காட்டிய

துண்டுப் பிரசுரப் போர்களுக்கு முடிவுரை போன்று அமைவது இந்நூல். தமிழர் மூதாதையர் மறைந்த நாளை நட்சத்திர அடிப்படையிலேயே கொண்டாடி வந்தன ரென்றும், திதி அடிப்படையில் கொண்டாடுவது ஆரியர் மரபு என்றும் பல சான்றுகளைக் கொண்டு நிறுவியுள்ளார்.

## சைவப் பஞ்சாங்கம்

இத்தகைய சர்ச்சைகளுக்கிடையே இ. மு. சு அவர்கள் 'சைவ ஆகம முறைப்படி கணித்த சைவப் பஞ்சாங்கம்' 1918—1923 வரை சொந்தமாகவும், 1924—1975 முடிய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் வாயிலாகவும் 56 ஆண்டுகள் வெற்றி கரமாக வெளியிட்டார்.

## கணியரே சோதிடர் அல்லர்

இ. மு. சு அவர்கள் பயன் கூறும் சாஸ்திரங்களை ஆர்வமுடன் பயின்றவர் அல்லர். கோள் நிலையும் நாள் நிலையும் கண்டு பலன் சொல்லும் பணியில் ஈடுபட வில்லை. கணியராகவே வானியலாளராகவே, பணியாற்றி வந்துள்ளார். பல உயர் அதிகாரிகள் பஞ்சாங்கத்தைக் கண்டு இவர் சோதிடராகவும் இருப்பார் என நினைத்துப் பலன் கேட்பார்கள். அத்தகைய நிலைகளில் சங்கரன் கோவிலில் பிரபல சோதிடர் பிச்சையாப்பிள்ளை அவர் களுடன் கலந்து ஆலோசித்த பின்னரே பலன் கூறுவார்.

## ஒளிநூல்

இ. மு. சு அவர்கள் 1959 இல் ஔவை நூலகத்தின் வாயிலாக வெளியிட்ட 'ஒளிநூல்' அவர் தம் வானியல் அறிவைப் புலப்படுத்தும். மேலை நாட்டுவானியல் அறிஞர் களின் கருத்துக்களையும் இந்நூலில் தொகுத்துரைத் துள்ளார். சங்கத் தமிழர் வானியற் கருத்துக்களை முன்னரே, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் வெளி

யிட்ட 'புறநானூற்றுச் சொற் பொழிவுகள் என்னும் நூலில் தொகுத்துரைத்துள்ளார். மாதங்கள், கிழமைகளின் பெயர் பற்றிய ஆராய்ச்சியும் ஒளி நூலில் இடம் பெறுகிறது.

## கீழ், மேல்

கீழ்த்திசை என்றும் மேற்றிசை என்றும் தமிழர்கள் பெயரிட்டதன் காரணம், தன்னைத்தானே பூமி சுற்றி வரும் போது கீழ் வரும் திசை கீழ்த்திசை, மேல் வரும் திசை மேற்றிசை என்று பெயரிடப்பட்டுள்ளன என்பார், இ. மு. சு. அவர்கள். இம் மொழிப் பொருட்காரணம் மெய்யாகவோ, கற்பனையாகவோ இருக்கலாம். எனினும் இ. மு. சு அவர்களின் படைப்பாற்றல் இத்தகைய இடங்களில் பளிச்சிடும்.

## கழக ஆட்சியாளருடன்

தொடக்க காலத்திலிருந்தே கழக ஆட்சியாளர் திருவரங்கம்பிள்ளை அவர்களுடனும், அவர்தம் இளவல் வ. சுப்பையாப்பிள்ளையுடனும் நெருங்கிய தொடர்புபுடையவர். இ. மு. சு அவர்கள் வ. சுப்பையாப்பிள்ளை அவர்களுடன் இந்தி எதிர்ப்பு, தமிழாட்சி மொழி, தனித் தமிழ், சுமார்த்த எதிர்ப்பு போன்ற அனைத்திலும் ஒத்தியங்கினார். இருப்பினும் .சைவர்களின் பொது நிறுவனமாகிய (Public Company) கழகத்தைத் தம் குடும்பச் சொத்தைப் போல நிர்வகித்து வருகிறார் என்று அதன் பங்குதாரர் என்ற முறையில் போர்க் கொடி உயர்த்தினார். மறைமலை அடிகளாரின் சந்ததியாரையும், அண்ணன் திருவரங்கம்பிள்ளை சந்ததியாரையும், சரிவர நடத்தவில்லை என்று பேரா. வைரமுத்து போன்றோர் இ. மு. சு அவர்களிடம் புகார் கூறினார். எனினும் இ. மு. சு அவர்களும் திரு வ. சுப்பையாப்பிள்ளை

அவர்களும் இறுதி வரை அண்ணன் தம்பி முறையிலேயே பழகினர்.

## பஞ்சாங்கக் கணிதம்

ஒரு மாதம் இடைவிடாது உழைத்தால்தான் ஒரு வருடப் பஞ்சாங்கத்தைக் கணிக்க முடியும். கோள்நிலை மாற்றங்களைக் கணிப்பதற்குச் சூத்திரங்கள் சிக்கலான கணக்குகளை அடிப்படையாகக் கொண்டவை. இ. மு. சு அவர்கள் ஒரு துணைவன் வைத்துக் கொள்வது வழக்கம். பத்தமடை அருணாசலம்பிள்ளை அவர்கள் மகன் திரு. தியாகராசன், (தற்போது கால்நடைத் துறை அலுவலர் மதுரை) சங்கரன் கோவில் வீரபத்திரபிள்ளை அவர்கள் மகன் திரு பரமசிவன் (தற்போது அஞ்சல் தந்திக் கணக்குத்துறை அலுவலர் சென்னை) சதாசிவ சுப்பிரமணியப்பிள்ளை அவர்கள் மகன் டாக்டர் பி. எஸ். சங்கரபாண்டியன் போன்றோர் உடனிருந்து உதவுவர்.

## மாடசாமி பஞ்சாங்கம்

மேலும் ஒரு புரட்சியை இ. மு. சு அவர்கள் செய்தார். தாழ்த்தப்பட்ட குலத்தைச் சார்ந்த மாடசாமி என்பவருக்குப் பஞ்சாங்க கணிதம் (1954) கற்பித்து அவர் பெயரில் பஞ்சாங்கம் வெளிவரச் செய்தார். பஞ்சாங்க கணிதம் உயர் ஜாதி இந்துக்களின் தனியுரிமை என்பதை நடைமுறை வழி மறுத்தார். பாரதியார் தாழ்த்தப்பட்டவருக்குப் பூநூல் போட்டதைப் போன்றது இந்நிகழ்ச்சி. இறுதியில் பஞ்சாங்கக் கணிதத்தை வேறு யாருக்காவது கற்பிக்க வேண்டும் என்று பெரிதும் விரும்பினார். கணிதத்தில் ஆர்வமின்மையால் நானும் என் போன்ற பிறரும் மறுத்துவிட்டனர். எனவே தம் கலையை மற்றவருக்குக் கற்பித்துச் செல்லும் எண்ணம் நிறைவேறவில்லை, அவர் மறைவுக்குப் பின்னர் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் வேறு ஒரு சோதிடரை நாடவேண்டிய நிலை ஏற்பட்டது.

# 9. நூலாசிரியர்

ஓயாமல் படித்துக் கொண்டும் எழுதிக் கொண்டும் இ. மு. சு. அவர்கள் இருப்பார். தமிழ்ப் பணிகளுக்காகச் சென்னைக்கும், நெல்லைக்கும், சங்கரன் கோவிலுக்கும் இடையே சுற்றுப்பயணம் மேற்கொள்வார். சிலசமயங்களில் நடந்திடவும் தயங்கமாட்டார். நூல்கள் இயற்றுவதின் மூலமாகவும், கட்டுரைகள் எழுதுவதன் மூலமாகவும், சொல்லாக்கங்களின் மூலமாகவும் இடையறாது தமிழ்ப் பணி இயற்றி வந்தார். ஏராளமான நூல்களை இயற்றிக் குவித்தார். நூல் பல இயற்றிய வல்லாளர். (Prolific writer) அவரியற்றிய நூல்களை வகைப்படுத்தி இவண் சுருக்கமாக ஆராய்வோம். ஒவ்வொரு வகை நூல்களும் தனி ஆய்விற்கு ஏற்புடையன. விரிக்கிற் பெருகும், தொகுப்பின் எஞ்சும்.

## இலக்கிய ஆய்வு

திருக்குறள் உலகப் பொதுமறை என்னும் நூலில் காமத்துப்பாலை முன்னர் வைத்து ஆராய்கின்றார். களவியலையும், கற்பியலையும், முதலில் தொடங்குகிறார்.

> 'காதல் ஒருவனைக் கைப்பிடித்து—அவன்
> காரியம் யாவிலும் கைகொடுத்து'

வாழ்கின்ற வாழ்க்கைதான் இது.

> "இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு
> அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்'

என்னும் தொல்காப்பியச் சான்றினை ஒட்டி அமை

கின்றது. தொடக்கத்தில் சிறிது நாடகப் பாணியில் அமைந்த நூல் பின்னர் இயற்றமிழில் தவழ்கிறது. இந்நூல் பற்றிய தம் முன்னுரையில் திரு மு. இரா. பெருமாள் முதலியார் பின்வருமாறு கூறுகிறார்;

''இந்நூலில் குறட்பாக்கள் இனிய தமிழ் உரை நடையில் எழுதப் பெற்றிருக்கின்றன. ஆங்காங்கு குறளின் நுண் பொருள்கள் சுருக்கமாக—ஆனால் தெளிவாக—விளக்கப் பட்டிருக்கின்றன. இவ்விளக்கத்தின் மூலம் திருக்குறள் உலகப் பொது மறைதான் என்ற உண்மை எங்கும் ஏற்றுக் கொள்ளும் முறையில் உறுதியாக்கப் பெறுகின்றது

"வள்ளுவன் தன்னை உலகினிக்கே தந்து
வான்புகழ் கொண்டதமிழ் நாடு'

என்று பாடித் தமிழன் மகிழ்வது சாலப் பொருந்தும் என்ற உண்மை வலிபெறுகின்றது...மேலும் வீட்டியலைப் பற்றி வள்ளுவர் கருத்துக்களை எல்லாம் தொகுத்தெழுதியிருக்கும் முறையும், குறளின் பல அதிகாரங்களுக்கிடையே காணப்படும் தொடர்ச்சிப் பொருத்தம் காட்டப்பட்டிருக்கும் முறையும் படித்துப் பாராட்டத்தக்கன,"

வள்ளுவர் வகுத்த வாழ்வியலைப் பற்றிய ஒரு முழுமையான கண்ணோட்டமாக இந்நூல் அமைகிறது. வெறும் கருத்துரைக் கோப்பு போன்று காணப்படினும், இவ்வெளிய உரையின் ஊடே ஒரு கருத்துத் தொடர்ச்சி ஊடுருவி நிற்பதைக் காணலாம். வாழ்வு முறையின் அகக் காட்சி (Vision of life) என்று இந்நூலைக் கணித்தறியலாம்.

## இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் வரலாறு

திருவள்ளுவர் இருபதாம் நூற்றாண்டு (1869—1968) என்னும் கால கட்டத்தில் எழுந்த தமிழ் நூல்களின் வரலாற்றைத் தொகுத்துரைப்பது இ. மு. சு. அவர்களின் நோக்கம். முதல் ஒன்பது பகுதிகள் வெளி வந்துள்ளன.

பத்தாம் பகுதி அச்சிற்குத் தயாராக சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தில் இருக்கின்றது.

## தமிழிலக்கிய வரலாற்றின் முழுமையான கண்ணோட்டம்

இருபதாம் நூற்றாண்டின் முதற் பகுதியில் பெரும் பகுதி சங்க கால முதல் வள்ளுவர் இருபதாம் நூற்றாண்டு ஈறாகத் தமிழிலக்கிய வரலாற்றைச் சுருக்கி உரைப்பதாகும். தற்கால இலக்கிய வரலாற்றை முற்கால வரலாற்று சூழலிலும் (Historical perspective) மரபின் பின்னணியிலும் (traditional back-ground) காணவேண்டும் என்று இ. மு. சு அவர்கள் விரும்பினார்.

## செய்தி வங்கி (Data Bank)

இருபதாம் நூற்றாண்டுத் தமிழின் ஒன்பது பகுதிகளும் அரிதின் முயன்று தொகுத்த செய்தி வங்கி (Data Bank) ஒன்றினைத் தன்னகம் கொண்டுள்ளன. செய்திகளைத் திரட்டுவதற்கு அப்புலவர்கள் வாழ்ந்த இடங்களுக்குச் செல்லவும் தயங்க மாட்டார். பொன்மாறு நடேச முதலியார் அவர்கள் வாழ்க்கை வரலாற்றுச் செய்திகளைச் சேகரிப்பதற்காக திரு வீ. கார்த்திகேயன் (அவ்வமயம் தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர்) அவர்களுடன் பொன்மாறு கிராமத்திற்குச் சென்றதை ஒரு எடுத்துக் காட்டாகக் கொள்ளலாம்.

செய்திகளைத் தொகுத்தும் வகுத்தும் (Analysis and Synthesis) தம் இலக்கிய வரலாற்றை இயற்றினார். இலக்கிய வரலாற்றின் இயக்கங்களையும் போக்குகளையும் (Trends and tendencies) சுட்டிக் காட்டுவதைவிட நூலாசிரியர்களின் வாழ்க்கை வரலாற்றையும் நூலாராய்ச்சியையுமே இவர் நூலில் காணலாம்.

காலஆராய்ச்சி

சிலப்பதிகார காலத்தையும் புத்த நிர்வாண காலத்தையும் ஏற்கனவே 1924 இல் நடந்த கீழ்த்திசை மாநாட்டில் (All India oriental conference) நிர்ணயித்து ஆய்வுக் கட்டுரை இ. மு. சு அவர்கள் படித்துள்ளார்.

இலங்கை மன்னன் கயவாகுவேந்தன் தமிழகம் போந்த ஆண்டு (கி. பி. 149) இலங்கை மகாவமிசத்தில் புத்த நிர்வாண ஆண்டுக் கணக்கில் அமைந்திருந்தமையால், முதற்கண் புத்த நிர்வாண ஆண்டினை நிர்ணயிக்க முற்பட்டார். புத்தர் நிர்வாணம் அடைந்தது வைகாசி மாதம் செவ்வாய்க் கிழமை பௌர்ணமி நடு நிசியில். கி. மு. 483 இலும் ஆடிச் செவ்வாய் பௌர்ணமி வருகின்றது ஆயினும் கி. மு. 493 இல் வரும் ஆடிச் செவ்வாயே புத்த நிர்வாணகால மென்று பற்பல சான்று காட்டி இ. மு. சு அவர்கள் நிர்ணயிக்கின்றார்.

சிலப்பதிகாரகாலம்

மதுரை எரிந்தது பற்றிய காலக் குறிப்புக்கள் சிலப்பதிகாரத்திற் கூறப்பட்டுள்ளன.

'ஆடித் திங்கள் பேரிருட் பக்கத்து
அழல்சேர் குட்டத்து அட்டமி ஞான்று
வெள்ளி வாரத்து ஒள்ளெரி உண்ண
உரைசால் மதுரையொடு அரசு கேடுறும் எனும்
உரையும் உண்டே''

(சிலம்பு 23 கட்டுரைகாதை 133—137)

ஆடி மாதம் வெள்ளிக் கிழமை தேய்பிறை அட்டமி திதியில் பரணிக்கு மேல் கார்த்திகையில் மதுரை எரிந்தது. திரு எல். டி. சாமிக்கண்ணுப்பிள்ளை அவர்கள் மதுரை எரிந்தது கி. பி. 756 என்று வானநூற் சான்று காட்டிக் கூறுகின்றார். அவற்றை மறுத்து இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் முதற் பகுதியிலும், எட்டாம் பகுதியிலும் இ. மு. சு

அவர்கள் எழுதியுள்ளார். எல்லா வகையிலும் பொருந்துவது கி. பி. 144 இல் தான் மதுரை எரிந்த செய்தி பொருந்தி வருகிறது என்று விரிவாக ஆய்ந்து கூறுகிறார்.

## புறநானூற்றுக் கட்டுரைகள்

'நெல்லைச் செய்தி' என்னும் வார ஏட்டில் புறநானூற்றைப் பற்றிய கட்டுரைத் தொடரை இ. மு. சு அவர்கள் வெளியிட்டுள்ளார். அக் கட்டுரைகள் விளக்க முறைத் திறனாய்விற்கு எடுத்துக் காட்டாக அமைவன.

## செய்யுள் நூல்கள்

நினைத்தவுடன் விரைந்து செய்யுள் இயற்றும் திறன் சிறு வயது முதலே இ. மு. சு அவர்களுக்கு உண்டு. ஆற்றொழுக்காகச் செல்லும் அகவற்பாக்களையும் விழுமிய ஓசை நயம் சான்ற வெண்பாக்களையும் விரைந்துபாடும் ஆசு கவியாக இ. மு. சு அவர்கள் விளங்கினார்.

## இராமாயண அகவல்

திருவில்லிபுத்தூர் இந்து உயர் நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் அப்புவையங்காரின் இராமாயணப் பேருரையைக் கேட்டு உளம் சிலிர்த்து 'இராமாயண அகவலைத் தம் பள்ளிப் பருவத்தில் இ. மு. சு அவர்கள் இயற்றி விவேகபோதினி என்னும் பத்திரிகையில் 1913 இல் வெளியிட்டார். தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் திரு வி. கார்த்திகேயன் I. A. S. அவர்கள் தம் முன்னுரையில் பொருத்தமான கருத்துக்களைத் தெரிவித்துள்ளார். "அகவல் தமிழில் புலமை பெறாத சாதாரண மக்களும் படித்துப் புரிந்து கொண்டு சுவைத்து நுகரக் கூடிய எளிய, இனிய அழகிய தீந்தமிழில் அமைந்திருக்கிறது. கதையின் போக்கு விறுவிறுப்பாகவும், அதே சமயத்தில் முதன்மையான நிகழ்ச்சிகள் யாவையும் உட்கொண்டதாகவும் மூல நூல்களை ஒத்துப் போவதாகவும் விளங்குகிறது.

## காந்தி சிந்தாமணி

'உலகப் பெரியார் காந்தி சிந்தாமணி, என்னும் தலைப்பில் 1953 இல் ஒரு அகவற்பா நூலை இ. மு. சு அவர்கள் வெளியிட்டார். கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை தம் முன்னுரையில் பின் வருமாறு கூறுகின்றார்.

'தமிழ்ப்பெரும் புலவர், கணியர் டாக்டர் இ. சுப்பிர மணிய பிள்ளை அவர்கள் இப் புண்ணிய மூர்த்தியின் வர லாற்றை நல்ல முறையில் அழகாக எழுதி வெளியிட்டிருக் கிறார்கள். பிள்ளை அவர்களுடைய தமிழ்ப் பற்றையும் பயிற்சியையும் புலமையையும் குறித்து நான் எடுத்துச் சொல்ல வேண்டியதில்லை. அவற்றைத் தமிழகம் நன்கறி யும். நூல் எளிய இனிய தமிழ் நடையில் யாவர்க்கும் பொருள் விளங்குமாறு அமைந்திருப்பது குறிப்பிடத் தக்கது'

நீதிபதி மாதவய்யா அனந்தநாராயணன் அவர்கள் காந்தி சிந்தாமணி அணிந்துரையில் பின்வருமாறு குறிப்பிடு கிறார்:

'தமது பாஞ்சாலி சபதத்தின் முன்னுரையில் தமிழ் நாட்டுக் கவிஞர் திரு சி. சுப்பிரமணிய பாரதியார் "எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய சந்தம் இவற்றையுடைய காவியமொன்று தற்காலத்திலே செய்து தருவோன் நமது தாய்மொழிக்குப் புதிய உயிர் தருவோனாகின்றான்" என்று அறிவுறுத்துகின்றார். இந்தக் கொள்கையைத் தழுவியது காந்தி சிந்தாமணி. நமது ஆசிரியர் தமிழ்ப் புலவராயினும், அரும்பதங்களை விடுத்து யாவரும் புரிந்து கொள்ளக்கூடிய சுவை மலிந்த எளிய செய்யுள் நடையைக் கையாண்டுள்ளார், ... 'யாரார் சொன்னாலும் இனிக்குமே காந்தி கதை"யென்று ஆசிரியர் கூறுவது அவர் தம் அனுபவமே."

எளிமைக்கும் இனிமைக்கும் எடுத்துக்காட்டு இதோ:

'நாம்செயும் தீமையும் நவிலும் பொய்மையும்
எங்கும் உளன் ஆம் எம்பிரான் காண்பான்
எங்கும் அவன்கண் எல்லாம் கண்டிடும்
எங்கும் அவன்செவி எல்லாம் கேட்டிடும்.'

எனவே புலால் உண்ணமாட்டேன்; பொய் சொல்லமாட்டேன் என்று கடல்கடந்து செல்லும் காந்தி உறுதி பூண்கின்றார்.

செய்யுள் இயற்றினாலும் கோவில் வரலாறுகள் வரைந்தாலும் இ. மு. சு அவர்கள் சொற்பிறப்பாராய்ச்சியிலே ஈடுபடுவார். காந்தி சித்தாமணியில் சொற்பிறப் பாராய்ச்சி பளிச்சிடும் இடம்:

"இயற்கையில் வாய்சொல்லும் சொல்லே வாய்மை
உள்ளம் உள்ளுவது உண்மை; அதனை
மெய்தான் செய்வது மெய்ம்மை."

அரிச்சந்திரன் புராணத்தைக் காந்தி கேட்டார் என்னுமிடத்தில் இவ்வாறு சொற்பொருள் விளக்கம் தருகிறார்.

இந்து முஸ்லிம் ஒற்றுமைக்குப் பாடுபட்ட காந்தி கதையை முடிக்கும்போது பிரிந்து சென்ற பாகிஸ்தான் மீண்டும் இந்தியாவுடன் இணைய வேண்டும் என்கிறார்.

"பாகித்தானும் பழைய இந்தியாவாய்
இணைந்திவ் வுலகவழி காட்டியாகி
வாழிய உலகினர் வாழிய
மாமுனி மாண்பு வாழிய வாழியவே"

என்று முடிக்கின்றார்.

## வாழ்க்கை வரலாற்று நூல்கள்

கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் வாழ்க்கை வரலாற்றினை சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக வாயிலாக

வும், கப்பலோட்டிய தமிழன் வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்கள் வரலாற்றினை சிவகாமி பப்ளிஷிங் ஹவுஸ் மூலமாகவும் வெளியிட்டார். இவ்விரு பெருமக்களையும் நேரில் கண்டு பழகும் பேறு பெற்றவர் இ. மு. சு அவர்கள். எனவே சீரிய வாழ்க்கை வரலாற்று நூல்களாக அமைந்ததில் வியப்பில்லை. நெல்லைத் தமிழ்ப் புலவர்கள் வரிசையில் இரண்டு நூல்கள் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக வழி வெளியிட்டுள்ளார். இருபதாம் நூற்றுண்டுத் தமிழ் வரலாற்றின் ஒன்பது பகுதிகளில் இரண்டுபகுதிகளில் பெரும் பகுதியை மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் பேராசிரியர் மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளை ஆகிய இருவருக்கும் ஒதுக்கியுள்ளார். சிறிது மிகை என்றே கூறலாம். எனினும் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் மிகச் சிறந்த செய்யுளாசிரியர் என்று இ. மு. சு கருதினார். பேரா. சுந்தரம் பிள்ளை அவர்களின் தமிழ்ப் பற்றும் மனோன்மணீய நாடகமும் இ. மு. சு அவர்களைப் பெரிதும் கவர்ந்தன.

## தூய எளிய தமிழ் நடை

நெல்லை மாவட்டக் கோவில் வரலாறு முன்னுரையில் 'தூய எளிய தமிழ் நடை' என்று முன்னாள் முதலமைச்சர் மூதறிஞர் பெரியவர் மீ. பக்தவத்சலம் அவர்களால் பாராட்டப்பெற்ற இ. மு. சு அவர்களின் தமிழ் நடை பாவாணரும் போற்றும்படியாக இருந்தது. மொழி ஞாயிறு ஞா. தேவ நேயப் பாவாணர் அவர்கள் கூறுவார்:

'தமிழ்ப் பகைவன் பக்தவத்சலம் ஆட்சியிலும் தூய தமிழ்ச் சொற்களை இ. மு. சு அவர்கள் ஆட்சி அகர முதலியில் புகுத்தி வந்தார்.'

கலப்புத் தமிழ், தனித் தமிழ் ஆகிய இரு வேறு பாசறைகளும் பாராட்டும் தூய எளிய தமிழ் நடை இ. மு சு அவர்களுக்குக் கைவந்த கலையாகும்.

# 10. மறைவு

நெல்லையில் சென்னை மாகாணத் தமிழ்ச் சங்க அலுவலகம் மூடப் பெற்றது. சங்கப் பணியாளர்களுக்கு ஊதியம் தருவதில்லை என்று 1967 இறுதியில் செயற்குழு தீர்மானித்தது. தம் கையிருப்பிலிருந்து சிறிது காலம் பணியாளர்களுக்குச் சம்பளம் கொடுத்து வந்தனராலும், தம் இளைய மகன் சுந்தரமூர்த்தியின் தொல்லையாலும் கையிருப்பு கரைந்தது. சங்கரன் கோவிலுக்கு இ. மு. சு அவர்கள் திரும்ப நேரிட்டது.

## வளர்ச்சியும் சரிவும்

இ. மு. சு அவர்களின் தமிழ்ப் பணித் திட்டங்களின் வெற்றிக்கு மேல் மட்டத்தில் அவரது மாணவர் S. வெங்கடேசுவரன் I. C. S. அவர்களும், கீழ்மட்டத் தொண்டராக தமிழாசிரியர் செல்லச்சாமிப் பாண்டியனும் விளங்கினார்கள். இவ் விருவருமே ஒரு வகையில் அவருடைய சரிவிற்கும் "காரணமாயினர். திரு S. வெங்கடேசுவரன் அவர்கள் தமிழுக்கு ஒரு சிறிதும் சம்பந்தமில்லாத லயன் அதிபர் மு. சோமசுந்தரம் பிள்ளை அவர்களையும் மேடைதளவாய் இராமலிங்க முதலியாரையும் தனிப்பட்ட நண்பர்கள் என்ற முறையில் சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தின் செயற்குழுவில் சேர்த்தார். அவர்கள் தம் அதிகாரத்தைப் பயன்படுத்தும் கூட்டுறவுச் சங்கத்தைப் போலச் சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தையும் நினைத்துச் செயல்பட்டனர். அது அதிகாரப் போட்டியாக உருவெடுத்து (Power Politics) சங்கப் பணிகள் முடக்கப் பெற்றன.

நிழல்போல் தொடர்ந்து தொண்டாற்றிய செல்லச் சாமிப் பாண்டியன் அவர்கள் மாற்றுப் பாசறை உறுப்பினர் களைச் சேர்ப்பதற்குத் தம்மை அறியாமலே உடந்தையாக இருந்து விட்டார். அதனால்தான் சங்கம் கைமாறியது. இருப்பினும் இ. மு. சு அவர்களை நீக்கும் முதல் முயற்சியை முறியடித்தவரும் அவரே தான். சங்க வெள்ளி விழா மலர் களைக் கையிலேந்தி இ. மு. சு அவர்களை நீக்கும் முயற் சிக்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்தி, உண்ணாவிரதம் இருப்பதாகவும் அச்சுறுத்தி உறுப்பினர்களைச் சந்தித்து முதற்படியில் வெற்றியும் பெற்றார் எனலாம்.

## இ. மு. சு. நூலகம்

சங்கரன்கோவில் திரும்பிய பின் இ. மு. சு அவர்களின் வாழ்க்கை சரியாக அமையவில்லை. தம் இல்லத்தின் இரு மாடிகளிலும் 7500க்கு மேற்பட்ட தனி நூலகம் (சங்க நூலகம் நெல்லையில்) வைத்திருந்தார். அவரது கையிருப்பு கரைந்துவிட்டதால் இளையமகன் அந்நூல் களை எடைக்குப் போட்டு விட்டான். நூல்கள் வைத் திருந்த மரப்பேழைகளும் இருமுறை விற்கப்பெற்றன.

## செந்தமிழ்ச் செல்வி தலையங்கம்

இ. மு. சு நூலகத்தின் மறைவு பற்றி சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக ஆட்சியார் திரு வ. சுப்பையாப்பிள்ளை அவர்கள் செந்தமிழ்ச் செல்வியில் ஒரு தலையங்கமே எழுதினார். பன்முறை நூல்களைப் பாதுகாப்பாக வைத் திருக்க மறையலையடிகள் நூலகத்திற்கு அளிக்குமாறு இ. மு. சு அவர்களை வேண்டியும் அவர் நூல்களைக் கொடுக்காதது பேரிழப்பாக முடிந்தது என்று குறிப் பிட்டார். அதுமட்டுமன்று.

சென்னையிலிருந்து சங்கரன் கோவில் சென்று எடைக் குப் போடப்பட்ட கடைகளில் சில அரிய பழைய நூல்களை

வ. சுப்பையாப்பிள்ளை அவர்கள் விலைக்கு வாங்கினா ரென்றால் அவர் புத்தகங்களின்பால் கொண்ட அன்பு எத்தகையது!

## சொத்துக்களை முறைப்படுத்தி உயிலெழுதுதல்

இச்சூழ்நிலையில் இ. மு. சு அவர்களின் உடல் வலுவும் குன்றியது. தம் சொத்துக்களை நீதி முறையில் பங்கிட்டு உயிலெழுதினார். இளைய மகன் ரொக்கம் பெற்றதற்கு மாறாக மூத்த மகனுக்கு நிலங்களை அதிகமாக எழுதி வைத்தார். தம் பெண் மக்களுக்கும் ஓரளவு நிலம் ஒதுக் கினார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## சென்னையில் மூத்த மகனுடன்

1971 முதல் 1974 இறுதி வரை தம் மூத்த மகனுடன் சைதைதாடண்டர் நகரில் தங்கி வாழ்ந்தார். சில வேளை களில் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் சென்று கழக ஆட்சியாளர் திரு வ. சுப்பையாப்பிள்ளை அவர்களுடன் உரையாடி மகிழ்வார். இன்றும் சில வேளைகளில் தமிழ் வளர்ச்சி இயக்ககத்தில்தனி அலுவலர் சிலம்பொலிசெல்லப் பனாருடன் அளவளாவுவார். ஒரு முறை அரும்பாக்கம் சென்று தம் பழைய நண்பர் நீதிபதி வி. பலராமய்யா அவர்கள் நடத்தி வந்த சித்த வைத்திய ஆராய்ச்சி நிலை யத்தைக் கண்டு மகிழ்ந்தார். மற்றொரு முறை திரு ந. து. சுந்தரவடிவேலு அவர்களைச் செனாய் நகரில் கண்டு பேசினார்.

தாடண்டர் நகரில் வாழும் பாலசுப்பிரமணியம் என்னும் சைவத் தமிழ் அன்பரும், சைதை குயவர் வீதி யைச் சார்ந்த நரசிம்மன் என்பாரும் அடிக்கடி இ. மு. சு அவர்களைச் சந்தித்துச் சைவ சித்தாந்தத்தையும், சைவப் புராணங்களையும் பற்றிக் கலந்துரையாடுவர்.

## மீண்டும் தமிழ்ச் சங்கம் சென்னையில் அமைக்க முயற்சி

சைதை ஆசிரியர் கல்லூரி முதல்வர் K. R. மாணிக்கம் அவர்கள் துணையுடன் சென்னையில் தமிழ்ச்சங்கம் நிறுவ இ. மு. சு அவர்கள் முயன்றார். சங்க அமைப்புக் கூட்டம் ஓய்வுபெற்ற கல்வி அலுவலர் S. வடிவேலுப் பிள்ளை அவர்கள் இல்லத்தில் கோடம்பாக்கம் புலியூரில் நடைபெற்றது. ஆனால் வடிவேல் பிள்ளை அவர்கள் ஒத்துழைக்க முன்வராமையால் அம்முயற்சி வெற்றிபெறவில்லை.

## அறிஞர் ஓய்வூதியம் பெற முயற்சி

நாற்பது ஆண்டு தமிழாசிரியராகப் பணியினை முடித்து, நாற்பது ரூபாய்தான் இ. மு. சு அவர்கள் ஓய்வூதியம் பெற்றுவந்தார். அறிஞர் ஓய்வூதியம் (Scholar Pension) வேண்டுமென்று தமிழக அரசிற்கு விண்ணப்பித்திருந்தார். ஆனால் தமிழக அரசு அவர் ஏற்கனவே ஓய்வூதியம் பெற்று வருகின்றமையாலும், சிறை சென்றவர்களுக்கே அவ்வமயம் அத்தகைய ஊதியம்— இப்போது சிறை செல்லாதவர்களுக்கும் தரப்படுகிறது— தரப்படும் என்றும் கூறி மறுத்தது. கல்வித் துறைச் செயலர் கா. திரவியம் ஆதரித்தும் பயனில்லை.

## தமிழகப் புலவர் குழு

தமிழகப் புலவர் குழுக் கூட்டங்களுக்குத் தொடக்க முதல் சென்று வந்தார் இ. மு. சு. இறுதிக் காலத்திலும் பொது வாழ்வில் அவர் தொடர்பு தமிழகப் புலவர் குழுவின் வாயிலாக நீடித்தது. தம் மறைவிற்கு ஓராண்டிற்கு முன் வரை தமிழகப்புலவர் குழுவில் உடல் நலிவுடன் இயங்கி வந்தனர். பின்னர் தாமாகவே விலகிவிட்டார்.

டில்லியில் நடைபெற்ற தமிழகப் புலவர் குழுக் கூட்டத்தில் அந்நாள் முதலமைச்சர் கலைஞரும் நாவலரும் இருந்த நேரத்தில் தம் ஓய்வூதிய விண்ணப்பத்தைப் பற்றி இ.மு. சு அவர்கள் கலைஞரை வினவினார். அதற்குக் கலைஞர் 'ஐயா, அது சிறை சென்றவர்களுக்கு அல்லவா தரப்படும்' என்றார். இ. மு. சு அவர்கள் நகைச்சுவையாக, 'என்னை வேண்டுமானால் இப்போது சிறையில் அடைத்துவிடுங்கள்' என்று கூறச் சிரிப்பொலி மிகுந்தது.

## பெரியார் தலையங்கம்

ஓய்வூதிய விண்ணப்பத்தைத் தமிழக அரசிற்கு அனுப்பியபின் பெரியாரையும், விடுதலை ஆசிரியர் கி. வீரமணி அவர்களையும் இ. மு. சு அவர்கள் சந்தித்தார். இ. மு. சு அவர்களை ஆதரிக்கும் நோக்கத்துடன் சந்திரசேகரப் பாவலராய் அவர் தம்மான இயக்கத்திற்குச் செய்த தொண்டினை நினைவு கூர்ந்து 'விடுதலையில்' தலையங்கத்திலேயே குறிப்பிட்டுப் பெரியார் எழுதினார். இது மிகப் பெரிய செய்தி—இருப்பினும் இ. மு. சு அவர்களின் முயற்சிகள் வெற்றிபெறவில்லை.

## சங்கரன் கோவிலில் அண்ணாசாலை

1968 இல் சங்கரன்கோவில் கச்சேரித் தெரு அண்ணா சாலை என்று பெரியாரால் பெயரிடப் பெற்றது. அந்தக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கியவர் இ. மு. சு அவர்கள் அதுவே அங்கு அவர் நடத்திய இறுதிக் கூட்டம் எனலாம்

## சங்கரன்கோவில் திரும்புதல்;

79 வயது நடந்து முடியப்போகும் வேளையில் 80 வது ஆண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாட வேண்டுமென்று இ. மு. சு அவர்கள் விரும்பினார். எனவே சென்னையிலிருந்து சங்கரன்கோவில் திரும்பினார். கூடலூர

-ரில் விவசாயம் பார்த்து வந்த அவரது மனைவியார் ஈசுரவடிவம்மையாரும் சங்கரன்கோவில் வந்து அவருடன் சேர்ந்து வாழ்ந்தார்.

உடல்நலிவுறல்;

சிறிது காலம் மூச்சுத்திணறலினாலும் கால் வீக்கத்தாலும் இ. மு. சு அவர்கள் வருந்தினார். சென்னையில் இருந்துபோது டாக்டர் A. துரை அவர்களும், சங்கரன் கோவில் டாக்டர் சீனிவாசன், டாக்டர் வேல்ராஜன் ஆகியோரும் இ. மு. சு அவர்களிடம் அன்பு காட்டிப் பணம் பெறாமலே மருத்துவம் செய்து வந்தனர்.

இ. மு. சு அவர்களின் நீத்தல் விண்ணப்பம;

உடல் நலிவுற்ற காலத்தும், உருக்கமான வெண்பாக்களை இயற்றித் தம்மை அழைத்துக் கொள்ளுமாறு இறைவனை வேண்டுவதிலே காலம் கழித்தார். அவற்றுள் சில பின்வருமாறு;

பிச்சை எடுக்கும் பெருமானே பேதையென்
இச்சை யுடன்உன் இணையடியே—நச்சினேன்
எந்தன் சிறுமையினால் எம்பெருமான் துன்புறுவேன்
சிந்தைகொண்டு சீரருளே செய்.
உள்ளம் கலங்கினேன் ஓயாது துன்புற்றேன்
மெள்ள வரும் உன் திருவருள்தான்—கள்ளமிலை
என்றென்றே நின்றேன்நான் ஏங்கித் துடிதுடித்தேன்
என்றுன் அருள்வரு மோ?

மறைவு

24-3-1975 அன்று தம் மாடியில் இருந்து கொண்டே சங்கரலிங்கப் பெருமானின் கோபுரதரிசனம் கண்டவாறு இ. மு. சு. அவர்கள் இயற்கை எய்தினார். நெல்லை மாவட்டத்தின் பல இடங்களிலிருந்தும் உற்றார் உறவினர்

சூழ அவர்தம் இறுதி ஊர்வலம் 25-3-1975 அன்று நடைபெற்றது.

## இடுகாட்டில் இரங்கல் கூட்டம்

சங்கரன் கோவில் சைவ வேளாள மகிமைச் சங்கத்தார் சுடுகாட்டில் பிள்ளையார் கோவில் மண்டபத்தில் இரங்கல் கூட்டம் புலவர் தம் பூத உடல் தீயிலிட்ட உடனேயே நடத்தினர். அவ்வமயம் பேரா ந. சேதுரகுநாதனவர்கள் ஆற்றிய இரங்கலுரை மறுத்தற்பாலதன்று. உணர்ச்சி மேலிட்டு 'ஐயா அவர்கள் தமிழ்க்கல்விக்கு வழிகாட்டியிருக்கா விட்டால், நான் மாடு மேய்க்கப் போயிருப்பேன்' என்று உரைத்தனர். மற்றும் பலரும் இரங்கலுரை ஆற்றினர்.

## இ. மு. சு. அவர்களின் பண்போவியம்

ஒருவரது மறைவிற்குப் பின்னரே அவர்தம் பண்போவியம் நன்கு உணரப்படும். எளிய வாழ்க்கை நடத்திய இ. மு. சு அவர்கள் சிக்கனத்திற்குப் பேர் போனவர். தமிழுக்காக ஏதாவது செய்து கொண்டே இருப்பார். மருத்துவக் கல்லூரி, பொறியியற் கல்லூரி, ஆசிரியர் கல்லூரிகளில் இ. மு. சு அவர்கள் பரிந்துரையால் சேர்க்கப்பட்டவர்கள் பலர். ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் ஏராளமானவர் இவரால் சேர்க்கப்பட்டுப் பள்ளி ஆசிரியராகி உய்ந்தனர். வேலை வாங்கிப் பலருக்குக் கொடுத்திருக்கிறார். வேலையிலிருந்து விலகிய அல்லது விலக்கப்பட்டவர்களுக்கு மீண்டும் வேலை வாங்கிக் கொடுத்திருக்கிறார். இறுதிக் காலத்தில் தம்மால் பயன்பெற்றோர் தம்மை வந்து பார்ப்பதில்லை என்று வருந்துவார். பின் இதுவே உலகியற்கை என்று புரிந்து கொண்டார். சில மெய்யன்பர்களே இறுதிவரை உறுதியாகத் தொடர்பு கொண்டனர்.

'குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்'

என்பது வள்ளுவர் வாக்கு. இ. மு. சு அவர்களின் பண்போவியத்தில் குணம் மிகுந்து காணப்படுகிறது. பிடிவாதப் போக்கு, இணக்கமின்மை போன்ற குறைபாடு களும் உண்டு.

இ. மு. சு அவர்களின் கற்பனைப் படைப்பாற்றல் (Creative Imagination) தமிழ்ப்பணித் திட்டங்களைத் தொலை நோக்குடன் வகுப்பதில்தான் இருந்தது. கலைச் சொல்லாக்கத் திட்டம், ஆட்சிச் சொல்லகராதி தொகுப்புத் திட்டம், ஆசிரியர் கல்லூரிக் கலைச் சொல்லாக்கம், இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் வரலாறு, திருவாசக உரை, சங்க இலக்கியத் தெளிவுரை, சொல்லடைவு, பொரு ளடைவு, என்று அடுக்கடுக்காகப் பணித் திட்டங்களை உருவாக்கி நிறைவேற்றி வந்தார்.

இ. மு. சு அவர்களின் பண்பு 'நலன்களைப் பாவேந்தர் பாரதிதாசன் படம் பிடித்துக் காட்டுகிறார்'.

'நேர்மை நீதி அஞ்சாமை
நிறைந்த பன்னூல் தேர்புலமை
சீர்மை கனிய நூலறிவு
சித்தாந்தத்தில் பேரறிவுக்
கூர்மை'

## வெற்றிச் சிறப்புக்களுக்கு விருதுகள் பெறவில்லை

பலதுறைகளில் பாரறியப்பணி செய்த இ. மு. சு அவர்கள் வெற்றிச் சிறப்புக்களுக்கு விருதுகள் பெற வில்லை. பாவாணர் மொழியில் சொல்லப் போனால் 'மாராய நெடுமொழி மருவாது சென்றோன்' இ. மு. சு அவர்களுடைய பல்துறைப் பணிகளை ஒரு மெய்க்கீர்த்திக் கல் வெட்டுப் போல பாவாணர் வரைந்துள்ளார்.

"சங்கர நயினார் கோவிற் சான்றோன்
ஒப்பிலா இ. மு. சுப்பிர மணியன்
வேளாண் குடிநலம் விளங்கிய தமிழன்
ஐந்திறக் கணியன் அருங்கலை வல்லோன்
தமிழ மருத்துவம் தவலறத் தெரிந்தோன்
தமிழர் வாழ்வே தனதெனக் கொண்டோன்
தமிழா சிரியத் தகுபணி புரிந்தும்
சென்னை மாநிலத் தமிழ்க்கழ கமைத்தும்
தமிழ்த்தாய் மாதிகை தனைவெளி யிட்டும்
மறுபெயர் கொடு தமிழ் மானங் காத்தும்
கலைச்சொல் லாக்கம் கவினுறக் கண்டும்
ஆட்சிச் சொற்கள் அமைவுறத் தொகுத்தும்
அல்லும் பகலும் அரைநூற் றாண்டுமேல்
அரும்பாடு பட்டுப் பெரும்பணி யாற்றியும்
பொருளில் புனைந்துரை புகலாமையாலும்
ஆர வார நீர்மை யிலாதும்
மாராய நெடுமொழி மருவாது சென்றோன்"

*இ. மு. சு. அவர்களின் மாயாத மெய்க்கீர்த்தி இது. அனைத்துப்பணிகளின் எல்லைகளையும் பாவாணரைப் போல் தொகுத்துக் கூற வேறு எவராலும் முடியாது.*

# 1. கவிஞர் நெஞ்சில் இ. மு. சு.

## புரட்சிக் கவிஞர், பாவேந்தர் பாரதிதாசன்

நேர்மை நீதி அஞ்சாமை
நிறைந்த பன்னூல் தேர்புலமை
சீர்மை கணிய நூலறிவு
சித்தாந் தத்தில் பேரறிவுக்
கூர்மை, ஆர்யக் கூட்டத்தைக்
குப்பை கூளப் புராணத்தைத்
தீர்ப்பு ரைக்கும் திறனாய்வால்
தெளியச் செய்தான் தமிழ்நிலமே!

செந்தமிழுக்குத் தீதென்றால்
சிறுகுறும்புப் பார்ப்பனர்கள்
முந்துவார்கள் அவர்கள்தம்
மூக்கறும்படிச் செய்யும்
தந்தை பெரியாருக் கொரு துணைவன்
தமிழன் குடியரசேடுதனில்
சந்திர சேகரப் பாவலனாய்ச்
சாய்த்தான் பார்ப்பார் கொட்டத்தை

இராமாயணத்தில் இழிவெல்லாம்
எத்துப் புலவர் கூற்றெல்லாம்
பராவி வணங்கும் வால்மீகி
பல்லைப் பிடித்துக் காட்டியவன்

வராத தீமை வந்த தெலாம்
வழிபட் டேற்ற கம்பனவன்
திராவிடத்தில் செய்யும் தீமை
தெரியச் செய்தான் இ.மு.சு.

பாரதத்தின் பார்ப்பனரின்
பழக்க வழக்க ஒழுக்கமன்றி
வீரம் நீதி ஒன்றுமிலை
வெட்கம் கெட்ட குடும்பத்தின்
சோரம் போன கதையென்று
தோலுரித்துக் காட்டியதார்?
சாரம் மிகுந்த எங்களுயர்
சந்திர சேகரப் பாவலனே!

15-4-48 **தமிழ்நிலம்**
புகழ்மலர்கள்—பூம்புகார்ப் **பிரசுரம்**

## மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர்

'புன்னைக் காடென முன்னைப் பெயர்கொள்
சங்கர நாயினார் கோவிற் சான்றோன்
ஒப்பிலா இ. மு. சுப்பிர மணியன்
வேளாண் குடிநலம் விளங்கிய தமிழன்
ஐந்திறக் கணியன் அருங்கலை வல்லோன்
தமிழ மருத்துவம் தவலறத் தெரிந்தோன்
தமிழுக் கேதனைத் தத்தஞ் செய்தோன்
தமிழர் வாழ்வே தனதெனக் கொண்டோன்
தமிழாசிரியத் தகுபணி புரிந்தும்
சென்னை மாநிலத் தமிழ்க் கழ கமைத்தும்
தமிழ்த்தாய் மாதிகை தனைவெளி யிட்டும்
மறுபெயர் கொடு தமிழ் மானங் காத்தும்

கலைச்சொல் லாக்கம் கவினுறக் கண்டும்
ஆட்சிச் சொற்கள் அமைவுறத் தொகுத்தும்
அல்லும் பகலும் அரை நூற்றாண்டு மேல்
அரும் பாடுபட்டுப் பெரும்பணி யாற்றியும்
பொருளில் புனைந்துரை புகலாமை யாலும்
ஆரவார நீர்மை யிலாதும்
மாராய நெடுமொழி மருவாது சென்றோன்.'

**(புன்னைப் பாட்டு சிறப்புப் பாயிரம் 1975)**

சங்கரன் கோயிலிற் சமைந்த தமிழ் மகன்
எங்ஙணும் இ. மு. சு என்னும் புகழினன்
வண்கலை யாட்சிகள் வழங்கு காலெலாம்
பொங்கு தென் சொற்களும் புலம்பப் போயினன்.

**(இரங்கற்பா 3-4-79)**

கனிதமிழின் வேந்தர்

## கழுகுமலை வை. பூ. சோமசுந்தரம்

கலைச் சொற்கள் ஆக்குவித்த
கனிதமிழின் வேந்தர்
நிலையான வரலாறு
நெறிப்படுத்த நல்லார்
வானியலும் மருத்துவமும்
வண்டமிழும் வல்லார்
கோனியலும் கோணியலும்
கொண்டுரைத்த நம்பி!

புலவரவை மணந்திருக்கப்
பொலிந்திருந்த செம்மல்!
போய் மறைந்தார் இ. மு. சு
பொங்கி வரும் துன்பம்!

தமிழுணர்வின் பிறப்பிடமே!
தாழ்வில்லா உழைப்பே!
அமிழ்தனைய கருத்தூறும்
அரும் நெஞ்சக் கடலே!

மறைந்தீரோ? விரைந்தீரோ?
வாட்டுது நும் பிரிவே!
வளர்த்தீரோ தமிழ்ப் பயிரை
வடித்திடும் கண்ணீரே!

—செந்தமிழ்ச் செல்வி
(இரங்கற்பா 1-4-75)

கவிஞர், பேராசிரியர்

## டாக்டர் இ. சு. முத்துசாமி

காதிலே சிவப்புக் கடுக்கன்,
காலிலே பாட்டாச் செருப்பு
கையிலே மான்மார்க் குடைதான்
ஏறுநெற்றி, அகல் விழிகள்!
தமிழர் மானங் காத்த
சந்திர சேகரப் பாவலன்!
தமிழுக்காக எழுதி எழுதி
ஓய்ந்திடாக் கைவிரல்கள்!

தமிழ்ப் பணியில் நடையாய் நடந்தும்
தளர்ந்திடாக் கால்கள்
சொல்லாக்கக் குழுவிலே
சோர்வின்றி உழைத்தனன்!
வடமொழிக் காமுகன்
வையாபுரியைச் சாடினன்!
தமிழ் மொழி இயல்பினை
அழிவிலாது காத்தனன்!

ஆட்சி மொழியாய் அமைந்திட
அனைத்துக் கட்சி மாநாடு,
ஆட்சிச் சொல்லை உருவாக்கி
அல்லும் பகலும் போராடினன்!
சுமார்த்தர் முறைகளை வெறுத்தனன்
ஆக்கினன் சைவப் பஞ்சாங்கம்!
அமைவுற ஆற்றினன் அப்பணி
இடையீ டின்றியரை நூற்றாண்டு!

சித்த மருத்துவ வித்தகர்
சாமி சுந்தர மகாலிங்கன்
ஒத்த கருத்துடைப் பலராமய்யா
உடன்பணி புரிந்தனன் இ. மு. சு.
தேள்கடிக் கொரு குளிகை—வலது
கையில் மூட மறைந்திடும்—கொடும்
ஆட்கொல்லி அம்மை நோய்க்கும்
மாத்திரை, ஆங்கில மருந்து தோற்கும்.

தமிழே முதல் மொழி என்பதும்
சிவ மதம் முதல் மதம் என்பதும்
அமைவிற நூல்கள் மூலம்
பறையறைந் துரைத்த பாவலன்.
ஊர்ஊ ராய்ச் சுற்றி அலைந்தனன்
கோவில் வரலாறு வரைந்திட
நூற்றிரு பத்தின் மேலாய்
நூல்கள் எழுதிக் குவித்தனன்.

பள்ளிகளில் தமிழே பயிற்று
மொழியாய் அமைந்திட கலைச் சொல்
ஆக்கம் கண்டனன் கடுஞ்சுரத்
திடைச் சொல் லாக்கம் செய்தனன்!

—'சந்தத்தில் சிந்திப்பேன்' 1980

## செந்தமிழ் ஞாயிறு பேரா. ந. சேதுரகுநாதன்

சுப்பிர நன்மணியத் தூய வனார் சொல்லினர் காண
எப்பொருளும் மலரும் இனிதுரை—மெய்ப் பொருள்
சங்க இலக்கியத்தின் சார்பான மேன்மையது
துன்பம் மிகுந்த துணை.

'சுப்பிரமணிய' எனத் தொடங்கி வெண்பாப் பாடி னால் தளைதட்டும் என்று நினைத்துப் பேராசிரியர் கு. அருணாசலக் கவுண்டர் அவர்கள் அவ்வாறு பாடுமாறு பேரா. ந. சேதுரகுநாதனவர்களை வேண்ட, 'சுப்பிர நன்மணிய' எனத் தொடங்கிப் பாடிய ஆசுகவி. திருநெல்வேலி அருணகிரி இசைக் கழகக் கூட்டம் 1947.

# 2. அறிஞர் நினைவில் இ. மு. சு.

செந்தமிழ்ஞாயிறு பேராசிரியர் ந. சேதுரகுநாதன்:

முதன்முதலில் ஆசிரியப் பெருந்தகை இ. மு. சுப்பிரமணியபிள்ளை அவர்களைச் சந்தித்தது கடையநல்லூரில் 1936 இல். பூவில்லாச் சுண்டன் ஒரு குலையும், பசு நெய்யும் கையுறையாக எடுத்துச் சென்றேன். முதல் மகன் என்கிற நிலையில் என்னைப் பேணி வந்தார். அன்று அன்னை ஈசுரவடிவம்மாள் நெற்றுத் தேங்காய் வழங்கி 'தீர்க்காயிசு', என்று திருநீறு பூசியது மறக்க முடியாத நிகழ்ச்சியாகும்.

மறைமலை அடிகள், பண்டிதமணி கதிரேசன் செட்டியார், கா. சுப்பிரமணிய பிள்ளை, கரந்தைக் கவியரசு ஆகிய புலவர்களுடன் வைத்து எண்ணத் தக்க தொரு பெருமை வாய்ந்தவர் இ.மு. சுப்பிரமணிய பிள்ளை. வித்துவான் பட்டம் பெறவில்லை எனினும் மரபு வழிப் புலவராகச் சிறப்புற்று விளங்கினார்.

தோற்றப் பொலிவு :

களிறுபோல் நடை, ஏறு நெற்றி, அகல் விழிகள், எவரையும் வெற்றி கொள்ளத் தக்க அறிவுக் கூர்மை, சட்டை அணியாத தோற்றம், இவை எல்லாம் அவர்தம் சிறப்பியல்புகள்.

தமிழ்கற்றேன்:

இத்தமிழ்ப் பெரும் புலவரை அடுத்து, தமிழ் கற்கச் சென்றேன். தமிழ்விடுதூது என்னும் நூலிலிருந்து ஒருசில வரிகளைப் பாடிக் காட்டினார். பாடும் போதே பாலும், தேனும் கலந்தது போன்ற தீங்குரல். பாற்சோற்றில் சீனி கலந்தது போல அவ்வப்போது உட்பொருளைப் புலப்

படுத்துவார். அவருடைய போக்கினை முன்னுதாரணமாக வைத்து நான் பிற நூல்களைக் கற்பதற்கு ஏதுவாயிற்று.

உயர்நிலைப் பள்ளியில் பயிலும் வாய்ப்பு இன்மையால் இ.மு.சு. அவர்கள் வகுப்பு நடத்துவதைக் கடையநல்லூர் உயர் நிலைப்பள்ளியில் வகுப்பிற்கு வெளியே நின்று கேட்பேன். அந்த நினைவுகள் நெஞ்சினில் பசுமையாக உள்ளன.

மாற்றாரை வெல்லும் மாண்பு:

மாற்றாரோடு கருத்து மாறுபடும்போது களிறு பிளிருவதுபோல ஓங்கிய குரலில் வெற்றி நகைப்புடன் வாதிடுவார். ஒருமுறை தமிழாசிரியர்களுக்கு ஊதிய உயர்வு கொடுக்க வேண்டியதில்லை என்பது போலத் தண்டபாணிப் பிள்ளை என்பவர் பண்டிதமணி கதிரேசன் செட்டியார் முன்னிலையில் பேசினார். அது கண்டு வெகுண்டு எழுந்த பிள்ளையவர்கள் தண்டபாணிப் பிள்ளையை நோக்கி அருகிலிருந்த மரத்தைக் காட்டி இம் மரம் வயது முதிர்ந்ததாக இருக்கிறது. அதற்காக அதை மதிக்கவா செய்கிறோம். அதுபோலத் தான் உமது போக்கும் இருக்கிறது என்றார். அனைவரும் அவரது வெற்றிச் சிரிப்பில் கலந்து கொண்டனர்.

கடிதக்கலை;

நீடுழிவாழி! சேதுவிற்கு எனத்தொடங்கி எனக்கு மிகுதியாகக் கடிதம் எழுதியவரே அவர்தான். அஞ்சல் அட்டைகள் எப்பொழுதும் இருப்பு வைத்திருப்பார். நாள்தோறும் கடிதங்கள் வந்துகொண்டே இருக்கும். பதில்களை அவ்வப்போது எழுதிக்கொண்டே இருப்பார்.

தமிழ்க்கல்லூரிக்கு அனுப்பினார் :

என் தமிழ் ஆர்வத்தைக் கண்ட பிள்ளையவர்கள் "நீ தமிழ்க் கல்லூரியில் படிக்கத் தகுதி உள்ளவன்" என்று

தீர்ப்புரைத்தார். அவர் அவ்வாறு ஆற்றுப்படுத்தி இருக்காவிட்டால் நான் தமிழ் பேராசிரியராக வந்திருக்க முடியாது. திருவையாறு அரசர் கல்லூரியில் போய்ச்சேர் என்று கட்டளையிட்டு அமைச்சர் பரிந்துரைத்தும் கிடைத் தற்கரிய இடத்தைப் பெற்றுத்தந்தார். அவர்தம் அன்புக் கட்டளையை சிரமேற் கொண்டு திருவையாறு சென்றேன்; முதலில் இடம் இல்லை என்றார்கள். அவ்வமயம் தஞ்சை மாவட்ட நாட்டாண்மைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்ட நாடிமுத்துப் பிள்ளை என்னும் பெரியார் இருந்து வந்தார். அன்னாருக்குத் தான் இ. மு. சு. அவர்கள் பரிந்துரைக் கடிதம் கொடுத்திருந்தார். முதலில் இடம் இல்லை என்றவர்கள் பின்னர் என்னைச் சேர்க்கப்பட்ட தாக அறிக்கையைச் சுவரில் ஒட்டினார்கள். அரசியல் துறையிலும், கல்வி உலகிலும், இ. மு. சு. அவர்களுக்கு இருந்த செல்வாக்கு ஈடிணையற்றதாகும்.

## இறுதிச் சந்திப்பு :

இ. மு. சு. அவர்களை அவர்தம் இல்லத்தில் அவர் இறப்பதற்கு ஒருமாதம் முன்பு சந்திக்கும் பேறுபெற்றேன். நான் வாங்கிச்சென்ற பண்டங்களை விருப்போடு உண்டார். என்னைக் கண்டவுடன் தழுவி "மகனே வந்தாயா" என்று அழுதார்கள். அழுத குறிப்பு எனக்குப் புரியவில்லை. "இலங்குவெண் பிறை சூடும் ஈசன் அடி யார்க்கு கலங்கு நெஞ்சமில்லை காண்" எனும் திருவாக்கை ஆறுதலாகக் கூறினேன். ஆனால் மறுமொழி ஏதும் கூறவில்லை. அண்ணாமலை ரெட்டியார் அவர்கள் மிகச் சிறந்த கவிஞரென போற்றிப் புகழ்ந்து அன்று நடந்த உரையாடலில் குறிப்பிட்டார்கள்.

அவர் மறைவு தெறிந்துத் தந்திவந்து உடனடியாகப் புறப்பட்டுச் சென்றேன். இறுதி ஊர்வலத்திலும், இரங்கல் கூட்டத்திலும் கலந்துகொண்டு நிறைவான இறுதி வணக்கம் செலுத்தினேன். தனிமுறையில் அவர்தம் இழப்பு நாளாக நாளாக என் உள்ளத்தில் தொடுகின்றது.

## Former Chief Justice
# M. Anantanarayanan

Madras-31
15th April 75.

Dear Thiru Muthuswamy

I was truly shocked and grieved to receive the typed News sheet of your father's passing away on 25-3-75 at Sankaran Koil.

My association with your father was both close and long. I think I knew and understood him, better then many others. He was dedicated, fearless and inflexible in what he thought was the right path of duty. Actually, I think his inflexible temperament ultimately led to his being misunderstood and his labours undervalued. I know personally, as few people do, that if to day Tamil is the language of administration in so many departments of Government in all districts, how much this owes to the patient, tireless foundations of work that he laid in the Madras Presidency Tamil Sangam, through the years. work which included correcting galley-proofs with midnight oil.

It is a great pity that people with less imaginative insight them myself [of course, I do not want to name any authorities] and the rigours of the red tape, rather darkened his old age.

Personally, I shall always value so many things I learnt from him about Tamil Folklore, tradition, customs and manners and our ancient, neglected herbal medical art.

Please accept my sincere and heartfelt condolences and sympathies and convey them to other members of the family.

Very sincerely,
*M. Anantanarayanan.*

அண்ணாசாலை மாவட்ட மைய நூலகச் சொற்பொழிவுக்
கூடத்தில் 25-4-1976 அன்று நடைபெற்ற
இ. மு. சு. முதலாண்டு நினைவு விழாவில்
தலைமைச் செயலர்

## திரு. வே. கார்த்திகேயன்

### ஆற்றிய தலைமை உரை

தமிழ்ப் பெரும்புலவர் இ. மு. சு அவர்களைப் பத்து ஆண்டு காலமாக நன்கறிவேன். தமிழ் வளர்ச்சிக்குத் துறை இயக்குநராக 1966-இல் பொறுப் பேற்றது முதல் அவர்களுடன் அலுவல் முறையிலும், தனிமுறையிலும் பழக நேரிட்டது.

அப்போது அவர் வள்ளுவர் இருபதாம் நூற்றாண்டுப் புலவர்களின் வரலாற்றைப் பல பகுதிகளாக எழுதி சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் மூலமாக வெளியிட்டுக் கொண்டிருந்தார். எங்கள் பாட்டனார் பொன்மாறு நடேச முதலியார் அவர்கள் வரலாறு பற்றிய செய்தி களைச் சேகரிப்பதற்கு அவர் தாமாகவே முன்வந்து என்னுடன் பொன்மாறு வந்திருந்தார். பல செய்திகளை முயன்று சேகரித்து 5-ஆம் பகுதியில் வெளியிட்டார்.

அரசாங்கம் பல ஆண்டுகள் குழு அமைத்தும் செய்ய முடியாத அரும் பெரும் காரியங்களை அவர் சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் மூலமாகச் செய்து வந்தார். முதல் ஆட்சிச் சொல்லகராதியை அவர் தொகுத்தளித் திருக்காவிடில் தமிழை ஆட்சி மொழி ஆக்கும் உத்தரவு களை அரசு பிறப்பித்திருக்க முடியாது.

இ. மு. சு அவர்கள் எதையும் தாமே செய்ய வேண்டும் என்ற எண்ணம் உடையவர். இரவுகண் விழித்து புருப் பார்ப்பார். சிறுசிறு காரியங்களில் கவனம் செலுத்துவார்.

நான் தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநராக இருந்த பொழுது பல தமிழ்ப் பணித் திட்டங்களை அரசாங்கத்தின் முன் வைத்தார். அரசு விதிமுறைகள் சிலவற்றிக்கு இடம் கொடுக்கவில்லை என்று காட்டிய போது இப்படிச் செய்தால் தான் வேலை நடக்கும். உங்கள் விதிகளை திருத்துவதுதான் உங்கள் பொறுப்பு. என் திட்டங்களை மாற்றிக் கொள்ள முடியாது என்றார்.

தமிழ்ப்பணிகளைத் தான் நினைத்தபடி முடிப்பதில் பிடிவாதமாக இருப்பார். ஒத்துவரவில்லை என்றால் ஒரே யடியாக வேண்டாம் என்பாரே ஒழிய தம் நிலையை விட்டுக் கொடுக்க மாட்டார்.

நான் திருநெல்வேலிக்குத் தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநராகச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு சென்ற போது வரவேற்பு விருந்திற்கு ஏற்பாடு செய்து உபசரித் தார். அதுபோல் என் இல்லத்திற்கும் பல முறை வந்தி ருந்தார், அன்னாரது தமிழ்த் தொண்டுகளைத் தமிழகம் மறப்பது கடினம்.

இ. மு, சு அவர்களது புகழை நிலை நாட்டும் வகையில் அன்னாரது மகன் திரு. முத்துசாமி அவர்கள் சுறுசுறுப்பாகச் செயல் படுவது மகிழ்ச்சிக்குரியது. இம்முதலாண்டு நினைவு நாளுக்கு ஏற்பாடு செய்த முயற்சியைப் பாராட்டுகிறேன். என் மனமார்ந்த வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

## பேரா. ஆபிரகாம் அருளப்பன்,

பாளையங் கோட்டை

சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தின் அமைப் பாளரும் செயலாளருமாக விளங்கிப் பல்லாண்டு அரிதின் முயன்று அறிஞர் துணையுடன் பெரிதும் உழைத்துக், கலைச்

சொல்லகராதி, ஆட்சிச் சொல்லகராதி, திருமுருகாற்றுப் படை, திருவாசக உரைகள் சங்கத்தின் வழி வெளிவருவதற்கும், இவ்வுரையை (நாலடியார் உரை) ஆக்குதற்கும் உறுதுணையாயிருந்து தம் புகழை நிறுத்தி இறையடி சேர்ந்த வருமாகிய பேரறிஞர் தமிழ்ப் பெரும் புலவர் இ. மு. சுப்பரமணியபிள்ளை அவர்கள் தமிழ் மக்களால் மறக்கற் பாலரல்லர். அப்பெரியார் எளியேனையும் இப் பணிகளில் ஈடுபடுத்தி நான் தமிழறிவை வளர்ப்பதற்கு நன்றியறிவுடன் உணர்ந்து எல்லாம் வல்ல இறைவன் அப் பெரியார் குடுபத்தினருக்கு அருள்வளமெல்லாம் வழங்க வேண்டுமென இறைஞ்சுகின்றேன்.

நாலடியார் தெளிவுரை 1982
முகவுரை 23. 8. 1982
தமிழ் மாநிலத் தமிழ் சங்க வெளியீடு.

## தாமரைத்திரு நெ. து. சுந்தரவடிவேலு,

முன்னாள் துணை வேந்தர், சென்னைப் பல்கலைக் கழகம்

பெரும் புலவர் இ. மு. சுப்பிரமணியபிள்ளை அவர்களை முதலில் சந்தித்தது இந்தி எதிர்ப்பு மாநாட்டில். பல பொதுக் கூட்டங்களிலும் சந்திக்க நேரிட்டது. குடியரசு நாளேட்டில் 'சந்திரசேகரப் பாவலர்' என்ற புனை பெயரில் அன்னார் எழுதி வந்த கட்டுரைகளையும் படித்து வந்தேன்.

அவருடன் நெருங்கிப் பழக நேரிட்டது ஆசிரியர் கல்லூரிக் கலைச் சொற்களைத் தொகுக்கும் போது தான். சொல்லாக்கக் கூட்டங்களில் நாள் தோறும் தவறாமல் கலந்து கொள்வார்.

புலமையும், தெளிவும் அவருடன் பழகியபோது புலப் பட்டன. உறுதியான தமிழ்ப்பற்று மேலோங்கி நிற்கக் கண்டேன். தூய தமிழ்ச் சொற்களைக் காண்பதில் பிடிவாதமாக இருப்பார்.

1933 இல் பச்சையப்பன் கல்லூரியில் நடை பெற்ற தமிழன்பர் மாநாட்டில் இ.மு.சு. அவர்களைச் சந்தித்தேன். பட்டுக்கோட்டை அழகிரிசாமி, பாவலர் பாலசுந்தரம் போன்றோர் கலந்து கொண்டனர்.

1955 இல் கல்வி அமைச்சர் சி. சுப்பிரமணியம் தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றம் (Tamil development and research council) அமைத்த போது, இ. மு. சு அவர்களும் அதில் உறுப்பினராகப் பணியாற்றினார்.

என்னைச் சந்திக்கும் போதெல்லாம் பொதுப்பணி தொடர்பாகவே, முக்கியமாகச் சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கப்பணி குறித்துச் சந்திப்பார். தனிப்பட்ட பரிந்துரைக்காகச் சந்திப்பதில்லை.

## விடுதலை ஆசிரியர் கி. வீரமணி எம்.ஏ., பி.எல்.

மவுண்ட்ரோடு மீரான் சாகிப் தெருவில் பெரியார் அவர்கள் வாழ்ந்த பொழுது, இ. மு. சுப்பிரமணியப் பிள்ளை அவர்கள் ஐயாவைப் பார்க்க வந்திருந்தார். இ. மு. சு. அவர்களின் சிவக்கோலத்தைக் கண்டவுடன் தோழர்கள் மாறுபட்ட பாசறையிலிருந்து யாரோ ஒருவர் பெரியாரை எதிர்த்துப் பேசுவதற்காக வந்துள்ளதாக நினைத்துக் கொண்டு அவரைத் தடுக்கப்பார்த்தனர்.

யார் அனுமதியும் பெறாமலே மாடி ஏறி ஐயா அவர்களைப் பார்க்கச் சென்றார். ஐயா அவர்கள் முன்பே இ. மு. சு. அவர்களைப் பற்றியும், சந்திரசேகரப்

பாவலரைப் பற்றியும் என்னிடம் சொல்லியிருந்ததனால் மற்றத் தோழர்களைக் கையமர்த்தித் தடுத்தேன். தந்தை பெரியார் அவர்கள் பெரிதும் ஈடுபட்டு அன்புடன் இ. மு. சு. அவர்களுடன் உரையாடியது நினைவில் இன்னும் பசுமையாக இருக்கிறது. இ. மு. சு. அவர்களை முதன் முதலில் சந்தித்ததும் அப்போதுதான்.

சுயமரியாதை இயக்கத்தில் சைவசித்தாந்தியாக இருந்து கொண்டே குடியரசில் சுமார்த்தர்களை எதிர்த்து இ. மு. சு. அவர்கள் எழுதியதைப் பலராலும் புரிந்து கொள்ள முடியவில்லை. எங்கள் தோழர்களில் கூடப் பலராலும் அதனைச் செரிக்க இயலவில்லை.

மறைந்த மாநிலக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் சி. வெள்ளையன் அவர்கள் விடுதலை தலையங்கத்தில் இ. மு, சு. அவர்களைக் குறிப்பிட்டது எப்படிப் பொருந்தும் என்று கேட்டார். தன்மான இயக்கத்தில் இருந்து அவர் சமயத்தை நோக்கிச் சாய்ந்தார். நாம் சமூகத்தை நோக்கிச் சாய்ந்தோம். கா. சு. பிள்ளை அவர்களையும் மறைமலையடிகளையும் போல, இ. மு. சு. அவர்களும் தமிழினைப் பற்று கொண்டு ஆற்றிய பணி மறக்கற் பாலதன்று. நமக்கும் அவருக்கு முள்ள கருத்து வேறுபாடுகளைவிட ஒன்றுபட்டு ஆற்றிய தொண்டுதான் பெரிது என்று வெள்ளையனாருக்குச் சுட்டிக் காட்டினேன்.

1970 இல் விடுதலை அலுவலகத்திற்கு அடிக்கடி இ. மு சு. வருவார். உரிமையுடன் உள்ளே நுழைந்து அன்புடன் அளவளாவுவார். சுற்றியுள்ள தோழர்களுக்கு இது வியப்பான காட்சியாக இருந்தது. 'சித்திர ராமாயணம்' ஒன்று எழுதவேண்டுமென்று விரும்பினார். அதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளும் நடை பெற்றன. ஆயினும் முதுமை காரணமாக அவரால் அப்பணியினை ஆற்ற இயலவில்லை.

## பேராசிரியர் க. அன்பழகன்

*எதிர்க் கட்சித் துணைத் தலைவர் சட்டப்பேரவை*

முதன்முதலில் சந்திரசேகரப் பாவலர் கட்டுரைகளின் வாயிலாக எனக்கு அறிமுகமானார். பின்னர்தான் சந்திர சேகரப் பாவலர் இ. மு. சுப்பிரமணியபிள்ளை என்பதனை அறிய நேரிட்டது. முற்றிலும் தமிழன் என்ற உணர்வுடன் எல்லாக் காரியங்களையும் ஆற்றி வந்தார். தமிழ் இன உணர்வும் பிள்ளையவர்களுக்கு மிகுதியாக இருந்தது. மிகச் சிறந்த சிந்தனையாளராகவும், ஆராய்ச்சியாள ராகவும் விளங்கினார். நாவலர் சோமசுந்தரபாரதி, மறைமலையடிகள், கா. சுப்பிரமணியபிள்ளை ஆகியோ ருக்கு இணையான புலமை வாய்ந்தவர். தமிழ் இலக்கிய வரலாற்றிலும், மொழி வரலாற்றிலும் இ. மு. சு அவர்களுக்குக் குறிப்பிடத்தக்க இடம் உண்டு. கணிதத் துறையில் சிறந்து விளங்கியதோடு சிலப்பதிகார காலத்தை யும் நிர்ணயித்துள்ளார். வடமொழிக் கலப்பையும், சுமார்த்தப் பழக்க வழக்கங்களையும் கடுமையாக எதிர்த்து வந்தார். பார்ப்பனீயத்திற்கும் மிகக் கொடிய எதிரியாக விளங்கினார்.

1968-69 இல் சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தில் தலைவராகப் பணியாற்றினேன். திருநெல்வேலியைத் தலைமை இடமாகக் கொண்ட இச்சங்கத்தின் பிற நிர்வாகி களுக்கும், இ. மு. சு அவர்களுக்கும் கருத்து வேறுபாடு நிலவியது. இம்மாறுபாட்டைத் தீர்க்க முயன்றேன் இ. மு. சு அவர்கள் தீட்டி வைத்திருந்த தமிழ்ப் பணிகள் முடங்கிக்கிடந்தன. இம்மாறுபாட்டைத் தீர்க்க இயலாத தால் தலைவர் பதவியிலிருந்து விலகினேன்.

## உவமைக் கவிஞர் சுரதா

*கலைஞர் கருணாநிதி நகர். சென்னை*

1954 இல் திருமதி சத்தியவாணிமுத்து அவர்களுடன் சங்கரன் கோவில் இல்லத்தில் பெரும் புலவர் இ. மு.

சுப்பிரமணியபிள்ளை அவர்களைச் சந்தித்தேன். மிகத் தெளிவாகவும், உறுதியாகவும் கருத்துக்களை ஆணித்தரமாக வரையறுத்துரைப்பார். பிழை மலிந்தது பாரதி பாட்டென்று உறுதியாகக் கூறுவார். இலக்கியவாதியாக மட்டுமின்றி, கணியராக இருந்தமையின் அவர் சிந்தனையில் தெளிவு ஏற்பட்டது.

விளம்பரம் தேடாத போக்குடையவர். அறிவுமிகுதியாகவும் ஊடுருவிப் பார்க்கும் இயல்புடையவராகவும் விளங்கினார். காரணப் பெயர்களை அறுதியிட்டு உரைப்பார்.

பருந்தீ—பருதி ஆயிற்று என்பார்.

பொதிந்து இருப்பது பொதிகை மலை என்பார்.

சிறிய அளவில் அதிகச் செய்திகளை அவர் எழுதியுள்ள கோயில் வரலாறுகளில் காணலாம்.

வரலாறு, சமயம் கணிதம், மருத்துவம் போன்ற பல் துறை அறிவு நிரம்பியவர். இ. மு. சு. தலைமையில் கலைக்களஞ்சியம் தொகுக்கப்பட்டிருப்பின் சிறப்பாக அமைந்திருக்கும்.

இலக்கிய வரலாற்றில் மட்டுமின்றி தமிழர் சமுதாய வரலாற்றிலும், இ. மு. சு. அவர்களுக்கு தனியே ஓர் இடம் உண்டு. தீமையை எதிர்த்துப் போராடும் போராட்ட உணர்வு உடையவர். தன்மான இயக்கத்திலும், இந்தி எதிர்ப்பிலும் பங்கு கொண்டது இவரது சிறப்பியல்புகளாகும்.

பழம்பெரும் புலவராயினும் எளிய அகவற்பாக்களை களையும், வெண்பாக்களையும் இயற்றி வந்தார். இவர் தம் எளிய நடைக்காகவே தந்தை பெரியார் அவர்கள் மறைமலை அடிகள் போன்ற பிற புலவர்களை விடுத்து

இ. மு. சு. அவர்களைத் தேர்ந்தெடுத்து குடியரசு ஏட்டில் நாள்தோறும் எழுதுமாறு பணித்தார்.

இராமாயண ஆராய்ச்சி பல பதிப்புக்கள் வெளிவந்து வெற்றி நடை போட்டது—மக்களுக்குப் புரிகின்ற தமிழ் நடையை கையாண்டததால்தான். அது போல் செய்யுள் நடையிலும் மிகத் தெளிவான எளிய இனிய நடையைப் பின்பற்றினார். சமயத்தை விட்டுவிட்டு முற்றிலும் சமுதாயத் துறைக்கு வந்திருந்தரேயானால் பாரதிதாசனை விட மிகச் சிறந்த கவிஞராக விளங்கியிருப்பார்.

## மு. ரா. பெருமாள் முதலியார்

(முன்னாள் தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் சென்னை)

1950—51 இல் நெல்லை மாவட்டக் கல்வி அதிகாரியாகப் பணியாற்றிய பொழுது அங்கு நடை பெற்ற தமிழ்த் திருநாள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டேன். 'இனி வருமோ' எனத் தொடங்கும் வெண்பாக்களை ஆசு கவியாக இ. மு. சு. அவர்களும் பு. சி. புன்னை வனநாத முதலியார் அவர்களும் இயற்றினர். உடனுக்குடன் வெண்பாக்கள் இயற்றுவதில் வல்லவர்.

இ. மு. சு. அவர்களோடு நெருங்கிப் பழகியது 1955-65 என்ற கால எல்லையில் சைதாப்பேட்டை ஆசிரியர் கல்லூரி முதல்வராக இருந்த பொழுது, சென்னைக்கு வரும் போதெல்லாம் கல்லூரிக்கு வருகை புரிந்து தமிழ்பணித் திட்டங்களை விவாதிப்பார்.

### ஆசிரியர் கல்லூரிக் கலைச் சொற்கள்:

ஆசிரியர் கல்லூரிப் பேராசிரியர்கள் அடங்கிய குழு ஒன்று 3500 கலைச் சொற்களைத் தயாரித்தது. அறிஞர் ஏற்புடைமை கருதி கல்வி இயக்குநர் நெ. து. சுந்தர வடிவேலு அவர்களைத் தலைவராகவும் புலவர்

இ. மு. சுப்பிரமணியபிள்ளையவர்களைச் செயலாள ராகவும் கொண்டு ஒரு குழு அமைக்கப்பட்டது. அக்குழு நாள்தோறும் அச்சொற்களை ஆராய்ந்து முடிவு செய்தது. தமிழக அரசின் உதவியுடன் சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் அந்நூலை வெளியிட்டது. தமிழ்ப் பெரும் புலவர் என்னும் பட்டத்தைச் சென்னை மாகாணத்தமிழ்ச் சங்கம் எனக்கு அளிக்க முன் வந்தது. ஆனால் இயக்குநர் போன்ற மேலதிகாரிகள் தடுத்து விட்டனர். பின்னர் 1967 இல் பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராகப் பதவி ஏற்றபிறகு தான் 27-7-67 அன்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் வாயிலாக எனக்கு வழங்கினார்.

பிழையின்றித் தமிழ் எழுதுவதில் தமிழ்ப் பேராசிரியர்கள் கூட வெற்றி பெறுவதில்லை. இ. மு. சு அவர்களைப் போல இவர்கள் எல்லாம் தப்பில்லாமல் தமிழ் எழுதினால் என்ன?

## திரு திருஞானசம்பந்த ஓதுவாரவார்கள்

சங்கரன்கோவில்

1941 க்கு முன்னதாகவே சங்கரன்கோவில் தேவஸ்தானத் தொடர்பு கொண்டு தமிழ்ச்சங்கம் ஒன்றுஅமைத்து-சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தின் கிளைச் சங்கமாக அமைந்து, அயலூர்களிலிருந்து சிறந்த பேச்சாளர்களைத் தருவித்துச் சொற்பொழிவுகளும் மாநாடும் நடத்தி வந்தார்கள்.

சங்கர நாராயணசுவாமி திருக்கோயில் 1941 ஆம் ஆண்டில் திரு இ. மு. சு அவர்கள் தலைமையில் தேவாரப் பாடசாலை, நூல்நிலையம் ஆகியவை திறந்து வைக்கப் பட்டன. சங்கத்தின் சார்பாகத் திருவாசக விரிவுரைச்

சொற்பொழிவு திரு இ. மு.சு நடத்தி வந்தார்கள். தம் இல்லத்தில் அமைந்திருக்கும் ஆதி சங்கரவிநாயகர் கோவிலில் கூடசமயச் சொற்பொழிவு நடத்திஇருக்கிறார்கள். சங்கரன் கோவிலில் சிறப்பாகத் தமிழ்ப்பணி செய்வதற்கு கொக்கிர குளம் வக்கீல் T. R. கோமதிநாயகம் பிள்ளை அவர்கள், திரு சூப்ரண்ட் சி. எஸ். ஆறுமுகம் பிள்ளை பி. ஏ. அவர்கள் திரு கே. வி. சுப்பையாபிள்ளை அவர்கள் எல்லோரும் உறுதுணையாக இருந்தார்கள். இவர்கள் செய்த பணியைப் பின்பற்றித் தேவஸ்தானத்தில் தேவார ஆசிரியராக இருந்த திரு. திருமுறைச் செம்மல் திருஞானசம்பந்த ஓதுவாமூர்த்திகள் நடத்தித் தந்தார்கள். இப்பொழுது சமயப்பணி பல சங்கரன்கோவில் தலத்தில் நடைபெற்று வருகின்றன. அதற்கு மூலகாரணமாக இருந்தவர் திரு இ. மு. சு. அவர்கள். சங்கரநாராயணசுவாமி திருக்கோவில் தல வரலாறும் எழுதி உள்ளார்கள்.

## மழைக்காக இ. மு. சு பாடல்கள்

எத்தனை நாளாக யாம் ஏங்கித் தவித்தாலும்
சித்தமிரங் காயோ செந்திருவே அத்தன்
அருளுருவாம் அம்மே ஆரெம்மைக் காப்பார்
மருள் நீங்கத் தாணீ மழை.

மழையோ மழையென்று மாழ்கி நிற்கின்றோம்
மழைதான் அருளி மயக்கம் களைவாய் நீ
கோமதித் தாயே கொடியோமைக் காத்தருளத்
தாமதிக்கா து யீந்தாள்.

வந்தெம்மைக் காப்பாய் வடிவாயுடை யம்மே
கொந்தார் குழலுமையே கோமதியே நொந்தலறும்
யாங்களுநன்மக்கள் நீயெங்கள் தாயலவோ
பாங்காய் மழை தரக் கண்பார்.

# திரு. எஸ். சங்கரபாண்டியன்

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் புளியங்குடி

தமிழ் மொழிக்கும், சைவ சமயத்துக்கும் இ. மு. சு அவர்கள் ஆற்றிய சாதனைகள் ஏராளம். விளம்பரம் குறைவு. தமிழ் மொழிக்கு இ. மு. சு அவர்கள் செய்த பணியில் மறைமலை அடிகள், திரு வி. க, கா. சு. பிள்ளை போன்றவர்களின் வரிசையில் வைத்துப் போற்ற வேண்டிய வர்கள்.

பன்னிரு திருமுறைகளை ஆலயங்கள் மூலம் ஆராய்ந்து விளக்கவுரைகளை செய்ய வேண்டும் என்பதற் காகப் பெரு முயற்சி செய்து வந்தார்கள். அது சம்பந்த மாக நானும் அவர்களும் அடிக்கடி சந்திப்பதுண்டு.

அவர்கள் இயற்றிய ஆட்சிச் சொல்லகராதி தமிழ் கலைச் சொற்களின் தொகுப்பு, மாவட்டக் கோவில்கள் வரலாறு ஆகிய நூல்கள் தற்பொழுது எழுதும் இளம் எழுத்தாளருக்கு ஆதார நூல்களாக அமைந்துள்ளன.

சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தின் செயலாளர் என்ற நிலையில் இ. மு. சு அவர்கள் தமிழ் மொழிக்காக, சைவத்திற்காக, சித்த மருத்துவத்திற்காக, ஓயாது உழைத் தார்கள். அதன் காரணமாகத் தமிழ் மொழி வளர்ச்சி வரலாற்றில் அவர்களுக்கு ஒரு சிறந்த இடமும் கிடைக்கப் பெற்றது.

அவர்கள் ஆயுள் காலம் வரையும்; சைவப் பஞ்சாங்கம்' என்ற வாணியற் கணிதம் வெளியிடப்பட்டு வந்தது. அப் புத்தகம் யாவர் வீட்டிலும் இருக்கும்.

அவர்கள் விட்டுச் சென்ற பணிகளை அவர்களது மூத்த மகன் புதுமைக் கவிஞர், பேராசிரியர் டாக்டர் இ. சு. முத்துசாமி M. A. P. hd தொடர்ந்து நடத்தி வரு கிறார். பல அற்புதமான கவிதைகளை இயற்றிப் புத்தகங்

களாகப் பிரசுரித்துள்ளார். திருக்குறளை ஆராய்ந்து அதற்கு விரிவுரையை ஆங்கிலத்தில் எழுதி டாக்டர் பட்டம் பெற்றுள்ளார்.

எனவே இ. மு. சு அவர்கள் தன்னுடைய தமிழ்ப் பணியைத் தொடர்ந்து இயற்றுதற்குத் தமிழகத்திற்குத் தனது மகன் டாக்டர் இ. சு. முத்துசாமியை வழங்கிச் சென்றுள்ளார்.

வாழ்க இ. மு. சு. நாமம் அவரது தமிழ்ப்பணி!

முன்னாள் அறநிலைய ஆணையர்

## திரு. அ. உத்தண்டராமபிள்ளை

சென்னை-4
4-4-75

தங்கள் தந்தையார் சிவத்திரு, இ. மு. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் இறையடி எய்திய செய்தியறிந்து மிகவும் அதிர்ச்சியடைந்தேன். சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தின் வழி அவர்கள் ஆற்றிய பணியைத் தமிழகம் என்றும் மறக்க முடியாது. திருமுருகாற்றுப்படை, திருவாசக உரை வெளியீடுகளில் எனக்கும் சிறிய வாய்ப்பளித்த அவர்கள் அன்பை என் நினைவில் கொண்டுள்ளேன். திருநெல்வேலி மாவட்டம் சென்னை மாவட்டங்களிலுள்ள திருக்கோயில் வரலாறுகள் சங்கத்தின் சார்பாக வெளியிடப்பட்டாலும் அவர்கள் ஒருவராகவே அவைகளை எழுதினார்கள் என்பதை எல்லோரும் அறிவர். ஆட்சிச் சொற்களைத் தமிழில் தொகுக்கவும் அவர்கள் பெரிதும் உதவினர். திருக்கோயில்கள் சார்பில் சித்த வைத்திய சாலைகள் அமைப்பதிலும் அவர்கள் மிகுந்த ஆர்வத்துடன் பணிபுரிந்தார்கள். பல துறைகளில் அவர்கள் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்கும் பணியாற்றினர். ஆண்டு தோறும் பஞ்சாங்கம் தயாரித்துக் கொடுத்தனர். அன்னார் மறைவு ஈடுசெய்ய

முடியாத இழப்பாகும். செந்தமிழ்ச் செல்வி (மார்ச் 1975) இதழ் ௩௪ ஆம் பக்கத்தில் தமிழ் நாட்டு அரசுச்செந்தமிழ்ச் சொற் பிறப்பியல் அகர முதலித் திட்டமும் விளக்கமும் என்ற கட்டுரையில் கண்ணியச் சொல்லுதவியாளர் பட்டியலில் கணியர் இ. மு. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் பெயர் காணப்படுகிறது. என்னே உலக வாழ்க்கை நிலையாமை;

அன்னார் ஆன்மா சாந்தி பெறுக.

தங்களன்புள்ள,

அ. உத்தண்டராமன்

# 3. கொடிவழி—தாய்

வெள்ளகால் முத்திருளப்ப பிள்ளை + தங்கம்

- அருணாசலம் பிள்ளை (திருவில்லிபுத்தூர்) + லட்சுமி
  - சுப்பிரமணிய பிள்ளை
  - கோதையம்மாள் + எட்டயபுரம் முத்துசாமிபிள்ளை
  - சங்கரநாராயண பிள்ளை + அனுப்பங்குளம் வள்ளியம்மை
    - சுப்பிரமணியன் (கந்தையா)
    - மணியம்மை
    - வேலு
    - அருணாசலம்
- ஐயம்பெருமாள் பிள்ளை
- சண்முகம் பிள்ளை
- பார்வதி

# கொடிவழி—தந்தை

முத்துக்கருப்பபிள்ளை + சூரியவடிவு

சங்கரன்கோவில்

- சுப்பிரமணியபிள்ளை + விநாயகத்தம்மாள்
  - முத்துசாமிபிள்ளை + கோதையம்மாள்
    - இ. மு. சுப்பிரமணியபிள்ளை + சுசுவரவடிவு
    - இ. மு. அருணாசலம் + பேச்சியம்மை
  - சூரியவடிவு
  - கிருட்டினபிள்ளை + ஐயனம்மை
    - விநாயகத்தம்மாள்
    - சூரியவடிவு
    - சுப்பிரமணியன் (கடற்கரை) + பார்வதி
      - ↓ கிருட்டினன்
  - தங்கம் + இராமசாமிப்பிள்ளை
  - முத்தம்மாள் + சண்முகசுந்தரம் பிள்ளை
- ஆவுடைத்தங்கம்
- இராசகோபாலபிள்ளை

# தன்வழி

எட்டயபுரம் முத்துசாமிபிள்ளை + கோதை

- இ. மு. சுப்பிரமணியபிள்ளை + ஈசுரவடிவம்மாள்
  - சிவகாமி
  - இ. சு. முத்துசாமி
  - கோதை
  - சுந்தரமூர்த்தி
- இ. மு. அருணாசலம்
  - மங்கையர்க்கரசி (பேச்சியம்மை)
    - அ. திருமலைமுத்துசாமி
    - சிவகாமி
    - அ. சங்கரவள்ளிநாயகம்
    - சுப்பிரமணியன்
    - தியாகராசன்

# 4. தமிழ்ப்பெரும்புலவர், கணியர்
# சித்த மருத்துவர்
# இ. மு. சுப்பிரமணியபிள்ளை
## இயற்றிய நூல்கள்

இலக்கிய ஆய்வு ;

1. திருக்குறள்—உலகப் பொதுமறை 1951
   மீரானிய அச்சகம், திருநெல்வேலி
2. இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்—1—9 பகுதிகள் (1960—66) சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம், திருநெல்வேலி
3. புறநானூற்றுக் கட்டுரைகள்—நெல்லைச் செய்தி
4. புறநானூறு — வானநூல் — புறநானூற்றுச் சொற் பொழிவுகள்
5. சிலப்பதிகாரகாலம்—கீழ்த்திசை மாநாட்டுச் சொற் பொழிவுகள்
6. புத்த நிர்வாணகாலம்— " " "
7. தம்பிரான் தோழர்

செய்யுள் ;—

8. இராமாயண அகவல் 1966
   சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம், நெல்லை
9. காந்தி சிந்தாமணி 1949
   சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம், நெல்லை

10. இராம இராவண வெண்பா (முடிவடையவில்லை) கையெழுத்துப்படி
11. கிருட்டினகுமாரி—கையெழுத்துப்படி
12. அன்பழகன் (சீர்திருத்த நாடகம்) கையெழுத்துப்படி
13. சித்திர இராமாயணம் முடிவடையவில்லை
14. சாவித்திரி அகவல் கையெழுத்துப்படி 1948
15. பெரியபுராண மாலை செந்தமிழ்ச் செல்வி
16. சிங்கைப் பதிற்றுப் பத்தந்தாதி செந்தமிழ்ச்செல்வி
17. திருமுருக வெண்பாக்கள் கையெழுத்துப்படி

சைவம் ;—

18. சைவ சமயம் உலகப்பொதுச் சமயம்
S. S. பிள்ளை, கணேசன் அச்சகம் நெல்லை
19. சென்னை மாவட்டக் கோவில் வரலாறு
இந்து அறநிலையத்துறை வெளியீடு
20. செங்கற்பட்டு மாவட்டக் கோவில் வரலாறு
இந்து அறநிலையத்துறை வெளியீடு
21. தஞ்சை மாவட்டக் கோவில் வரலாறு—
இந்து அறநிலையத்துறை வெளியீடு
22. நெல்லை மாவட்டக் கோவில் வரலாறு—
இந்து அறநிலையத்துறை வெளியீடு
23. மானூர் அம்பலவாணசாமி கோவில் வரலாறு—
கோயில் வெளியீடு 1942
24. திருநெல்வேலி கைலாசபுரம் கைலாசநாதர் கோயில் வரலாறு 1943 கோயில் வெளியீடு
25. கீழ்ப்பாட்டம் சாந்தன கோபால்சாமி அரங்கநாதர் கோயில் வரலாறு கோவில் வெளியீடு 1943.

26. சங்கரன் கோயில் சங்கரலிங்கர்—கோமதி கோயில் வரலாறு, கோயில் வெளியீடு 1943.

27. வாசுதேவநல்லூர் சிந்தாமணிநாதர் கோயில்வரலாறு 1944

28. புளியங்குடி பாலசுப்பிரமணியசாமி கோயில் வரலாறு 1944

29. சிந்தாமணிச் சொக்கலிங்கம் கோயில் வரலாறு 1944 கோயில் வெளியீடு.

30. சாத்தூர் திரு வெங்கடாசலபதி கோயில் வரலாறு 1944 கோயில் வெளியீடு.

31. சிவசயிலம் சிவசயிலநாதர் கோயில் வரலாறு 1944 கோயில் வெளியீடு.

32. தென்காசி காசிவிசுவநாதசாமி கோயில் வரலாறு 1943 கோயில் வெளியீடு.

33. சாத்தூர் மாரியம்மன் கோயில் வரலாறு 1943 கோயில் வெளியீடு.

34. சேரன் மாதேவி வைத்தியநாதசாமி கோயில்வரலாறு 1944 கோயில் வெளியீடு.

35. விருதுநகர் சொக்கநாதர் கோயில் வரலாறு 1943

36. இருக்கங்குடி மாரியம்மன் கோயில் வரலாறு 1944 கோயில் வெளியீடு.

37. கோயிற்பட்டி திருப்பூவனநாதர் கோயில் வரலாறு

38. பாப்பான் குளம் இராமசாமி கோயில் வரலாறு—1951

39. கங்கைகொண்டான் கைலாசநாதர் வரலாறு 1944

40. லட்சுமி நரசிம்மன் கோயில் வரலாறு புளியங்குடி.
(கோவில் வரலாறுகள் கிடைத்த அளவு குறிக்கப் பட்டுள்ளன.)

பஞ்சாங்கக் கணிதம்:

41. ஒளி நூல்—ஔவை நூலகம் செப்டம்பர் 1959

42. சைவப் பஞ்சாங்கம்—56 ஆண்டுகள் 1919 முதல் 19 5 வரை சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.

43. பஞ்சாங்கக் கட்டுரைகள்

44. திருமணம் 1949 கணேசன் அச்சகம். திருநெல்வேலிப் பாலம்

வாழ்க்கை வரலாறு

45. கா. சு. பிள்ளை வரலாறு சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம். நவம்பர் 1958

46. வீரசிதம்பரனார்—சிவகாமி பப்ளிசிங் ஹவுஸ்

47. காந்திசிந்தாமணி—1953, 1956, 1963 உரை நடை அல்லையட்டு பப்ளிசிங் கம்பெனி சென்னை-1

48. ஐதராலி

49. நெல்லைத் தமிழ்ப் புலவர்கள் தொகுதி 1 சனவரி 1959 சைவ நூற்பதிபுக் கழகம்

50. நெல்லைத் தமிழ்ப்புலவர்கள் தொகுதி 2 நவம்பர் 1959 சைவ சி. நூற்பதிப்புக்கழகம்

மொழி பெயர்ப்பு, தழுவல்

51. ரிப்வான் விங்கிள்—சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் மார்ச் 1927

52. பிரதாப முதலியார் சரித்திரம்—தென் மொழிகளின் புத்தக டிரஸ்ட்

தன்மான இயக்கம் (சந்திரசேகரப் பாவலர்)
இராமாயண ஆராய்ச்சி—1—7 பகுதிகள்

53. முதற்பதிப்பு 1935-36 குடியரசு வெளியீடு.

54. பாரத ஆராய்ச்சி—பாலபருவம்-குடியரசு வெளியீடு

சொல்லாக்கம்

(சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் வாயிலாக)

55. ஆட்சிச் சொல்லகராதி 1956 சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் நெல்லை.

56. உயர் நிலைப் பள்ளிக்கலைச் சொற்கள் 1938

57. ஆசிரியர் கல்லூரிக் கலைச் சொற்கள் 1959

பள்ளிப்பாட நூல்கள்

58. S. R. S. சிவகாமி பப்ளிசிங் ஹவுஸ் வெளியிட்டுள்ள பல பாட நூல்கள்.

59. இளைஞர் இலக்கண வினா விடை சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம் மே 1939

60. இளைஞர் தமிழிலக்கணம்—சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம் அக்டோபர் 1945

உரை நூல்கள்

61. திருமுருகாற்றுப்படை—உரையும் சொல்லடைவும் சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம்—திருநெல்வேலி

62. நாலடியார் தெளிவுரை—கூட்டாசிரியர் தமிழ் மாநிலத் தமிழ்ச் சங்கம் 1982

63. பதிற்றுப்பாட்டு தெளிவுரை 1982

# 5. இ. மு. சுப்பிரமணியபிள்ளை

## இயற்றிய கட்டுரைகள்

1. சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன்
   'நெல்லைச் செய்தி' தமிழின்பம் கட்டுரைத் தொடர்
2. இடுக்கண் விடுத்தோன் மருகனை 26-1-1951
3. ,, ,, ,, 2-2-1951
4. பசிப்பிணி மருத்துவன் 16-2-1951
5. ,, ,, ,, 23-2-1951
6. காலனும் காலம் பார்க்கும் 9-3-1951
7. இருமருந்து விளைக்கும் 2-3-1951
9. மெய்யது பசியே 16-3-1951
9. நாணுத்தகவு உடைத்தே 23-3-1951
10. செய்தி கொன்றோர்க்கு உய்தியில் 30-3-1951
11. இன்சொல் எண்பதத்தை ஆகுமதி 18-5-1951
12. நின்நாடு உள்ளுவர் ஒன்னார் தேயத்தும் 25-5-1951
13. புலவரெல்லாம் நின்நோக்கினரே 1-6-1951
14. காவலர்ப் பழிக்கும் இக்கண்ணகன் ஞாலம் 15-6-1951
15. யாங்கனம் மொழிகோயானே 29-6-1951
16. சிதைத்தல் வல்லையால் நெடுந்தகை 6-7-1951
17. ஏத்தி இரந்தன்றி ஆகல் வேண்டும் 20-7-1951
18. இனியார் மற்று நின் பசி தீர்ப்போரே 27-7-1951
19. தாழ்வனைதல் ஒல்லுமே நினக்கே 30-8-1951
20. வள்ளன்மையின் எம் வரைவோர் யார் 17-8-1951
21. என் என்று அஞ்சலம்யாமே 24-8-1951

## இராமாயண அகவல்

22. விவேக போதினி அக்டோபர் 1913
டிசம்பர் 1913 முதல் அக்டோபர் 1914 வரை

23. The Date of Buddha nirvana
The Indian review 1924 April

24. நட்பு—தமிழன் July 1915

25. கரையில்லாக் கல்விக் கடல் நெல்லைச் செய்தி 20.4.1951

26. தமிழ்த்தாய்க் கொலை—செந்தமிழ்ச் செல்வி தொடர் கட்டுரை—சிலம்பு 26, பரல் 4.

72. இராமன் வரலாறு இந்தியன் 1923 சூலை

28. மணிமேகலை—செந்தமிழ் நவம்பர்—டிசம்பர் 1923.

29. மணிமேகலை—(மறுப்புரை) செந்தமிழ் ஏப்ரல் மே—1925

## துண்டுப் பிரசுரங்கள்

30 விநாயகர் சதுர்த்தி, சரசுவதி பூசை, நவராத்திரி, திருவள்ளுவர் குரு பூசை. தீபாவளி பற்றிய துண்டுப் பிரசுரப் போர்க் கருவிகள்.

# 6. செய்தி உதவியோர் பட்டியல்

1. திரு. திருஞானசம்பந்த ஓதுவார் அவர்கள்
ஓய்வு பெற்ற ஓதுவார், சங்கரன் கோவில்

2. திரு. கிருஷ்ணபிள்ளை அவர்கள்
ஓய்வு பெற்ற பொறியாளர், சங்கரன் கோவில்

3. திரு. சு. ஆவுடையப்பபிள்ளை அவர்கள்
கட்டிடக்கலைஞர், சங்கரன் கோவில்

4. திரு. புலவர் சு. ஆறுமுகம் அவர்கள்
தமிழாசிரியர், பெரியகோவிலான் குளம்

5. திரு எம். சங்கர பாண்டியன்பிள்ளை அவர்கள்
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர். புளியங்குடி.

6. திரு. பி. செந்தில் விநாயகம் பிள்ளை அவர்கள்
ஓய்வு பெற்ற மாவட்ட வருவாய் அலுவலர், புளியங்குடி

7. திரு. க. மாணிக்கவாசகம் பிள்ளை அவர்கள்
ஆசிரியர், புளியங்குடி

8. திரு. பி. முத்தையாப் பிள்ளை அவர்கள்
முன்னாள் கர்ணம், புளியங்குடி

9. திரு M. பகவத்சிங் அவர்கள்
ஆசிரியர் புளியங்குடி

10. திரு. சுப்பிரமணியம் (அய்யாப்பிள்ளை) அவர்கள்
பஞ்சாயத்து மேஸ்த்திரி தேவதானம்.

11. திரு. ப. வேலாயுதம் பிள்ளை அவர்கள்
ஓய்வு பெற்ற எழுத்தர், சிவகிரி

12. திரு. பேராசிரியர் அ. சங்கரவள்ளி நாயகம் அவர்கள்
கோவில்பட்டி

13. திரு சு. பழனிச்சாமி அவர்கள்
முன்னாள் கர்ணம், கூடலூர்

14. திரு டாக்டர் ந. கல்யாணசுந்தரம் அவர்கள்
தமிழ்ப் பேராசிரியர், திருச் செந்தூர்

15. திரு P. தங்கவேலு அவர்கள்
கதர் ஆய்வாளர், நாகர் கோவில்

16. திரு. சி. குழந்தை வேலு அவர்கள்
தலைமை எழுத்தர், மேலகரம்

17. திரு. கிருஷ்ணபிள்ளை அவர்கள்
ஓய்வு பெற்ற எழுத்தர், வணிகவரித்துறை
எட்டயபுரம்

18. திரு பேராசிரியர் சு. அருளப்பன் அவர்கள்
பாளையங் கோட்டை

19. திரு. எஸ். செல்லப்பாண்டியன் அவர்கள்
முன்னாள் சபாநாயகர், பெருமாள்புரம்

20. திரு. பேராசிரியர் வளனரசு அவர்கள்
தூயசேவியர் கலைக்கல்லூரி, பாளையங் கோட்டை

21. திரு. D. ராஜவேலுப்பிள்ளை அவர்கள்
ஓய்வு பெற்ற கூட்டுறவுத் துணைப் பதிவாளர், விருதுநகர்.

22. திரு. க. முருகேசன் அவர்கள்
நிலக்கிழார், பெரியகோவிலான் குளம்

23. திரு டாக்டர் மெ. சுந்தரம் அவர்கள்
தமிழ்த்துறைத் தலைவர், மாநிலக்கல்லூரி
சென்னை—5

24. திரு. டாக்டர் இளவரசு அவர்கள்
தமிழ்ப் பேராசிரியர், மாநிலக்கல்லூரி
சென்னை—5

25. திரு ச. சு. இளங்கோ அவர்கள்
மேற்பட்ட ஆய்வாளர் மாநிலக்கல்லூரி சென்னை-5

26. திரு. சி. இ. மறைமலை அவர்கள்
தமிழ்த்துறை மாநிலக் கல்லூரி சென்னை—5

27. திரு. வீ. பரமசிவன் அவர்கள்
தபால் தந்திக் கணக்கு அலுவலர், சென்னை,

28. திரு. டாக்டர் தே ஆண்டியப்பன் அவர்கள்
அஞ்சல்வழிக் கல்வித்துறை மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம் மதுரை.

29. திரு. சு. வெங்கடாசலம் அவர்கள்
L. I. C. ஏஜண்ட் சென்னை,

30. திரு ச. வேலாயுதம் பிள்ளை அவர்கள்
75, நாட்டு முத்து தெரு தேனாம்பேட்டை
சென்னை-18

31. திரு இரா. முத்துக்குமாரசாமி, ஆட்சியாளர் சைவ சித்த நூற்பதிப்புக் கழகம் சென்னை-1

32. திரு. தெ. பாலச்சந்திரன் அவர்கள்
முத்தமிழ் நகர், பம்மல் சென்னை-75

33. திரு. D. சாமிநாதன் அவர்கள்
ஆங்கிலப் பேராசிரியர், ஆசிரியர் கல்லூரி
சைதை—சென்னை-15

34. புலவர் இர. திருஞானசம்பந்தன் அவர்கள்
தமிழாசிரியர், தாடண்டர் நகர் சென்னை-15

35. பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார் அவர்கள்
சென்னை

# 7. இ. மு. சு. வரலாற்றுக் குறிப்புக்கள்

## அடங்கிய நூல்கள்


1. தமிழ் இலக்கிய வரலாறு
பேரா. கா. சுப்பிரமணிய பிள்ளை
2. தமிழ் மொழி வரலாறு
மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர்
3. எனதாருயிர்த் தோழர் 1943
பத்தமடை மு. அருணாசலம் பிள்ளை
கணேசன் அச்சகம் திருநெல்வேலிப் பாலம்
4. தமிழ் இலக்கிய வரலாறு
பேரா. மது. ச. விமலானந்தம்
5. தமிழ்ப் புலவர் வரிசை-31
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் சென்னை
6. ஆட்சிச் சொற்கள் பற்றிய ஆய்வு
பேரா. இ. மறைமலை Ph. D Thesis 1982.
7. திருச்செந்தூர் கோவில் பற்றிய நாள் வழிபாடு
பேரா ந. கல்யாணசுந்தரம் Ph. D Thesis 1979
8. தமிழ்ப் பெரும் புலவர் இ. மு. சுப்பிரமணியபிள்ளை
தமிழ்ப்பணி 1975 ஏப்ரல்
9. சந்திரசேகரப் பாவலர் பேரா அ. திருமலை
முத்துச்சாமி 'கண்ணதாசன்'
10. இ. மு. சுப்பிரமணியபிள்ளை
தமிழ்ப் பொழில் சித்திரை 1975.
11. இ. மு. சுப்பிரமணியபிள்ளை வாழ்க்கைக் குறிப்புகள்
செந்தமிழ்ச் செல்வி ஏப்ரல் 1975
12. இ. மு. சுப்பிரமணியபிள்ளை எழுதிவைத்திருந்த
வாழ்க்கைக் குறிப்புகள்

# 8. தமிழ்ச் சங்க அலுவலர் பட்டியல்

## சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் தலைவர்கள்

1. திரு கா. சுப்பிரமணியபிள்ளை M. A, M. L,
2. திரு மா. வே. நெல்லையப்பபிள்ளை
3. நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார்
4. திரு கோ. ம. இராமச்சந்திரன் செட்டியார்
5. திரு ப. கு. சுப்பிரமணியபிள்ளை
6. திரு முள்ளிக்குளம் இராசாமிக் கோனார்
7. திரு சு. வெங்கடேசுவரன் I. C. S 23-3-63—9-10-67
8. பேரா க. அன்பழகன் 1967-69
9. திரு எம். ரத்தினவேல் பாண்டியன் 1973
10. திரு மு. சோமசுந்தரம்பிள்ளை
11. திரு எஸ். செல்லப் பாண்டியன் 1979 இன்று வரை

## துணைத் தலைவர்கள்

1. திரு செ. தெ. நாயகம்
2. பேரா அ. சீனிவாசராகவன்
3. நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார்
4. J. L. P. ரோச் விக்டோரியா.
5. திரு மா. அனந்த நாராயணன் I. C. S23-3-63
6. திரு மு. சோமசுந்தரம் பிள்ளை
7. டாக்டர் க. இன்னாசி 1979 க்குப் பின்

## செயலர் அமைச்சர்

தமிழ்ப் பெரும் புலவர் இ. மு. சுப்பிரமணியபிள்ளை
1934—1967 செயலளவில்
1967-1973 பெயரளவில்
1973 க்குப் பின் திரு டி. அய்யாசாமி

# 9. சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் மூலம் சிறப்புப் பட்டம் பெற்றவர் பட்டியல்

முது பெரும்புலவர் பண்டிதமணி கதிரேசன் செட்டியார் 24-12-1940

முதுபெரும் புலவர் தமிழ்ப் பெருங்கவி வெ. ப. சுப்பிரமணிய முதலியார் 24-11-1950

சிவக்கவிமணி— கோவை சு. சுப்பிரமணிய முதலியார்

இசைத் தமிழ்மணி இசைக் கவியரசு

திரு தி. இலட்சுமணபிள்ளை

பல்கலைப் புலவர் திரு கா. சுப்பிரமணியப்பிள்ளை

நாவலர்—திரு ந. மு. வேங்கடசாமி நாட்டார்

தமிழ்க் கவிமணி—திரு தேசிக விநாயகம் பிள்ளை

சித்தாந்தப் பேராசிரியர்—திரு மா. வே. நெல்லையப்பபிள்ளை

சித்தாந்தப் பேராசிரியர் திரு ந. சிவகுருநாதபிள்ளை

தமிழிசை மணி— திரு. சுந்தரமூர்த்தி ஓதுவார்.

பல்கலை வள்ளல்—செட்டி நாட்டரசர்

திரு மு. அண்ணாமலைச் செட்டியார்

தமிழிசை மணி—திரு கா. சங்கரன்பிள்ளை

செந்தமிழ்ப் புலவர்—திரு கோ. ம. இராமச்சந்திரன் செட்டியார்

தமிழ்ப் பெரும் புலவர்—திரு இ. மு. சுப்பிரமணிய பிள்ளை

இசைத் தமிழ்ச் செல்வர்—கிவளூர் மீனாட்சி சுந்தரம் பிள்ளை

தமிழ்ப் பெரும் புலவர்

திரு மா. அனந்தநாராயணன்

டாக்டர் அ. சிதம்பரநாதன்

திரு மு. இரா. பெருமாள் முதலியார்

திரு அ. மு. பரமசிவானந்தம்

திரு S. ஆறுமுக முதலியார்

திரு கி. வ. ஜகந்நாதன்

திரு பேரா. ஆ. அருளப்பன்.

# 10. இ. மு. சுப்பிரமணியபிள்ளை அவர்கள்

## வரலாற்று நிகழ்ச்சிகள்

6-6-1886 எட்டயபுரம் நடுவிற் பட்டியில் புலவர் பிறந்தமை.

1900 ஜூன் தந்தையார் மறைவு.

1912-14 கலைவாணி கழகம் தோற்றுவித்தது.

1914 மார்ச் S. S. L. C பள்ளி இறுதி வகுப்பு தேர்ச்சி பெற்றார்.

1913-14 இராமாயண அகவல்—விவேகபோதினி வெளியிட்டது.

11-11-1914 பத்தமடை உயர்நிலைப் பள்ளியில் தலைமைத் தமிழாசிரியர்பணி

29-11-1916 திருமணம் மனைவியார், ஈசுரவடிவம் மையார்.

1916 பத்தமடையில் சைவசித்தாந்த சபை தோற்று வித்தது.

1921 ஜூலை கோவில்பட்டி போர்டு உயர் நிலைப் பள்ளியில் தமிழாசிரியப் பணி.

10-7-23 இந்தியன் இதழில் இராமன் வரலாறு

1921-28 கோவில்பட்டி சாமி விருதைச் சிவஞான யோகிகளிடம் சித்த மருத்துவம் பயின்றது.

27-7-1924 கலைக் கழகம் கோவில்பட்டி

1924-1925 பண்டித பயிற்சிச் சான்றிதழ்—மீனாட்சி கீழ்த் திசைப் பயிற்சிக் கல்லூரி—சிதம்பரம்.

1928 சூன் நாங்குனேரி போர்டு உயர் நிலைப்பள்ளிக்கு மாற்றியது.

சிவகாமி திருவருட் சங்கம்

22-12-1927 பெரியார் சந்திப்பு—குடியரசில் எழுதத் தொடங்கியது இராமாயண ஆராய்ச்சி தொடர் கட்டுரை.

30-1-1930 மகாபாரத ஆராய்ச்சி 5-4-31 வரை.

1936 சூன் கடையநல்லூர் உயர்நிலைப் பள்ளிக்கு மாற்றலானது.

20-9-1936 கலைச் சொல்லாக்க மாநாடு சென்னை.

1938 'கலைச் சொற்கள்' வெளியீடு

1939 சங்கரன் கோவில் உயர்நிலைப்பள்ளிக்கு மாற்றம்

21-5-1940 இந்திய மருத்துவராகப் பதிவுச் சான்றிதழ் பெற்றது.

25-12-1940 தமிழறிஞர் மாநாடு பண்டிதமணி கதிரேசன் செட்டியார் தலைமையில்—அரசாங்கச் சொற்களின் வடசொற் கலப்புக்குக் கண்டனம்.

7-10-1946 அரசாங்கக் கலைச் சொற் பட்டியலுக்கு எதிர்ப்புக் கூட்டம், கோகலே மண்டபம் சென்னை. முத்துரங்க முதலியார் தலைமை.

21-10-1946 கலைச் சொற் குழுவை அரசாங்கம் மாற்றி அமைத்துச் சென்னை மாகாணத்தாரையும் சேர்த்துக் கொண்டது.

1947 சனவரி அரசாங்கம் கலைச் சொற்கள் வெளியிட்டது. வடசொற் கலப்பு முற்றிலும் ஒழியவில்லை 90% குறைந்து 50% ஆகியது.

1949-50 சென்னை தியாகராயர் உயர் நிலைப்பள்ளியில் கண்காணிப்பாளர்.

1-7-1948 சைவ வைணவ சமய விரிவுரையாளர் பயிற்சிக் கல்லூரி திருநெல்வேலி

1945-48 தமிழ்க்கல்லூரி திருநெல்வேலி (4 ஆண்டுகள்)

27-12-952 வைத்திய வித்வான் என்னும் பட்டம் மதுரைச் சித்த வைத்திய சங்கம் அளித்தது.

18-10-1953 நெல்லையில் ஆட்சி மொழி மாநாடு

20-12-1953 சென்னையில் ஆட்சி மொழி மாநாடு.

1953—54 விருதுநகர் நகராட்சி உயர்நிலைப்பள்ளி

1954-55—சங்கரன் கோவில் நகராண்மை உயர்நிலைப் பள்ளி

21-12-56 ஆட்சிச் சொல்லகராதி அரசிடம் ஒப்படைப்பு விழா.

1956 தென்மொழிகளின் புத்தகடிரஸ்ட் உறுப்பினர் ஆதல்

25-1-1958 நெல்லையில் ஆசிரியர் கல்லூரிச் சொற்கள் வெளியீட்டு விழா (முன்படிவம்)

26-3-58—24-12-58 ஆசிரியர் கல்லூரிச் சொல்லாக்கக் குழு இறுதியாக்கம்.

4-2-1959 சென்னையில் ஆசிரியர் கல்லூரிச் சொற்கள் (இறுதிப் படிவம்) வெளியீட்டு விழா

10-4-1959 தமிழ் வளர்ச்சி மன்ற உறுப்பினர் செயின்ட்ஜார்ஜ் கோட்டை சென்னை-9

20-10-1959 சித்த மருத்துவபண்டிட் என்ற பட்டத்தை மதுரை சித்த மருத்துவக் கல்லூரி வழங்கியது.

1960-61 சென்னை மாகாணத் தமிழ்ச் சங்க வெள்ளி விழா நிகழ்ச்சிகள்.

29-7-62 'மணிமாலை' நூல்வெளியீடு.

1960-66 திருவாசக விரிவுரை இரண்டு பகுதிகள் வெளியிடப் பெற்றன. ஏனைய உள

1961-66 இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் 1—8 வெளி வந்துள்ளன. 9 ஆம் பகுதி அச்சாகி வெளியிடப் பெற வில்லை. 10 ஆம் பகுதி கையெழுத்துப்படி

1964-66 சங்க இலக்கிய உரை யாக்கம்

திருக் குறள், நாலடியார் உரை, திருவாசகம் மூன்றாம் பகுதி.

15-8-1967 சங்கப் பணியாளருக்கு ஊதியம் இனி இல்லை என்று ஆட்சிக்கு (மு. சோமசுந்தரம் பிள்ளை) தலைமையில் தீர்மானம் சங்கப் பணிகள் முடக்கம்.

29-12-67 தமிழக அரசு தணிக்கை

5-1-1968 தமிழக அரசிற்கு நீதி கேட்டு இ. மு. சு விண்ணப்பம்.

1971-1974 சென்னையில் மூத்த மகன் பேராசிரியர் இ. சு. முத்துசாமியுடன்.

21-4-1973 சென்னை மாகாணத் தமிழ் சங்கத்திற்கு எம். ரத்தினவேல் பாண்டியன் தலைவர்-துணைத் தலைவர் எம். சோமசுந்தரம்-செயலர் டி. அய்யாசாமி-இ. மு. சு நீக்கப்பட்டது,

1974 தமிழகப் புலவர் குழுவிலிருந்து விலகல்

25-3-1975 சங்கரன் கோவிலில் தம் இல்லத்தில் மறைவு

# 11. பிழைதிருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 2 | 18 | 1974 இல் | 1934இல் |
| 4 | 10 | 1962 இல் | 1962இல் |
| 12 | 10 | தகுப்பில் | வகுப்பில் |
| 22 | 15 | அமர்த்தர்களை | சுமார்த்தர்களை |
| 23 | 13 | பிரமு அம்மாள் | வீரலட்சுமி அம்மாள் |
| 25 | 25 | 1617-20 | 1917-20 |
| 31 | 3 | 3-8-7930 | 3-8-1930 |
| 32 | 10 | ஈசுரமஷுவம்மை | ஈசுர வடிவம்மை |
| 39 | 1 | பாரட்டுப்பா | பாராட்டுப்பா |
| 57 | 9 | மிருதியான | மிருதியான |
| 60 | 21 | disset | dissent |
| 86 | 16 | நடந்தறார்கள் | நடந்தார்கள் |
| 93 | 22 | வருதுநகர் | விருதுநகர் |
| 102 | 6 | வெளிவரா | வெளிவரா |
| 112 | 20 | நிலையிலை | நிலையினை |
| 117 | 19 | கோட்பாளர் | கோட்பாட்டாளர் |
| 123 | 2 | சட்சத்திரத்தை | நட்சத்திரத்தை |
| 143 | 8 | மறுத்தற்பால | மறத்தற்பால |
| 136 | 5 | பன்ஞூல் | பன்னூல் |



## பேராசிரியரின் பிற நூல்கள்

1. காதல் காவியம்—குறுங்காவியம்
2. கவிக்கடல்—கவிதைத் தொகுப்பு
3. புன்னைப் பாட்டு—நெடும்பாட்டு
4. சந்தத்தில் சிந்திப்பேன்—கவிதைத் தொகுப்பு

கிடைக்குமிடம் : பாரி நிலையம், சென்னை-1.

## வெளிவர இருப்பவை

1. Tamil Culture as revealed in Tirukkural—Ph.D. thesis.
2. இ. சு. முத்துச்சாமி கவிதைகள்
3. இழந்த சுவர்க்கம்—தமிழ்க் கவியாக்கம்
   Paradise Lost—Books I & II
4. ஆய்வுக்களம்—கட்டுரைத் தொகுப்பு

Wrapper Printed at Eskey Art Printers, Madras-5 Phone : 841478